
குற்றம்
மேலும்
குற்றம்
பட்டுக்கோட்டை
பிரபாகர்

# குற்றம், மேலும் குற்றம்!

பட்டுக்கோட்டை பிரபாகர்

**மின்னூலாக்கம் : செல்லா**

பூம்புகார் பதிப்பகம்
63, பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை - 600 108.
தொலைபேசி 5267543

மின்னூலாக்கம்
செல்லா
www.minnoolakam.blogspot.com

**விலை ரூ. 65.00**

பூம்புகார் வெளியீட்டு எண் 543
முதற் பதிப்பு ஜூலை, 2002
உரிமை : ஆசிரியருக்கு
P.C.: 9810B411
அச்சிட்டோர் **ஈகிள் பிரஸ்**, சென்னை - 600 013.

# பூம்புகார் பதிப்பகம் பற்றி ஒரு சில வாக்கியங்கள்

*தமிழ் மக்களின் அன்பால் அரவணைப்பால் வளர்ந்து வரும் எங்கள் பூம்புகார் பதிப்பகம் கால் நூற்றாண்டைத் தாண்டி கன்னித் தமிழ் வளர்ச்சிக்குத் தனது எளிய பங்கை இனிதே வழங்கி வருகிறது.*

*1975ஆம் ஆண்டு தோற்றம் கண்ட பூம்புகார் பதிப்பகம் 'காமராஜ் ஒரு சரித்திரம்' என்ற நூலை முதல் வெளியீடாக்கித் தனது வரலாற்றைத் தொடங்கியது.*

*முன்னாள் மத்திய உள்துறை அமைச்சர் திருமிகு பிரம்மானந்த ரெட்டி அவர்கள் கரங்களால் வெளியிடப்பட்டு டாக்டர் சிவாஜிகணேசன், கவிஞர் கண்ணதாசன், தமிழ்வாணன் ஆகியோரால் பெற்றுக்கொள்ளப்பட்ட 'காமராஜ் ஒரு சரித்திரம்' பூம்புகாரின் முதல் வெளியீட்டு விழாவாகும்.*

*புகழ்மிக்க அம் மனித மாமணி பற்றிய ஒரு நூல் பத்துப் பதிப்புகள் கண்டது; ஐம்பதாயிரம் படிகளை விற்பனையில் தாண்டியது என்பது சாதனை நாயகருக்கும் பெருமை, எங்களுக்கும் பெருமை. வையத்துள் வாழ்வாங்கு வாழும் நெறி வகுத்த வள்ளுவப் பெருந்தகையின் திருக்குறள் நூலுக்கு எங்கள் பதிப்பகப் புதிய உரை இப்போது பதினோராவது பதிப்பு வெளிவந்துள்ளது. ஓர் இலட்சத்துப் பதினோராயிரம் படிகள் தமிழ் மக்கள் கரங்களுக்குச் சென்று சேர்ந்துள்ளன.*

*தரத்தில் சிறந்த எங்கள் வெளியீடுகளில் பல, தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறைப் பரிசுகளைப் பெற்றுள்ளன.*

*தமிழகத்தின் தலைசிறந்த எழுத்து வேந்தர்களின் படைப்பு களை வெளியிடும் பெரும்பேறு பெற்றிருக்கிறது எங்கள் பூம்புகார்.*

மகாகவி பாரதி, திரு. வி. க., பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, கல்கி, நாமக்கல் கவிஞர், க. திரவியம், கலைஞர் மு. கருணாநிதி, பேராசிரியர் க. அன்பழகன், டாக்டர். கா. காளிமுத்து, ஏ. பத்மநாபன், ஈரோடு தமிழன்பன், பொன். பரமகுரு, சௌந்தரா கைலாசம், கவிஞர் இ. முத்துராமலிங்கம், சொ பொ. சொக்கலிங்கம், ஸ்ரீ வேணுகோபால், பட்டுக்கோட்டை பிரபாகர், அனுராதா ரமணன், ராஜேஷ்குமார் என்று நீளும் பட்டியலில் பெருமைக்குரிய எழுத்தாளர்களின் பெயர்களால் பூம்புகார் பதிப்பகம் பளிச்சிட்டு மின்னுகிறது.

கவிதை, நாவல், சிறுகதை, தத்துவம், ஆன்மிகம், அறிவியல், நுண்கலை எனத் துறைதோறும் பயனளிக்கிற, பண்பை வளர்க்கிற, படிப்பவர் சுவையுணர்வைப் பேணுகிற படைப்புகள் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருக்கின்றன.

வள்ளுவப் பெருந்தகை வரையறுத்துக் கூறும் '**இலங்கு நூல்! நவில்தொறும் நயம் பயக்கும் நூல் - நுண்ணிய நூல்**' என்பன எங்கள் இதய தாகமாகவும், இலட்சிய வெறியாகவும் உள்ளன.

அவ்வப்போது வாசகப் பெருமக்களைத் திரளாகக் காணும் வகையிலும் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையிலும் பூம்புகார் பதிப்பகம் வெளியீட்டு விழாக்களைத் தனது குடும்ப நிகழ்ச்சிபோல் குதூகலத்துடன் கொண்டாடி வருகிறது.

பேரறிஞர் அண்ணாவின் சீரிய எழுத்துச் செல்வம் இதுவரை பதின்மூன்று பெரும் தொகுதிகளாக எங்கள் பூம்புகார் வாயிலாக வெளிவந்துள்ளது.

பூம்புகார் பதிப்பகத்து நூல்கள் அச்சுக் கலையின் உச்சத்தை முத்தமிட்டு ஒளிர்வன. கட்டமைப்புக்கும், கண்கவர் கலை நேர்த்திக்கும் கட்டியங்கூறி மிளிர்வன. கண்களில் பட்டாலும், கைகளில் தொட்டாலும், தாங்கள் பொலிவுமிக்க பூம்புகார்ச் செல்வங்கள் என்பதைத் தவறாமல் சொல்லவல்லன; கவனத்தை வெல்லவல்லன.

தமிழகத்தில் பதிப்புத்துறையில் தனக்கென ஒரு தடம் போட்டு, புடம்போட்ட தங்கமாய் விளங்கிவரும் எங்கள் பூம்புகார் பதிப்பகத்தின் 543-வது வெளியீடாக பட்டுக்கோட்டை பிரபாகர் அவர்கள் எழுதிய புகழ்மிக்க மர்ம நாவலான **குற்றம் மேலும் 'குற்றம்** - என்ற புத்தகத்தை வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறது.

# முன்னுரை

*அன்புள்ள உங்களுக்கு.*

*வணக்கம்.*

இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள கதை மூன்று தலைப்புகளில் மூன்று பாகங்களாக 'ஊஞ்சல்' இதழில் எழுதியது.

நானும், எனது நண்பர்கள் சுபாவும் இணைந்து நடத்தி வந்த ஊஞ்சல் இதழில் நான் பல கதைகளை எழுதி இருந்தாலும், பரபரப்பான வரவேற்பை உங்களிடமிருந்து பெற்ற கதைகளில் இந்தக் கதையும் ஒன்று.

உங்களுக்கு கதைகளுக்கான கரு எப்படி கிடைக்கிறது என்று பலரும் கேட்பதுண்டு. 'ஒரு வரிச் செய்தியோ, ஒரு திடீர் உரையாடலோ, ஒரு மின்னல் வாக்கியமோ, ஒரு சிந்தனைச் சிதறலோ, ஒரு உண்மைச் சம்பவ பரிமாறலோ வித்தாக அமையும்' என்று நான் சொல்வதுண்டு.

இந்த மர்ம நாவலுக்கு அடிப்படை வெளிநாட்டில் நிகழ்ந்த ஒரு வினோத சம்பவத்தின் செய்திக் குறிப்பே ஆகும்.

எனது புத்தகங்களை ஆர்வமாக, அழகாக தொடர்ந்து வெளியிட்டு வரும் பூம்புகார் பதிப்பகத்துக்கு மறுபடியும் ஒரு மனப்பூர்வமான நன்றி.

பிரியங்களுடன்



37/1, கெனால் பேங்க் ரோடு,
கஸ்தூரிபா நகர், அடையாறு,
சென்னை - 600 020.

# உள்ளே.

| | பக்க எண் |
|---|---|
| குற்றம் மேலும் குற்றம் ! | 7 |
| குற்றம் புதிய குற்றம் ! | 64 |
| முத்தம் நிழல் முத்தம்! | 120 |

# குற்றம், மேலும் குற்றம்!

## 1

மெல்லிய கார்பன் ஃபிரேமில் கண்ணாடி அணிந்த விக்னேஷ் கம்ப்யூட்டரில் ஒரு ப்ரோக்ராம் எழுதிக் கொண்டிருந்தான். மீசையின் இடத்தில் லேசான பசுமை மின்ன. ஒரு கையால் காலரை மறைத்து தோள் வரை தொங்கின பின்னத் தலைமயிரைக் கோதிக் கொண்டிருந்தான்.

அருகில் காகிதக் கோப்பையில் காபி சுருக்கம் வைத்த ஆடை அணிந்து கொண்டது.

'ச்சே!' என்று விரல்களை உதறிக் கொண்டான்.

சரியாகத்தானே கமாண்ட்ஸ் தருகிறேன் எங்கோ உதைக்கிறதே ஏன்? டிராயரைத் திறந்த வேறு ஒரு ஃபிளாப்பி எடுத்து கம்ப்யூட்டரின் டிரைவில் செருகினான்.

ஆறின காபியைப் பார்த்தான். பால்பாயிண்ட் பேனாவின் மறுமுனையால் அதன் ஆடையை அவிழ்த்து குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு ஜீன்சில் துடைத்துக் கொண்டு ஒரே மூச்சில் பருகினான்.

ஜீனத் துப்பட்டாவை தோளில் எறிந்தபடி சூயிங்க மெல்லலுடன் வந்து தன் கம்ப்யூட்டரின் முன்பாக அமர்ந்தாள்.

"என்ன விக், முடிச்சுட்டியா?"

அவனுக்கு சூயிங்கம் நீட்டினாள். அவன் மறுத்து பாக்கெட் திறந்து உதடுகளாலேயே ஒரு சிகரெட்டைப் பற்றி இழுத்து பற்ற வைத்துக் கொண்டு.

"நீ கொஞ்சம் பாரேன் ஜீனத்."

“என்ன ப்ரோக்ராம் எழுதறேப்பா?”

“மூன்லைட் டிடெக்டிவ் ஏஜென்சி தெரியுமா?”

உதடுகளால் பிதுக்கினாள்.

“தமிழ் நாவல் படிக்கிற ஜாதிக்குத்தான் தெரியும், பரத் என்னோட ஃபிரெண்டு. அவன் ஆபிசை கம்ப்யூட்டரைஸ் பண்றான். அவனோட தேவைகளை குறிச்சுக்கிட்டு வந்தேன். ஆல் பர்ப்பஸ் ப்ரோக்ராமா கம்பைண்ட் பண்ணிருக்கேன்.”

“நகரு” என்று அவனுடைய உயர நாற்காலியில் ஜீனத் அமர்ந்து ஸ்க்ரீனில் அந்த ப்ரோக்ராமை செக் செய்யத் துவங்க.

விக்னேஷ் ஜன்னலருகே வந்து. கயிறு இழுத்து வெனீஷியன் பிளைண்ட் பிளாஸ்டிக் தடுப்புகளைத் திறக்கச் செய்து. கீழே மௌன இயக்கத்தில் இருந்த சென்னையைப் பார்த்தான்.

கதவைக் கொஞ்சம் திறந்ததும், மௌனச் சென்னை சத்தச் சென்னையானது. புகையை வெளியே ஊதினான்.

இரவு மழையிலிருந்து நகரம் இன்னும் மூடு மாறாமல் இருந்தது. வானம் அவ்வப்போது கமறிக் கொண்டிருக்க, கட்டிடங்களும், சாலைகளும் ஈரம் உலர அவகாசமில்லாமல் இயக்கத்தைத் துவங்கியிருந்தன.

பாதையோரங்களில் ரெயின்கோட் வியாபாரிகள் முளைத்திருந்தார்கள். பஸ் ஸ்டாப்களில் பத்தில் நான்கு பேரிடம் குடை இருந்தது. வேட்டிகள் மடக்கிக் கட்டிக்கொண்டு நடந்தனர். ஒவ்வொரு பஸ் கடக்கும் போதும் சாலைத் தண்ணீரின் அபிஷேகத்திலிருந்து தப்பிக்க மக்கள் நான்கடி சைடில் தாவிக் கொண்டிருந்தார்கள்.

‘கிக். கிக். கிக்.

சப்தம் கேட்டதும் தன் பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த டிஜிடல் டைரியை எடுத்து திறந்து பார்த்தான்.

'CALL YOUR WIFE' என்று இவனே பதிவு செய்து வைத்திருந்த குறிப்பை பொறுப்பாக அந்த டைரி நினைவூட்டியது.

சிகரெட்டை வெளியே சுண்டி அது ஒரு ஓட்டுச் சரிவில் தத்தித் தத்தி ஒரு இடுக்கில் சிக்கியதைப் பார்த்துவிட்டு வந்து போனை எடுத்தான்.

"கிளாரா, வீட்டுக்குப் போட்டுக் கொடு" என்று வைத்தான்.

"பரவாயில்லையே. வீட்டு ஞாபகம் எல்லாம் இருக்கே உனக்கு" என்றாள் ஜீனத்.

"மறந்துடக் கூடாதுன்னுதான் டைரில போட்டு வெச்சி ஞாபகப் படுத்தச் சொன்னேன்."

"எத்தனாம் மாசம் இது?"

"ஒம்போதாம் மாசம்.

"ரெகுலரா செக்-அப் போறாங்களா?"

"ஓ யெஸ், நடந்து போற தூரத்திலதான் ஹாஸ்பிடல். என்னை எதிர்பார்க்க மாட்டா. இன்னைக்கு செக்-அப் போய்ட்டு வந்திருப்பா. அதான் விசாரிக்கணும்."

"யாரு டாக்டர்?"

"வேதவல்லின்னு பேரு. கெஸ் ஹர் ஏஜ் ஜீனத்."

"நிச்சயமா அறுபதுக்கு மேல்."

"நோ. ட்வெண்ட்டி ஃப்பைவ்."

"இந்த ஜெனரேஷன்ல வேதவல்லியா? காட்!"

"ரொம்ப நல்லா பார்க்கறாங்க."

"ஸ்கேன் பண்ணியாச்சுல்ல?"

"யெஸ். பலதடவை ஹெட் பொசிஷன் பார்க்க பண்ணிட்டாங்க."

"என்ன பேபி?"

"எங்களுக்கு சொல்ல வேணாம்னு சொல்லிட்டேன்."

"ஏன் விக்?"

"எதுக்கு முன்கூட்டியே தெரிஞ்சுக்கணும்? எந்தக் குழந்தையா இருந்தா என்ன? எங்களுக்கு முதல் குழந்தை. ஒரு சஸ்பென்ஸ் இருக்கிறதே த்ரில்தானே ஜீனத்?"

"நான் சர்புதீனை பெத்துக்கிட்டப்போ நாலாம் மாசமே பொறுமை இல்லாம கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டேன்."

"என் வைஃபுக்கும் எனக்கும் ஒரு பந்தயம் இருக்கு இதில."

“என்ன பந்தயம்?”

“நான் பெண் குழந்தைன்னு சொல்றேன். அவ ஆண் குழந்தைதான்னு சொல்றா.”

“பெட் என்ன?”

“நான் தோத்துட்டா ஒரு வாரத்துக்கு லீவு போட்டுட்டு வீட்ல சமைக்கணும்.”

“அவங்க தோத்துட்டா.”

“ஒரு வாரத்துக்கு அவ புடவை கட்டக் கூடாது.”

“யு. நாட்டி!”

“அப்படியில்லை. என் பேண்ட், சட்டையைப் போட்டுக் கணும். அந்த ட்ரெஸ்லயே என்னோட சினிமா, ஹோட்டலுக் கெல்லாம் வரணும்.”

“பேண்ட், சட்டை போட்டுக்கிட்டு வெளில வர்றது என்ன பெரிய ஹிமாலய டாஸ்க்கா?”

“அவ வேற சொசைட்டி ஜீனத். சந்திக்கிறப்ப நீ அதிசயப் படுவே. கோபுரம் மஞ்சள் தூள் எல்லாம் இவளை மாதிரி பொண்ணுங்களுக்காகத்தான் தயாரிக்கிறாங்க. நீ தலைக்கு என்ன போட்டு குளிக்கிறே?”

“க்ளினிக் ப்ளஸ் ஷாம்பூ.”

“அவ வெண்சங்கு சீயக்காய் தூள்! கிட்டேப் போனா நெடியால தும்மல் வரும். வெயில்ல நின்னு உதறு உதறுன்னு உதறிட்டுருப்பா. நோ லிப்ஸ்டிக். நோ ஸ்டிக்கர் பொட்டு.”

“விக், உன் வைஃப்பைப் பத்தி இத்தனை விபரமா சொன்னதே இல்லையே, போன தலைமுறைக்கு ஒரு மாதிரிப் பெண்ணா? மீட் பண்ணியே ஆகணுமே.”

“எப்ப வேணாலும் வா. உன்னைப் பத்தி சொல்லிருக்கேன். அவளுக்கு முன்னாடி என்னை ‘நீ, வா, போ’ன்னு மட்டும் பேசிடாதே.”

“ஏன்?”

“அவளால புரிஞ்சுக்க முடியாது. நீ போனதும் என்னை சந்தேகமா கேள்வி கேப்பா.”

"அப்படின்னா நான் வரவே இல்லைப்பா."

டெலிபோன் ஒலித்து. எடுத்து.

"ஹலோ சுதா. நான்தான். டாக்டர்கிட்ட போய்ட்டு வந்தியா?"

"இப்பதான் வீட்டுக்குள்ளே நுழையறேன். உங்க போன்."

"என்ன சொன்னாங்க?"

"எல்லாம் நார்மலா இருக்காம். அந்த பச்சை மாத்திரை இல்ல, அது இனிமே சாப்பிட வேணாம்னு சொன்னாங்க."

"ப்ளட் டெஸ்ட் செஞ்சாங்களா?"

"ஆமாம்."

"டெலிவரி தேதி சொன்னாங்களா?"

"இன்னும் இருபது நாள் ஆகுமாம்."

"வீட்ல வேலைக்காரியை வெச்சிட்டுதானே போனே?"

"இல்லைங்க. அவ இன்னைக்கு வேலைக்கு வரலை."

"எல்லா வேலையும் நீதான் பார்த்தியா?"

"பரவால்லைங்க. அதனால என்ன? துவைக்கிறது மட்டும்தான் பாக்கியிருக்கு."

"வேலைக்காரி வந்துடுவாள்னு நினைச்சி இன்னைக்குன்னு பார்த்து நாலு பேண்ட். நாலு சட்டை துவைக்கப் போட்டுட்டு வந்தேன் சுதா. அது ஒண்ணும் அவசரமில்லை. எடுத்து ஹேங்கர்ல மாட்டிடு. நாளைக்கு போட்டுக்கலாம்."

"பரவால்லைங்க. நானா துவைக்கிறேன்? எல்லாத்துக்கும் தான் மிஷின் வாங்கிக் கொடுத்திருக்கீங்களே.

"மிஷினா இருந்தாலும் அதில நம்ம வேலையும் இருக்கு. நான் சொல்றதைக் கேளு. என் துணிகளை துவைக்க வேணாம்."

"எனக்கு ஒண்ணும் கஷ்டம் இல்லைன்னு சொல்றேன்ல? அதை விடுங்க. வேற வேலை எதுவும் இல்லை எனக்கும்."

"ஏன் இல்லை? நம்ம பொண்ணோட பேசிக்கிட்டிருக்கறது! நல்லா உதைக்கிறாளா?"

"ஆசை! உதைக்கிறது பையன்தான்."

“பார்ப்போம். இன்னும் இருபது நாள்தானே இருக்கு. ஒரு சுரிதார்கூட போடாத நீ, நைட்டி போடறதுக்கே கூச்சப்படற நீ என் பேண்ட், சட்டையைப் போட்டுக்கிட்டு என்னோட வெளில வரப் போற கண்கொள்ளாக் காட்சிக்காக காத்துக்கிட்டிருக்கேன் டியர்.”

‘‘எது நடக்குதுன்னு பார்ப்போம். நீங்க இட்லிக்கு மாவு அரைக்கிறதையும், தோசை ஊத்தறதையும், காய்கறி நறுக்கறதையும் பாத்திரம் கழுவறதையும் நான்தான் வேடிக்கை பார்க்கப் போறேன்.”

“பார்ப்போம் கண்ணா. வேற என்ன?”

“ஒண்ணுமில்லை. நேரத்தோட வந்துடுவிங்க இல்ல?”

“ஏன்?”

‘‘ராத்திரிக்கு டிபனுக்கு தவளைவடை தட்டலாம்னு இருக்கேன். அதான் கேட்டேன்.”

‘‘வந்துடறேன். டாக்டர்கிட்ட போய்ட்டு வந்ததை உங்கம்மாவுக்கு போன் பண்ணிச் சொல்லிடு. அவங்க எப்ப வர்றாங்களாம்?”

“இன்னும் ஒரு வாரம் கழிச்சு.

“முடிஞ்சா இன்னும் முன்னாடியே டிக்கெட் வாங்கச் சொல்லு சுதா சில சமயம் முன் கூட்டியே இடுப்பு வலி வந்துடலாம்.”

“டாக்டர் கரெக்டா சொல்லிட்டாங்க. இருபது நாளைக்கு மேலதான் ஆகுமாம்.”

“சரி. வெச்சிடட்டுமா?”

அவன் வைக்கக் காத்திருந்து ஜீனத் கேட்டாள்.

‘‘தலைப்பிரசவம் அம்மா வீட்லதானே பார்ப்பாங்க வழக்கமா.”

“அந்த ஊர்ல ஆஸ்பத்திரி வசதி பத்தாது. அதனால அவங்களை இங்க வரச்சொல்லிட்டேன்” என்றான் விக்னேஷ்.

* * *

# 2

**'GOVERNMENT MAY FALL BUT NOT WE!'**

என்று அந்த மஞ்சள் பனியனில் பென்சிலால் எழுதப் பட்டிருந்தது. ஒவ்வொரு எழுத்தாய் ஃபேப்ரிக் பெயிண்ட் கொண்டு எழுதத் துவங்கியிருந்தாள். வேறு யார் சுசிலாதான்!

அறைக் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே வந்தான் பரத்.

"ஹேய்! இது என்ன ஆபிஸ்னு நினைச்சியா. என்னன்னு நினைச்சே? உன்னை என்ன செய்யச் சொன்னேன். நீ என்ன செஞ்சிட்டு இருக்கே?"

சுசிலா தலையை நிமிர்த்தி அவனைப் பார்க்காமலேயே, தன் காரியத்தில் மும்முரமாய் இருந்தபடி, "என்ன செய்யச் சொன்னிங்க பரத்?"

"ரமண்லால் சேட் மேட்டருக்கு ஸ்டேட்மெண்ட் செக் செஞ்சி கொரியர்ல அனுப்பி வைக்கச் சொன்னேன்."

"செக் செஞ்சாச்சு. அனுப்பியாச்சு. அப்புறம்?"

"கேசவ் குப்தா மேட்டர்ல போலீஸ் ஒபீனியன் என்னன்னு முருகேசன் மூலமா விசாரிச்சி வைக்கச் சொன்னேன்."

"விசாரிச்சாச்சு. குறிப்பு எழுதி உங்க மேஜைல வெச்சாச்சு. அப்புறம்?"

"நான் வந்த உடனே ஓடி வந்து கட்டிப்பிடிக்க சொன்னேன்."

"காலைலயே அய்யாவுக்கு ரொமான்டிக் மூடா?"

"ரொமான்சுக்கு டைம் கட்டுப்பாடு உண்டா சுசி? நேத்து ராத்திரி ஒரு மணி இருக்கும். போன். எடுத்தா சிங்கப்பூர்லேர்ந்து எமிலின்னு ஒருத்தி பேசறா. டி.வி.யில என் பேட்டி பார்த்தாளாம். அதிலேர்ந்து ஒரே காய்ச்சலாம்."

"க்ரோசின் சாப்பிடச் சொன்னிங்களா?"

“உடம்புல எல்லா பக்கமும் தூக்கி தூக்கிப் போடுதான்னு கேட்டேன். என் போன் நம்பர் விசாரிக்கிறதுக்காக மட்டும் ஏழு போன் செஞ்சி கிட்டத்தட்ட ஆயிரம் ரூபா செலவு செஞ்சாளாம்.”

“செக் எடுத்து அனுப்பச் சொல்றாளா?”

“ம்கூம். என் கிஸ் எடுத்து அனுப்பனுமாம்.”

“என்ன இது, நான்சென்ஸ்?”

“நிஜமாதான். ஒரு லிப்ஸ்டிக் எடுத்து என் உதட்டுல தடவி ஒரு வெள்ளைப் பேப்பர்ல பதிவு செஞ்சு அவளுக்கு கொரியர்ல அனுப்பி வைக்கணுமாம். அவ எடுத்து அதை உதட்டுல வெச்சிக்க றாளாம்.”

“ராத்திரி ஒன்றை மணிக்கு இந்த கன்றாவி கான்வர்சேஷனை நடத்திட்டு இருந்தீங்களா?”

“என்னை என்ன செய்யச் சொல்றே? போனை கட் செய்ய மாட்டேங்கறாளே. ஆள் கொஞ்சம் அம்சமா இருந்தாலே தொல்லைதான்.”

‘‘உங்களுக்கு மனசுல அஜீத் இல்லை அப்பாஸ்னு நினைப்பா?”

“சேச்சே. ரெண்டும் இளசு. நம்ம மனசுல பக்குவப்பட்ட அரவிந்தசாமின்னுதான் நினைப்பு. இதைக்கூட நான் சொல்லலை. எமிலிதான் சொன்னா.”

“அவளுக்கு என்ன வயசாம்?”

“நீ இந்தக் கேள்வியை கேப்பேன்னு தெரிஞ்சிருந்தா விசாரிச் சிருப்பேனே. நோ ப்ராபளம். இன்னைக்கும் போன் பண்றதா சொல்லிருக்கா. அப்ப விசாரிச்சு வெக்கிறேன்.”

“உங்க டெலிபோன் லைனையே கட் பண்றதுக்கு ஏற்பாடு செஞ்சிடுவேன். ஜாக்கிரதை!”

‘‘வழக்கமா வி.ஐ.பி. லைன்ல ஒட்டுக் கேக்கத்தான் ஏற்பாடு செய்வாங்க. பை த பை எமிலிக்கு இன்னும் கல்யாணமாகலையாம்.”

“எனக்கு இந்தத் தகவல் ரொம்ப முக்கியம்?”

“எனக்கு முக்கியமாச்சே?”

"உங்களுக்கென்ன முக்கியம்?"

"கல்யாணமாகாத பொண்ணுன்னு தெரிஞ்சா அந்தப் பொண்ணு மனசுல அநாவசியமான கனவுகள், கற்பனைகளை வளர விடாமல் பார்த்துக்க முடியும். இல்லையா?"

"கல்யாணமான பொண்ணா இருந்தா அவங்க மனசுல இதை எல்லாம் பயிர் செய்விங்களாக்கும்?"

"ச்சே! கிரேட் இன்சல்ட்! என்னை எவ்வளவு சீப்பா நினைச்சிட்டே. நான் பெண்களை எவ்வளவு மதிக்கிறவன் தெரியுமா? நான் பொதுவா பொண்ணுங்களை முகம் பார்த்துப் பேசறதுகூட இல்லை."

"வேற எங்க பார்த்துப் பேசுவிங்க?"

"எது பார்க்கச் சொல்லுதோ, அதை!"

"படவா! உங்களை. அவன் மேல் எறிவதற்குப் புத்தகம் தேடி, ஏதும் கிடைக்காமல் கண்ணாடி பேப்பர் வெய்ட்டை எறிந்தாள்.

"ஏய். ஏய். தவறினா உடைஞ்சிடும்" என்று பதறியபடி வாகாக வளைந்து கேட்ச் பிடித்த பரத் அவள் அருகில் உட்கார்ந்து அந்த பெயிண்ட்டிங் எழுத்துக்களைப் பார்த்தான்.

"தமிழ்ப் படுத்தட்டுமா சுசி, நீ எழுதறதை."

"ஒண்ணும் வேணாம்."

"இல்லை, படுத்தறனே. ஒரு அமைச்சர் சந்தோஷப்படுவாரே." தொண்டையைக் கனைத்துக் கொண்டு, "கவர்ன்மெண்ட்ஸ் மே ஃபால்! பட் நாட் வீ! அதாவது. 'அரசாங்கங்கள் சரியலாம். ஆனால் நாங்கள் சரிவதில்லை.' ஆமாம், எங்கேர்ந்து இந்த மாதிரி நாட்டி லைன்ஸ் பிடிக்கிறே சுசி, சொப்பனத்தில் வருமா?"

"ஆமாம். ரெக்கை முளைச்ச தேவதை வந்து சொல்லிட்டுப் போவா!"

"ஏன் சுசி, முந்தியெல்லாம் தேவதை வெள்ளை கவுன் போடும். இப்பவும் அதேதானா இல்லை, ஜீன்ஸ், சுரிதார்னு மாறிடுச்சா?"

ஒலித்த போனை எடுத்தான் பரத்.

"மூன்லைட் டிடெக்டிவ் ஏஜென்சீஸ்."

“பரத், நான் விக்னேஷ் பேசறேன்.”

“ஹலோ, குட்மார்னிங் விக்.”

“குட் மார்னிங்.”

“சொல்லு.”

“உனக்காக ஸாஃப்ட்வேர் பண்ணிட்டு இருக்கேன்ல.

“ஆமாம்.”

“அதில சில டவுட்ஸ் இருக்கு. உன்னோட டிஸ்கஸ் பண்ண வேண்டியிருக்கே.”

“பேசுவோமே. நீ வர்றியா, நான் வரட்டுமா?”

“நீ இங்க வர்றதுதான் பெட்டர். என் கம்ப்யூட்டர்லயே சிலதை உனக்கு போட்டுக் காமிக்க வேண்டியிருக்கு.”

“எப்ப வரட்டும்?”

“எப்ப வேணாலும் வா.”

“இன்னும் ஒன் அவர்ல வர்றோம். எப்படி இருக்காங்க உங்க வைஃப்?”

“நல்லாருக்கா?”

“எப்ப டெலிவரி டைம்?”

“இன்னும் மூணு வாரம்.”

“ஓகே. நேர்ல பேசலாம்.”

போனை வைத்துவிட்டு, “சுசி ஃபாரென்சிக் லேபுக்குப் போய் சந்திரசேகரைப் பார்த்துட்டு அப்படியே விக்னேஷைப் பார்த்துட்டு வந்துடலாம். சில டவுட்ஸ் கேக்கணுமாம்” என்றான் பரத்.

“நானும் வரணுமா பரத்?”

“வரலைன்னு சொன்னாதான் ஆக்சுவலா எனக்கு வசதி.”

“என்ன சொல்றிங்க?”

“விக்னேஷ் ஆபிஸ்ல தவமணின்னு ஒரு பொண்ணு. போறப்ப எல்லாம் என்கிட்ட ஆட்டோகிராஃப் கேக்கறா.”

“அதனால என்ன?”

"எங்க போடச் சொல்றாத் தெரியுமா? உள்ளங்கையில. பால் பாய்ண்ட் பேனாவோட குறுகுறுப்புல அவ நெளிஞ்சி சிரிக்கிறதை நீ பார்க்கணுமே. ஒரு நாளைக்கு இதயத்தில கையெழுத்துப் போடணுமாம்."

"நானும் வர்றேன் பரத்."

"கையெழுத்து வாங்கறதுக்கா? அவ இந்த மாதிரி கையெழுத்து வேட்டைல இறங்கினப்புறம்தான் எனக்கு நம்ம பேரு மூணே எழுத்துல முடிஞ்சி போச்சேன்னு வருத்தப் படறேன்."

"ஏன்?"

"அனந்த வெங்கட சிவராம கிருஷ்ணமூர்த்தின்னு பேர் இருந்தா ரொம்ப நேரம் கையெழுத்து போடலாமில்ல?"

"பரத். இந்த மாதிரி கையெழுத்துப் போடற வேலை எல்லாம் வெச்சிக்கிட்டிங்கன்னா. உங்களை வெளில அனுப்பாம எல்லா வேலையும் நானே பார்க்க ஆரம்பிச்சிடுவேன்."

"நான் பண்ற சில வேளைகளை உன்னால செய்ய முடியாதே!"

"போதும்! அந்த நாஸ்ட்டி ஜோக் எனக்குத் தெரியும்."

"சிகரெட் பிடிக்க மாட்டியேன்னு சொன்னேன்" என்று ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான் பரத்.

"போலாமா?" என்றாள் தன் போனிடெய்லை கைகளாலேயே ஒருமுறை இறுக்கிக் கொண்டு.

"சுசி, எனக்குத் தெரியாம என்னவோ சாப்பிடறப்பா நீ."

"என்ன?"

"எப்படி முறுக்கேத்தின வீணை மாதிரி உடம்பை அப்படியே வெச்சிருக்கே நீ?"

"ஆரம்பிச்சாச்சா?"

"பாராட்டக் கூடாதா? நிஜமாவே யு ஆர் ரைட். அரசாங்கங்கள் சரிந்தாலும்.

"போதும்" என்று அவன் வாயைப் பொத்தினாள் சுசிலா. அதில் ஒரு விரலை மட்டும் மென்மையாகக் கவ்விக் கொண்டான்.

"அங்க உங்க ஃபிரெண்ட் வெய்ட் பண்ணிட்டு இருப்பார். லேபுக்குப் போய்ட்டுப் போகணும் பரத்" என்றவள் ஒலித்த போனை எடுத்துக் கேட்டு, "ராங் நம்பர்" என்று வைத்தாள்.

"கால்நடை ஆஸ்பத்திரியான்னு கேக்கறானா?"

"இல்லை. பரத் இருக்காரா, என் பேர் எமிலின்னு சொன்னா."

"பாவி! கவுத்திட்டியே" என்றான் பரத்.

* * *

# 3

விக்னேஷ் கொடுத்த காபியை பரத், சுசிலா வாங்கிக் கொண்டார்கள்.

இந்த 'டீ ஷர்ட் எங்க வாங்கினிங்க?' என்று விசாரித்து விட்டு ஜீனத் வெளியேப் போய் விட்டாள்.

'தவமணி இன்னைக்கு லீவாம். சந்தோஷமா?' என்று சுசிலா காதருகில் நறநறத்தான் பரத்.

விக்னேஷ் கம்ப்யூட்டரை ஆன் செய்து விபரங்கள் கேட்டுக் கொண்டிருக்க. அவனது சீஃப் உள்பேசியில் அழைக்க.

"நான் வர்ற வரைக்கும் நீங்க ரெண்டு பேரும் கம்ப்யூட்டர்ல இந்த கேம் விளையாடுங்க. இண்ட்ரஸ்ட்டிங்கா இருக்கும்."

விக்னேஷ் போட்டுவிட்டுப் போன அந்த விளையாட்டை ஆடத் துவங்கு முன்.

"ஒரு பந்தயம்" என்றாள் சுசிலா.

"நான் ஜெயிச்சிட்டா இந்த நாவல் முழுக்க நீங்க லூட்டி அடிக்காம சமர்த்தா இருக்கணும்."

"தோத்துட்டா?"

"அதை நீங்க சொல்லுங்க."

"இந்த நாவல் முடியறவரைக்கும் வசனம் எழுதின பனியன் போடக்கூடாது."

"ரைட்! பார்க்கலாம்."

இருவரும் திரையைப் பார்த்தபடி மும்முரமாய் அந்த கேமை விளையாடத் துவங்கினார்கள்.

பரத் வென்றான்.

"ஸோ. நீ வசன பனியன் போடக்கூடாது."

"ச்சே! ப்ளீஸ்ப்பா. கண்டிஷனை கலைச்சிடலாம்."

"கர்ப்பத்தைக்கூட கலைக்கலாம். கண்டிஷனை எப்பவும் கலைக்கக் கூடாது பேபி. பாவம் திருவெண்ணெய்நல்லூர் பாலாஜி!"

"ஏன்?"

"உன்னை அதுக்காகவே நேசிக்கிறவராச்சே!"

விக்னேஷ் உள்ளே வந்தான். போனபோது இருந்த உற்சாகம் இப்போது இல்லை. சிந்தனை வயப்பட்டிருந்தான்.

"என்ன விக்னேஷ், எனி ப்ராப்ளம்?"

"என்னமோ பக்கத்தில இருக்கிற சூளைமேடுக்கு போய்ட்டு வாங்கற மாதிரி டெல்லிக்குப் போய்ட்டு வான்னு திடுதிப்புன்னு கூப்பிட்டுச் சொல்றாரு."

"டெல்லிக்குப் போகணுமா? போய்ட்டு வாயேன். அதுல என்ன ப்ராப்ளம் விக்னேஷ்?"

"என் நிலைமை புரியாம பேசறியே. வீட்ல வைஃப் இந்த நிலைமைல இருக்கறப்ப. நான் எப்படி அவளை தனியா விட்டுட்டுப் போறது? போனா. வர்றதுக்கு நாலு நாளாகும்."

"நீயேதான் போயாகணுமா?"

"ஆமாம். அங்க ஒரு இண்டஸ்ட்ரில நாங்க கம்ப்யூட்டர்ஸ்' எரேக்ட் செஞ்சோம். அதில ஏதோ ப்ராப்ளமாம் மேஜர்! நான்தான் போயாகணும்."

"டெலிவரிக்குத்தான் மூணு வாரம் இருக்குன்னு சொன்னியே. நீதான் நாலு நாள்ல வந்துடுவேன்கிறியே. ."

"இருந்தாலும்.

"வீட்ல வேற யாரையும் துணைக்கு வெச்சிட்டுப் போக முடியாதா? உன் மாமியார் இல்ல?"

"அவங்க அடுத்த வாரம்தான் இங்க வர்றதா இருக்காங்க. அங்க ஊர்ல திருவிழா நடக்குது. காப்புத் தடை அது இதுன்னு சொல்றாங்க."

"உன் வைஃப்புக்குத் துணையா பொறுப்பான ஒரு ஆள் இருந்தா நீ நிம்மதியா டெல்லி போய்ட்டு வருவே இல்ல? பிரச்சனையை விடு! ப்ராப்ளம் சால்வ்ட்.

"என்ன சொல்றே?"

"சுசிலாவை தினம் ஹாஸ்டலுக்குப் போறதுக்கு பதிலா உன் வீட்டுக்குப் போய் தங்கிடச் சொல்றேன், நீ வர்ற வரைக்கும். அவங்க ரெண்டு பேரும்தான் ஏற்கனவே அறிமுகம் ஆகியிருக்காங்களே. "

"ஆமாங்க" என்றாள் சுசிலா. "எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை. நான் உங்க வைஃபை பத்திரமா பார்த்துக்கறேன்."

"அநாவசியமா உங்களுக்கு எதுக்கு சிரமம்.

"டோண்ட் பி ஃபார்மல்! நான் உங்க வீட்ல தங்கறதுக்கு உங்க சுதாவுக்கு எந்த அப்ஜெக்ஷனும் இல்லைன்னா. எனக்கு எந்த அப்ஜெக்ஷனும் இல்லை."

"அப்புறம் என்னடா? பீ சியர்ஃபுல் எப்ப புறப்படறே?"

"இன்னைக்கு ஈவினிங். ஃப்ளைட் டிக்கெட்டெல்லாம் போட்டுட்டு அப்புறம்தான் சொல்றார் சீஃப்."

"ரைட். ஹேப்பி ஜர்னி" என்று கை குலுக்கினான் பரத்.

* * *

## 4

சுதா வீட்டின் பால்கனியில் கொடிகளில் காய்ந்த துணிகளை கிளிப் நீக்கி ஒவ்வொன்றாக எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டாள்.

பக்கத்து வீட்டு பால்கனியில் இப்போதுதான் துணிகளைக் காயப் போட்டுக் கொண்டிருந்த வந்தனா இவளைப் பார்த்து

புன்னகைத்துவிட்டு, "நீங்க துணி துவைச்சு காய்ஞ்சே போய்டுச்சி. நான் இப்பதான் துவைச்சு முடிச்சேன். என்றாள்.

அவளை நோக்கி கைப்பிடி சுவருக்கு வந்து, "ஏன், சமையல் வேலை இழுத்துடுச்சா?" என்றாள் சுதா.

"இல்லைங்க சுதா. என் பையன் ஸ்கூல்ல நேத்து ஏதோ ரகளை செஞ்சிருக்கான். உங்கம்மாவைக் கூட்டிட்டு வாடான்னு சொல்லிட்டாங்க. அவங்க மறந்திருப்பாங்க, போடான்னாலும் இவன் கேக்க மாட்டேங்கறான். ஸ்கூல் வரைக்கும் போய்ட்டு வந்தேன்."

"என்ன ஆச்சு?"

"பக்கத்தில இருந்த இன்னொரு பையன்கிட்ட ஸ்கேல் வாங்கி கோடு போட்டிருக்கான் அப்ப ஸ்கேல் உடைஞ்சு போச்சு. அந்தப் பையன் இவன் வேணும்னே உடைச்சுட்டான்னு கம்ப்ளைண்ட் பண்ணிட்டான். இது ஒரு பெரிய பிரச்சனைன்னு அந்த டீச்சரும் என்னைக் கூப்பிட்டு விட்டுட்டாங்க. நீங்க சமையல் முடிச்சுட்டிங்களா?"

"ஆச்சுங்க."

கடைசி துணியையும் தொங்க விட்டுட்டு ஈரக்கையை புடவை முந்தானையில் துடைத்தபடி வந்தனாவும் தன் பால்கனியின் எல்லைக்கு வந்து நின்றாள்.

"உங்க வீட்ல என்ன, ரெண்டே பேரு. காலை டிஃபன் வேலையோட சேர்த்தே சமையலை முடிச்சிடுவிங்க. இல்லை?"

"ஆமாம். அவருக்கு சாப்பாட்டைவிட டிபன்தான் அதிகம் பிடிக்கும். சப்பாத்தின்னா உயிர். ரெண்டு நாளைக்கு ஒரு தடவை சப்பாத்தி செஞ்சிடுவேன். அதையே மத்தியானத்துக்கும் எடுத்துட்டுப் போயிடுவாரு."

"இந்த மாதிரி புருஷன் அமையறதுக்கு கொடுத்து வெச்சிருக்கணும் சுதா. நம்ம வீட்ல சமையல்கட்டுலயே பூந்துக்குவாரு. ஏதோ ஒரு கல்யாணத்தில எப்பவோ சாப்புட்ட ஒரு டிபன் அயிட்டத்தை செய்யச் சொல்லுவாரு. ஞாயித்துக் கிழமைன்னா அவரே ரெடியா புத்தகம் கைல வெச்சிக்கிட்டு என்னை படுத்துவாரு! என்னதான் விதவிதமான செஞ்சிப் பார்த்தாலும் நம்ம இட்லி, தோசை மாதிரி வராதுங்க சுதா."

இரண்டு பெண்களும் சிரித்துக் கொண்டார்கள்.

“உங்கம்மா ஊர்லேர்ந்து வரப்போறதா சொன்னிங்களே, இன்னும் வரலையா?”

“அடுத்த வாரம்தான் வர்றாங்க. ஊர்ல திருவிழா நடக்குது.”

“போன வார விகடன். எங்க வீட்ல போடாம விட்டுட்டான். கொடுக்கறீங்களா, படிச்சிட்டு கொடுத்துடறேன்.”

“தர்றேங்க. டி.வி.ல. ‘காதல் முத்திரை’ தொடர் பார்க்கறிங்களா?”

“அய்யோ! விடாம பார்க்கறேன். மத்தியானம் ரெண்டரை மணிக்கு என்ன வேலை எப்படி இருந்தாலும் அப்படியே போட்டுட்டு வந்து உக்காந்துடுவேன். நீங்க பார்க்கறிங்களா?”

“விடாம பார்த்துட்டிருந்தேன். ரெண்டு நாளா பார்க்கலை. உன்னை கல்யாணம் பண்ணிக்க முடியாது, அதுக்கான காரணத்தையும் சொல்ல முடியாதுன்னு சரத்பாபு வினோதினி கிட்ட சொல்வாருல்ல, அதுக்கப்புறம் என்ன ஆகும்?”

“அதே காரணத்தை அவங்கப்பா கேப்பாரு. சொல்ல மாட்டாரு. அம்மா கேப்பாங்க. சொல்ல மாட்டாரு. ஃபிரெண்டு கேப்பான். சொல்ல மாட்டாரு. இன்னைக்காவது காரணத்தைச் சொல்லிடுவாருன்னு நினைக்கிறேன்.”

“அப்ப நான் ரெண்டு நாள் பார்க்காம விட்டதுக்காக வருத்தப்பட வேண்டியதில்லைன்னு சொல்லுங்க.”

“ஆமாம். தினம் ஒரு சினிமா பார்த்துடறேன். ரொம்ப பழசும் போடறாங்க. புதுசுகூட போடறாங்க. டி.வி.ல கேபிள் கனெக்ஷன் கொடுத்தப்புறம் சினிமாக்கு கூட்டிட்டுப் போங்கன்னு கேக்கறதே குறைஞ்சி போச்சுங்க.”

“அப்படி சொல்லாதீங்க. சில படங்களை தியேட்டர்ல போய் பெரிய ஸ்க்ரீன்ல பார்த்தாதான் திருப்தியா இருக்குது. சவுண்ட் எபெக்ட்டுல என்னென்னவோ வித்தை காட்றாங்களே. ”

“அது வாஸ்தவம்தான்.”

வீட்டுக்குள் போன் ஒலிப்பதை உற்றுக்கேட்டு, “எங்க வீட்ல போன் அடிக்குது? இருங்க, பார்த்துட்டு வந்துடறேன்” என்று உள்ளே சென்றாள் சுதா.

"சரிங்க சுதா. வேலையைப் பாருங்க, அப்புறமா வந்து நான் விகடன் வாங்கிக்கறேன்" என்று வந்தனா தன் வீட்டுக்குள் சென்றாள்.

தோளில் இருந்த துணிகளை சோபாவில் போட்டுவிட்டு ஒலித்த டெலிபோனை எடுத்தாள்.

"ஹலோ, அகிலா கம்பைன்ஸ்லேர்ந்து பேசறோம். எதிர்ல மிஸ்டர் வரதராஜன் இருந்தா கொஞ்சம் கூப்புட முடியுங்களா?"

"கொஞ்சம் லைன்ல இருங்க."

ரிசீவரைத் தனியாகக் கிடத்திவிட்டு வீட்டின் வாசலுக்கு வந்தாள். எதிர் வீட்டின் மாடிப்போர்ஷனில் திறந்திருந்த ஜன்னல் வழியாக வரதராஜன் சட்டை போடாமல் ஒட்டடைக்குச்சி கொண்டு அறையை சுத்தம் செய்து கொண்டிருப்பது தெரிந்தது.

"ஹலோ!" கைத்தட்டினாள்.

அவன் திரும்பிப் பார்க்க, சைகையால் போன் வந்திருப்பதைத் தெரிவித்துவிட்டு உள்ளே வந்தாள்.

வினாடிகளில் சட்டையின் கடைசி பித்தான்களை மாட்டியபடி ஓட்டமாய் வேட்டி தடுக்க விரைந்து வந்தான் வரதராஜன்.

"தேங்சுங்க" என்று அவளிடம் சொல்லிவிட்டுச் சென்று ரிசீவரை எடுத்துக்கொண்டான்.

சுதா ஒவ்வொரு துணியாக மடிக்கத் துவங்கினாள்.

"ஹலோ. வரதுதான் பேசறேன். சொல்லுங்க. எப்ப ஷூட்டிங்? ஈவினிங்கா. .? எங்க. .? என்ன கேரக்டர். .? அன்னைக்கு மாதிரி நல்ல கேரக்டர்னு சொல்லி ஏமாத்திடாதிங்க. வசனமே இல்லாம கும்பல்ல நிறுத்தி வெச்சிடுவிங்களே. சரி. சரி. எந்த ஸ்டுடியோ. .? கன்ஃபார்ம் பண்ணிக்கணுமா? இல்லை நேரா வந்துடட்டுமா? சரி.

போனை வைத்தான்.

இவனிடம், "ஸாரிங்க. கூடுமான வரைக்கும் யாரும் இந்த நம்பருக்கு போன் செய்யாதிங்கன்னுதான் சொல்லிருக்கேன். ஆனா அதையும் மீறி அர்ஜெண்டுன்னு போன் பண்ணிடறாங்க" என்றான்.

“பரவாயில்லை சார். என்னாச்சு? தெலுங்குல ஹீரோவா செலக்ட் பண்ணிருக்கிறதா சொன்னிங்க? இன்னும் ஏன் சின்னச் சின்ன பாத்திரத்தில நடிக்கிறிங்க?”

“அது ஒரு சோகக் கதைங்க. அது ஒரு ஃப்ராடு கம்பெனின்னு தெரியாம ஐநூறு ரூபா வரைக்கும் என் காசை செலவு செஞ்சி புத்தி கத்துக்கிட்டதுதான் மிச்சம். வேலைக்காரி வரலைங்களா? ஏன் நீங்களே மடிச்சிட்டிருக்கிங்க?”

“வரலைங்க. என்னன்னு தெரியலை.”

“சார் என்கிட்ட கொடுக்கச் சொல்லி ஏதாச்சும் ஹிண்டு பேப்பர் கொடுத்தாரா?”

“இல்லையே. நாங்க எக்ஸ்பிரஸ்தானே வாங்கறோம்.”

“ஆபிஸ்லேர்ந்து எடுத்துட்டு வந்து தர்றதா சொன்னார். அதுல ஒரு மேட்டர் எனக்கு வேண்டியிருக்கு.”

“நான் வேணும்னா போன் செஞ்சி அவருக்கு ஞாபகப் படுத்தட்டுமா?”

“அதெல்லாம் வேணாங்க. ஒண்ணும் அர்ஜெண்ட் இல்லை. நான் இப்ப காய்கறி வாங்கப் போறேன் மேடம். உங்களுக்கு ஏதாவது வாங்கிட்டு வரட்டுமா?”

“எல்லாம் இருக்குங்க. தேங்ஸ்.”

“எப்ப உங்களுக்கு சின்ன சின்ன உதவி வேணும்னாலும் தயங்காம என்கிட்ட சொல்லுங்க மேடம். நீங்களும் விக்னேஷ் சாரும் என்மேல காட்ற அக்கறைக்கு நான் ஏதாச்சும் ஒரு வகைல நன்றி சொல்லலைன்னா நான் மனுஷனே இல்லைங்க.”

“ஏன் இப்படி பெரிய வார்த்தை எல்லாம் சொல்றிங்க. நாங்க அப்படி என்ன செஞ்சிட்டோம் உங்களுக்கு?”

“எங்க போன் நம்பரை யாருக்காச்சும் கொடுக்கறதா இருந்தா கொடுங்கன்னு சார் சொன்னது பெரிய விஷயங்க. எல்லாருக்கும் அந்த உதவற மனப்பான்மை வராதுங்க. நான் வர்றேங்க மேடம்.”

“சரிங்க.”

“நீங்க எழுந்து வரவேணாம். நான் கதவை மூடிட்டுப் போயிடறேன்.”

வரதராஜன் இப்போதுதான் தன் சட்டையின் கடைசி பட்டனை அவசரத்தில் காஜா மாற்றிப் போட்டிருப்பதை உணர்ந்து, அதை சரி செய்தபடி நடந்து, கதவை ஓசை செய்யாமல் மூடிக்கொண்டு வெளியேறினான்.

* * *

## 5

"என்னங்க இப்படி திடீர்னு குண்டைத் தூக்கிப் போடறிங்க?

"என்னை என்ன செய்யச் சொல்றே சுதா? சீஃப் சொல்றப்ப நான் ஒண்ணும் சொல்ல முடியலை. ரெண்டாவது, இது நானே போய்ப் பார்க்க வேண்டிய வேலைன்னு எனக்கு நல்லாத் தெரியும். வேற யாரையாச்சும் அனுப்புங்கன்னு என்னால சொல்ல முடியாது."

விக்னேஷ் சூட்கேசைத் திறந்து வைத்து உடைகளை எடுத்து வைத்தபடி சொன்னான்.

"எத்தனை நாளாகும் வர்றதுக்கு?"

"ஜஸ்ட் நாலே நாள்தான். பகல்ல உன்னோட வேலைக்காரி இருக்கப்போறா. ஈவினிங் ஏழு மணிக்கெல்லாம் சுசிலா வருவாங்க. ராத்திரி உன்னோட தங்கி பார்த்துக்கறேன்னு சொல்லிருக்காங்க."

"துப்பறியற ஆபிஸ்ல உள்ள சுசிலாதானே?"

"ஆமாம்."

"அவங்களுக்கு எதுக்கு சிரமம்? எனக்கு பயம் ஒண்ணுமில்லை. டெலிவரிக்கு இன்னும் டைம் இருக்கு. நீங்க நாலு நாள்னுதான் சொல்றிங்க. போன தடவைப்போய் பதினைஞ்சி நாள் தங்கிட்டதாலதான் நீங்க டெல்லின்னதும் பதறிட்டேன். யாரும் வர வேணாங்க."

"அவங்களுக்கு ஒண்ணும் பிரச்சனை இல்லை சுதா. இன்னைக்கு யதேச்சையா ஆபிசுக்கு வந்திருந்தாங்க. கேள்விப் பட்டதும் அவங்கே வாலண்டியரா சொன்னாங்க. வந்து

இருக்கட்டுமே, உனக்கு ஒரு துணையா இருக்கும். எனக்கும் நிம்மதியா இருக்கும்."

''உங்க நிம்மதிக்காக வேணும்னா வரட்டும். நாலு நாள்னு சொல்லிட்டு ஒரு வாரம், பத்து நாள் பண்ணிட மாட்டீங்களே.

"சேச்சே! நாலு நாள்ல வேலை முடியலைன்னாக்கூட வேற ஏதாச்சும் ஏற்பாடு செஞ்சிட்டு ஓடி வந்துடறேன், போதுமா?"

"சரி, தினம் போன் பண்ணிடுங்க."

"ரெண்டு வேளை போன் பண்றேன். மறுபடி உன்னை டாக்டர் எப்ப வந்து பார்க்கச் சொல்லியிருக்காங்க?"

"இனிமே நடுவுல எந்த செக்கப்பும் இல்லைங்க. இடுப்பு வலி ஆரம்பிச்சதும் வந்து அட்மிட் ஆகிட்டால் போதும்னு சொல்லிட்டாங்க."

"வெரிகுட். பொய் வலின்னு சொல்லுவாங்களே, அதைப் பத்தித் தெரியுமா உனக்கு?"

"தெரியுங்க. அம்மா சொல்லிருக்காங்க."

"நீ பாட்டுக்கு புரியாம பொய் வலிக்கே போய், அட்மிட் ஆயிடப் போறே!"

"எனக்குத் தெரியுங்க."

"எப்படித் தெரியும்? இதானே உனக்குத் தலைப்பிரசவம். நிஜ வலிக்கும், பொய் வலிக்கும் என்ன வித்தியாசம் சொல்லு."

"அய்யோ! இதெல்லாம் உங்ககிட்ட சொல்ல முடியாது. எனக்குத் தெரியும், நான் பார்த்துக்கறேன்னா விட்டுடுங்களேன். ஷேவிங் செட் எடுத்து வைக்காம சூட்கேசை மூடறிங்க பாருங்க."

''வழக்கமா நீதானே எடுத்து வைப்பே, அதான் மறந்துட்டேன்."

விக்னேஷ் ஷேவிங் செட் எடுத்து வந்து உள்ளே வைத்து மூடி நேரம் பார்த்துக் கொண்டு உட்கார்ந்தான், "இன்னும் டைம் இருக்கு. இன்னும் பதினைஞ்சி நிமிஷம் கழிச்சி புறப்பட்டால் போதும். இப்படி உக்காரு, சொல்றேன்."

அவள் கையைப் பிடித்து கட்டிலில் தன்னருகில் உட்கார வைத்து, "உனக்கு வேண்டியதை எல்லாம் எடுத்து கீழ் ரூம்ல

வச்சிடு, படியேறி மேல வர்றதுக்குள்ளே ரொம்ப மூச்சு வாங்கறே, சுசிலாவை இந்த ரூம்ல தங்கிக்கச் சொல்லு. என்ன?" என்றான்.

"சரிங்க."

"நல்லா ரெஸ்ட் எடுத்துக்கோ. சுசிலா உன் உதவிக்கு வர்றவங்க, விருந்தாளி இல்லை. எதாச்சும் வகைவகையா சமைச்சிப் போடணும்னு நினைச்சுக்காதே. ஷி ஈஸ் வெரி அட்ஜஸ்ட்டாள். புரிஞ்சுதா?"

"சரிங்க. அவங்க சைவம்தானே?"

"தெரியலை. சைவம் சாப்பிடறவங்கதான் அசைவம் சாப்பிட மாட்டாங்க. அசைவம் சாப்பிடறவங்க சைவம் சாப்பிட முடியும். அதைப்பத்தி எல்லாம் நீ கவலைப்படாதே. வேற என்னமோ சொல்லணும்னு நினைச்சனே.

தன் கணவனின் முகத்தில் இந்த அக்கறையான தவிப்பை ரசித்துப் பார்த்தபடி இருந்த சுதா, "எதாவது விட்டுப் போயிருந்தா டெல்லி போனதும் போன் செய்வீங்க இல்ல, அப்ப சொல்லுங்க" என்றாள்.

"ஆபிஸ்லேர்ந்து டிரைவரை நாளைக்கு வரச் சொல்லிருக்கேன், வருவான். மாருதி சாவியைக் கொடு. அதை அவன் சர்வீசுக்கு விட்டுட்டு மறுபடி கொண்டாந்து வெச்சுடுவான். அவன்கிட்டேயே டெலிபோன் பில்லும், பணமும் கொடுத்தனுப்பு, கட்டிடுவான். நாளைக்கு லாஸ்ட் டேட்டு, மறந்துடாதே."

"சரிங்க."

"அப்ப நான் புறப்படட்டுமா?" தன் சூட்கேசை எடுத்துக் கொண்டவன், "எதிர் ரூம் வரதராஜன் ஹிண்டு பேப்பர் கேட்டிருந்தான்" என்று தனது ஆபிஸ் சூட்கேசிலிருந்து அதை எடுத்துக் கொண்டான், "போறப்ப கொடுத்துடறேன்."

அவனோடு அவள் மாடிப்படிகள் இறங்கும்போது அவள் கையைப் பிடித்துக் கொண்டு, "மெதுவா! மெதுவா" என்றான். அவள் வயிற்றை உற்றுப்பார்த்து, "ரொம்ப பெரிசா இருக்கே, ஒருவேளை ரெட்டைக் குழந்தையா இருக்குமா சுதா?" என்றான்.

"அப்படி எல்லாம் இருந்தா டாக்டர் சொல்லிருக்க மாட்டாங்களா?"

"ஒரு வேளை ரெட்டையா இருந்து ஒண்ணு பொண்ணு, ஒண்ணு பையனா இருந்தா நம்ம பந்தயத்தில ரெண்டு பேருமே ஜெயிச்சதாயிடும். அதுக்காகச் சொன்னேன். ஆனா ஒரே சமயத்துல ரெண்டு குழந்தைங்களும் அழறப்போ. ." என்றவன் மிச்சத்தை அவள் காதுக்குள் சொல்ல.

"ச்சீ!" என்று முகம் சிவந்தாள் சுதா.

"வர்றேன் சுதா. நீ வாசலுக்கு வரவேணாம்."

கையில் சூட்கேசுடனும், ஹிண்டு பேப்பருடனும் வீட்டுக்கு வெளியே வந்த விக்னேஷ் எதிர்மாடி ஜன்னலில் ஏறிட்டுப் பார்க்க.

எதிர்வீட்டு வாசலில் அப்போதுதான் ஒரு ஸ்கூட்டரில் வந்து நின்ற வரதராஜன், "சார், என்னையா தேடறீங்க?" என்றான்.

"ஆமாம்ப்பா, பேப்பர் கேட்டிருந்தியே. இந்தா" என்று கொடுத்துவிட்டு, "வரது, ஏது ஸ்கூட்டர்?" என்றான்.

"ஒரு புரொடக்ஷன் மேனேஜரோடது சார். ஆமா, நீங்க என்ன எங்கயாவது புறப்படறீங்களா?"

"ஆமாம்ப்பா, திடீர்னு ஒரு டெல்லிப் பயணம். கொஞ்சம் டாக்ஸி ஸ்டாண்ட் வரைக்கும் என்னை விட்டுடறியா?"

"தாராளமா. உக்காருங்க சார். எதுல போறீங்க?"

"ஃப்ளைட்ல."

"அப்படின்னா ஏர்போர்ட்லயே விட்டுடறேன். நான் இப்ப குரோம்பேட்டைக்குத்தான் போகணும். ஏர்போர்ட் தாண்டிதான் போறேன்."

"நல்லதாப் போச்சு."

விக்னேஷ் அவன் ஸ்கூட்டரின் பின்புறம் அமர்ந்ததும், வரதராஜன் ஸ்டார்ட் செய்து புறப்பட்டான்.

"எத்தனை நாள் சார் டெல்லில."

"நாலு நாள்தான். திடீர்னு ஆபிஸ் வேலை வந்துடுச்சி."

"அங்க இப்ப குளிர் ஜாஸ்தியா இருக்குமே சார். ஸ்வெட்டர் எல்லாம் எடுத்துக்கிட்டீங்களா?"

“புறப்படற அவசரத்தில சுத்தமா மறந்துட்டேன்ப்பா. பரவாயில்லை, விடு, அட்ஜஸ்ட் பண்ணிக்கலாம்.”

“நடுக்கி எடுத்துடும் சார். வண்டியை வீட்டுக்குத் திருப்பட்டுமா? உங்களுக்கு ஃபிளைட்டுக்கு டைம் இருக்கா?”

“இல்லைப்பா. இப்ப போனாதான் சரியா இருக்கும்.”

“அப்ப ஒண்ணு செய்ங்க. நீங்க ஒரு டாக்ஸில ஏர்போர்ட் போங்க. நான் உங்க வீட்டுக்குப்போய் மேடத்துக்கிட்ட ஸ்வெட்டர் வாங்கிக்கிட்டு வர்றேன். ஃபிளைட் புறப்படதுக் குள்ளே உங்களை சந்திக்க முடிஞ்சிட்டா ஸ்வெட்டரை ஒப்படைச்சிடறேன். உங்களை பார்க்க முடியாமல் போச்சுன்னா திரும்ப மேடத்துக்கிட்ட கொடுத்துடறேன். என்ன சொல்றீங்க?”

“எதுக்குப்பா உனக்கு சிரமம்?”

“எனக்கு எந்த சிரமமும் இல்லை. அங்கப்போய் கண்டிப்பா நீங்க புதுசா ஒண்ணு வாங்கித்தான் ஆகணும். வீட்ல இருக்கிறதை விட்டுட்டு எதுக்கு புதுசா வாங்கணும்? வேஸ்ட்டு! மெட்ராஸ்ல உபயோகமேப் படப்போறதில்லை.”

ஒரு டாக்ஸி அருகில் ஸ்கூட்டரை நிறுத்தி, “நீங்க இறங்கிப் போங்க சார். ஒரு சான்ஸ் பார்க்கலாமே” என்றான் வரதராஜன்.

விக்னேஷ் டாக்ஸியில் புறப்பட, வரதராஜன் ஸ்கூட்டரைத் திருப்பிக் கொண்டு அதன் வேகத்தை அதிகரித்தான்.

* * *

# 6

**கா**லிங் பெல்லை அழுத்திவிட்டுக் காத்திருந்தார்கள் பரத் சுசிலா.

“சுசி, சுதாகிட்ட உன்னோட பந்தா எல்லாம் எதுவும் காட்டாதே. சிட்டில இன்னும் அவங்க பொல்யூட் ஆகாம இருக்காங்க.”

“நான் பந்தா காட்றவளா?”

“சில சமயம். உதாரணமா. என்பதற்குள் கதவு திறந்து “வாங்க” என்றாள் சுதா.

“விக்னேஷ் புறப்பட்டாச்சா?”

“இப்பதான் ரெண்டு நிமிஷம்கூட ஆயிருக்காது. உள்ளே வாங்க.”

“அவன் புறப்படறதுக்கு முன்னாடி வரணும்னு பார்த்தோம். வழில ஒரு சாலை மறியல். ஊர் சுத்திட்டு வர வேண்டியதாப் போச்சு.”

“அதனால என்ன, பரவாயில்லை. நான் தனியா இருந்துட றேன்னுதான் சொன்னேன். அவர்தான் கேக்கலை. உக்காருங்க. காபி எடுத்துட்டு வரட்டுமா?”

“நோ. உங்களுக்கு என்ன வேணும்னு சொல்லுங்க. நான் எடுத்துட்டு வந்துடறேன்” என்ற சுசிலா தான் கொண்டு வந்த சிறிய லெதர் பேகை ஓரமாக வைத்துவிட்டு, “எங்க இருக்கு கிச்சன்?”

“உங்களுக்கு சமைக்கத் தெரியுமா?” அதிசயப்பட்டாள் சுதா.

“இது சும்மா அலட்டல்! இந்த குளுக்கோஸ் பாக்கெட் இல்லைங்க, அதைத் தண்ணில, போட்டுக் கலக்கித் தருவா. அவ்வளவுதான் சமையல் புலமை” என்றான் பரத்.

“பரத், இது இன்சல்ட். நான் இப்ப போட்டு எடுத்துட்டு வரப்போற ஏலக்காய் டீயை சாப்பிட்டுட்டு நீங்களே பாராட்டப் போறீங்களா இல்லையான்னு பாருங்க” என்றவள் சுதாவிடம் திரும்பி, “தெரியாத்தனமா அவசரப்பட்டுச் சொல்லிட்டேன். பாலும், ஏலக்காயும் இருக்கு இல்ல?” என்றாள்.

“இருக்குங்க” என்றாள் சுதா சிரித்து, “பரவால்லை. நானே போட்டுட்டு வர்றேன்” நகர்ந்தாள்.

“இல்லை மேடம். நீங்க வேணும்னா எது எங்க இருக்குன்னு காமிங்க.” என்றாள் சுசிலா அவளோடு நடந்து.

பரத் சோபாவில் சாய்ந்து அமர்ந்து கொண்டு டீப்பாயில் இருந்த ரிமோட் ஸ்டிக்கை எடுத்து டி.வி.யை உயிர்ப்பித்து ஒவ்வொரு சேனலையும் பத்துப் பத்து விநாடிகள் பார்த்துக் கொண்டிருக்க.

“எக்ஸ்க்யூஸ் மி. சுதா மேடம் இல்லை?”

‘‘திரும்பிப் பார்க்க. பதட்டமாக நின்றிருந்தான் வரதராஜன்.”

குரல் கேட்டு, வந்த சுதா, "என்னங்க?" என்றாள்.

"சார் ஸ்வெட்டர் எடுக்க மறந்துட்டாரு. எடுத்துக் கொடுங்க. நான் ஏர்போர்ட்ல கொண்டு போய்க் கொடுத்துடறேன். அவர் டாக்ஸில போய்கிட்டு இருக்காரு."

"கொஞ்சம் இருங்க."

சுதா ஸ்வெட்டர் எடுக்க அறைக்குப் போக.

"நீங்க விக்னேஷ் ஆபிஸ்ல வேலை செய்றீங்களா?" என்றான் பரத்.

"இல்லைங்க. எதிர் வீட்டு மாடில தங்கியிருக்கேன். சாருக்கு நல்ல பழக்கம். நீங்கதானே சார் பரத்?"

"ஆமாம்."

"ரொம்ப சந்தோஷம் சார் உங்களைப் பார்த்ததில், சுசிலா மேடம் வரலைங்களா?"

"உள்ளே டீ போட்டுக்கிட்டிருக்காங்க."

"நக்கீரன்ல 'எப்படித் துப்பறிந்தோம்'னு நீங்க ஒரு கட்டுரைத் தொடர் எழுதிருந்தீங்க இல்ல, அதைத் தொடர்ந்து படிச்சேன் சார், பைண்ட் செஞ்சிக்கூட வெச்சிருக்கேன்."

சுதா ஸ்வெட்டர் போட்ட ஒரு கேரிபேகுடன் வர. . . அதை வாங்கிக் கொண்டு, "சார் நீங்க இங்கதானே இருப்பீங்க, நிறைய பேசணும் சார் உங்ககூட. இப்ப வந்துடறேன் சார்."

"நான் இப்ப புறப்பட்டுடுவேன். சுசிலா இங்கதான் இவங்களுக்குத் துணையா இருப்பாங்க. அவங்ககிட்ட பேசுங்க."

"சரி சார். வர்றேன் சார்."

வரதராஜன் போனதும் சுதா, "ரொம்ப தங்கமான பையன். சினிமால பெரிய நடிகனாகணும்னு கனவு. சான்சுக்காக அலைஞ்சிட்டிருக்கார்" என்றாள்.

சுசிலா போட்டு வந்த டீயை ஒரு கப் குடித்துவிட்டு, "எனக்குக் கொடுத்ததோட நிறுத்திக்கோ. அவங்களுக்கு கொடுத்துடாதே" என்றான் பரத்.

"ஏன்?"

"வயத்தில இருக்கிற பாப்பாவுக்கு ஒரு மோசமான டீயை அறிமுகப் படுத்த வேணமேன்னு பார்த்தேன்."

சுதா சிரித்தாள்.

பரத் புறப்பட, அவன் கார் வரை வந்தாள் சுசிலா.

"உதவிக்கு வந்திருக்கே. நீ பாட்டுக்கு தூங்கிட்டிருக்காதே, நல்லப் பொண்ணுன்னு பேர் வாங்கு."

"என்னமோ கல்யாணமாகி புருஷன் வீட்டுக்குப் போறவ மாதிரி அட்வைஸ் மழையா கொட்றிங்களே. ."

பரத் இடுப்பு பெல்ட்டில் கிளிப் செய்திருந்த பேஜர் கிக், கிக், கிக் என்று பீப் சவுண்டு கொடுக்க. எடுத்து அழுத்திப் பார்க்க.

'I CALLED YOU DISCONNECTED AS WRONG NUMBER WHY? - EMILI' - என்று செய்தி நகர்ந்தது.

"யார் பரத்?"

"எல்லாம் உன்னாலதான்" என்று மறுபடி அதே செய்தியை அவளுக்குப் போட்டுக் காட்டினாள் பரத்.

"உங்க பேஜர் நம்பர் கொடுக்கற அளவுக்கு அவ ரொம்ப முக்கியமா பரத்?"

"என் பேஜர் நம்பர், செல்போன் நம்பர் எல்லாம் அவ எப்படியோ தெரிஞ்சி வெச்சிருக்கா சுசீ. நம்மளைவிட பெரிய டிடெக்டிவா இருப்பா போலிருக்கு."

"மறுபடி அவ போன் செஞ்சான்னா.

"செஞ்சான்னா?"

"இதெல்லாம் எனக்குப் பிடிக்காதுன்னு.

"பொய் சொல்லச் சொல்றியா?"

சுசிலா அவனை முறைத்து.

"அந்த எமிலி போன் நம்பர் கொடுங்க. நான் பேசுறேன்."

"என் ரசிகையை நீ இன்சல்ட் செஞ்சிருவே. அதையும் அவ என்கிட்டதான் சொல்வா. உன் சார்பா நான் மன்னிப்பு கேட்டு. சமாதானப் படுத்தணும். அவளை சமாதானப் படுத்தணும்னா ரெண்டு 'ஏ' ஜோக்ஸ் சொல்லணும். 'உங்க ஜோக் என்னை என்னவோ செய்து பரத், ஹாங்'னு அவ பெருமூச்சு விடணும். தேவையா இதெல்லாம்? குட் நைட் சுசீ."

காரை ஸ்டார்ட் செய்தான்.

"இன்னைக்கு ராத்திரி உங்களுக்கு கெட்டக் கெட்ட கனவா வரட்டும்."

"கெட்ட கனவுன்னா நீ அதைத்தானே சொல்றே? அப்படீன்னா தேங்க் யூ ஃபார் யுவர் சாபம்."

கார் புறப்பட. செல்லமாய் அதை உதைத்தாள் சுசிலா.

* * *

## 7

"உங்களுக்கு எப்ப தூக்கம் வருதோ, அப்ப ஆட்டத்தை நிறுத்திக்கலாம் சுதா என்றாள் சுசிலா கேரம் போர்டில் அடுத்த காயை பாக்கெட் செய்துவிட்டு.

"மணி என்ன, ஒம்போது தானே ஆகுது. வழக்கமா பத்தரை மணிக்குதான் தூங்கப் போவோம்" என்றாள் சுதா எந்தக் காயைப் போடலாம் என்று யோசனை செய்தபடி.

"உங்களுக்கு என்ன ஹாபி."

"அப்படின்னா? எனக்கு இங்கிலீஷ் அவ்வளவா வராதுங்க."

"இப்படி நேர்மையா ஒத்துக்கற வெளிப்படையான மனசு நிறைய பேருக்கு இல்லைங்க. உங்க பொழுதுபோக்கு என்னன்னு கேட்டேன்."

"நேரம் கிடைச்சா நல்லாத் தூங்குவேன். டி.வி.ல தொடர் எல்லாம் பார்ப்பேன். வீட்டு வேலையே சரியா இருக்குதுங்க. யாராச்சும் ஒருத்தர் பத்து நிமிஷத்துக்கு ஒரு தடவை பெல்லடிச்சிடுவாங்க. யாருன்னு பார்த்து பதில் சொல்றதுக்கே ஒரு நாள்ல பாதி நேரம் சரியாய் போய்டுது."

"வீட்டோட ஒரு வேலைக்காரி வெச்சுக்கங்களேன்."

"எங்க கிடைக்கிறாங்க? எத்தனை பேர்கிட்ட சொல்லி வெச்சி எனக்கு வேலைக்காரி அமைஞ்சா தெரியுமா? நினைச்சா வர்றா. நினைச்சா லீவு போட்டுடறா. ஆனா ஏன் வரலைன்னு நாம கேக்கக் கூடாது. கேட்டா நாளு நாளைக்கு வரமாட்டா. அதுசரி, நீங்களும் பரத்தும் இன்னும் எத்தனை நாளைக்கு இப்படியே காதலிச்சுக்கிட்டே இருக்கப் போறிங்க?"

"கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசையாத்தான் இருக்கு."

"என்ன பிரச்சினை?"

"அவரு மனசு வைக்கணுமே."

"யாரு?"

"இருபத்தஞ்சி, கெனால் பேங்க் ரோடு, அடையாறு, சென்னைல இருக்காரே கண்ணாடி போட்ட ஒருத்தர், அவரு!"

"ஆமாம், உங்க ரெண்டு பேருக்குள்ளே முதன்முதல்ல எப்படி காதல் ஏற்பட்டுச்சி? நான் தெரிஞ்சுக்கலாமா?"

"நான் அவருக்கு சொந்தக்காரப் பொண்ணுதாங்க. அப்ப நான் படிச்சி முடிச்சிட்டு வேலைக்கு முயற்சி பண்ணிட்டிருந்தேன். அவர் மெட்ராஸ்ல அவர் பாட்டியோட ஒரு அபார்ட் மெண்ட்ஸ்ல இருந்தாரு. நான் மெட்ராஸ்ல இண்ட்டெர்வியூக்கா வர்றப்ப அந்த வீட்லதான் தங்குவேன். அப்ப அவருக்கு சட்டம் படிச்சி முடிச்சிட்டு சரியான வாய்ப்புகள் இல்லாத நேரம். நான் செமத்தியா அவரைக் கிண்டல் பண்ணுவேன். நான் நாகரீகமா டிரஸ் பண்ணிக்கிறதையும், அலங்காரம் பண்ணிக்கிறதையும் அவர் கிண்டல் பண்ணுவாரு. இப்படி சும்மா நாங்க உரசிக்குவோம். உஷ்ணமா திட்டிக்குவோம். எப்படி எப்போ ரெண்டு பேருக்குமே ஒரு பிரியம் ஏற்பட்டுச்சின்னு தெரியலை. அப்படியே காதல் வந்துடுச்சி. அவர் தனியா டிடெக்டிவ் ஏஜென்சி ஆரம்பிச்சப்ப, என்னை உதவிக்கு சேர்த்துக்கிட்டார். பாட்டி செத்துப் போனதால அவர் தனியா இருக்கார். நான் லேடீஸ் ஹாஸ்டல்ல இருக்கேன். இதான் எங்க முன்கதைச் சுருக்கம். போதுமா?" என்றாள் சுசிலா.

(போதுமா மேலை. பழ. நாகப்பன்? சென்ற தங்க ஊஞ்சலில் விசாரித்தீர்களே. .)

போன் ஒலிக்க. எழப் போன சுதாவைத் தடுத்து.

"நான் பார்க்கறேன். நீங்க இருங்க."

சுசிலா சென்று எடுத்தாள்.

"ஹலோ யாருங்க?"

"அங்கே சுசிலா இருக்காங்களா?"

"சுசிலாதான் பேசறேன். நீங்க யாரு?"

“என் பேரு. அருள்பாண்டியன். அசோக் லேலண்ட்ல ஃபட்டரா வேலை பார்க்கறேன். மிஸ்டர் பரத்தோட கார் ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட்ல மாட்டிடுச்சுங்க. அவருக்கு லேசான அடிதான்.”

“அய்யோ என்ன சொல்றிங்க?”

“பதறாதிங்க மேடம். சுய நினைவோடதான் இருக்காரு. அவருதான் இந்த நம்பர் கொடுத்து உங்களுக்குத் தகவல் கொடுக்கச் சொன்னாரு. நான்தான் அவரை இந்த ஆஸ்பத்திரில சேர்த்தேங்க.”

“எந்த ஆஸ்பத்திரிலேர்ந்து பேசறிங்க?”

“ரம்யா பிரியா நர்ஸிங் ஹோம்னு பேருங்க. அசோக் பில்லர்லேர்ந்து வடபழனி போற ஹண்ட்ரட் ஃபிட் ரோடுல லெஃப்ட் சைடு இருக்குங்க. மேடம். யாருக்கோ நீங்க துணையா இருக்கிங்களாமே. அவங்களுக்கு இப்ப உங்க உதவி தேவைப் பட்டா உங்களை அங்கயே இருக்கச் சொன்னாரு மேடம். இல்லைன்னா புறப்பட்டு வரச் சொன்னாரு. நாளைக்கு மத்தியானமே டிஸ்சார்ஜ் ஆயிடுவார்னும் சொல்லச் சொன்னாரு. நான் அவருக்கு ஏதாவது தகவல் தரணுமா மேடம்?”

“நான் இப்ப அங்க வந்துக்கிட்டே இருக்கேன்னு சொல்லுங்க. ரூம் நம்பர் என்ன?”

“சின்ன ஆஸ்பத்திரிதாங்க இது, ரூம்னு தனியா இல்லை. ஒரே ஹால்தான். பக்கத்தில இந்த ஆஸ்பத்திரிதான் இருந்தது. அப்ப நான் வெச்சிடட்டுமா மேடம்.”

“சரிங்க, ரொம்ப தேங்ஸ்.”

வைத்துவிட்டு சுதாவிடம் இந்த அதிர்ச்சியான செய்தியை சொல்ல வேண்டுமா என்று யோசித்தாள்.

“என்னாச்சுங்க, யாரு?”

“பரத்தான் பேசறாரு.”

“ஏதோ ஆஸ்பத்திரின்னு கேட்டிங்க?”

“ஒரு கேஸ் சம்பந்தமா இதே ஏரியாவுல ஒரு ஆஸ்பத்திரி லேர்ந்து அர்ஜெண்ட்டா ஒரு தகவல் அவருக்கு வேணுமாம். நான் இங்க வேலை எதுவும் இல்லாம இருந்தா போய்த் தெரிஞ்சிட்டு வரச் சொன்னார். நான் போய்ட்டு சீக்கிரம் வந்துடட்டுமாங்க சுதா?

"சரிங்க. கார் எடுத்துட்டுப் போறிங்களா?"

"சாவி கொடுங்க. ரொம்ப தேங்க்ஸ்."

சுசிலா அடுத்த நிமிடத்தில் விக்னேஷின் காரில் அசோக் நகருக்கு விரைந்தாள்.

* * *

## 8

காலிங் பெல் ஒலித்தது.

சுதா இடுப்பில் கை வைத்தபடி மெதுவாக எழுந்தாள்.

கதவுக்கு வந்து திறந்தாள்.

அடுத்த விநாடி ஒரு கை அவள் முகத்தில் பதிந்தது. அந்தக் கையில் ஒரு கர்சீப் இருந்தது.

அதில் தெளிக்கப்பட்டிருந்த ஈதரை முகர்ந்ததில் சுதா மயக்கத்தில் ஆழ்ந்து சரிந்தாள்.

* * *

## 9

"ரம்யா பிரியா நர்சிங்ஹோமா?"என்று வியப்புடன் பார்த்தான். அந்த ஆட்டோ டிரைவர், "அப்படி ஒரு ஆஸ்பத்திரி இருக்கறதா தெரியலையே. ."

"சரி, பக்கத்தில எதாச்சும் மெடிக்கல்ஸ் இருக்கா?" என்றாள் சுசிலா முதல் கியரைப் போட்டுக் கொண்டு.

"அதோ பாருங்க" என்று காட்டப்பட்ட மருந்துக்கடைக்கு வந்தாள்.

"இங்க ரம்யா பிரியா நர்சிங்ஹோம் எங்க இருக்கு சார்?"

"அப்படி எதுவும் இங்க இல்லையே.

"அந்தப் பேர்தானே சொன்னாங்க."

"எங்களுக்குத் தெரியாதா? அப்படி எதுவும் இல்லைங்க."

"எக்ஸ்க்யூஸ் மி. உங்க போனை யூஸ் பண்ணிக்கலாமா?"

"கடையை மூடப் போறோம் மேடம், சீக்கிரம் பேசி முடிங்க."

"தேங்ஸ்."

ஒரு சந்தேகத்திற்கு பரத்தின் வீட்டு எண்ணை அடித்தாள். நான்காவது ரிங்கில் எடுக்கப்பட்டு.

"ஹலோவ்" என்றான் தூக்கக் கலக்க பரத்.

"பரத் உங்களுக்கு ஒண்ணும் இல்லையே ஆர் யு ஆல்ரைட்?"

"எனக்கு எதுவுமில்லை. கெட்ட கனவு எதுவும் வந்திச்சான்னு விசாரிக்க இப்படித்தான் நடுராத்திரி தொந்தரவு செய்யணுமா சுசீ?"

"பரத், நான் ஒரரு முட்டாள்தனம் செஞ்சிட்டேன்."

"என்ன?"

"ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி சுதா வீட்ல எனக்கு போன் வந்துச்சு. அருள்பாண்டியன்னு அசோக் லேலண்ட்ல வேலை பார்க்கற ஒருத்தன் பேசினான்."

"என்னன்னு. .?"

"உங்க கார் ஆக்ஸிடெண்ட் ஆயிடுச்சின்னும், நீங்க ஆஸ்பத்திரில இருக்கிங்கன்னும் சொன்னதால.

"செக் பண்ணிக்கிறதுக்காக கூப்புட்டியா? எவனோ சும்மா விளையாட்டு பண்ணிருக்கான். நீ நிம்மதியாத் தூங்கு."

"பரத், அவன் அசோக் நகர்ல ஒரு ஆஸ்பத்திரி பேரெல்லாம் சொன்னான். அவன் ரொம்ப ரொம்ப நம்பற மாதிரி சொன்னதால நான் சுதாவோட காரை எடுத்துக்கிட்டு புறப்பட்டு வந்து இங்க அசோக் நகர்ல ஒரு மணி நேரமா அந்த ஆஸ்பத்திரியைத் தேடியும் கிடைக்கலை. அப்படி ஒரு ஹாஸ்பிடல் இங்க இல்லைன்னு சொல்றாங்க. இப்ப நான் ஒரு மெடிக்கல் ஷாப்லேர்ந்துதான் பேசிக்கிட்டிருக்கேன்."

"என்ன சுசீ இது. இவ்வளவு முட்டாள்தனமா நடந்திருக்கே. உடனே எனக்கு போன் செஞ்சி தகவல் உண்மையான்னு தெரிஞ்சுக்க உனக்குத் தோணலையா?"

"நீங்கதான் நம்பர் கொடுத்து தகவல் சொன்னதா ரொம்ப நம்பற மாதிரி அவன் சொன்னான் பரத்."

"ரொம்ப ஓல்டு டெக்னிக்! அதுக்கே மடங்கிட்டியே. எதுக்காக ஒருத்தன் இப்படி விளையாடணும்? நீ அங்கே இருக்கறது அவனுக்கு எப்படித் தெரியும்?"

"தெரியலையே.

"இப்ப சுதாவை தனியா விட்டுட்டா வந்தே?"

"ஆமாம் பரத்."

"கொஞ்சம் லைன்லயே இரு. நான் இன்னொரு போன்ல சுதாவோட பேசிடறேன் முதல்ல."

சுசிலா லேசான பதட்டத்துடன் காத்திருக்க. பரத் மற்றொரு போனில் முயற்சி செய்யும் டெலிபோனில் ஒலி கேட்டது. சில விநாடிகளில்.

"என்ன சுசீ இது. ரிங் போகுது. யாரும் எடுக்கலை."

"ஒரு வேளை அசந்து தூங்கிருக்கலாம் பரத்."

"எனக்கென்னவோ தப்பாய் படுது. இந்த நேரத்தில எவனோ பொய்யா நாடகமாடி உன்னை அந்த வீட்டை விட்டுக் கிளப்பி யிருக்கான்னா. அந்த வீட்ல திருட்டு, கிருட்டுக்கு யாராச்சும் ட்ரை பண்றங்களோன்னு. எனக்கு சந்தேகமா இருக்கு. நான் உடனே புறப்பட்டு சுதா வீட்டுக்கு வர்றேன். நீயும் வந்துடு. பேசிக்கலாம்."

"சரி பரத்" என்று போனை வைத்தாள்.

* * *

## 10

முதலில் வந்து சேர்ந்தது பரத்.

காலிங் பெல் அழுத்தி விட்டுக் காத்திருந்தான்.

நியாயமான நேர இடைவெளிக்குப் பிறகு மீண்டும் பெல் அடித்தான். வளையலின் சிணுங்கலோ, புடவையின் சரசரப்போ கேட்காததால், குழம்பினான்.

கதவின் கைப்பிடியில் கை வைத்து அழுத்திப் பார்க்க. உள்ளேத் தாழிடப்படாததால் திறந்து கொண்டது.

உள்ளே வந்து, "மேடம்! சுதா மேடம்!" என்றான்.

பதில் இல்லை.

மாடிப்படிகள் ஏறி மேலே இருந்த படுக்கையறை வாசலுக்கு வந்து, மறுபடி குரல் கொடுத்தான்.

சார்த்தியிருந்த அந்த படுக்கையறையின் கதவைத் தட்டினான். அந்தக் கதவும் தானாகத் திறந்து கொண்டது.

உள்ளே நுழைந்த பரத் பார்த்த காட்சியால் பாதிக்கப் பட்டு சட்டென்று ஓரடி பின்னால் நகர்ந்தான்.

படுக்கையின் மேல் சுதா இருக்க. அவள் இடுப்புப் பகுதியில் படுக்கை முழுக்க.

ஒரே ரத்த ரகளை!

ஓடிப் போய் சுவாசம் செக் செய்தான்.

மூச்சிருந்தது.

போனை எடுத்தான் பரத்.

* * *

## 11

அந்த பெரிய ஹாஸ்பிடலின் எமர்ஜென்சி பிரிவில் அந்த ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியே பரத், சுசிலா பதைப்புடன் காத்திருந்தார்கள்.

"என்ன நடந்துருக்கும்னு நினைக்கிறிங்க பரத்?" என்றாள் சுசிலா.

"என்னால எதுவும் யூகிக்க முடியலை. என்னவோ ஒரு சம்பவம் நடந்திருக்கு. அதில வயத்தில இருக்கிற குழந்தை பாதிக்கப் பட்டிருக்கு. படுக்கைப் பூரா எவ்வளவு ரத்தம்!"

"வலி வந்து பிரசவமாயிருக்குமோ?"

"தெரியலை. அப்படின்னா குழந்தை எங்கே? ஏன் எல்லாக் கதவும் திறந்து இருந்திச்சி? ஒரேக் குழப்பமா இருக்கு. டாக்டர் வெளில வந்து விபரம் சொன்னாத்தான் புரியும்."

"எனக்கு ரொம்ப கில்ட்டியா இருக்கு பரத். எவ்வளவு சிம்ப்பிளா ஏமாந்துட்டேன்!"

"அது முடிஞ்சிபோன விஷயம். இனிமே செய்ய வேண்டியதைப் பத்தி யோசிக்கலாம்."

"டெல்லி இருக்கற விக்னேஷுக்கு எப்படித் தகவல் கொடுக்கறது பரத்?"

"நிலைமை என்னன்னு நமக்கே புரியாத சமயத்தில.

கதவு திறந்து டாக்டர் வெளியே வந்ததால் பரத் பேச்சை நிறுதி எழுந்து கொண்டான்.

"கம் டு மை ரூம்" என்று டாக்டர் நடக்க. இருவரும் தொடர்ந்தார்கள்.

தனியறைக்கு வந்ததும் ஒரு கொட்டாவி விட்டபடி தன் சுழல் நாற்காலியில் அமர்ந்த டாக்டர், "ஸம்திங் ஸ்ட்ரேஞ்ச் மிஸ்டர் பரத்!" என்றார்.

"என்ன டாக்டர்?"

"பேஷண்ட்டை நீங்க கொண்டு வந்த கண்டிஷனைப் பார்த்தப்போ, ஏதோ கார் ஆக்ஸிடெண்ட் ஆகி. ஓவர் பிளிடிங்னுதான் நினைச்சேன். அப்படியில்லை. அவங்களுக்கு அரைகுறையா ஒரு சிசேரியன் ஆபரேஷன் நடந்திருக்கு!"

"வ்வாட்?" என்று அதிர்ந்தான் பரத்.

"யெஸ். தேர் ஈஸ். நோ பேபி இன்சைட்! ஆஸ்பத்திரில குழந்தை திருடப்பறடதைப் பத்திக் கேள்விப்பட்டிக்கோம். நூதனமா கர்ப்பப்பைல இருக்கற குழந்தையைத் திருடியிருக்காங்க. ஆனா சரியா க்ளீன் பண்ணலை. சரியா தையல் போடலை. இந்த அவசர ஆபரேஷன் செஞ்ச டாக்டர் அரை வேக்காடாத்தான் இருக்கணும்."

"ஓ! மை காட்!" என்று நெற்றியைப் பிடித்துக் கொண்டாள் சுசிலா.

"நீங்க சொல்றதெல்லாம் கனவு மாதிரி இருக்கு டாக்டர். என்னால எதையும் நம்பமுடியலை."

"ஆனா அதுதான் நடந்திருக்கு. திஸ் ஈஸ் ய கிரிமினல் கேஸ். ஏரியா போலீஸ் ஸ்டேஷன்ல ஒரு கேஸ் ஃபைல் பண்றதுக்கான ஏற்பாட்டை செஞ்சிருங்க."

"சுதாவுக்கு நீங்க என்ன ட்ரீட்மெண்ட் கொடுத்திருக்கீங்க?"

"அவங்களுக்கு ஒண்ணுமில்லை. மயக்கத்திலதான் இருக்காங்க. நான் அரைகுறைத் தையலை எடுத்துட்டு சுத்தமா க்ளீன் பண்ணி புதுசா தையல் போட்டுட்டேன். ப்ளட் ஏத்தச் சொல்லிருக்கேன். ஒரு சிசேரியன் செய்யப்பட்ட பேஷண்ட்டுக்கு உள்ள ட்ரீட்மெண்ட்தான். அவங்க ஒரு பத்து நாளைக்கு இங்கே இருந்தாகணும். ஆக்சுவலா அவங்க டெலிவரி டேட் தெரியுமா?"

"இன்னும் இருபது நாள் இருக்கறதாச் சொன்னாங்க."

"தென். இட் ஈஸ் ஓகே. அந்தக் குழந்தை கொஞ்சம் ப்ரீமெச்சூர் பேபி! உயிரோட திருடிருக்காங்க. கொடுமை!"

"ஏன் டாக்டர், ஒரு வீட்டு பெட்ரூம்ல ஆபரேஷன் தியேட்டருக்கான வசதி எதுவும் இல்லாத சூழ்நிலைல சிசேரியன் ஆபரேஷன் செய்ய முடியுமா என்ன?"

"ப்ராப்பரா செய்யறதுன்னா முடியாது! தப்பு! இவங்க நோக்கம் நீட்டான ஒரு ஆபரேஷன் செய்யறது இல்லையே.

"வயத்தைக் கிழிக்கிறதுன்னா மயக்க மருந்து இல்லாம எப்படி? குளோரோஃபார்ம் கொடுத்திருக்காங்களா?"

"இல்லை. ஸ்பைனல் கார்டுல ஊசி போட்டு மயக்கப் படுத்தியிருக்காங்க. தனக்கு என்ன நடந்துருக்குன்னு இந்த நிமிஷம் வரைக்கும் அவங்களுக்குத் தெரியாது."

"அவங்களுக்கு எப்ப மயக்கம் தெளியும் டாக்டர்?"

"நாலஞ்சி மணி நேரம் ஆகும்."

"இது முதல் குழந்தை டாக்டர் விபரம் தெரிஞ்சா தாங்க மாட்டாங்க. அவங்களுக்கு நினைவு திரும்பினதும். குழந்தை டெலிவரி தேதிக்கு முன்னாடியே பொறந்துட்டதால இன்க்யுபேட்டர்ல வெச்சிருக்கோம், ரெண்டு மூணு நாள் கழிச்சுதான் கண்ல காட்டுவோம்னு பொய் சொல்லிடுங்க டாக்டர். ப்ளீஸ். அப்புறம் பக்குவமா சொல்லிக்கலாம்."

"ஓகே. அவங்க ஹஸ்பண்ட் டெல்லில இருக்கிறதாச் சொன்னிங்களே. அவருக்கு.

“எப்படிச் சொல்லணுமோ அப்படிச் சொல்லி நான் வரவழைச்சிடறேன் டாக்டர் போலீஸ் ஸ்டேஷன்ல கம்ப்ளைண்ட் கொடுத்துடறேன். ஒண்ணு மட்டும் சொல்லுங்க. இவங்களுக்கு நடத்தப்பட்ட இந்தக் கொடுமையை ஒரு டாக்டராலதானே செய்திருக்க முடியும்?”

“யெஸ். யெஸ். மயக்கப்படுத்தற ஊசி, ஆபரேஷனுக்கு உண்டான ஆயுதங்கள், தையல் நரம்பு எல்லாம் தயாரா எடுத்துட்டு வந்து அவசரமா செயல்படுத்தப் பட்டிருக்கு. மெடிக்கல் நாலெட்ஜ் இல்லாத யாரும் இதைச் செய்ய முடியாது.”

“கிட்னி திருட்டு மாதிரி இப்படிப் புதுசா ஒண்ணு ஆரம்பிச்சிருக்குப் போல. ஆனா ஒரு டாக்டர் வீடு புகுந்து இப்படி அரக்கத்தனமா நடந்துக்கற அளவுக்கு செயல்படுவாரா?”

“டாக்டர்கள் எல்லாம் புண்ணியாத்மாக்களா என்ன? பயிருக்கு நடுவுல விஷச்செடி மாதிரி எந்தத் துறையிலயும் சில அயோக்கிய சிகாமணிகள் புகுந்துடறாங்களே பரத். ஆஸ் எ டாக்டர், இந்த சம்பவத்துக்காக நான் ரொம்ப வெக்கப்படறேன்” என்ற ஈஸ்வரனுடன் கைகுலுக்கி எழுந்தான் பரத்.

சுசிலாவை அழைத்துக் கொண்டு வெளியே வந்து இருபத்தி நாலு மணி நேரம் சேவை செய்யும் எஸ்.டி.டி. பூத்தைத் தேடிப் பிடித்து. கவிழ்ந்து உறங்கினவன் முதுகில தட்டி எழுப்பி. டெல்லி என்களைப் போட்டபின்.

“ஹலோ. விக்னேஷ்” என்று தூக்கச் சோம்பல் போர்த்தின குரல் கேட்டது.

“விக்னேஷ், நான்தான் பரத் பேசறேன்.”

“பரத், என்ன இது இந்த நேரத்தில? இப்ப என்ன டைம்?”

“அதிகாலை மூணரை! உன்னை இந்த நேரத்தில டிஸ்டர்ப் பண்ண வேண்டியிருக்கு. நான் சொல்றதைக் கொஞ்சம் பதட்டப் படாம கேளு. திடீர்னு சுதாவுக்கு இடுப்பு வலி ஏற்பட்டு ஆஸ்பத்திரில சேர்த்தோம். பிரசவத்தில் சிக்கல் இருந்ததால் சிசேரியன் செஞ்சி குழந்தையை எடுத்திருக்காங்க. ரெண்டு பேரும் சேஃபா இருக்காங்க. குழந்தை எடை கம்மியா இருக்கிறதால இன்குயுபேடர்ல வெச்சிருக்காக். யுவர் வைஃப் ஈஸ் ஓகே. நீ எப்ப வர்றே?”

“காலைல ஃபர்ஸ்ட் ஃபிளைட்லயே புறப்பட்டுடறேன். ஆமாம், என்ன குழந்தை? அதை முதல்ல சொல்லு பரத்.”

ஒரு விநாடி விழித்த பரத், "ஆண் குழந்தை" என்றான்.

"அவதான் பந்தயத்தில ஜெயிச்சிருக்கா. ரொம்ப தேங்ஸ் பரத். நான் இல்லாத நேரத்தில அவகூடப் பொறந்த பிரதர் மாதிரி கவனிச்சிப் பார்த்திருக்கே. காலைல மீட் பண்ணலாம். எந்த ஹாஸ்பிடல்னு சொல்லலையே.

"உன் வீட்டுக்கு வா. அங்கதான் நாங்க இருப்போம். அப்புறம் ஹாஸ்பிடல் போலாம்."

போனை வைத்துவிட்டு வெளியே வந்த பரத்தின் கண்கள் கலங்கியிருந்தன. சோர்வாக நடந்தான்.

"அவனை வரவழைக்கிறதுக்காக பொய் சொல்லிட்டேன். நாளைக்கு அவன் வந்ததும் உண்மை தெரிஞ்சி உடைஞ்சிப் போய்டுவான் சுசி. இப்படி ஒரு மோசமான சம்பவம் நடக்க விட்டிருக்கேன். என்னைப் போயி ஒரு கூடப் பொறந்த பிரதர் மாதிரி கவனிச்சுப் பார்த்துக்கிட்டதா பாராட்டறான்."

"தப்பு செஞ்சது நான்தான் பரத். நீங்க ஏன் ஃபீல் பண்றீங்க?"

"என் கவனத்தை சிதறடிச்ச அந்த அயோக்கிய ராஸ்கலைப் பிடிச்சி அவன் கையை அப்படியே கரும்பு ஜூஸ் பிழியற மிஷின்ல கொடுத்து நசுக்கணும் சுசி."

"பரத், இது ஒரு ஆள் செய்யற காரியம் இல்லை. நீங்க சொன்ன கிட்னி திருட்டு மாதிரி இப்ப புதுசா இந்த மாதிரி ஒரு கும்பலே புறப்பட்டிருக்குன்னு நினைக்கிறேன்."

"சுசி, அது தனியாளா இருந்தாலும் சரி, கும்பலா இருந்தாலும் சரி.. கண்டுபிடிக்கணும். அவன்கிட்ட ஏதாச்சும் சொல்லணுமேன்னு ஆண் குழந்தைன்னு பொய் சொல்லிட்டேன். ஆக்சுவலா திருடப்பட்டது ஆண் குழந்தையோ, பெண் குழந்தையோ எதுவா இருந்தாலும் அந்தக் குழந்தையைக் கண்டுபிடிச்சி விக்னேஷ் - சுதாகிட்ட ஒப்படைக்கணும் சுசி."

"ஆமாம் பரத், அப்பதான் என் மனசுல குற்ற உணர்ச்சி போகும். நேரா போலீஸ் ஸ்டேஷன் போயிடலாமா?"

"பாதிக்கப்பட்ட சுதாவைத்தான் நாம அவசரமா கவனிச்சோம். அவங்க வீட்ல ஏதாவது தடயம் மிஸ்ஸாயிருக் கான்னு பார்க்கற சூழ்நிலைல நாம அப்ப இல்லை. போலீசுக்குத் தகவல் சொல்லி அவங்க வர்றதுக்கு முன்னால நாம் ஒரு தடவை

விக்னேஷ் வீட்ல எதையும் கலைக்காம ஒரு பார்வை பார்த்துடலாம் சுசி."

"சரி பரத்."

பரத் தன் காரை ஸ்டார்ட் செய்துவிட்டு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

* * *

## 12

விக்னேஷின் வீட்டு வாசலில் காரை நிறுத்தினான் பரத்.

சுசிலா தன் கைப்பையிலிருந்து சாவி எடுத்து பூட்டைத் திறந்தாள்.

பரத் வீட்டின் வெளிப்புற வராந்தாவுக்கான விளக்கை முதலில் போட்டான்.

இடுப்பில் கைகளை வைத்துக் கொண்டு சில நிமிடங்கள் கண்களை அலைய விட்டான்.

"உள்ளேப் போலாம்" என்றான். வந்தார்கள்.

ஹாலில் எல்லா விளக்குகளையும் போட்டான். பரத் காற்றில் முகர்ந்து பார்த்தான்.

"சுதா மாடில படுத்திருந்தாளா?"

"தெரியலை பரத். நாங்க ரெண்டு பேரும் கேரம் போர்டு விளையாடிட்டு. இருந்தப்பத்தான் அந்த போன் வந்திச்சு. நான் உடனே அவங்க கார்ல புறப்பட்டுட்டேன். அப்போ அவ கீழேதான் இருந்தா. அப்புறம் மாடிக்குப் போயிருக்கலாம்."

"வாசல் பூட்டு உடைபடலை. இயல்பா திறக்கப்பட்டிருக்கு சுசி. சுதாவே திறந்து விட்டிருக்கலாம்."

பரத் பாதி ஆட்டத்தில் இருந்த கேரம் போர்டைப் பார்த்தான்.

"சுதாவே கதவைத் திறந்து விட்டிருந்தா. வந்தது அவங்களுக்குத் தெரிஞ்ச நபராத்தான் இருக்கணும் பரத்."

"ஒரே ஒரு டாக்டர் மட்டும் வந்து இதை செஞ்சிருக்க முடியாது சுசி. துணைக்கு அட்லீஸ்ட் இன்னொரு நபர் வந்திருக்கணும். அடுக்கடுக்கா ஆயிரம் கேள்விகள் இருக்கு. வந்தது எத்தனைப் பேர்? ஆபரேஷன் செஞ்ச டாக்டர் ஆணா, பெண்ணா? எதுக்காக இந்தக் குழந்தைத் திருட்டு?"

"கிட்னிக்கு ஒரு மார்க்கெட் வேல்யூ இருக்கற மாதிரி புதுசா பொறந்த குழந்தைக்குன்னு ஒரு மார்க்கெட் உண்டாகியிருக்கோ, என்னவோ. ."

"விசாரிக்கணும் சுசி. என்னால, இந்த நிமிஷம் வரைக்கும் நடந்திருக்கிற அபத்தமான ஆபரேஷனை ஜீரணிக்க முடியலை. இதெல்லாம் கனவு பரத்னு நீ சொன்னா. நான் நம்ம ஆசைப் படறேன். வா, மாடிக்குப் போய்ப் பார்க்கலாம்."

இருவரும் மாடிப்படிகளில் உன்னிப்பாக பார்வையைப் பதித்தபடி மேலே வந்தார்கள்.

திறந்திருந்த சுதாவின் படுக்கையறைக்குள் வந்தார்கள்.

படுக்கை மேல் உறைந்து போன ரத்தத் திட்டுக்கள் வயிற்றைப் புரட்டின.

"ஒண்ணு நிச்சயம் பரத்."

"என்ன?"

"இப்ப ஒரு ஆபரேஷன் செஞ்சிருக்கிற அந்த டாக்டர் மனுஷ ஜாதியே இல்லை! அரக்க ஜாதி! கொஞ்சம்கூட இரக்கமே இல்லாம. எவ்வளவு ரத்தம்!"

"இன்னொரு விஷயமும் யோசிக்கணும் சுசி. அந்த டாக்டருக்கு சுதாவைக் கொலை செய்யறது நோக்கமா இல்லை."

"ஆமாம் பரத், நினைச்சிருந்தா குழந்தையை ஆபரேஷன் செஞ்சி எடுத்ததும். அப்படியே விட்டுட்டுப் போயிருந்தாலே ஓவர் ப்ளீடிங்கல சுதா செத்திருப்பா. பொறுப்பா தையல் போட்டுருக்கானே. என்ன அர்த்தம் இதுக்கு?"

"அவனுக்கு வேண்டியது அந்தக் குழந்தை மட்டும்தான்னு அர்த்தம்!"

"அப்படியென்ன அது அபூர்வ அதிசயக் குழந்தையா? யாருக்காச்சும் புதுசா பொறந்த குழந்தை தத்துக்குத் தேவைப்பட்டாக்கூட. அனாதை இல்லங்கள்லயும், சில

ஆஸ்பத்திரிகள்லயும் பேரண்ட்ஸ் அனுமதியோட முறையா ஏற்பாடு செஞ்சித் தருவாங்களே.

சுசிலாவையே உற்றுப் பார்த்தான் பரத்.

"என்ன பரத் அப்படிப் பார்க்கறீங்க?"

"இப்ப நீ என்ன சொன்னே? ஒரு வேளை அந்தக் குழந்தை அதிசயக் குழந்தையான்னு கேட்டில்ல? வொய் நாட்?"

"என்ன சொல்றீங்க?"

"சுதாவோட வயத்தில வளர்ந்தது ஒரு அதிசயமான குழந்தையா ஏன் இருக்கக் கூடாது? இந்த மாதிரி நிறைய அபூர்வக் குழந்தைகள் உலகம் பூரா அப்பப்ப பொறக்குது சுசி."

"ஆமாம் பரத். லேட்டஸ்ட்டா டி.வில கூட இந்த மாதிரி ஒரு குழந்தையைக் காட்டினாங்க. இரண்டு வயசுக் குழந்தை ஒண்ணு நாலு லாங்குவேஜ்ல சரளமாப் பேசுது. படிக்குது. படிச்சதை அப்படியேச் சொல்லுது."

"சுதாவுக்குள் வளர்ந்தது அப்படி ஒரு குழந்தையா ஏன் இருக்கக் கூடாது?"

"ஆனா ஒரு குழந்தை அதிசயமான குழந்தையா இல்லையான்னு பொறந்ததுக்கப்புறம் அதோட செயல்களை வெச்சித்தானே தெரிய வருது. அதெப்படி வயத்துக்குள்ளே இருக்கறப்பவே அதிசயக் குழந்தைன்னு தெரியும்?"

"உனக்குத் தெரியாது. எனக்குத் தெரியாது. டாக்டர்சுக்கு தெரியலாம். விஞ்ஞான வளர்ச்சி பல எல்லைகளைத் தொட்டுக் கிட்டு இருக்கே. ."

"மே பி. என்று தோள்களைக் குலுக்கிக் கொண்டாள் சுசிலா. "திருடப்பட்டது ஒரு அதிசயக் குழந்தைங்கிற ரூட்ல போனா. அப்புறம் இன்னொரு கேள்வி பெருசா நிக்கிது பரத்."

"என்ன?"

"புத்தம் புதுசா பொறந்த ஒரு அதிசயக் குழந்தையை வெச்சிக்கிட்டு என்ன செய்வாங்க?"

"டிஸ்கவரி சேனல் பார்க்கறப்போ கடலுக்குள்ளே இத்தனை சமாச்சாரம் இருக்கான்னு பிரமிக்கிறோமா இல்லையா, அந்த மாதிரி நமக்குத் தெரியாத நிறைய உபயோகங்கள் இருக்கலாம். ஒரு மூலிகைலேர்ந்து பெட்ரோல் தயாரிக்கலாம்னு

ஒரு பிரமிப்பு மேட்டர் இப்ப பரபரப்பா வெளிச்சத்துக்கு வரல்லையா? அதுவரைக்கும் இப்படி ஒரு கோணத்தில யாராச்சும் சிந்திச்சோமா?"

பரத் அந்த அறையை கைகளைக் கட்டிக்கொண்டு கவனித்தான்.

அகலமான இரட்டைப் படுக்கை கொண்ட கட்டில், எப்போதும் வாடாத பூக்கள், மலர்ந்து சிரிக்கும் படுக்கை விரிப்பு, நான்கு தலையணைகள், தலைமாட்டில் ஒரு கப்போர்டு. அதன்மேல் சி.டி. சௌகரியத்துடன் நான்கு ஸ்பீக்கர்கள் கொண்ட மியூசிக் சிஸ்டம். அறையின் ஒரு சுவர் முழுக்க வார்ட்ரோபின் நெடுக்குக் கதவுகள். அதில் ஒட்டப்பட்டிருந்த பலவகையான ஸ்டிக்கர்களில் பாபா சேகலும், மைகேல் ஜாக்சனும், சுசித்ரா கிருஷ்ணமூர்த்தியும், கலோனில் கஸின்சும், அப்பாச்சி இன்டியனும். விக்னேஷின் இசை ரசனையை வெளிப்படுத்தினார்கள்.

அறைக்கு ஒரே ஒரு ஆறடி ஜன்னல். அதற்கு கிரே நிறத்தில் வெனீஷியன் பிளைண்ட்ஸ் தொங்கவிடப் பட்டிருக்க. ஒரு ஒல்லியான நீள மேஜையின் மேல் 496 கம்ப்யூட்டரும், டாட்மார்ரிக்ஸ் பிரிண்ட்டரும் இருந்தன அங்கே ஒரு டெலிபோன், படுக்கைக்கு அருகே ஒரு டெலிபோன் என்று இரண்டு இருந்தன. ஸ்பிளிட் ஏ.சி. சிஸ்டம் அமைக்கப் பட்டிருந்தது. பொய்க்கூரை வேயப்பட்டிருந்தது. மார்பிள் தரை மேல் படுக்கைக்குப் பக்கத்தில் மட்டும் ஒரு அரை வட்ட கார்ப்பெட். அறையின் இரண்டு மூலைகளிலும் நாகரீக ஸ்பிண்ட்ஸ் அமைத்து பிளாஸ்டிக் கொடிகள் அதன்மேல் சிரத்தையாக படரவிடப்பட்டிருந்தன.

இண்ட்டீரியர் டெகரேஷன் ரசனை இல்லாத யாரும் இப்படி ஒரு அழகான அறையை அமைத்திருக்க முடியாது என்று பரத் நினைத்துக் கொண்டான்.

தரையில் முட்டியில் அமர்ந்து எதையோத் தேடினான். எதுவும் கிடைக்கவில்லை.

அந்த அறையில் ஒரு போராட்டமே இல்லை. படுக்கை மேல் ரத்தத் தேக்கம் தவிர. யாருக்கும் எந்த உறுத்தலும் இருக்.

பரத் குனிந்து அதை எடுத்தான்.

அது வெள்ளிக் கொலுசின் ஒரு சலங்கை முத்து!

“சுசீ, இதைப் பாரு.”

காட்டினான். பார்த்தவள், “இது சுதாவோடது பரத். ஆஸ்பத்திரில சுதா போட்டிருந்த நகைகளை எல்லாம் கழட்டி என்கிட்ட ஒப்படைச்சாங்க. அப்ப கொலுசும் கொடுத்தாங்க. இருங்க, பார்த்துடலாம்” என்று தன் கைப்பையைத் திறந்தாள்.

காகிதப் பொட்டலம் எடுத்து மேஜையின் மேல் பிரித்து வைத்தாள். இரண்டு கொலுசுகளையும் எடுத்தாள். அந்த கொலுசுகளில் ஏற்கனவே பல சலங்கை முத்துக்கள் இல்லாமல் இருந்தன.

பரத் தான் எடுத்த முத்தை அதனோடு ஒப்பிட்டுப் பார்த்து விட்டு அதை அந்தப் பொட்டலத்திலேயே போட்டுவிட்டான்.

“ரொம்ப சாமர்த்தியமா செயல்பட்டிருக்காங்க சுசீ. ஒரு ஆபரேஷன் இங்க இந்த கட்டில்மேல நடந்திருக்கு. ஆனா ஒரு பஞ்சுத் துண்டோ, இன்ஜெக்ஷன் காலி பாட்டிலோ எதுவுமே இல்லை.”

“ரொம்ப ஜாக்கிரதையா எல்லாத்தையும் பொறுக்கி எடுத்துட்டுப் போயிருக்கணும் பரத்.”

“அட்லீஸ்ட் கை கழுவியிருக்க மாட்டாங்க?”

பரத் இணைப்பாயிருந்த பாத்ரூமிற்குள் சென்று பார்த்து விட்டு வந்து, “க்ளீன். எந்தத் தடயத்தையும், ஒரு சின்ன குப்பையையும் விட்டு வைக்காம செஞ்சிருக்காங்க. நாய் வரணும் சுசீ. ஓ.கே. இதுக்கு மேல நாம லேட் பண்ணக்கூடாது. கீழேப் போய் அங்கே இருக்கிற போன்ல முதல்ல ஏரியா போலீஸ் ஸ்டேஷனுக்குத் தகவல் கொடுத்துடலாம். அப்புறம் நம்ம முருகேசனுக்கும் சொல்லி வரச் சொல்வோம்” என்றான்.

* * *

## 13

“**கா**லை பத்து மணிக்கு விக்னேஷின் வீடு பரபரப்பில் இருந்தது. ஏரியா இன்ஸ்பெக்டர் சுபாஷ் அக்கம் பக்கத்தில் நாற்பத்தி ஏழுபேரை இன்க்வெஸ்ட் செய்து முடித்திருந்தார்.

கிரைம் பிராஞ்ச் ஸ்பெஷல் இன்ஸ்பெக்டர் முருகேசன் வந்து சேர்ந்து பரத்திடம் விவரங்கள் பெற்று, "புதுசா இருக்கே இந்த மேட்டர்" என்று அதிசயித்து.

டெபுடி கமிஷனர் கஜபதி ஸ்தலத்துக்கு விரைந்து உள்ளே ஒரே நிமிடம் சுற்றிப் பார்த்துத் திரும்பி ஜீப் மேல் சாய்ந்தபடி ஐந்து தொடர் சிகரெட்டுகளுக்கு நடுவில் உத்தரவுகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார்.

ஃபாரென்சிக் மனிதர்கள் ரேகைப் பதிவுகளில் இருந்தார்கள். நாய் ஜின்னா படுக்கையறையிலிருந்து பாத்ரூமுக்குப் போய் பிறகு அங்கிருந்து தெருவுக்கு வந்து பாய்ந்து ஓடியது. இறுதியில் தெரு முனை குப்பைத் தொட்டியைப் பிராண்ட.

அங்கிருந்து கிடைத்த ஒரு பெரிய பாலிதீன் கவருக்குள் அறுக்கப்பட்ட தொப்புள்கொடி, ரத்தப் பஞ்சுக்குவியல்கள், உபயோகிக்கப்பட்ட டிஸ்போசபிள் சிரின்சுகள், மருந்து காலி பாட்டில்கள், கிளவுட்ஸ் செட்ஸ் இரண்டு, சிறிய பிளேடுகள், மீதமான தையல் நரம்புகள் என்று மருத்துவக் குப்பைகள் இருந்தன.

நகரமெங்கும் வயர்லெசில் செய்திகள் தாவிக் கொண்டிருந்தன. பத்திரிகை நபர்கள், டி.வி. நபர்கள் தங்கள் சாதனங்களுடன் விரையத் துவங்க. பத்திரிகை அலுவலகங்களில் டெலி பிரிண்டர்கள் ஏராளச் செய்திகளுக்கு நடுவே 'இளம் பெண்ணின் கர்ப்பப் பையிலிருந்து புத்தம் புதுக் குழந்தை நூதன முறையில் திருட்டு' என்று ஆங்கிலத்தில் அடித்துத் துப்பின.

டெபுடி கமிஷனர் பத்திரிகை நபர்களைப் பார்த்து, "யாரோ ஒரு டாக்டர் இப்படி அக்கிரமம் செஞ்சிருக்கார். குழந்தையோட அம்மா சேஃபா ஆஸ்பத்திரில இருக்காங்க. இந்தத் திருட்டு ஆபரேஷன்ல பயன்படுத்தின மெடிக்கல் அயிட்டம்ஸ் கிடைச்சிருக்கு. பக்கத்து வீடுகள்ல விசாரிச்சதில் ஒரு அம்பாசிடர் கார்ல அவங்க வந்து போனதா தெரியுது. இன்னும் தீவிரமான விசாரணைகள்ல இறங்கலை. அந்த அயோக்கிய டாக்டரை சீக்கிரமே கண்டுபிடிச்சுடுவோம்னு நம்பிக்கை இருக்கு. இதுக்கு மேல இதைப்பத்தி எதுவும் எழுத வேணாம். நாளைக்குக் காலைல என் ஆஃபிஸ் பிரீஃபிங்ல மேற்கொண்டு தகவல்கள் தர்றேன்" என்றார்.

“அந்த டாக்டர் மனநோய் பிடிச்சவனா இருக்கலாமா?” என்றார் மைக் நீட்டிய ஒரு நிருபர்.

“நாங்க எந்த யூகத்துக்கும் இன்னும் வரலை. அப்படி எல்லாம் எதுவும் எழுதி பொதுமக்களை கலவரப் படுத்திடாதிங்க.”

“குழந்தையைப் பறிகொடுத்த அம்மா இப்போ எந்த ஆஸ்பத்திரில ட்ரீட்மெண்ட் எடுத்துக்கறாங்க?”

“ஸாரி, அதைச் சொல்ல முடியாது. அவங்களுக்குத் தொந்தரவு.”

“இது சம்பந்தமா போலீசுக்கு முன்னாடியே ஏதாச்சும் எச்சரிக்கை லெட்டர் மாதிரி வந்ததா?”

“அப்படியெல்லாம் எதுவும் வரலை. போதும். இதுக்கு மேல யாரும் எதுவும் கேக்க வேணாம். ப்ளீஸ்.

டெபுடி கமிஷனர் கஜபதி மற்றொரு சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டு வீட்டுக்குள் வந்துவிட்டார்.

ஒரு அறையில் முகத்தில் அறைந்துகொண்டு அழுது கொண்டிருந்த விக்னேஷை பரத் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான்.

“விக்னேஷ், இதோ பார். நீ படிச்சவன். தைரியமா இரு. எந்த கெட்டதிலயும் என்ன நல்லது நடந்திருக்குன்னு பார்க்கணும். சுதாவுக்கு ஒண்ணும் ஆகலை. அந்தக் குழந்தையையும் அவங்க உயிரோடத்தான் எடுத்துட்டுப் போயிருக்காங்க. நம்ம தமிழ்நாடு போலீஸ் பத்தி உனக்குத் தெரியாதா? நிச்சயமா நாளைக்குள்ளே உன் குழந்தை உன்கிட்ட இருக்கும்னு நம்பிக்கை எனக்கு இருக்கு.”

விக்னேஷ் தேம்பலை நிறுத்தி கர்ச்சீப்பை மூக்கில் வைத்து சுத்தம் செய்து நிமிர்ந்து, “நான் உடனே சுதாவைப் பார்க்கணும் பரத்” என்றான்.

“வேணாம். இப்ப நீ போனா உன் முகமே காட்டிக் கொடுத்திடும். அவங்களுக்கு ஒண்ணும் இல்லை. இன்டென்சிவ் கேர் யூனிட்ல ரொம்ப நிம்மதியா ரெஸ்ட்ல இருக்காங்க. நடந்த எதுவும் அவங்களுக்குத் தெரிவிக்கப்படலை. சுசிலா அங்கதான் போயிருக்கா.”

“என்னன்னு சொல்லி வெச்சிருக்கிங்க?”

"டெலிவரி டயத்துக்கு முன்னாடி பொறந்ததால குழந்தை அண்டர்வெய்ட்டா இருக்குன்னும், இன்க்யூபேட்டர்ல வெச்சிருக்கிறதாவும் தகவல் சொல்லிருக்கோம். நீ இன்னைக்கு ஈவினிங்தான் டெல்லிலேர்ந்து வருவேன்னும் சொல்லி யிருக்கோம். ஈவினிங் நீ போய்ப் பார்க்கலாம். அதுக்குள்ளே உன் மனசு இந்த அதிர்ச்சியை ஜீரணம் செஞ்சிடும். நீ பார்க்கறப்பவும் இதே நாடகத்தைத்தான் அவகிட்ட தொடரணும். புரிஞ்சுதா?

"உண்மை தெரிஞ்சா நொறுங்கிப் போயிடுவா பரத்."

"அதுக்குள்ளே உன் குழந்தையை மீட்டுடப் போறோம். இப்ப உன் மனசை கொஞ்சம் தைரியப்படுத்திக்கிட்டு என்கொயரிக்கு ஒத்துழைச்சாதான் போலீசால வேகமா செயல்பட முடியும்."

அமைதியாகத் தலையை ஆட்டினான் விக்னேஷ்.

பரத் அறைக்கு வெளியே வந்து முருகேசனிடம், "இப்போ விக்னேஷ் கொஞ்சம் பேசற நிலைமைல இருக்கான்" என்றதும்

டெபுடி கமிஷனர் கஜபதி, முருகேசன், இன்ஸ்பெக்டர் சுபாஷ் மூவரும் உள்ளே வந்து நாற்காலிகளை அமைத்துக் கொண்டு அமர்ந்துவிட்டார்கள்.

"விக்னேஷ், நீங்க என்ன படிச்சிருக்கிங்க?"

"பி.ஈ. எலெக்ட்ரானிக்ஸ் சார்."

"என்ன பண்ணிட்டு இருக்கிங்க?"

"தேவதா சிஸ்டம்ஸ் லிமிட்டெட்ல கம்ப்யூட்டர் என்ஜீனியரா வேலை பார்த்துட்டிருக்கேன்."

"டெல்லிக்கு எதுக்குப் போனீங்க?"

"ஆபீஸ் விஷயமாத்தான் போனேன்."

"உங்களுக்கு எப்ப கல்யாணமாச்சி?"

"அஞ்சி வருஷம் ஆச்சி சார்."

"இதான் முதல் குழந்தையா?"

"ஆமாம்."

"இதுக்கு முன்னாடி ஏதாச்சும் உண்டாகி டெர்மினேட் செஞ்சதுண்டா?"

“இல்லை சார்.”

“இந்த வீட்ல யார், யார் இருக்கிங்க?”

“நான், என் வைஃப் ரெண்டே பேர்தான் சார்.”

“வீட்டு வேலைக்கு. ..?”

“ஒரு வேலைக்காரி வந்துட்டுப் போவா சார்.”

“உங்க மாமனார் ஊர் எது?”

“விழுப்புரம் பக்கத்தில கோலியனூர்னு ஒரு சின்ன ஊர் சார்.”

“எந்த டாக்டர்கிட்ட வொய்ஃபுக்கு கன்சல்ட் செஞ்சிட்டு இருந்திங்க நீங்க?”

“இதே தெருவுல பாலாஜி ஹாஸ்பிடல்னு இருக்கு சார். நல்ல பெரிய ஹாஸ்பிடல். வேதவல்லின்னு ஒரு டாக்டர் அதை நடத்திட்டு இருக்காங்க. எல்லா ஸ்பெஷலிஸ்ட்சும் அங்க இருக்காங்க. லேப், மெடிக்கல்ஸ், ஆபரேஷன் தியேட்டர்னு எல்லா வசதியும் உண்டு. வேதவல்லி டாக்டர் பிரசவத்தில் எக்ஸ்பர்ட்னு இந்த ஏரியால ரொம்ப பிரபலம். வீட்டுக்கும் பக்கம். வலியெடுத்தா நடந்தே போய் அட்மிட் ஆயிட முடியும். இந்த சௌகரியத்தை எல்லாம் நினைச்சுதான் தலைப் பிரசவத்தை அம்மா வீட்ல வெச்சுக்க வேணாம், இங்கயே வெச்சிக்கலாம்னு தீர்மானிச்சேன் சார்.”

“ஸ்கானிங்ல என்ன குழந்தைன்னு தெரிஞ்சுக்கிட்டிங்களா?”

“ஒரு த்ரில் போய்டும்னு அதை எங்ககிட்ட சொல்ல வேணாம்னு சொல்லிட்டோம் சார்.”

“குழந்தையோட வளர்ச்சி பத்தி டாக்டர் வேதவல்லியோட அபிப்பிராயம் என்ன?”

“நார்மல்னுதான் சொன்னாங்க. என் மனைவிக்குத்தான் ரத்தம் கம்மியா இருக்குன்னு டானிக்கும், அயர்ன் கேப்சுல்சும் எழுதிக் கொடுத்தாங்க.”

“ரைட்டு. இப்படி வினோதமா ஒரு சம்பவம் நடந்திருக்கே. இதைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறிங்க?”

"எனக்கு அதிர்ச்சியா இருக்கு சார். என்னால இதை நம்பவே முடியலை. கொடுமை சார்! பிறக்கப்போற குழந்தையைப் பத்தி எவ்வளவு கனவு வெச்சிருந்தோம் தெரியுமா? திடீர்னு டெல்லி போக வேண்டி வேலை வந்ததும் துணைக்கு யாரை வெச்சிட்டுப் போறதுன்னு குழம்பிப் போய்ட்டேன். பரத் பொறுப்பெடுத்துக் கிட்டதால நிம்மதியாப் புறப்பட்டுப் போனேன்."

"இங்க உங்களுக்கு சொந்தக்காரங்க யாரும் இல்லையா?"

"இல்லை."

"நீங்க பரத், சுசிலாவை இங்க துணைக்கு விட்டுட்டுப் போற தகவல் யார், யாருக்கெல்லாம் தெரியும்?"

"என் ஆபீஸ்ல என்கூட வொர்க் பண்ற ஜீனத்துக்குத் தெரியும். என் சீஃப்க்குத் தெரியும். என் ஆபிஸ் டிரைவருக்குத் தெரியும்."

"டிரைவருக்கு ஏன் சொன்னிங்க?"

"நான் ஊர்ல இல்லாதப்போ என் காரை எடுத்துட்டுப் போய் சர்வீஸ் பண்ணி கொண்டு வந்து வைக்கச் சொன்னேன். துணைக்கு யாரு சார் இருக்காங்கன்னு கேட்டான். சொன்னேன்."

"நீங்க குறிப்பிட்டவங்களை எல்லாம் நாங்க விசாரிக்க வேண்டியிருக்கு. ஏன்னா அந்த டாக்டருக்கு பரத் - சுசிலாவைத் தெரிஞ்சிருக்கு. கரெக்டா சுசிலாவுக்கு போன் செஞ்சி பரத்துக்கு விபத்துன்னு பொய் சொல்லி வெளியே சாமர்த்தியமா அனுப்பி வெச்சிருக்கான். சரி, இதை யார் செய்திருக்க முடியும்னு உங்களால ஏதாச்சும் யூகிக்க முடியுதா?"

"இல்லை சார்."

"எதுக்காக இதைச் செய்திருக்க முடியும்னாவது புரியுதா?"

"எனக்கு தலையைப் பிச்சுக்கலாம் மாதிரி இருக்கு சார். வீட்டுக்குள்ளே ஒரு ஆபரேஷன் நடந்திருக்குன்னு நினைச்சுப் பார்க்கவே முடியலை. திஸ் ஈஸ் ஹைலி அட்ரோஷியஸ்! சார்! என் குழந்தை எனக்கு வேணும் சார்! ப்ளீஸ் சார்! ப்ளீஸ் சார்! அது என்ன குழந்தைன்னுகூட தெரியலையே சார்!"

விக்னேஷ் மீண்டும் விம்மத் துவங்கினான்.

* * *

# 14

பாலாஜி ஹாஸ்பிடல் ஐந்து மாடிகளுடன் ஒரு நட்சத்திர ஹோட்டல் போல பளபளப்பாக இருந்தது. முழுக்க மார்பிள் டைல்ஸ் போர்த்தியிருந்தது. கிரானைட் தூண்கள், நான்கு லிஃப்டுகள். ரிசப்ஷனில் ஃபினாயில் வாசனையே இல்லாமல் இருந்தது.

மூன்றாவது மாடியில் இருந்த டாக்டர் வேதவல்லியின் அறை வாசலில் அவரது அனுமதிக்காகக் காத்திருந்தார்கள் பரத், சுசிலா.

"பேப்பர்ல எல்லாம் வந்துடுச்சி பரத்."

"இன்னைக்கு சிட்டி பூரா இதைப் பத்திதான் பேச்சு சுசி. சிகரெட் வாங்கின கடையில் எங்கிட்டயே 'மேட்டர் தெரியுமா சார். கர்ப்பப் பையிலேர்ந்தே குழந்தையை வெட்டிக்கினுப் பூட்டான் சார் ஒரு கில்லாடி டாக்டர்'னு கேக்கறான்."

"இப்படி ஊரேப் பேசுது. ஆனா சுதாவுக்கு மட்டும் எதுவும் தெரியாது. பாவம் இல்ல?"

"நேத்தைக்கு விட இன்னைக்குத் தெம்பா இருக்காங்களா?"

"பரவால்லை. குழந்தை முகத்தையே கொண்டாந்து காட்ட மாட்டேங்கறாங்களேன்னு கவலைப்பட்டாங்க. குழந்தையோட நன்மைக்காகத்தான் பிரிச்சி வெச்சிருக்காங்கன்னு சொன்னேன். ஆனா அவங்க திரும்பத் திரும்ப அந்த மயக்கப்படுத்தின மேட்டரையே சொன்னாங்க."

"எதை?"

"காலிங்பெல் அடிச்சது. எந்திரிச்சுப் போனேன். கதவைத் திறந்ததும் ஒரு கை என் மூஞ்சில எதையோ வெச்சிப் பொத்திச்சி. மயக்கமானேன். எந்திரிச்சிப் பார்த்தா ஆஸ்பத்திரில இருக்கேன். எப்படி இதுன்னு மூணு தடவை கேட்டுட்டாங்க."

"நான் சொல்லிக் கொடுத்த மாதிரிதானே சமாளிச்சி வெச்சே?"

"ஆமாம். நான் வெளில போய்ட்டு வந்தப்ப. அவங்க கதவைத் திறந்துட்டு மயக்கமாகி விழுந்ததைப் பார்த்துட்டு

உடனே ஆஸ்பத்திரில அட்மிட் செஞ்சதாச் சொன்னேன். ஆபரேஷனுக்காக குளோரோபார்ம் கொடுத்த எஃபெக்ட் இன்னும் உடம்புலேர்ந்து மொத்தமா விலகலை, அதனால நீங்களா சில காட்சிகளை கற்பனை பண்ணிக்கிறிங்க. யாரும் உங்க முகத்தில எதையும் வெச்சி மயக்கப்படுத்தலை. காலிங் பெல் அடிச்சது. நான்தான் கதவைத் திறக்கத் திறக்க மயக்கமாகி என் மேலயே சரிஞ்சிட்டீங்க, அதான் நடந்த உண்மைன்னு தெளிவா பச்சைப் பொய் சொல்லி வெச்சிருக்கேன் பரத். அவங்களுக்கு உண்மை தெரிஞ்சதும் முதல் சாபம் எனக்குத்தான்.

"இன்னைக்கு மட்டும்தான் சுதாவை போலீஸ் விசாரிக்காம விடப் போறாங்க. நாளைக்கு விசாரிக்கப் போறாங்களாம். நாளைக்குக் காலைல விக்னேஷை விட்டு நடந்ததை எல்லாம் பக்குவமா எடுத்துச் சொல்லச் சொல்லிட்டாங்க."

"அப்படின்னா நாளைக்கு நான் அந்த ஆஸ்பத்திரி பக்கமே போக மாட்டேன்ப்பா. சுதா இன்னொரு விஷயமும் கேட்டாங்க."

"என்ன?"

"என்னை பாலாஜி ஹாஸ்பிடல்ல சேர்க்காம எதுக்கு வேற ஹாஸ்பிடல்ல சேர்த்தீங்கன்னு. நீங்க பாலாஜி ஹாஸ்பிடல்லதான் கன்சல்ட் வெச்சிட்டிருக்கிங்கன்னு தெரியாததால எங்களுக்குப் பழக்கமுள்ள ஹாஸ்பிடல்ல சேர்த்தோம்னு சொன்னேன்."

"உண்மையும் அதுதானே.

அறைக்குள்ளிருந்து ஒரு சீருடைப் பெண் வந்து, "டாக்டர் உங்களை உள்ளேக் கூப்புட்டாங்க" என்றாள். எழுந்தார்கள்.

தலை நரைத்த, கொண்டை போட்ட, கண்ணாடி அணிந்த டாக்டர் வேதவல்லியை எதிர்பார்த்த பரத் ஆச்சரியப்பட்டான்.

ஒற்றைப் பின்னலை பின்புறம் போட்டு, பூ வைத்து, லிப்ஸ்டிக் போட்ட டாக்டர் வேதவல்லியை அவளின் சர்ட்டிஃபிகேட்டை வாங்கிப் பார்த்த பிறகுதான் நம்பிக்கை வரும் போலிருந்தாள்.

அறிமுகங்களுக்குப் பிறகு.

"போலீஸ்ல இது பத்தி நிறைய சொல்லிட்டேனே.

"நாங்க இதில பர்சனலா இன்வால்வ் ஆகியிருக்கோம் டாக்டர் அதனால போலீசுக்கு உதவியா எங்க கோணத்தில

இருந்து இந்த மேட்டரை டீல் பண்ணிட்டு இருக்கோம். ஜஸ்ட் பதினைஞ்சி நிமிஷம் ஒத்துழைச்சா உதவியா இருக்கும்.

"கேளுங்க."

"சுதாவுக்கு நடந்திருக்கிற முழு விபரமும் தெரியுமில்லையா?"

"தெரியும்."

"உங்க ரியாக்ஷன் என்ன?"

"நாடு கெட்டுப் போச்சு! வேற என்ன? எவ்வளவு உன்னதமானது இந்த டாக்டர் தொழில்! அதை அவமானப் படுத்தற மாதிரி சில அயோக்கிய சிகாமணிங்க இதிலயும் இருக்கறாங்க. பர்சனலா கேட்டா, தலையைத் தொங்க போட்டுக்கத் தோணுது. ஏதோ நானே இந்தத் தப்பை செய்துட்ட மாதிரி ஒரு குற்ற உணர்ச்சிகூட ஏற்படுதுங்க. நடந்திருக்கிறது மகத்தான கொடுமை!"

"இது எப்படி நடந்திருக்க முடியும்?"

"அதான் பேப்பர்லயே விபரமா வந்துடுச்சே. வீட்டுக்குள்ளே நுழைஞ்சி மயக்கப்படுத்தி, படுக்கையறையில வெச்சி அவசர அவசரமா ஒரு சிசேரியன் நடத்தி. ஓ. காட்! சொல்றப்பயே எனக்கு நடுங்குது!"

"இதை எதுக்காக செய்திருக்க முடியும் மேடம்?"

"நான் ரெண்டு விதமான வாய்ப்புகளை யோசிச்சேன் சார்."

"சொல்லுங்க."

"யாரோ ஒரு பணக்கார தம்பதிக்கு புதுசா பொறந்த ஒரு குழந்தை வேணும். இந்த அயோக்கிய டாக்டர் அதுக்கு பொறுப்பெடுத்துக்கிட்டு விலை பேசியிருக்கலாம்."

"அப்புறம்"

"மூட நம்பிக்கை கோணத்தில யோசிச்சேன். யாராச்சும் பொழைப்பு இல்லாத சாமியார் ஒரு அரசியல்வாதிகிட்ட வினோதமா ஒரு பூஜை செஞ்சா அரசியல்ல பெரிய ஆளா வரலாம்னு சொல்லியிருக்கலாம். அந்த பூஜைக்குப் பத்து மாசம் நிறைமாத ஒரு பச்சைக் குழந்தையை கர்பத்திலேர்ந்தே கீறி எடுத்துட்டு வந்து காவு கொடுக்கணும்னு வக்கிரமா நிபந்தனை வெச்சிருக்கலாம்."

"ரொம்ப கொடுமையான யூகம் இது! மாந்திரீக நாவல் நிறைய படிப்பீங்களா டாக்டர்?"

"சிரிக்காதிங்க சார்! இதை விடக் கொடுமையான அசட்டுத் தனங்கள் இதே இந்தியால நமக்குத் தெரியாம எங்கெங்கேயோ நடந்துகிட்டுத்தான் இருக்கு."

"அஃப்கோர்ஸ். . நான் விக்னேஷுக்கு சும்மா ஒரு பொய்யா அவனுக்குப் பிறந்தது ஆண் குழந்தைன்னு சொன்னேன். நிஜமாவே சுதா கர்ப்பம் சுமந்தது ஆண் குழந்தையைதான்னு நீங்க போலீஸ்ல சொல்லியிருக்கிங்க. ஓகே. டாக்டர், உங்க ஹாஸ்பிடல்ல வேலை பார்க்கற டாக்டர்ஸ் எல்லாரையும் விசாரிக்கப் போறாங்க. நீங்க யாரையாச்சும் குறிப்பிட்டு சந்தேகப் படறிங்களா?"

"ஹவ் கேன் ஐ? இங்கே நாற்பத்திரெண்டு டாக்டர்ஸ் வேலை பார்க்கறாங்க. அதில சிசேரியன் செய்யத் தெரிஞ்சவங்க இருபது பேருக்கு மேல. இதில யாரை சந்தேகப்படறது? எதுக்காக சந்தேகப்படணும்? எல்லாரும் டீசண்ட் பீப்பிள். வெல் பெய்ட்! சுதா என் பேஷன்ட்றதால இப்ப இதில என் ஹாஸ்பிடல் பேரும் அநாவசியமா அடிபடுது."

"ஏன் டாக்டர், அந்த அதிரடி ஆபரேஷன்ல பயன்படுத்தி மிச்சமான மருந்துக் குப்பைகளோட லிஸ்ட்டை போலீஸ் உங்ககிட்ட காட்டினாங்களா?"

"யெஸ்.

"அந்த சாமான்கள் உங்க ஹாஸ்பிடல்ல இருந்து எடுக்கப் பட வாய்ப்பு இருக்கா? ஏதாச்சும் ஸ்டாக் மெயின்டெய்ன் செய்றிங்களா? உங்க ஸ்டாக்ல குறையுதான்னு கண்டுபிடிக்க முடியுமா?"

"நான் உடனே மெடிக்கல்ஸ் இன்சார்ஜைக் கூப்புட்டுப் பேசிட்டேன் சார். எல்லாம் கம்ப்யூட்டரைஸ்ட் சிஸ்டம். ஒரு ஹால்ஸ் மிட்டாய் வித்தாகூட கம்ப்யூட்டர்ல பில் போடறாங்க. எந்த நிமிஷமும் எந்த அயிட்டமும் ஸ்டாக் வெரிஃபை செய்ய முடியும். செஞ்சும் சொல்லிட்டாங்க. அந்தப் பொருள்கள் இங்கேத் திருடப்படலை. அது பொதுவா பெரிய மருந்துக் கடைகள்ல சாதாரணமா கிடைக்கிறதுதான். ஆனா அதில் 'கேட்கெட்' பயன்படுத்திருந்ததைப் பார்த்து நான் ஆச்சரியப் பட்டேன்."

"கேட்டென்னா?"

"தையல் போட பயன்படுத்தற ஒரு நரம்பு. ஜெர்மன்லேர்ந்து 'விஷ்வா'ன்னு ஒரு கம்பெனி லேட்டஸ்ட்டா இந்த கேட்கெட் தயாரிப்புல இறங்கியிருக்காங்க. மெட்ராஸ்ல இந்த ப்ராடக்ட் வந்தே பத்துப் பதினைஞ்சு நாள்தான் ஆச்சி. இன்னும் நாங்க எங்க ஹாஸ்பிடலுக்கே இதை வாங்கலை. இது எல்லா மருந்துக் கடைகளுக்கும் இன்னும் வரலைங்க."

"இது ஒரு பிரைட்டான ஸ்பிர்ட்டிங்க பாய்ண்ட்டா தெரியுதே டாக்டர். இந்த மேட்டரை நீங்க போலீஸ் என்கொயரில சொன்னிங்களா?"

"இல்லை. இப்ப உங்ககூட பேசறப்பதான் இந்த ஞாபகமே வந்தது சார்."

"அந்த கம்பெனி பேரு நரம்பு விவரம் உங்க மெடிக்கல் டர்ம்ஸ்ல அப்படியே ஒரு காகிதத்துல எழுதித் தரமுடியுமா?"

"ஷ்யூர்" என்று டாக்டர் தன் பிரிஸ்கிருப்ஷன் பேடில் எழுதி, கிழித்துத் தந்தார்.

"அப்படின்னா இதை இம்ப்போர்ட் பண்ணி விக்கிறாங்க. இல்லையா?"

"ஆமாம்."

"இந்த கேட்கெட்டை மெட்ராஸ்ல எந்த டீலர் இம்ப்போர்ட் செஞ்சி கடைகளுக்கு சப்ளை செய்றார்னு தெரியுமா?"

"ஒன் மினிட். கேட்டுச் சொல்றனே.

டாக்டர் இண்டர்காமில் யாருடனோ பேசி, வைத்து.

"மவுண்ட் ரோட்ல அண்ணா சிலைக்குப் பக்கத்தில ரெஹீஜா காம்ப்ளெஸ்னு இருக்கு தெரியுமா?"

"தெரியும், சொல்லுங்க."

"அதுக்குள்ளே. 'முராரி சர்ஜிகல் எக்யுப்மெண்ட்ஸ்'ன்னு ஒரு பெரிய டீலர் இருக்கார். அவர்தான் அதை இறக்குமதி பண்றாராம். அவரைப் பார்த்து விசாரிச்சா இந்த குறிப்பிட்ட நரம்பை இந்த பத்து நாள்ல மெட்ராஸ்ல எங்கெல்லாம் சப்ளை செஞ்சிருக்கார்னு தெரிஞ்சுக்கலாம். அப்புறம் அங்கெல்லாம் போகப்போறிங்களா? பெரிய வேலை!"

"வேற வழி? குற்றவாளியை நோக்கிப் போறதுக்கு இப்ப ஒரு பாதை கிடைச்சிருக்கே. ரொம்ப தேங்ஸ் டாக்டர். மீட் யூ அகைய்ன்."

பரத் கைகூப்பி விடைபெற்று வெளியே வந்ததும், "சுசீ, இப்ப நேரா முராரி சர்ஜிகல்ஸ் போறோம். அங்க அவர்கிட்ட வாங்கினவங்க லிஸ்ட் எடுத்ததும் நமக்கு போலீஸ் ஹெல்ப் வேணும்" என்றான்.

காரை வேகமாக ஓட்டினாள் சுசிலா.

* * *

## 15

இரண்டு நாள்லேயே விக்னேஷுக்கு முள்ளு முள்ளாய் தாடி வளர்ந்திருந்தது. ஊரிலிருந்து வந்ததிலிருந்து அதேச் சட்டையை அணிந்து கொண்டிருந்தான்.

சுசிலா சமையலறையிலிருந்து கொண்டு வந்து கொடுத்த டீயை மறுத்து, வற்புறுத்தினதும் எடுத்துக் கொண்டான்.

பரத் படித்துக் கொண்டிருந்த நியூஸ் பேப்பரை மடித்துப் போட்டுவிட்டு, டீயைக் கொஞ்சம் பருகி வைத்து, ஆஷ்ட்ரேயின் பள்ளத்தில் செருகி வைத்திருந்த தன் புகையும் சிகரெட்டில் சாம்பல் தட்டிவிட்டு இழுத்தான்.

"பரத், எனக்கு நம்பிக்கை இல்லை. ரெண்டு நாளாச்சு."

"தைரியமா இரு விக்னேஷ்."

"நான் தைரியமா இருந்தாக்கூட சுதா ரொம்ப நொறுங்கிட்டா. ஏற்கனவே உடம்புல ரண வேதனை. மார்ல தாய்ப்பால் கட்டிக்கிட்டு அந்த அவஸ்தை வேற. இதில குழந்தை. அதுவும் ஆண் குழந்தை இப்படி அநியாயமா இப்படித் திருட்டுப் போயிடுச்சுன்னு தெரிஞ்சதும் அலறித் தீர்த்துட்டா, பத்தாததுக்கு போலீஸ்காரங்க வேற அந்த ஆள் எப்படி இருந்தான், வந்தது ஒருத்தனா ரெண்டு பேரான்னு ஆயிரம் கேள்விகள் கேட்டுத் துளைச்சி எடுக்கறாங்க. ஆனா ரொம்பத் தெளிவாச் சொல்றா. காலிங் பெல் சத்தம் கேட்டு,

எந்திரிச்சுப் போய் கதவைத் திறந்த வினாடிகளே... யார், என்னன்னு பார்க்கறதுக்கு முன்னாடியே மூஞ்சில எதையோ வெச்சுப் பொத்தியிருக்காங்க. ரெண்டாவது செகண்ட் அவளுக்கு நினைவு தப்பிடுச்சி. வந்தது, ஆம்பளையா பொம்பளையா, எத்தனைப் பேர் எதுவும் தெரியலை. கண் முழிச்சது ஆஸ்பத்திரிலதான்.

"இந்தக் கேஸ்ல உன் மனைவியை விசாரிக்கிறதில எந்தப் பிரயோஜனமும் இல்லை விக்னேஷ். வேதவல்லி டாக்டர் கொடுத்த முராரி சர்ஜிகல்ஸ் டீலர்கிட்டேர்ந்து குறிப்பிட்ட அந்த ஜெர்மன் தையல் நரம்பை அவன் இந்த பத்து நாளா சிடில யார் யாருக்கு எவ்வளவு சப்ளை செஞ்சிருக்கான்ற இன்வாய்ஸ் காப்பியே வாங்கி இந்தக் கேஸை விசாரிக்கிற ஸ்பெஷல் பிராஞ்ச் கிரைம்ஸ் இன்ஸ்பெக்டர் முருகேசன்கிட்ட கொடுத்தாச்சு. அவரு நமக்கு பெஸ்ட் ஃபிரண்டு, மாக்ஸிமம் இண்டரெஸ்ட் எடுத்துக் கிட்டு இறங்கிருக்காரு. மொத்தம் நாப்பத்தேழு கடைக்கு அந்த நரம்பு சப்ளை ஆகிருக்கு. எல்லாக் கடைகள்லயும் பில் செக் பண்ணி தரோவா விசாரிக்கிறதுக்கு பத்து சப்-இன்ஸ்பெக்டர்சை அனுப்பி வெச்சிருக்காரு. தே ஆர் ஆன் தி வீல்ஸ். இது ஒரு ரூட்டு. இதைத் தவிர எல்லா செக்போஸ்ட்லயும் நியு பார்ன் மேல் பேபி எடுத்துப் போனா தீவிரமா விசாரிச்சுதான் மூவ்மெண்ட் கிளியர் பண்ணிட்டு இருக்காங்க."

"வேற எந்த ரூட்ல அவங்க இன்வெஸ்டிகேட் பண்றாங்க பரத்?" என்றாள் சுசிலா.

"சுதாவோட துணைக்கு நாம் ரெண்டு பேரும் இருக்கப் போற செய்தியைத் தெரிஞ்ச விக்னேஷோட ஆபிஸ் ஸ்டாஃப்களை நாம் தனிப்பட்ட முறையில் விசாரிச்ச மாதிரி அவங்களும் விசாரிச்சுட்டாங்க. அதுமட்டுமில்லை, அவங்களை அவங்களுக்குத் தெரியாம கண்காணிச்சிட்டும் இருக்காங்க. இந்தக் குழந்தைத் திருட்டு எதுக்காக? அடிப்படையா ஒரு வகையான நோக்கம் இன்னும் யூகிக்க முடியலை விக்னேஷ்."

விக்னேஷின் கண்கள் துளிர்க்க, "அவ ஆசைப்பட்ட மாதிரியே ஆண் குழந்தை பரத்! ப்ளீஸ். ஹெல்ப் பண்ணுப்பா. இந்த காரியத்தை செஞ்சவன் மேல நான் கேஸ்கூட போடலை. என் குழந்தை மட்டும் எனக்குக் கிடைச்சுட்டாப் போதும்" என்றான்.

"விக்னேஷ், உன் கம்ப்யூட்டரை இண்ட்டெர்நெட்ல போட்டுருக்கியா?"

“யெஸ்.”

“அதுல ‘ஈ மெயில்’ வசதி இருக்கா?”

“அஃப்கோர்ஸ்.”

“வா, இதே மாதிரி கர்ப்பத்திலேர்ந்தே குழந்தையைத் திருடற நிகழ்ச்சி உலகத்தில் வேற எங்கயாவது நடந்திருக்கான்னு தெருஞ்சுக்கலாம். அப்படி நடந்திருந்தா அது என்ன நோக்கத்தில நடந்ததுன்னு நோக்கம் தெரிஞ்சுக்கலாம். நம்ம மேட்டரோட எதையாவது பொருத்திப் பார்க்க முடியுமான்னு யோசிக்கலாம்.”

“குட் ஐடியா” என்றாள் சுசிலா.

மூவரும் பெட்ரூமுக்கு வந்தார்கள். கம்ப்யூட்டர் முன்பாக நாற்காலிகளை அமைத்துக் கொண்டு அமர்ந்தார்கள்.

விக்னேஷ் முதலில் டெல்லி சி.பி.ஐ. இண்ட்டெர்நெட் நம்பர் பிடித்து அங்கே தகவல் கேட்டான். அப்படி எதுவும் சம்பவம் இல்லை என்ற பதில் வந்தது.

அமெரிக்காவின் கிரிமினாலஜி டிபார்ட்மெண்ட்டின் இண்ட்டெர்நெட் எண்ணை விசாரித்துப் பிடிக்க அதிக நேரமாயிற்று. கடைசியில் அங்கே விசாரித்தபோது, ஒரு சம்பவம் நடந்ததாகத் தகவல் வந்தது.

அந்த சம்பவத்தை விவரிக்கவும் என்றதும், கடகடவென்று திரை முழுக்க நிரப்பிய வார்த்தைகளை பிரிண்ட்டரில் அவுட்புட் எடுத்துப் படித்துப் பார்த்தார்கள்.

அந்தச் செய்தித் தகவலின் தமிழ்ச் சுருக்கமாவது?

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு ஹாஸ்பிடல் நர்ஸ் கைது செய்யப்பட்டாள். அவள் சற்று மனநிலை சரியில்லாதவள். குழந்தை பெறும் வாய்ப்பு இல்லாத மலடி. எல்லோரும் அவளைக் கிண்டல் செய்ததில் ஒருவித தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டது. தான் மலடி இல்லை என்று நிரூபிக்க நினைத்தாள். திடீரென்று ஒரு நாள் தான் கர்ப்பமாக இருப்பதாக சக ஊழியர்களுக்கு இனிப்பு வழங்கினாள். சில மாதங்கள் கழித்து வயிற்றில் பஞ்சு, தலையணை என்று கட்டிக்கொண்டு சீரான வளர்ச்சியை நாடகமாடி நடித்திருக்கிறாள். கற்பனை நாடகத்திற்கு கிளைமாக்ஸாக பிரசவ காலம் வந்தது. டெலிவரிக்காக என்று லீவு போட்டாள். இதற்கிடையில் தான் வேலை பார்க்கும் ஹாஸ்பிடலில் செக்கப்புக்கு வரும் ஒரு அழகான கர்ப்பிணிப்

பெண்ணை குறி வைத்திருந்தாள். அவள் குடும்பம், தனிமையில் இருக்கும் நேரம் எல்லாம் கண்காணித்து வைத்து. குறிப்பிட்ட நாளில் அவள் வீட்டிற்கு அறுமை சிகிச்சைக்கான ஆயுதங் களுடன் முகமூடி போட்டுச் சென்று அந்தப் பெண்ணை மயக்கப்படுத்தி. அவசர அவசரமாக அந்த வீட்டிலேயே ஒரு அரைகுறை ஆபரேஷன் நடத்தி, குழந்தையை மட்டும் தூக்கிச் சென்று விட்டாள். பிறகு தன் ஹாஸ்பிடலுக்கு அந்தக் குழந்தையோடு வந்து, அது தன் குழந்தை என்று சொல்லிக் கொண்டாள். அவள் செய்த சில தவறுகளின் மூலம் போலீசிடம் அகப்பட்டுக் கொண்டாள் இப்போது இருபது வருட கடுங்காவல் தண்டனையை அனுபவித்து வருகிறாள்.

செய்தியைப் படித்து முடித்ததும் சொடக்குப் போட்டான் பரத்.

''கிட்டத்தட்ட இதே மெத்தட்லதான் இங்கேயும் நடந்திருக்கு விக்னேஷ். ஏன் இதே மாதிரி ஒரு மனநிலை தப்பின ஒரு நர்ஸ் நம்மை மாதிரியே இண்ட்டெர்நெட்ல இந்த செய்தியைப் படிச்சிட்டு இதே மாதிரி செயல்பட்டிருக்கக் கூடாது?"

“மே பி” என்றாள் சுசிலா.

“பாலாஜி ஹாஸ்பிடல்ல வேலை பார்க்கற நர்சுகள்ல யாராச்சும் இப்போ டெலிவரிக்காக லீவு போட்டுருக்காங்க ளான்னு தெரியணும் சுசி. போனை எடு.”

மிக அவசரமாகப் பேச வேண்டும் என்றுக் கேட்டு டாக்டர் வேதவல்லியுடன் தொடர்பு கொண்டான் பரத். அவர் சில விநாடிகள் காத்திருக்கச் சொல்லிவிட்டு.

“யெஸ். நிருபமான்னு ஒரு நர்ஸ் டெலிவரிக்காக லீவு போட்டுருக்காங்க. திருவான்மியூர்ல வீடு. நோட் தி அட்ரஸ். ஆனா அந்தப் பொண்ணு நீங்க சொல்ற மாதிரி மெண்டல் இல்லை.”

“அதை நாங்க பார்த்துக்கறோம். தேங்க் யூ.”

உடனே மூவரும் புறப்பட்டார்கள்.

திருவான்மியூரில் அந்த நிருபமா வீட்டு வாசலில் காரை விட்டு இறங்கும்போதே உள்ளிருந்து குழந்தையின் அழுகை கேட்டது.

உள்ளே வர. தொட்டிலில் ஆண் குழந்தை.

நிருபமா அவர்களைப் பார்த்து புரியாமல் விழித்தாள்.

★

இந்தக் கட்டத்தில்.

'பரத் அவளை மிரட்டியதும் அவள் பொலபொலவென்று கண்ணீர்விட்டு, இண்டெர்நெட்டில் செய்தி படித்து அதேப் போல தான் நடந்து கொண்டதாக உண்மையைச் சொல்லத் துவங்கினாள்.

விக்னேஷ் தன் குழந்தையைத் தூக்கி அணைத்து முத்தம் கொடுத்து பரத் - சுசிலாவை பூரிப்புடன் பார்த்தான்.'

- என்று கதையை முடிக்க வாய்ப்பிருக்கிறது.

ஆனால் இந்தக் கதை இத்தனை சீக்கிரம், பரத் - சுசிலாவுக்கு அதிகம் வேலை வைக்காமல் முடிந்து விடுவதால் எனக்குச் சம்மதமில்லாததால்.

இந்தக் கதை முற்றும் அல்ல; தொடரும்.

# குற்றம், புதிய குற்றம்!

## 1

"யெஸ். உங்களுக்கு என்ன வேணும்?" என்றாள் நிருபமா.

"நீங்கதானே நிருபமா?" என்றான் பரத்.

"ஆமாம்."

"பாலாஜி ஹாஸ்பிடல்ல நர்ஸா வேலை பார்க்கிறிங்க, இல்லையா?"

"ஆமாம்."

"குழந்தை. என்றாள் சுசீலா தொட்டிலைச் சுட்டிக்காட்டி.

"என் குழந்தைதான். ஏன்?"

"உங்களுக்கு எப்போ டெலிவரி ஆச்சு?"

"பத்து நாளாச்சு. நீங்க யாரு, எதுக்காக இதெல்லாம் விசாரிக்கிறீங்க?"

"நாங்க பிரைவேட் டிடெக்டிவ்ஸ். ஒரு கேஸ் சம்பந்தமா இந்த விசாரணை. விபரம் சொல்றோம். முதல்ல எங்க கேள்வி களுக்கெல்லாம் பதில் சொல்லிடுங்க. உங்களுக்கு எங்க டெலிவரி ஆச்சு?"

"பக்கத்தில ஈஸ்வரி நர்சிங் ஹோம்னு இருக்கு. அங்க."

"உங்க குழந்தையை சரியாய் பார்க்க அனுமதி கொடுங்க.

பரத் அந்த ஆண் குழந்தைக்கு அணிவிக்கப்பட்டிருந்த சட்டையைத் தூக்கி வயிற்றில் தொப்புள் காயத்தைப் பார்த்தான். அது முற்றிலும் ஆறியிருந்தது. குழந்தையின் மூக்கு நிருபமாவின் மூக்கை ஒத்திருந்தது.

"கொடி என்னைக்கு விழுந்துச்சு?"

"முந்தா நாள்."

"நார்மல் டெலிவரியா?"

"ஆமாங்க."

"உங்களுக்குப் பிரசவம் பார்த்த டாக்டர் யாரு?"

"ஆனந்தலட்சுமி."

"நீங்க அட்மிட் ஆயிருந்த ரூம் நம்பர்?"

"நூத்திப் பதினெட்டு."

"பர்த் சர்ட்டிஃபிகேட் வாங்கிட்டிங்களா?"

"ஓ!"

"காமிங்க, ப்ளீஸ்.

நிருபமா உள் அறைக்குச் செல்ல, பரத் விக்னேஷிடம், "இந்தக் குழந்தை இல்லை விக்னேஷ். பத்து நாள் வளர்ச்சி நிச்சயமா தெரியுது. உன் குழந்தை தேதிக்கு இருபது நாள் முன்னாடியே பொறந்த குழந்தை. அது இப்படி இருக்காது" என்றான்.

"சாயலும் அப்படியே அம்மா சாயல் இருக்கு பரத்" என்றாள் சுசீலா.

நிருபமா ஆஸ்பத்திரியில் வழங்கின சர்ட்டிஃபிகேட் மற்றும் பிரிஸ்கிருப்ஷன் காகிதங்களைக் கொண்டு வந்து காட்டினாள்.

அவற்றை சரி பார்த்துவிட்டு, "ஸாரி. உங்களை தொந்தரவு பண்ணிட்டோம். ஒத்துழைச்சதுக்கு தேங்ஸ்" என்றான்.

"இப்ப சொல்லலாமா எதுக்காக இந்த விசாரணைன்னு?"

"இவரோட வைஃப் சுதா உங்க டாக்டர்கிட்டதான் பிரசவத்துக்காக கன்சல்ட் செஞ்சிட்டிருந்தாங்க. மூணு நாள் முன்னாடி மர்மமான முறையில் அவங்களை மயக்கப்படுத்தி யாரோ கர்ப்பப்பைலேர்ந்தே குழந்தையை ஆபரேஷன் செஞ்சி திருடிட்டுப் போயிட்டாங்க."

"பேப்பர்ல நியூஸ் வந்திருக்கிறதா என் ஹஸ்பண்ட் சொன்னார். விபரமா படிக்காதே, சங்கடப்படுவேன்னு சொன்னார். மிஸஸ் சுதா கன்சல்ட்டுக்கு வர்றப்ப நானும்

பார்த்திருக்கேன். இது கொடுமை. ஆனா இதுல என்னை ஏன் சந்தேகப் பட்டிங்க?

"தப்பா எடுத்துக்காதீங்க. இந்த சம்பவம் போலீசுக்கு ஒரு சவாலா இருக்கு. எல்லாருக்கும் புதிரா இருக்கு. இதே மாதிரி கர்ப்பப் பைலேர்ந்தே குழந்தையைத் திருடின சம்பவம் உலகத்தில் எங்கயாவது நடந்திருக்கான்னு தெரிஞ்சுக்க இண்ட்டெர்நெட் மூலமா கம்ப்யூட்டர்ல விசாரிச்சோம். அப்போ அமெரிக்காவுல மனநிலை தவறின நர்ஸ் ஒருத்தி இப்படி செஞ்சதா செய்தி கிடைச்சது. உங்க ஹாஸ்பிடல்ல பிரசவ லீவுல யாராவது நர்ஸ் போயிருக்காங்களான்னு விசாரிச்சப்ப உங்களைச் சொன்னாங்க. அதனாலதான் வந்து விசாரிச்சோம்."

"நல்ல வேளை! எனக்கு பத்து நாளைக்கு முன்னாடி பிரசவமாச்சு. டெலிவரி தள்ளிப்போய் மூணு நாளைக்கு முன்னாடி நடந்திருந்தா. இது என் குழந்தைதான்னு அவ்வளவு சுலபமா ஒத்துக்கிட்டிருக்க மாட்டிங்க இல்லை?"

"ஸாரி. சந்தேகப் படறதும், விசாரிக்கிறதும் எங்க கடமை."

"புரியுது. ஆனா இந்த விஷயத்தில நீங்க ஒரு பொம்பளையை தயவுசெஞ்சி சந்தேகப்படாதிங்க! இவ்வளவு அரக்கத்தனமாக எந்தப் பொண்ணும் நடந்துக்க மாட்டா!" என்றாள் நிருபமா.

மூவரும் சோர்வாக தங்கள் காருக்கு நடந்தார்கள்.

* * *

## 2

முருகேசன் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தார்.

பரத் சுசீலா டீப்பாயில் கிடந்த புத்தகங்களில் ஒன்றை தேர்வு செய்துகொண்டு புரட்டினாள். பரத் முருகேசனுக்கு எதிர்புறம் குதித்து விளையாடிக் கொண்டிருந்த பெண்ணையேப் பார்த்துக்கொண்டிருந்தான். அவள் அநியாயத்திற்கு சிறிய ஷார்ட்ஸ் போட்டிருந்தாள். மெல்லிதான வெள்ளை சட்டையை முடிச்சிட்டிருந்தாள். வியர்வையில் குளித்திருந்தாள்.

"ஏன் சுசி.

“ம்?”

“அழகிப் போட்டில இதைவிடவா செக்ஸியான போஸ் கொடுத்திடறாங்க?”

“பரத்! அவ கலெக்டர் பொண்ணு!”

“அதனால என்ன? கலெக்டர் பொண்ணை கழுத்துக்கு மேலதான் பார்க்கணும்னு சட்டம் போட்டிருக்காங்களா?”

“ஏன் இப்படி கொச்சையாய்ப் பேசி பொம்பளைங்களை அவமானப் படுத்தறிங்க?”

“இது அவமானப் படுத்தறதில்லை! காம்ப்ளிமெண்ட்! உங்களை நீங்களே ரசிச்சுக்கறதுக்காகவா மெனக்கெட்டு டிசைன் டிசைனா ஜாக்கெட் தச்சுக்கறிங்க? கமான், டெல் மி! நேத்து பஸ் டாப்ல ஒரு பொண்ணு முதுகு காமிச்சேனே. எவ்வளவு தாராளம்! போஸ்ட்டரே ஒட்டலாம்! இதெல்லாம் முதுகுப்பக்கம் கண்ணாடி பிடிச்சி அவளே பார்த்துக்கறதுக்காகவா? எக்ஸிபிட் பண்ணிக்கறது உங்க சைகாலஜி!”

“எல்லாரும் அப்படி இல்லை!”

“வாஸ்தவம்தான். கெடிகாரம் கட்டியிருக்கிறவன்தான் மணி சொல்ல முடியும். நம்ம ஆபீஸ் மாதவி எக்ஸிபிட் பண்ணணும்னு ஆசைப்பட்டாலும் முடியுமா என்ன?”

“போதும். விட்டா ஒரு தீசிஸ் எழுதிடுவிங்களே.

“நாட் எ பேட் ஐடியா! ‘பெண்கள் சைட் அடிக்கப்படுவதை விரும்புகிறார்களா இல்லையா?’ இந்த சப்ஜெக்ட்ல இன்னும் யாரும் டாக்டரேட் பண்ணலைன்னு நினைக்கிறேன்.”

“நீங்க பண்ணுங்க.”

“அதுக்கு முன்னாடி பொதுமக்கள் கருத்து தெரிஞ்சுக்கறதுக்கு விசுவைவிட்டு ஒரு அரட்டை அரங்கம் நடத்தச் சொல்லணும்.”

“அவர் இப்படி உருப்படாத தலைப்புல எல்லாம் அதை நடத்தலை. உங்களுக்கு ஸ்டார் ‘பே வாட்ச்’சை விட்டா வேற என்ன தெரியும்?”

“வி சேனல் தெரியும் சுசி, நேத்து அதில ஒரு பொண்ணு வித்தியாசமா சிந்திச்சிருந்தா.”

“என்ன?”

‘‘காதுக்கு, மூக்குக்கு, காது மடலுக்கெல்லாம் நகை மாட்றோமே, இந்த தொப்புள் மட்டும் என்ன பாவம் பண்ணிச்சின்னு, அங்கயும் ஒரு தொங்கட்டானைத் தொங்க விட்டிருந்தா. கூடிய சீக்கிரம் அந்த ஃபேஷன் இங்கயும் வந்துடும்னு நினைக்கிறேன். மூக்குக்கு மூக்குத்தி, காதுக்கு கம்மல் மாதிரி அதுக்கு தமிழ்ல என்ன பேர் வைப்பாங்க?”

“மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்து வோம் னார் பாரதியார். அதை மாத்தி, மாதர் தம்மை இழிவு செய்யும் மனிதர்களையேக் கொளுத்தணும் பரத்!”

“ஏன் இத்தனை நாளா தீப்பெட்டி தேடீக்கிட்டிருக்கிங்களா? நீ சொல்றபடி ஆரம்பிச்சா தமிழ் சினிமால பாதி டைரக்டர்ஸ் காலி! முதல்ல மண்ணைக் கொட்டினாங்க. அப்புறம் பளிங்கு விளையாடினாங்க. பம்பரம் விட்டாங்க. ஆம்லெட் போட்டாங்க. இப்ப பாதரசம் ஊத்தறாங்களாம். இதோட அடுத்த கட்டமா கதாநாயகி தூங்கிட்டிருக்கிறப்ப ஒரு குருவி வந்து உக்காந்து கூடு கட்டி குஞ்சு பொறிச்சிட்டுப் போகப்போகுது பாரேன்.”

“ச்சே! இது ஆண்கள் சமுதாயம். ரொம்ப வக்கிரமாகிட்டு இருக்கு உங்க பார்வை!”

“அதான் இப்பல்லாம் வீட்ல நைட்டி, வெளில தொப தொபான்னு படுதா மாதிரி சுரிதார்னு முழுக்க கதவடைப்பு நடத்திட்டு இருக்கிங்களே.

“நான் மட்டும் முதலமைச்சர் ஆனேன்னு வெச்சுக்கங்க.

“ரொம்ப நல்லாருக்கும் சுசி. டி ஷர்ட், ஜீன்ஸ் போட்ட முதல் முதலமைச்சரை இந்த ஸ்டேட் சந்திக்கும். பத்திரிகைகள்ல ‘இன்று கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்ட நமது முதலமைச்சர் செல்வி. சுசீலா அவர்கள் பனியனில் ‘SKY IS THE LIMIT’ என்று எழுதியிருந்தது’ன்னு எழுதுவாங்க. நிருபர்கள் உன்னை கேள்வி கேக்கறப்ப ‘மேடம், முதலமைச்சர்கள் மாநாட்டிற்கு என்ன வசனம் எழுதின பனியன் அணியப் போகிறீர்கள் என்று சொல்ல முடியுமா?’ன்னு கேப்பாங்க.”

‘‘முதலமைச்சர்கள் மாநாடா? எப்போ?’’ என்றபடி முருகேசன் வந்து பக்கத்து நாற்காலியில் அமர்ந்திருந்தார். டர்க்கி டவல் எடுத்துத் துடைத்துக் கொண்டார்.

"இங்க. வேற. பாரத கலாச்சாரம் பத்தி பேசிட்டிருந்தோம் நாங்க. உங்களைவிட அந்தப் பொண்ணுக்கு நல்லா. ச்சீ. பொண்ணு நல்லா ஆடிச்சு சார். நான்கூட இந்த கிளப்ல மெம்பராகலாமான்னு ஒரு ஐடியா" என்றான் பரத்.

முருகேசன் புன்னகைத்தபடி ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டு, "சுசீலா பர்மிஷன் வாங்கிட்டிங்களா பரத்?" என்றார்.

"இன்சல்ட் ஆஃப் த இயர்! நாங்க ரெண்டு பேரும் அடுத்தவர் சுதந்திரத்தில இந்த மூக்கு இருக்கு பாருங்க, மூக்கு அதை நுழைக்கிறதில்லை. அன்னைக்குப் பாருங்க ஒரு தெரிஞ்சவர் வீட்ல ஒரு ஃபங்ஷன். பொண்ணு வயசுக்கு வந்ததுக்கு சடங்கு. அந்தப் பொண்ணுக்கு நான் பாவாடை, தாவணி வாங்கிட்டுப் போலாம்னு சொன்னேன். அது அவுட் ஆஃப் ஃபேஷன்னு சொல்லிட்டு சுசீலா ஒரு டி ஷர்ட் வாங்கி அதில ஒரு அட்டகாசமான வாழ்த்தை வசனமா எழுதிக் கொண்டாந்து கொடுத்தப்போ நான் மறுக்கலை ரசிச்சேன்."

"என்ன வாழ்த்து அது?"

"பரத்! சும்மா இருங்க" என்றாள் சுசீலா.

"சார் ஆர்வமா கேக்கறாரில்லை, சொல்லலாமே.

"அப்படி என்ன ரகசியம்? என்ன வாழ்த்து பனியன்ல எழுதியிருந்திங்க? ஆல் தி பெஸ்ட்டா?"

"சேச்சே! ரெண்டே வார்த்தைதான்."

"பரத்! சொல்ல வேணாம்."

"சுசீலா, நீங்க சொல்ல வேணாம்னு சொல்றப்பதான் தெரிஞ்சுக்கணும்னு ஆர்வம் அதிகமாகுது. நீங்க சொல்லுங்க பரத்!"

"ஒரு பொறுப்பான போலீஸ் அதிகாரி சார் நீங்க! விக்னேஷோட குழந்தை திருட்டு மேட்டர்ல நீங்க எதுவரைக்கும் வந்திருக்கிங்கன்னு விசாரிக்கிறதுக்கு நாங்க வந்தா. . . நீங்க பனியன் வாசகத்தைப் போய் ஆர்வமா விசாரிச்சிட்டிருக்கிங்களே.

'அப்புறமா சொல்கிறேன்' என்று ஜாடை காட்டினான் பரத்.

"ஏம்மா, ஒரு பொறுப்பான போலீஸ் அதிகாரின்னா எப்பவும் கஞ்சி போட்டு விறைப்பாவேப் பேசணுமா? விளையாட்டேக் கூடாதா? ஓகே, ஓகே, பரத். அந்த தையல்

நரம்பு மேட்டர்ல பத்து சப்-இன்ஸ்பெக்டர்ஸ் நுரை தள்ற அளவுக்கு விசாரிச்சிட்டு இருக்காங்க.

“ஒரு பிரேக் கிடைக்கலையா?”

“இல்லை. முராரி சர்ஜிகல்ஸ் அந்த நம்பரோட டீலர். அவன் இந்த பத்து நாள்ல சிடில மொத்தம் நாப்பத்தேழு கடைகளுக்கு அந்த நரம்பை சப்ளை செஞ்சிருக்கான். அதில பதினெட்டு ஹாஸ்பிடல்ஸ். மொத்தம் எவ்வளவு நரம்பு தெரியுமா? மூவாயிரம்!”

“மை காட்!”

“அந்த நரம்பு சிசேரியன் கேசுக்கு மட்டும் பயன்படுத்தற நரம்பு இல்லை! அதான் சிக்கல்! சாதாரணமா நெத்தில கிழிஞ்சா தையல் போடுவாங்களே, அதுக்கும் பயன்படுத்தலாம். ஜெனரல் பர்ப்பஸ் கொண்ட நரம்பு! அந்த ரூட்ல போய் குற்றவாளியைப் பிடிச்சிட முடியுங்கற நம்பிக்கை எனக்கு தேய்ஞ்சிக்கிட்டிருக்கு. ஆனாலும் விடாம விசாரிச்சிட்டுதான் இருக்காங்க.”

“சுதாவுக்குத் துணையா சுசீலா தங்கற விஷயம் விக்னேஷ் ஆபீஸ்ல மூணு பேருக்குத்தான் சார் தெரியும். அவனோட சீஃப் மகாதேவன், கூட வேலை பார்க்கற மிஸஸ் ஜீனத். கம்பெனி கார் டிரைவர் பொள்ளாச்சி!”

“டிரைவர் பேரைச் சொல்லுங்க பரத்.”

“பேர்தான் சுசீ பொள்ளாச்சி.”

“விளையாடறிங்களா?”

“நிஜமாதான். பழனி, சிதம்பரம், திருப்பதின்னெல்லாம் பேர் வெச்சிக்கிறதில்லையா?”

“பரத், அவங்க மூணு பேரையும் தரோவா விசாரிச்சாச்சு. நானே பர்சனலா போய் விசாரிச்சேன். சம்பவம் நடந்தப்போ அவங்களுக்கு அலிபி இருக்கு. எந்த விதத்திலயும் சம்பந்தப்படுத்த முடியலை.”

“மருத்துவ அறிவு உள்ள ஒருத்தன் செஞ்சிருக்கான். இந்த ஒரு தகவல்லயே வட்டம் சின்னதாய்டுதே சார். ”

“எப்படி சின்ன வட்டம்னு சொல்றிங்க? டாக்டர்ஸ், நர்சஸ், வார்டு பாய்ஸ் தவிர மெடிக்கல் காலேஜ் ஸ்டூடண்ட்சும் இந்த வட்டத்துக்குள்ளே வர்றாங்க!”

"உண்மை! லேபுக்கு வெளிலயும் கட் பண்றாங்க!" என்றாள் சுசி, "ரேகிங் எங்க போய் நிறுத்தியிருக்கு பாருங்க!"

"ஒரு சம்பவத்தை வெச்சு பொதுப்படையா பேசக்கூடாது சுசி. இந்த ரேகிங் ஏன் ஏற்பட்டது தெரியுமா? எதோ ஒரு வாழ்க்கைச் சூழ்நிலைலேர்ந்து புதுசா காலேஜுக்கும், ஹாஸ்பிடலுக்கும் வர்ற ஒரு மாணவன் புது இடத்தில எந்த அறிமுகமும் இல்லாம, ஃபிரெண்ட்சும் இல்லாம தனிமையா ஃபீல் பண்ணுவான். அந்த தனிமை, தயக்கம் இதை எல்லாம் உடைக்கிறதுக்காக. சீனியர்ஸ் அவனை ரேகிங் செஞ்சு. அப்புறம் ஃபிரெண்ட்ஸ் ஆயிடுவாங்க. ரேகிங் செஞ்சவனும், செய்யப்பட்டவனும் கொஞ்ச நாள்ல இணைபிரியாத நண்பர்களா ஆன உதாரணங்கள் எல்லாம் இருக்கு. ஆனா இந்த ரேகிங் எல்லையைத் தாண்ட ஆரம்பிச்சப்பதான் அநாகரீகமா, விபரீதமா மாறிடுச்சி, நட்பை ஏற்படுத்தறதுக்கு பதிலா பழி உணர்ச்சியை ஏற்படுத்த ஆரம்பிச்சிடுச்சி, எதுவுமே எல்லைக்குள்ளே இருந்தாதான் ரசிக்க முடியும் சுசி" என்றான் பரத், "ஐ. மீன். ."

"புரியுது" என்றாள் சுசீலா.

"சில குற்றங்கள்ல அந்த குற்றத்துக்கான மோடிவ் யார் குற்றவாளிங்கிறதை ஓரளவுக்கு யூகமாவது செய்ய வைக்கும். இது புது குற்றமா இருக்கு. என்ன காரணத்துக்கா இது நடத்தப் பட்டிருக்குன்னு பிடிபடலை பரத்."

"அந்தக் குழந்தை அபூர்வ திறமைகள் கொண்ட குழந்தையா இருக்கலாமோன்னு ஒரு கோணம் யோசிச்சோம் சார், ஆனா டாக்டர் வேதவல்லி நோ சான்ஸ்னு சொல்லிட்டாங்க."

"அவங்க சொன்ன இன்னொரு யூகம் சிரிக்க வெச்சுது."

"என்ன சொன்னாங்க?"

"எவனாவது போலிச் சாமியார் யாராவது அரசியல்வாதிக்கு கர்ப்பத்திலேர்ந்து குழந்தை திருடி காவு கொடுத்தா சி.பி.ஐ. கிட்டேர்ந்து தப்பிச்சுக்கலாம்னு கோணங்கித்தனமா சொல்லிருக்கலாமோன்னு சொன்னாங்க.

"இருந்தாலும் ஆச்சரியப் படறதுக்கில்லை. நம்ம நாட்ல மூட நம்பிக்கையை வளர்க்கறவங்களுக்குப் பஞ்சமே இல்லை."

"ஏன் சார். இது ஒரு சைக்கோ டாக்டரோட வேலையா இருக்கலாமா?"

“ஒரு சைக்கோவுக்கு ஆபரேஷன் செஞ்சி குழந்தையை எடுத்துட்டு பொறுமையா மறுபடி தையல் போடற நிதானம் இருக்க முடியுமா பரத்?”

“அது அவன் எத்தன பர்செண்ட் சைக்கோன்றதைப் பொருத்தது.”

“இந்த மேட்டர் இப்ப டாக் ஆஃப் தி கண்ட்ரி ஆயிடுச்சி பரத். குழாயடிலயும், சினிமா தியேட்டர்லயும் இதைப் பத்திதான் பேசிட்டிருக்காங்க.”

“அவ்வளவு ஏன் சார், இந்த ஜோக் எழுதறவங்க எவ்வளவு ஸ்பீடா இருக்காங்க பாருங்க. நாலே நாள்ல ஜோக் எழுதி, அனுப்பி, அது இந்த வார விகடன்ல பிரசுரமும் ஆகிடுச்சி சார்” என்ற சுசீலா அங்க இருந்த விகடனைப் புரட்டி அந்த ஜோக்கை சுட்டிக் காட்டினாள்.

> <u>இன்ஸ்பெக்டர்:</u> இதோ பாருங்கம்மா, நீங்க கர்ப்பமா இருக்கலாம். இப்ப டெலிவரி டைமா இருக்கலாம். ஆனா இதுக்கெல்லாம் போலீஸ் பாதுகாப்பு கேக்கிறது நல்லாயில்லை.
>
> - அம்பை தேவா.

சிரித்து விட்டு முருகேசன் எழுந்து கொள்ள, இவர்களும் எழுந்து கொண்டார்கள்.

“மாதர் சங்கத்திலேர்ந்து ஊர்வலம் போறதுக்கு முன்னாடி குழந்தையை கண்டுபிடிச்சிட்டிங்கன்னா. நம் காவல்துறைக்கு கௌரவமா இருக்கும்.”

“பார்க்கலாம் பரத். மினிஸ்டர்கூட போன்ல பேசிட்டார். எந்த டெவலப்மெண்ட் இருந்தாலும் ஷேர் பண்ணிக்கிறேன்.”

“சுசி, நீ நம்ம கார்ல வெய்ட் பண்ணு. நான் சார்கிட்ட ஒரு மேட்டர் பேசிட்டு வந்துடறேன்.”

சுசிலா அவனை சந்தேகமாகப் பார்த்துவிட்டு, “இந்த கிளப்ல மெம்பரா சேர்த்துவிடச் சொல்வாரு. அந்தப் பாவத்தை மட்டும் செஞ்சிடாதிங்க சார்” என்று சென்றாள்.

“என்ன பரத், நிஜமாவே மெம்பர் ஆகணுமா?”

“சேச்சே, நாங்க சடங்கு பொண்ணுக்கு பிரசண்ட் செஞ்ச பனியன்ல சுசிலா என்ன எழுதியிருந்தான்னு கேட்டிங்களே,

அதை நீங்க தெரிஞ்சுக்காம போய்ட்டிங்கன்னா இன்னைக்கு உங்க வேலைல கவனம் சிதறிடுமேங்கற அக்கறைல. ."

"சொல்லுங்க, என்ன வசனம் அது?"

"வீட்ல திடீர்னு தாத்தா மண்டையைப் போட்டுட்டார்ன்னு வைங்க. வெளியூர்ல இருக்கிற பேரனை வரச்சொல்லி தந்தி கொடுக்கணும். ரெண்டே இங்கிலீஷ் வார்த்தைல கொடுக்கணும், என்னன்னு கொடுப்பிங்க?"

"START IMMEDIATELY!"

"அதான்!" என்று வேகமாக நடந்தான் பரத்.

அவன் கண்ணிலிருந்து மறையும்வரை புரியாமல் குழம்பின முருகேசன் திடீரென்று புரிந்துகொண்டு தனியாக வாய்விட்டுச் சிரிப்பதை அவர் ஜீப்பின் டிரைவர் கவலையாகப் பார்த்தான்.

* * *

## 3

ஒரு வார தாடியை இன்னும் மழிக்காமல் வந்திருந்தான் விக்னேஷ். கண்கள் பள்ளத்தில் இருந்தன. தொடர் சிகரெட் வாக்கியத்துக்கு வாக்கியம் இருமல் வழங்கிக் கொண்டிருந்தது.

"இன்னைக்குத்தான் சுதாவை ஆஸ்பத்திரிலேர்ந்து டிஸ்சார்ஜ் பண்ணி வீட்டுக்கு கூட்டிட்டு வந்தேன் பரத். அந்த பெட்ரூமுக்குள்ளே வர்றதுக்கே பயப்படறா. கையெல்லாம் நடுங்குது. குழந்தை அழுற சத்தம் காதுல கேட்டுக்கிட்டே இருக்காம். கனவுலயும் துரத்துதாம். என்னென்னவோ இமாஜின் பண்ணிக்கிறா. ரொம்ப பேதலிச்சிருக்கா. யார் தூக்கிட்டுப் போயிருந்தாலும் சரி, எங்க இருந்தாலும் சரி, நம்ம குழந்தை உசுரோடதான் இருக்குன்னு மட்டும் உறுதியா தெரிஞ்சி சொல்லுங்கன்னு அழுறா பரத்."

"நேச்சுரல்" என்றான் பரத் கையிலிருந்த பென்சிலை ஸ்டாண்டில் போட்டுவிட்டு, சுசிலா கர்சீப்கொண்டு இமைத் துளிகளை ஒற்றிக் கொண்டாள்.

"என்னாலதான். எல்லாம் என்னாலதான். அந்த போன் காலுக்கு நான் முட்டாள்தனமா ஏமாறாம இருந்திருந்தா. எல்லாத்தையும் தவிர்த்திருக்கலாம். தொண்டை அடைத்தது.

"நீங்க ஏன் சிஸ்டர் ஃபீல் பண்றிங்க. எங்களுக்கு இப்படி நடக்கணும்னு இருந்திருக்கு. நீங்க இல்லாத சமயம் பகல்ல இது நடந்திருந்தா. அப்போ நீங்க எப்படி பொறுப்பாவிங்க?"

"வந்தவன் சர்வ நிச்சயமா தீர்மானிச்சிருந்து சுசிலாவையும் மயக்கப்படுத்திட்டு இதேக் காரியத்தை செஞ்சிருக்கலாமே. டோண்ட் பீ எமோஷனல் சுசி."

"செஞ்சது யாருன்னு கண்டுபிடிச்சி குழந்தையை மீட்டுக் கொடுக்க முடியாத இயலாமைல மனசு நொந்து போகுது பரத்."

ரவி கொண்டு வந்த காபிக்கு பரத் பிளாஸ்டிக் தட்டுகள் வைத்தான். ஒலித்த போனை எடுத்தான்.

"ஹலோ. ஈஸ் இட் பரத்? சிங்கப்பூர்லேர்ந்து எமிலி பேசறேன்."

"நோ. திஸ் ஈஸ் நாட் தி டைம். கால் மி லேட்டர் ப்ளீஸ். வைத்தான். "காபி எடுத்துக்க விக்னேஷ். இதோ பார், இப்ப உன் மனைவிக்கு ஒரே ஆறுதல் நீதான். வீட்டுக்குப் போறதுக்கு முன்னாடி நேரா சலூனுக்குப் போ! இந்த தாடி சுதாவோட துக்கத்தை இன்னும் தூண்டும்!"

"ஏன் பரத், துக்கம் எனக்கு இல்லையா?"

"சரி, அதை அடையாளப் படுத்திக்கணுமா? தப்பா நினைக்காதே. இந்த ஒரு வாரமும் நீ பல்லு விளக்காம இருக்கியா? ஒரு ஃபிரெஷ் லுக் உன் மனசுக்கே ஒரு தெம்பு கொடுக்கும். அதுக்காகத்தான் சொல்றேன்."

"போலீஸ் என்னமோ தீவிரமாத்தான் இருக்காங்க. இல்லை, என்னை சமாதானப் படுத்தறதுக்காக அப்படிச் சொல்றாங்களோ என்னவோ. ."

"உன் மனநிலைக்கு அப்படித்தான் சந்தேகப்படச் சொல்லும். பட் வீ ஆர் இன் டச்! அவங்க தீவிரமாத்தான் இருக்காங்க. ஏற்கனவே ஆஸ்பத்திரில குழந்தை திருடி வித்துட்டு ஜெயில் அனுபவிச்சி வெளில வந்தவங்களை எல்லாம் லிஸ்ட் போட்டு தேடித் தேடி கடுமையா விசாரிச்சுட்டு இருக்காங்க.

நானும் தனிப்பட்ட முறையில் முயற்சிகள் செய்துகிட்டுத்தான் இருக்கேன் விக்னேஷ்."

"உனக்கு எத்தனையோ கேஸ் காத்துக்கிட்டிருக்கு!"

"பேத்தாதே! சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவங்கள்னு நீ உன்னோட சீஃப், ஜீனத், டிரைவர் இவங்களை சொல்லிட்டே, போலீசும் விசாரிச்சி முடிச்சிடுச்சி. ஆனா என் திருப்திக்காக நாங்க அவங்க மூணு பேரையும் தனித்தனியா கண்காணிச்சோம். எங்க ஆஃபிஸ் ஸ்டாஃப் மாதவிக்கு உன் கொலிக் ஜீனத்தை கண்காணிக்கிறதுதான். நாலு நாளா நான் கொடுத்த வேலை. அவ கொடுத்த ரிப்போர்ஸ் பார்க்கறியா? சுசிலா மிஸ்டர் மகாதேவனை வாட்ச் செஞ்சா. நான் அந்த டிரைவர் பொள்ளாச்சியை வாட்ச் செஞ்சேன். இப்ப அவங்க மூணு பேரோட தினசரி நடவடிக்கைகள் பூரா எங்களுக்குத் தெரியும். சொல்லட்டுமா? மிஸ்டர் மகாதேவன் ஆபிஸ்லேர்ந்து நேரா காஸ்மா பொலிடன் கிளப் போயிடறார். ரெண்டாயிரம் ரூபா தினமும் சீட்டாட்டத்தில் தோக்கறார். வீட்டுக்குப் போய் சாப்டுட்டு நாயைக் கூட்டிக்கிட்டு வாக் போறார். காலை சிக்ஸ் தர்ட்டிக்கு எந்திரிச்சி.

"போதும்! ஐ அம் ஸாரி. எனக்கு இப்ப எதைப் பார்த்தாலும், யாரைப் பார்த்தாலும் எரிச்சலா இருக்கு. உன்னை ஹர்ட் பண்ணிட்டேன், ஸாரி. நேத்து டி.வி.ல கூட்டமா அம்பது பேர் சிரிக்கிறதைப் பார்த்தாலும் டி.வி.யை அணைச்சுட்டேன் பரத். ஐ அம் நாட் இன் மை மூட்ஸ்."

"ஐ அண்டர்ஸ்டாண்ட்" என்று அவன் கையை ஆதரவாகத் தொட்டான் பரத்.

விக்னேஷ் காபியை ஒரே மூச்சில் குடித்துவிட்டு வைத்தான். எழுந்து கொண்டான், "நான் வரட்டுமா?"

"இப்ப வீட்ல துணைக்கு.

"என் மாமியார் இருக்காங்க."

"நிறைய தண்ணியடிக்கிறியா?"

"தாங்க முடியலை பரத்."

"எதுல வந்தே?"

"கார்லதான்."

"நீதான் டிரைவ் பண்றியா?"

"ஆமாம்."

"தப்பு விக்னேஷ். இப்ப நீ இருக்கற மனநிலைல தனியா வண்டி எடுக்காதே! வீட்லயே இரு! சேன்ஞ்சா இருக்கும்னா ஆட்டோல ஆபீஸ் போ! போன் செஞ்சிருந்தா நானே வந்திருப்பேனில்ல? இங்க பார், கொஞ்ச நாளைக்கு உனக்குப் பக்கத்தில யாராவது ஒரு ஃபிரெண்டு இருக்கணும்! அந்தப் பையன் பேரு என்ன?"

"யாரு?"

"எதிர் மாடில குடியிருக்கிற பையன்ப்பா. சினிமா சான்ஸ் தேடிக்கிட்டிருக்கான்னு சொன்னியே. அன்னைக்கு நீ டெல்லிக்குப் போனப்ப பொறுப்பா வந்து ஸ்வெட்டர் வாங்கிட்டுப் போனானே.

"வரதராஜன்!"

"அவன் சும்மாத்தான் இருக்கான். அவனை உன் கூடவே வெச்சுக்கயேன். அவனுக்கு டிரைவிங் தெரியும்னா அவனை ஓட்டச் சொல்லு காரை!"

"எதுக்குப்பா மத்தவங்களுக்கு தொந்தரவு கொடுத்துக்கிட்டு. ஐ அம் ஆல்ரைட். வர்றேன்."

விக்னேஷ் கதவுவரை போனதும், நினைவு வந்தவனாக பரத், "ஏய்! கொஞ்சம் இரு! இங்க வா!" என்றான்.

"என்ன பரத்?"

"உக்காறேன்?"

"என்ன?"

"அந்தப் பையன் வரதராஜன் எப்படி?"

"ரொம்ப நல்ல பையன் பரத்."

"சுதாவுக்குத் துணையா சுசிலா இருக்கிறதும், நீ டெல்லிக்குப் போறதும் அவனுக்கும் தெரியுமே. அவன் பேரை நீ போலீசுக்கும் சொல்லலை. எனக்கும் தோணலையே.

"அவன் பாவம் பரத். சினிமால ஒரு நல்ல வேஷத்துக்காக அலையறவன். ரொம்ப மரியாதையான பையன். ரொம்ப நாளாப் பழக்கம். சகட்டு மேனிக்கு எல்லாரையும் சந்தேகப்படறதா?"

"பதறாதே. யாரையும் தள்ளி நின்னு பார்க்கற நான் தாராளமா சந்தேகப்படலாம்."

"என்ன பரத், அவன் டாக்டரும் இல்லை, மெடிக்கல் ஸ்டூடண்ட்டும் இல்லை. அவனை ஏன் சந்தேகப்படறிங்க?" என்றாள் சுசிலா.

"ஒருத்தன் கல்யாணத்தில ஆயிரம் பேருக்கு சாப்பாடு போடணும்னு நினைச்சான்னா அவனே கரண்டி பிடிச்சி சமைக்கணும்னு கட்டாயமா? அந்த வரதராஜனுக்கு ஏன் ஒரு நோக்கம் இருந்திருக்கக் கூடாது? எதிர் மாடியிலயே தங்கி யிருக்கிறவன். சுலபமா எல்லாத்தையும் கண்காணிக்க முடியும். நான் வீட்டை விட்டுப் போய்ட்டேனான்னு தெரிஞ்சுக்கிட்டு அப்புறமா அவன் டைம் கொடுத்து உனக்கு ஏன் போன் பண்ணியிருக்கக் கூடாது?"

"இப்படி ஆரம்பிச்சா தெருவுல லாண்டரி வண்டிக்காரன், காய்கறிக்காரன், தபால்காரன், கேஸ் சிலிண்டர் கொண்டார்றவன், பால் பாக்கெட் போடறவன்னு. . நூறு பேருக்கு நோக்கம் வெச்சி சந்தேகப் பட்டுக்கிட்டே இருக்கலாம் பரத்."

"விக்னேஷ், நீ சொன்ன அத்தனை பேருக்கும் சுசிலா அங்க தங்கறது தெரியாது. பரத்துக்கு ஆபத்துன்னு சொன்னா அவ அலறி அடிச்சிக்கிட்டு ஓடுவான்னு தெரியாது. அந்த காரணத்தால அவங்க எல்லாத்தையும் சுலபமா விலக்கிடலாம். அப்படி சுலபமா இவனையும் விலக்கறதுக்கு நான் தயாரா இல்லை. சொல்லு விக்னேஷ், அந்த வரதராஜன் உனக்கு எத்தனை நாளா பழக்கம்? யோசிச்சு சொல்லு."

"ஆறு மாசமாப் பழக்கம்!"

"அதாவது சுதா கர்ப்பமானதுக்கு அப்புறம்தான். எப்படி அறிமுகம்? அவனா வந்து பேசி பழகிட்டானா இல்லை.

விக்னேஷின் முகத்தில் குழப்ப முடிச்சு விழுந்தது.

"அவனாத்தான் பழகிக்கிட்டான்."

"எப்படி?"

"வீட்டு வாசல்ல சேர் போட்டு உக்காந்து பேப்பர் படிச்சிட்டிருந்தேன் வந்தான் எதிர்மாடி ரூமுக்கு குடி வந்திருக்கிறதா சொல்லி அறிமுகப் படுத்திக்கிட்டான். எலெக்ட்ரிக் பாய்ண்ட்ஸ்ல கோளாறு இருக்கிறதாச் சொல்லி

டெஸ்ட்டர் இருந்தா கொடுங்கன்னான். கொடுத்தேன். அதை திருப்பி கொடுக்கறப்ப அவனைப்பத்தி கேட்டேன். சினிமால சின்னச் சின்ன வேஷத்தில நடிக்கிறதாவும், ஒரு நல்ல சான்சுக்கு காத்திருக்கிறதாவும் சொன்னான். அவன் பேச்சுல கண்ணியம் இருந்திச்சி. உக்கார வெச்சி காபி கொடுத்தேன்.

“அப்புறம்?”

“நான் வாக் போறப்ப அவனை சந்திப்பேன். ரெண்டு பேரும் சேர்ந்து பேசிக்கிட்டேப் போவோம். சினிமா இண்டஸ்ட்ரி பத்தி சுவாரசியமான விஷயங்களை நிறைய சொல்வான். இப்படித்தான் பழக்கமானான்.”

“சுதாவோடவும் பழகுவானா?”

“ஓ யெஸ். நிறைய உதவிகள் செஞ்சிருக்கான். வீட்ல விசேஷமா ஏதாச்சும் பலகாரம் செஞ்சா வேலைக்காரி மூலமா அவனுக்குக் கொடுத்தனுப்பறது உண்டு. இன்ஃபாக்ட், அவன் சினிமா கம்பெனிக்கு எல்லாம் என் போன் நம்பரை கொடுக்கறதுக்கு அனுமதி கொடுத்திருக்கேன்.”

“அப்படின்னா போன் பேசறதுக்காக அடிக்கடி வீட்டுக்கு வருவானா?”

“அவன் யாருக்காவது பேசறதுன்னா இங்க வரமாட்டான். அவனுக்கு வர்ற போன் கால்ஸ் அட்டெண்ட் செய்றதுக்கு வருவான்.”

“அவன் மேல ஒரு சின்ன சந்தேகமாவது வர்ற மாதிரி எப்பவாவது எந்த விஷயத்திலாவது அவன் நடந்துகிட்டிருக்கானா? நல்லா யோசிச்சு சொல்லு.”

விக்னேஷ் உதடுகளைப் பிதுக்கினான்.

“ஒவ்வொரு சந்தர்ப்பத்திலயும் அவன் மேல மதிப்பும் மரியாதையும் அதிகமாகற மாதிரிதான் அவன் இன்னைக்கு வரைக்கும் நடந்துகிட்டிருக்கான். அவனை இந்த விஷயத்தில சம்பந்தப்படுத்தி நினைச்சிப் பார்க்கறதுக்கே எனக்கு சங்கடமா இருக்கு பரத்.”

“இந்த மேட்டர் சம்பந்தமா அவன் உன்கிட்ட பேசினானா?”

“போலீஸ் வந்து தெருவே அமர்க்களப்பட்டப்ப அவன் ஹைதராபாத்ல ஷூட்டிங்கல இருந்தானாம். தெரியாதாம்.

பேப்பர்ல நியூஸ் படிச்சிட்டு ரெண்டு நாள் கழிச்சுதான் என்னை வந்து பார்த்தான். ரொம்ப ஆறுதல் சொன்னான். ரொம்ப அப்செட் ஆய்ட்டான்."

பரத் அமைதியாக இரண்டு பேண்ட் பாக்கெட்டுகளிலும் கைகளை நுழைத்து அறைக்குள் நிதானமாக நடை பழகிவிட்டு, "சுசி, உனக்கு போன்ல தகவல் சொன்ன அந்தக் குரலை நல்லா ஞாபகம் இருக்கா?" என்றான்.

"ஓ யெஸ்.

"விக்னேஷ், நீ ஒண்ணு செய்! நேரா அவன் ரூமுக்குப் போ. அவனை கார்ல இங்க கூட்டிட்டு வா. குழந்தையைத் தேடற விஷயத்தில எனக்கு அவனோட உதவி தேவைப்படுதுன்னு சொல்லி கூட்டிக்கிட்டு வா. வழில ஒரு டெலிபோன் பூத் பக்கத்தில வண்டியை நிறுத்து. அவனைவிட்டு நான் ஆபிஸ்ல தான் இருக்கேனான்னு போன்ல கன்ஃபார்ம் பண்ணிக்கிட்டு வரச் சொல்லு. அவன் என்னோட பேசறதை இன்னொரு போன்ல சுசிலா கேக்கட்டும். என்ன?"

"அவனை இவ்வளவு தூரம் பரீட்சை பண்ணிப் பார்க்க வேண்டியதில்லைங்கிறது என் அபிப்பிராயம் பரத்."

"அவனை குற்றவாளியாக்கிப் பார்க்கணும்னு எனக்கு ஏதாச்சும் வேண்டுதலா விக்னேஷ்? அவன் எனக்கென்ன எதிரியா? கமான். நான் சொன்னபடி செய்யேன்" என்றான் பரத்.

* * *

# 4

"பரத், எதாச்சும் பண்ணுங்க. ப்ளிஸ். என்றாள் சுசிலா. 'RAILWAY TRACKS NEVER MEET' (மன்னிக்க வேண்டும் சாத்தனூர் மணிவாசகம்! உங்கள் கோரிக்கைப்படி தமிழ்ப்படுத்தினால் அழகு கெட்டுவிடும். டிக்ஷ்னரி உபயோகியுங்களேன் ப்ளிஸ். .)

"என்ன பண்ணச் சொல்றே சுசி? அதுவும் ஆபிஸ்ல? அதுவும் பகல்ல?" என்றான் பரத்.

"பீ சீரியஸ்! விக்னேஷோட குழந்தையைக் கண்டுபிடிச்சே ஆகணும்!"

“முயற்சி பண்ணிக்கிட்டுதானே இருக்கோம். அந்த வரதராஜன் கிட்டேர்ந்து எனி டைம் போன் வரலாம். விக்னேஷ் இங்கேர்ந்து போய் ஒரு மணி நேரத்துக்கு மேல ஆச்சி. போன் வரட்டும். அவன் மேல சந்தேகமாத்தான் இருக்கு எனக்கு.”

“என்னால அவனை சந்தேகப்பட முடியலை பரத். என்கிட்ட ஆட்டோகிராஃப் கேக்கறதுக்கு எவ்வளவு தயங்கினான் தெரியுமா? ரொம்ப பவ்யம்!”

“அந்த பவ்யம் இயல்பா, நடிப்பான்னு தெரிஞ்சுக்கலாம். நீ ரொம்ப டென்ஷனாகாதே. உன் மூடு மாத்தறதுக்கு ஒரு ஜோக் சொல்லட்டுமா? ஃபாரின் ஜோக்! ஆனா லோக்கல் ஜோக்!”

“சிங்கப்பூர்லேர்ந்து எமிலி போன்ல சொன்ன நம்ம பக்கத்து ஜோக்கு!”

“அவ மறுபடி போன் செஞ்சாளா?”

“அதை ஏன் கேக்கறே? தினம் காலைல குட் மார்னிங் சொல்றதுக்காக ஒரு தடவை, குட் நைட் சொல்றதுக்காக ஒரு தடவை பேசிடறா! குட் மார்னிங் சொல்லிட்டு பேச ஆரம்பிச்சான்னா குட் ஆஃப்டர்நூனே வந்துடுது!”

“உங்களுக்கு விவஸ்தை இல்லையா பரத்?”

“அவளுக்குதானே போன் பில்லு ஏறுது. நமக்கென்ன சுசி?”

“நாஸ்ட்டி ஜோக் எல்லாம் சொல்றாளா அவ?”

“என்ன ஜோக்குன்னே சொல்லலை, அதுக்குள்ளே அதை நீ நாஸ்ட்டி ஜோக்னு சொன்னா எப்படி?”

“குப்பையை குப்பைத் தொட்டிலதானே போடுவாங்க!”

“அந்த மாதிரி?”

“உங்ககிட்ட யாரு டீசண்ட் ஜோக் சொல்வாங்க?”

“இதே கமெண்ட்டை நீ பத்து பேர் முன்னாடி சொல்லிருந் தேன்னா காதலின்னும் பார்க்காம நான் மான நஷ்ட ஈடு வழக்கு போடுவேன் சுசி.”

“போற போக்கைப் பார்த்தா நான்தான் உங்கமேல கேஸ் போடப் போறேன் பரத்.”

“என்னன்னு?”

“எனக்குத் துரோகம் செய்றிங்கன்னு!”

“சேச்சே! பெரிய வார்த்தை! ரெண்டாவது டெலிபோன் மூலமா உலகத்தில யாருமே துரோகம் செய்ய முடியாது சுசி. ஒண்ணு நான் சிங்கப்பூர் போகணும், இல்லை எமிலி இங்க வரணும். என்னதான் கம்ப்யூட்டர்ல மல்டிமீடியா, வீடியோ கான்ஃபெரன்சிங்னு டெவலெப் ஆனாலும் இதுக்கு நேர்லதான் சந்திச்சாகணும்.”

“அந்த ஆசை வேற இருக்கா?”

“எனக்கு கிடையாது சுசி.”

“அப்ப அவளுக்கு இருக்கா?”

“இதெல்லாம் நேரடியா கேக்க முடியுமா? குன்சா புரிஞ்சுக்க வேண்டியதுதானே. ”

“அவ போன் நம்பர் என்ன?”

“சக்களத்தி சண்டை போடப் போறியா? நோ? என் ரசிகையை அவமானப்படுத்தறதை அனுமதிக்க முடியாது.”

அவனை உற்றுப் பார்த்த சுசி. “ச்சீ. போடா!” என்றாள்.

பரத் தனக்குப் பின்னால் திரும்பிப் பார்த்துக் கொண்டு “என்னையா சொன்னே? இப்படி செல்லமா ஆசையா நீ சொல்ல மாட்டியான்னு ஏங்கிக்கிட்டிருந்தேன் சுசி. ஓகே, மூடு மாத்தறதாச் சொல்லிட்டு மூடை அப்செட் செய்யக் கூடாதில்லை, நீ வெளில திட்டினாலும் உள்ளுக்குள்ளே ரசிப்பேன்னு எனக்குத் தெரியும் அந்த ஜோக்கை சொல்லிடறேன்” என்றான்.

“என்ன பெரிய புடலங்கா ஜோக்கு?”

“புடலங்கா ஜோக் ஒண்ணு தனியா இருக்கு. அதை அப்புறம் சொல்றேன். இப்ப அந்த நாதஸ்வர வித்வான் ஜோக்கை சொல்லிடறேன்.”

“என்ன எழவு அது? சொல்லித் தொலைங்க!”

“ஒரு ஊர்ல ஒரு நாதஸ்வர வித்வான். அவருக்கு இருபத்தி நாலு மணி நேரமும் இசை, இசைன்னு இசை பத்தியே சிந்தனை. அதிகாலைல எழுந்து உக்காந்து ஊத ஆரம்பிச்சாருன்னா நடு ராத்திரிதான் வாயிலேர்ந்து எடுப்பார். யாராச்சும் அவரை கொஞ்சம் பாராட்டிடக் கூடாது. சிலிர்த்துக்கிட்டு அந்த மூடுல சொத்தைக் கேட்டாலும் எழுதி வெச்சிடுவார்.”

"இவ்வளவு விலாவரியா சொல்லியாகணுமா?"

"தந்தி பாஷைல சொன்னா சுவாரசியமா இருக்காது சுசி. கேளு, தெரியாத்தனமா அந்தாளுக்கு கல்யாணம் பண்ணி வெச்சிட்டாங்க. சிந்து பைரவி சுலோச்சனா மாதிரி அந்தப் பொண்ணுக்கு சங்கீதம்னாலே ஜுரம் வந்துடும். இந்தாளு எப்பப் பார்த்தாலும் நாதஸ்வரத்தை மட்டும் ஊதிக்கிட்டிருந்தானா. அந்தப் பொண்ணு ரூட்டு மாறிடுச்சி."

"சிஷ்யன் தப்பு செஞ்சுட்டானாக்கும்?"

"சிஷ்யன் இல்லை, தபால்காரன்! ஒரு நாள் வித்வான் வெளியூர் கச்சேரிக்குப் போய்ட்டு திரும்பி வந்து கதவைத் தட்டினார். திறந்தது அந்த தபால்காரன். இப்ப அவன் என்ன சொல்லிருந்தா வித்வானோட சந்தேகத்திலேர்ந்து தப்பிச்சுக்குவான்?"

"இதென்ன பாக்யராஜ் மாதிரி கேள்வி கேட்டுக்கிட்டு? அந்த அசிங்கமான கிளைமாக்சை நீங்களே சொல்லிடுங்க!"

"அசிங்கம் இல்லை சுசி, அதிபுத்திசாலித்தனம்! அந்த தபால்காரன் என்ன சொன்னான்னா. 'வித்வானய்யா, நான் உங்க ரசிகன். உங்க இசை கேக்கலாம்னு வந்தேன். நீங்க இல்லை. நீங்க வாசிச்சுப் பழகின இசை உங்க வீட்டுக் காத்து முழுக்க நிரம்பியிருக்குமே, அதையாவது சுவாசிக்கலாம்னுதான் உள்ளே வந்தேன்'னான். வித்வான் மெய்சிலிர்த்துப் போய் 'நான் நடுவுல தொந்தரவு பண்ணிட்டேன், நீ நல்லா சுவாசி, நான் திண்ணைலயே படுத்துக்கறேன்'னுட்டார்."

"இது ரொம்ப ஓவர் பரத்! நாட்ல எவ்வளவோ உருப்படியான விஷயங்கள் இருக்கறப்ப. ஏன்தான் இப்படியெல்லாம் பேசி. ."

"அ! சொல்லுவியே? முழுக்கதையும் கேட்டு முடிச்சிட்டு அப்புறம் அட்வைஸ் பண்றியே! உன் கதையே வேணாம்ப்பான்னு முதல்லயே சொல்றது!"

டெலிபோன் ஒலித்து.

"சுசி, அந்த வரதராஜனாத்தான் இருக்கணும். நீ இன்னொரு போன்ல அவன் குரலை நல்லாக் கவனமாக் கேளு, நான் கொஞ்சம் பேச்சுக் கொடுத்து இழுக்கறேன்."

பரத் எடுத்து, "ஹலோ. மூன்லைட் டிடெக்டிவ் ஏஜன்சி."

"மிஸ்டர் பரத் இருக்காரா?"

"ஸ்பீக்கிங் நீங்க யாரு?"

"சார், நான் வரதராஜன் பேசறேன். உங்க ஃபிரண்டு விக்னேஷ் சார் வீட்ல அன்னைக்கு சந்திச்சோமே.

"ஆமாம், சொல்லுங்க வரதராஜன்."

"குழந்தையை கண்டுபிடிக்கிறது சம்பந்தமா என்னோட உதவி தேவைப்படுதுன்னு நீங்க சார்கிட்ட சொன்னிங்களாம். சார் என்னைக் கூட்டிட்டு வந்தார். நீங்க இருக்கிங்களான்னு தெரிஞ்சுக்க சொன்னார். அவர் கார்ல இருக்கார். இப்ப நேரா அங்கதான் சார் வர்றோம்."

"வாங்க! உங்களுக்கு இன்னைக்கு, நாளைக்கு முக்கியமான வேலை எதுவும் இல்லையே?"

"உங்களுக்கு ஒத்துழைக்கிறதைத் தவிர வேற எதுவும் முக்கியம் இல்லை சார்."

"சரி, வாங்க பேசிக்கலாம்" வைத்தான்.

சுசிலாவும் தன் போனை வைத்தாள்.

"என்னால கிளியர்கட்டா சொல்ல முடியலை பரத். ஒரு வேளை அவன் கர்சீப் போட்டுப் பேசிருக்கலாம்."

"பேசின அந்த பாணி?"

"அவரப்பட்டு இவனை என்னால சந்தேகப்பட முடியலை பரத்."

"சரி, வரட்டும், விசாரிச்சுப் பார்க்கலாம்" என்றான் பரத்.

* * *

# 5

**வ**ரதராஜன் முழுக்கைச் சட்டையை முழங்கைக்கு மேல் வரை மடித்து விட்டிருந்தான். க்ளோாஸ் கட் தலை. கண்களில் ஒளி இருந்தது. நெற்றியில் விபூதித் தீற்றல். ஜீன்ஸ் பேண்ட், விக்னேஷ் ஷூவோடு உள்ளே வர இவன் தன் செருப்புகளை வெளியே விலக்கிவிட்டு வந்ததைக் கவனித்தான் பரத்.

"என்ன சாப்பிடறிங்க வரதராஜன்?"

"எதுவும் வேணாம் சார். நான் எந்த வகைல உங்களுக்கு ஒத்துழைக்கணும்னு சொல்லுங்க சார். விக்னேஷ் சார் எப்பவும் எவ்வளவு உற்சாகமா இருப்பார் தெரியுமா? இப்பப் பாருங்க சார். எப்படி உடைஞ்சிப் போய்ட்டார் பாருங்க. சிஸ்டருக்கு எந்த பிராப்ளமும் இல்லாம உயிர் பிழைச்சதை நினைச்சி சந்தோஷப் படுங்க சார்னு ஆறுதல் சொல்லிப் பார்த்துட்டேன். ரொம்ப அப்செட் ஆயிட்டார் சார். இந்தக் கேசுக்காக நிஜமாவே தனி போலீஸ் படை அமைச்சிருக்காங்களா சார்?"

படபடவென்று ஆனால் ஒவ்வொரு வார்த்தையையும் தெளிவாகப் பேசினான் வரதராஜன். இவனைப் போய் எப்படி எந்தக் கோணத்தில் சந்தேகப்படுவதென்று பரத்திற்குப் புரியவில்லை.

"உண்மைதான். தனிப்படை அமைச்சு தீவிரமா விசாரிச்சுக் கிட்டுதான் இருக்காங்க. இந்த மேட்டர் எதுக்காக நடந்திருக்க லாம்னு நீங்க நினைக்கிறிங்க வரதராஜன்!"

"ஒரு ஐடியாவும் வரலைங்க. சில சினிமாக்கள்ல கர்ப்பமா இருக்கற பொம்பளைங்களை வில்லன் தாக்கி கர்ப்பம் கலையற மாதிரி செய்றதா காட்டியிருக்காங்களே ஒழிய இந்த கர்ப்பப் பையிலேர்ந்து குழந்தைத் திருட்டுங்கறது கற்பனைகூட யாரும் நினைச்சுப் பார்க்காத புது குற்றமா இருக்கு சார். எனக்கு காரணம் புரியவே இல்லை. அவன் யாரா இருந்தாலும் சரி, பிடிச்சதும் விசாரணையே இல்லாம சுட்டுத் தள்ளணும் சார்!"

"செஞ்சது ஒரு ஆம்பளையாத்தான் இருக்கும்னு சொல்றிங்களா?"

"இத்தனைத் துணிச்சல் பொம்பளைக்கு வராது சார்."

"ஏன், ஊட்டில ஒரு பொம்பளை டாக்டர் தன் காதலனை கண்டந்துண்டமா வெட்டி சூட்கேஸ்ல பார்சல் பண்ணி மாட்டிக்கலையா?"

"கரெக்டுதான். அது விதி விலக்கு!"

"இதுவும் இன்னொரு விதி விலக்கா இருக்கலாமே.

"இருக்கலாம் சார்."

"இந்த சூட்கேஸ் இப்பல்லாம் படாத பாடு படுது. லஞ்சப் பணம் கொடுக்கறதுக்கு யூஸ் பண்றாங்க, பாம் வைக்கறதுக்கு

யூஸ் பண்றாங்க, கடத்தலுக்கு யூஸ் பண்றாங்க, இப்ப பாடியை வைக்கிறதுக்கு யூஸ் பண்றாங்க, சூட்கேசுக்கு மல்ட்டி பர்ப்பஸ் வந்துடுச்சி! வெல்! இந்தக் கேசை நாங்க தனிப்பட்ட முறையில விசாரிச்சுக்கிட்டு இருக்கோம் வரதராஜன். இதில உங்களை ஒரு முக்கியமான விஷயத்துக்கு பயன்படுத்த விரும்பறோம்."

"தாராளமா செய்றேன் சார். என்ன செய்யணும்?"

"எங்களுக்கு ஒரு நம்பிக்கையான ஆள் வேணும்னு சொன்னோம். விக்னேஷ் சிபாரிசு செஞ்சது உங்களை! ஆனா நீங்க எவ்வளவு தூரம் நம்பிக்கையா நடந்துக்குவிங்கன்னு எங்களுக்கு நேரடி பழக்கம் இல்லாததால் சரியாத் தெரியாது. அதனால உங்களைப் பத்தின சில கேள்விகளுக்கு பதில் சொல்றிங்களா?"

"ஓ. யெஸ்."

"உங்களுக்கு சொந்த ஊர் எது?"

"வாணியம்பாடி."

"இப்ப அங்க உங்க குடும்பத்தில யார் இருக்காங்க?"

"ஒரு பாட்டி மட்டும்தான் இருக்காங்க. என் அம்மா, அப்பா, சின்ன வயசுலேயேப் போய்ட்டாங்க. என்னை வளர்த்தது பாட்டி தான். நான் படிச்சது வாணியம்பாடில தான். பி.காம் படிச்சது மெட்ராஸ்ல."

"எந்த காலேஜ்ல?"

"பிரசிடென்சி காலேஜ்ல."

"எந்த வருஷம் முடிச்சிங்க?"

"எய்ட்டி செவன்ல சார்."

"இப்ப உங்க வயது என்ன?"

"இருபத்தி எட்டு சார்."

"ஹாஸ்டல்ல தங்கிப் படிச்சிங்களா?"

"ஆமாம்."

"உங்களோட கூடப் பொறந்தவங்க?"

"ஒரே ஒரு அக்கா. வாணியம்பாடிலயே கட்டிக் கொடுத்தோம்."

"உங்க மச்சான் என்ன செய்றாரு?"

"பேங்க் ஆஃப் இந்தியால வேலை பார்க்கறாரு."

"பாட்டியோட இருக்கறது யாரு?"

"அக்கா வீட்லதான் பாட்டி இருக்காங்க, ஆனா.

"ஆனா?"

"நான் அக்காவையோ, பாட்டியையோ பார்த்துப் பேசி அஞ்சி வருஷம் ஆச்சி சார்."

"ஏன்?"

"எனக்கும் மச்சானுக்கும் ஒரு தகராறு. என்னைக் கைநீட்டி அறைஞ்சுட்டார். அன்னியிலேர்ந்து பகையாய்டுச்சி."

"தபாலாவது போடுவாங்களா?"

"ம்கூம். நான் எங்க இருக்கேன், என்ன செய்றேன்னே அவங்களுக்கும் தெரியாது."

"படிப்பு முடிச்சதுலேர்ந்து என்ன செஞ்சிட்ட இருந்திங்க?"

"டெம்பரரியா பல வேலைகள் செஞ்சேன் சார். சோப் ஆயில், பாத்ரூம் க்ளீனிங் ஆயில் இதெல்லாம் வீடு வீடா வித்துக் கொடுக்கறது, விளம்பர போர்டு எழுதறது, பழைய பேப்பர் வாங்கி கடையில போடறதுன்னு பலது செஞ்சேன். எவர்சில்வர் பாத்திரக் கடையில சேல்ஸ்மேனா வேலை பார்த்திருக்கேன். துணிக் கடைல துணி கிழிச்சிருக்கேன். ஆட்டோ ஓட்டியிருக்கேன்.

"ஏன் எதிலயும் நிலையா இல்லை?"

"என் மனசு அதில எல்லாம் ஒட்டலை சார். காலேஜ்ல நாடகத்தில நடிச்சி பேர் வாங்கினதால நடிகனாகணும்னு ஒரு ஆர்வம் மனசுல விழுந்துடுச்சி. இத்தனை வருஷமா அலைஞ்சதில இப்ப ஒரு வருஷமாத்தான் சின்னச் சின்ன வேஷம் கிடைக்குது."

"இப்ப வேற வேலை எதுவும் செய்யலையா?"

"இல்லை சார்."

"நம்பிக்கை இருக்கா?"

"நிச்சயமா சார்."

"தமிழ்ல எந்தப் படத்தில எல்லாம் நீங்க நடிச்சிருக்கிங்க?"

"அப்படிக் கேக்கக் கூடாது சார். எந்தப் படத்தில எல்லாம் நீங்க தலையைக் காட்டிருக்கிங்கன்னு கேளுங்க. சின்ன கவுண்டர்ல பஞ்சாயத்துல மனோரமா ஆச்சியை உக்கார வெச்சிட்டு விஜயகாந்த் சார் வெளியூர் போவார் சார். அதில முதல் வரிசைல நானும் நிப்பேன். வசனம் இல்லை. அபூர்வ சகோதரர்கள்ல 'உன்னை நினைச்சி' பாட்டுல கமல் சார் பக்கத்தில நிப்பேன்."

"வசனமே பேசினதில்லையா?"

"ரெண்டு தெலுங்கு படத்தில பேசிருக்கேன் சார். அதுவும் ஒரு வரி, ரெண்டு வரி. பாலகிருஷ்ணா சார் படத்தில அவர் ஆபிஸ் மேனேஜர். நான் கிளார்க். 'சார், பெங்களூர்லேர்ந்து உங்களுக்கு போன் வந்துச்சின்னு' நான் சொல்லுவேன்."

"யூனியன்ல மெம்பரா இருக்கிங்களா?"

"இன்னும் சேரலை. சேரணும் சார்."

"இப்ப நீங்க தங்கியிருக்கற ரூமுக்கு என்ன வாடகை?"

"அறநூறு ரூபா சார்."

"கட்டுப்படியாகுதா?"

"கைல காசு இருந்தா மசால்தோசை, தட்டுப்பாடா இருந்தா பிரெட்டும் ஜாமும்! என்ன சார் செய்றது?"

"ஏன் ஏதாச்சும் ஒரு வேலைல இருந்துக்கிட்டே சினிமால முயற்சி செய்யக் கூடாது?"

"அது சரியா வராது சார், சுத்திக்கிட்டே இருந்தாதான் சின்ன சான்ஸாவது கிடைக்கும். திடீர்னு கூப்புடுவாங்க. வேலைல இருந்தா அடிக்கடி லீவு போடறது சிரமம்."

"கல்யாணத்தைப் பத்தி என்ன யோசனை?"

"நானே இன்னும் காலை ஊனலையே சார்."

"வயசாய்டுமே வரதராஜன்."

"வருமானம் இல்லாம திருமணம் எப்படி சார்?"

"காதல் அனுபவம் உண்டா."

"சந்தர்ப்பம் ஏற்பட்டது சார். கட்டுப்படுத்திக்கிட்டேன்."

"அதெப்படி முடியும்?"

"வேற லட்சியம் மனசுல இருக்கிறப்ப. காதலுக்கு இடம் இல்லை சார்."

"எந்த பேங்க்லயாவது அக்கவுண்ட் வெச்சிருக்கிங்களா?"

"எதுக்கு சார்?"

"பணம் போட்டு வைக்கதான்."

"இருந்தாதானே சார் போடறதுக்கு."

"சினிமா கம்பெனில செக் தர மாட்டாங்களா?"

"நான் என்ன சார் கார்த்திக்கா, பிரபுவா செக் வாங்கறதுக்கு."

"இந்த கொடுமையான சம்பவம் நடந்த அன்னைக்கு நீங்க ஊர்ல இல்லை போலிருக்கு.

"ஆமாம் சார்."

"எங்க போயிருந்திங்க?"

"ஹைதராபாத். ஒரு தெலுங்னு படம் சார்."

"வசனம் பேசினிங்களா, இல்லையா?"

"கோர்ட் செட்டப் சார். நான் டவாளியா நின்னேன் 'ராமுடு, ராமுடு, ராமுடு'ன்னு கூப்புட்டேன்."

"படத்துக்குப் பேர் என்ன?"

"படத்துக்குப் பேரே ராமுடு சார்."

"உங்களை டிரைய்ன்ல கூட்டிட்டுப் போனாங்களா?"

"ஆமாம் சார்."

"இந்த சின்ன கேரக்டக்கு அங்க ஆள் கிடைக்காதா? மெனக்கெட்டு மெட்ராஸ்லேர்ந்து கூட்டிட்டுப் போகணுமா?"

"புரொடக்ஷன் கம்பெனி மெட்ராஸ்ல இருக்கு சார். அதோட புரொடக்ஷன் மேனேஜர் எனக்குப் பழக்கம். அதான்."

"பெரிய கம்பெனியா? என்ன பேரு?"

"விஜயலட்சுமி கம்பைன்ஸ், புது கம்பெனி சார். இது முதல் படம்."

"யாரு ஹீரோ?"

"அதுவும் புதுமுகம் சார், தேவராஜுலுன்னு பேரு."

"ஹீரோயின் பம்பாய்லேர்ந்து இறக்குமதியா?"

"கரெக்ட் சார். மோலிகா குல்கர்னின்னு பேரு."

"பெங்காலி ஸ்வீட் பேர் மாதிரி இருக்கு. ஓகே வரதராஜன், இன்னைக்கு வேணாம். நாளைக்கு விக்னேஷ் மூலமா நானே உங்களை காண்டாக்ட் பண்றேன்."

"சரி சார். அப்ப நான் புறப்படலாமா சார்? நீங்க. ." என்று விக்னேஷைப் பார்த்தான்.

"நானும் வந்துடறேன்" என்று எழுந்தான் விக்னேஷ். அவர்கள் இருவரும் போனதும் சுசிலா நடு நடுவில் எழுதிக் கொண்ட தகவல் குறிப்புகளைப் பார்த்தாள்.

"ரொம்பதான் வளவளன்னு விசாரிச்சிங்க பரத்."

"காரணமாத்தான் சுசி. அவன் சொல்ற தகவல் எதையாச்சும் சரி பார்த்துக்கற மாதிரி அவனை பதில் சொல்ல வைக்க அவ்வளவு கேக்க வேண்டியதாப் போச்சு. ரெண்டு தகவல்கள் மெட்ராஸ்லயே சரி பார்க்கலாம்."

"ஒண்ணு பிரசிடென்சி காலேஜ்."

"அதுகூட முக்கியமில்லை. அதை தப்பா சொல்லிருக்க மாட்டான். விஜயலட்சுமி கம்பைன்ஸ்னு ஒண்ணு இருக்கா? அவங்க ராமுடுன்னு புதுமுகம் தேவராஜுலுவை வெச்சி தெலுங்கு படம் தயார் செய்றது உண்மையா? சம்பவம் நடந்த அன்னைக்கு ஹைதராபாத்ல அந்தப் படத்தோட கோர்ட் சீன் எடுத்தாங்களா? இந்தத் தகவல்கள்தான் முதல்ல சரி பார்க்கணும்."

"எப்படித் தெரிஞ்சுக்கலாம் பரத்?"

"சிம்ப்பிள். சினிமாத் தகவல்களோட நடமாடும் வங்கி இருக்காரே."

"யாரு?"

"ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்! அவர் போன் நம்பர் பாரு."

சுசிலா பிரபலமானவர்கள் விலாசப் புத்தகத்திலிருந்து போன் நம்பர் கண்டுபிடித்து போன் செய்து பேசி வைத்தாள்.

"பிரசாத் ஸ்டுடியோல ஒரு பட பூஜைக்குப் போயிருக்காராம்."

"நமக்கு அர்ஜென்ட் சுசி. நேரா பிரசாத் ஸ்டூடியோவுக்கேப் போய்டலாம். புறப்படு, உனக்கு பத்து நிமிஷம் டைம் தரட்டுமா?"

"எதுக்கு?"

"நீ பனியன் மாத்திக்கிறதுக்கு."

"தேவையில்லை."

"அடுத்த சாப்டர்லயும் இதே பனியனோடதான் இருக்க வேண்டியிருக்கும். அதுக்காகச் சொன்னேன். சினிமா ஷூட்டிங் சம்பந்தமா 'TAKE TWO'. 'DOUBLE POSITIVE'. 'PRODUCTION NUMBER - 2' இப்படி ஏதாச்சும் பனியன் வச்சிருப்பியே.

"அதான் சொல்லிட்டிங்களே, போதும், போலாம் வாங்க."

"இத பார் சுசி, செட்ல யாராச்சும் நடிகை என்கிட்ட சிரிச்சிப் பேசினா. நீ அப்புறமா இங்க வந்துதான் திட்டணும். சரியா?"

"பெரிய மைக்கேல் ஜாக்சன்னு நினைப்பு! அலட்டாம வாங்க!" என்ற சுசிலா மேஜை மேல் இருந்த அவனது தொப்பியை எடுத்து அணிவித்தாள். அதன் முன்புறத்தில் 'HOW IS IT POSSIBLE' இருந்தது. பின்புறத்தில் - 'WITHOUT ME?' என்றிருந்தது.

"ஏய்! இதென்ன புதுசா தொப்பில எம்பிராய்டரி லெட்டர்ஸ்?"

"ஏன், நீங்கதான் வசன பனியன் போடுவிங்களா? நாங்க வசனத் தொப்பி போடக் கூடாதா? இனிமே அப்பப்ப இந்த மாதிரி கலக்கறதா உத்தேசம்! வசனம் எப்படி அதைச் சொல்லு!"

"சகிக்கலை" என்று அணிவித்த தொப்பியைக் கழற்றிப் போட. பரத் பாய்ந்து எடுத்து மறுபடி வைத்துக் கொண்டான்.

* * *

## 6

**கோ**டம்பாக்கம் பாலம் இறங்கியதுமே வரிசையாக அந்த புதுப் படத்திற்கான பூஜை போஸ்டர்களை, பேனர்களை சந்தித்தார்கள்.

பிரசாத் ஸ்டுடியோ வாசலில் பெரிய கட் அவுட்டில் கதாநாயகன் ஜரிகை மாலை துடிக்க கையில் AK 47 துப்பாக்கி வைத்திருந்தான். 'அக்னிதேவன்' என்ற படத்தின் பெயர் அந்தத் துப்பாக்கி முனையில் ஆரம்பித்திருந்தது.

உள்ளே முந்தாநாள் மார்க்கெட்டிற்கு வந்த கார்களையும் பார்க்க முடிந்தது. எங்கும் ஜரிகைப் பந்தல். மருதாணி பூசி ஓரத்தில் செம்பட்டையாக்கின தலையுடன் நிறைய பெண்கள் நடமாட யார் நடிகை, யார் கெஸ்ட் என்றுப் புரியவில்லை.

தோளில் கேமிரா மாட்டியவர்களும், வீடியோ கேமிரா சுமந்தவர்களும் ஒதுக்குப்புறமாக நின்று தம்மடித்த நடிகர்களையும் விடாமல் கவர் செய்து கொண்டிருக்க.

பரத்திற்கு சிலரைத்தான் அடையாளம் தெரிந்தது. தயாரிப்பாளர் சங்கத் தலைவர், விநியோகஸ்தர் சங்கத் தலைவர், நகைக் கடைக்காரர், நிறைய வெள்ளை செருப்புகள் தெரிந்தன.

"ஹா. .ய் பரத்" என்று வந்த அந்த நடிகையை நேற்று ஷாம்பூ விளம்பரத்தில் பார்த்ததால் உடனே புரிந்தது. கல்பா சகானி!

"ஹலோ. என்றான்.

"வாட் எ சர்ப்ரைஸ்! ஐ ம் கல்பா சகானி! உங்க ஃபேன் சார். ஒரு நாள் ஷூட்டிங்க கேன்சல் ஆனாலும் நீங்க துப்பறியற நாவல்தான் படிச்சிட்டிருப்பேன். ஹாய் சுசிலா!" என்று இயல்பாக இரண்டு பேருக்கும் மெத்தென்று கை கொடுத்து, முகத்தில் புரண்ட கூந்தலை விலக்கிக் கொண்டாள்.

"வரிசையா ரெண்டு படம் ஹிட் ஆயிடுச்சி போலிருக்கு."

"எல்லாம் நெடுங்காடி நீரஜா அம்மா தயவு!"

"அது யாரு உங்க அம்மாவா?"

"எல்லாருக்கும் அம்மா. சாமியாரம்மா. நான் சின்ன வயசிலேர்ந்தே அவங்க பக்தை சார்."

"அவங்கதான் உங்களை நீச்சல் ட்ரெஸ்ல நடிக்கச் சொன்னதா?"

"ஓ! குட் ஜோக்!" என்று அதிரச் சிரித்தாள். "பரத், நீங்க எனக்கு ஒரு உதவி செய்யணுமே."

"உங்க வீட்டுத் தோட்டத்தில உங்களோட ஷட்டில்காக் விளையாடணுமா?"

"மை குட்னெஸ்! நீங்க ஷட்டில்காக் ஆடுவிங்களா? எப்ப வர்றிங்க? டுமாரோ மார்னிங்?"

"ம்கூம். உங்களுக்கு எப்ப ஷூட்டிங் கேன்சலாகும்?"

"ஏன்?"

"அன்னைக்கு ஃபுல்டே விளையாட முடியுமே.

"பரத்! நமக்கு நேரமாகலை?" என்றாள் சுசிலா.

"இரு சுசி. கல்பா ஏதோ உதவி கேக்கறாங்க இல்லை, அதை செய்ய முடிஞ்சி செய்யாமல் போனா அவங்களோட பல லட்ச ரசிகர்களை பகைச்சிக்கிட்டதாய்டும்."

"நீங்க பேசிட்டிருங்க. நான் வர்றேன்" என்று சுசிலா பூஜை நடந்து கொண்டிருக்கும் கும்பலான திசையில் நடக்க. . . இவர்கள் பிளாஸ்டிக் நாற்காலிகளை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தார்கள்.

"சொல்லுங்க கல்பா, என்ன உதவி?"

"எனக்கு ஒரு தம்பி சார் கராத்தே எல்லாம் கத்து வெச்சிருக்கான். த்ரில்லர் சினிமா ஒண்ணு விட மாட்டான். எப்பப் பாரு, டிடெக்டிவ் நாவல்சை கட்டிப் பிடிச்சுக்கிட்டுதான் தூங்குவான்."

"படிப்பாரா?"

"படிச்சிட்டுதான் தூங்குவான். அவனுக்கு ஒரு பெரிய டிடெக்டிவா வரணும்னு ஆசை சார். நீங்கதான் சார் ட்ரைனிங் கொடுக்கணும்."

"எங்க ஆபிஸ்ல இப்ப ஒண்ணும் வேகன்சி இல்லையே கல்பா."

"அப்படி சொல்லக் கூடாது சார்."

"உண்மையை அப்டித்தானே சொல்லணும்."

"ரொம்ப தமாஷ் சார் நீங்க" என்று அவன் தொடை தட்டிச் சிரித்துவிட்டு சரிந்த துப்பட்டாப் பற்றி கவலை கொள்ளாமல், "ஐ ம் சீரியஸ் பரத்" என்றாள்.

"யாருக்கெல்லாம் தந்தி கொடுக்கணும்?"

"யப்பா! இப்படி கடிக்கிறிங்களே.

"இதை மட்டும் யாராச்சும் ரிப்போர்ட்டர் கேட்டா வேற மாதிரி எழுதிடுவாங்க."

"எழுதட்டுமே."

"உங்களுக்கு கவலை இல்லையா?"

"கவலைப்பட்டு எதுவும் ஆகப் போறதில்லை. ஒவ்வொரு செய்திக்கும் மறுப்பு சொல்லிக்கிட்டிருந்தா அதுக்கே நேரம் சரியா இருக்கும். அதனால என்னைப் பத்தி கிசுகிசு வந்தா நானே படிச்சி ரசிச்சுக்குவேன்."

"சில கிசுகிசுக்கள் கோபப்படுத்தாதா?"

"சுவாரசியம்னு நினைச்சா சுவாரசியம்!"

"எப்படிங்க கல்பா? அன்னைக்கு ஒரு பத்திரிகைல உங்களைப் பத்தி எல்லாம் சிலிக்கான் சர்ஜரி சமாச்சாரம்னு எல்லாம் எழுதிருந்தாங்களே.

"இதுக்காக மேடைபோட்டு அவ்வை சண்முகி கிளைமாக்ஸ் மாதிரி நிரூபிக்கச் சொல்றிங்களா? விடுங்க பரத்! என்ன வேணும்னாலும் எழுதிட்டுப் போறாங்க. என்மேல நிஜமான அன்பு வெச்சிருக்கிறவங்களுக்கு என்னைப் பத்தித் தெரியும். அதுபோதும் எனக்கு."

"நிஜமான அன்பு நிறைய பேர் வெச்சிருக்காங்க போலிருக்கே.

"சேச்சே! சூரியனை யார் வேணும்னாலும் சொந்தம் கொண்டாடிக்கலாம். சூரியனோட இஷ்டம்தானே முக்கியம்!"

"எந்தப் படத்தில இந்த வசனம் வருதுங்க?"

"இது சொந்தமா பேசறேங்க."

"ஒரு கேக்கக்கூடாத கேள்வி கேக்கட்டுமா?"

"வயசுதானே? நெஜமாவே பதினைஞ்சரைதான். யாரும் நம்ப மாட்டேங்கறாங்க பரத்."

"முகத்தை மட்டும் பார்த்தா கண்டிப்பா நம்பலாம். நான் கேக்க நினைச்சது அது இல்லை."

“வேற என்ன?”

“சுஷீலை எப்போ ரகசிய திருமணம் செஞ்சுக்கப் போறிங்க?”

“அப்-டு-டேட்டா தெரிஞ்சி வெச்சிருக்கிங்களே. அது யோசிக்க வேண்டிய விஷயம் பரத்.”

“ஏன்?”

“ரொம்ப பயந்தாங்கொள்ளியா இருக்கான். டிரைவ்-இன் வர மாட்டேங்கறான். டிஸ்கோ வர மாட்டேங்கறான். ஒத்து வருவான்னு தோணலை. ஆசை மட்டும் வெச்சிருந்தாப் போதுமா? நிரூபிக்க வேணாமா?”

“பூங்கொத்து அனுப்பியா?”

“அப்படி இல்லை! யு நோ! யு நோ!” என்று கண்ணடித்தாள்.

“நிஜமா எனக்குப் புரியலைங்க.”

“ஒரு மேடைல ரெண்டு நிமிஷம் பேசறதுக்கே பத்து தடவை தனியாப் பேசி பார்த்து ஒத்திகை செய்றதில்லையா?”

“அதுமாதிரி?”

“குளிக்கிறதுக்கு முன்னாடி சூடு சரியா இருக்கான்னு தொட்டுப் பார்த்துட்டு அப்புறம்தானே மேலே ஊத்திக்கிறோம்.”

“அதுமாதிரி?”

“முன்னுரை படிச்சிப் பார்த்து பிடிச்சிருந்தாதானே விலை கொடுத்து புத்தகம் வாங்கறோம்.”

“போதுங்க. ரயில் வண்டி மாதிரி வரிசையா இதே மாதிரி நிறைய உதாரணம் சொல்லலாம். .”

“அந்த மாதிரி. வாழ்க்கைல ரிஸ்க் எடுக்கக்கூடாது பரத். ஒரு ஒத்திகை அவசியம் வேணுங்கறது என் கருத்து.”

“பரவால்லைங்க. கல்கித்தனமா இருக்கிங்க.”

“வாட்?”

“அடுத்த நூற்றாண்டுல பொறக்கறதுக்கு பதிலா அட்வான்சா வந்து பொறந்துட்டிங்க! பதினைஞ்சரை வயசுலேயே உங்களுக்கு என்ன ஒரு வளர்ச்சி! ஐ மின். பக்குவம்!”

“எல்லாம் அந்த நெடுங்காடி.

“சொல்லிட்டிங்க!”

“என் தம்பி சமாச்சாரம்?”

“என் ஆபிசுக்கு அனுப்பி வைங்க. பேசிப் பார்க்கறேன்.”

“ரொம்ப நல்லப் பையன் பரத். ஒரு கெட்டப் பழக்கம் கிடையாது. சைட்கூட அடிக்க மாட்டான். ‘பிராமணன்’ற வார்த்தையைக்கூடச் சொல்ல மாட்டான்.”

“அதென்ன?”

“அதில் ‘பிரா’ வருதே!”

பரத் வாய்விட்டுச் சிரிக்க. சுசிலா வந்து, “வாங்க பரத் போலாம் ஃபிலிம் நியூஸ் ஆனந்தனைப் பார்த்து விசாரிச்சுட்டேன்” என்றாள்.

“என்ன சொன்னார்?”

“அப்படி ஒரு கம்பெனி உண்டாம். ஆனா ‘ராமுடு’ன்னு எந்தப் படமும் அவங்க எடுக்கலையாம். சில பேருக்கு போன் போட்டு பேசிட்டு சொன்னார். தேவராஜுலுன்னு புது நடிகனும் யாரும் வரலை. இன்ஃபாக்ட் சம்பவம் நடந்த அன்னைக்கு ஹைதராபாத்ல ஒரு ஸ்டண்ட் மாஸ்டர் இறந்ததால ஷுட்டிங் எதுவும் நடக்கலை.”

பரத் எழுந்து கொண்டான்.

“அப்படின்னா வரதராஜன் ஒரு ரீல் மன்னன்.”

“சினிமா ஸ்கோப்ல சுத்திருக்கான்.”

“ஏன்?”

“தெரியலையே.”

“நேரா போய் அவன் கழுத்தைப் பிடிக்கலாமா? கல்பா, மீட் யூ லேட்டர்.

“ஷட்டில்காக் எப்போ?”

“சொன்னனே, உங்களுக்கு ஷுட்டிங் கேன்சலாகறப்போ.”

“ஓகே. நானே போன் பண்றேன். என் தம்பியை நாளைக்கு வந்து பார்க்கச் சொல்லட்டுமா?”

“போன் பண்ணிட்டு வரச் சொல்லுங்க. பேர் என்ன?”

"கல்பா சகானி."

"தம்பி பேருங்க."

"கிஷோர் சகானி."

அவளைவிட்டு விலகி காருக்கு வந்து ரிவர்ஸ் எடுத்துத் திருப்பி சாலைக்கு வரும்வரைக் காத்திருந்து கேட்டாள் சுசிலா.

"எதுக்கு அவ தம்பியை அனுப்பறாளாம்?"

"என்னை மாப்பிள்ளை கேட்டு சம்மந்தம் பேச!"

"அலையாதப்பா!"

"அவனுக்கு டிடெக்டிவ் ஆகணும்னு ஆசையாம். நான் டிரைனிங் கொடுக்கணுமாம். போன் செஞ்சா நான் இல்லைன்னு சொல்லிடு."

"ஏன் நான் இருக்கேனே. வரச் சொல்லி நேர்ல பார்க்கறேன். ஆள் அழகா இருந்தா அப்பாய்ண்ட்மெண்ட் போட்டுடறேன்."

"ஏய்! இவ தம்பி நிச்சயமா அழகாத்தான் இருப்பான் வேணாம்."

"இருந்தா என்ன? சைட் அடிக்க சௌகரியம். எங்களுக்கு மட்டும் அந்த உரிமை இல்லையா? நீங்க மட்டும் அவகிட்ட வழிஞ்சி வழிஞ்சி பேசலையா?"

"இண்டஸ்ட்ரில இப்ப என்ன நிலவரம்னு தெரிஞ்சுக்கதான் பேசினேன் சுசி. எவ்வளவு புரட்சிகரமான சிந்தனை எல்லாம் கல்பா வெச்சிருக்கா தெரியுமா?"

"என்ன புரட்சி?"

"ஒரு ஸ்வீட் கடைல கொஞ்சூண்டு சாம்ப்பிள் பார்த்துட்டு தானே ஒரு கிலோ கட்டுப்பான்னு சொல்றோம். ஸ்வீட்டுக்கே அப்படின்னா ஒரு தடவைகூட ஒத்திகை பார்க்காம ஒட்டு மொத்தமா ஒருத்தன்கிட்ட வாழ்க்கையை எப்படி ஒப்படைக்கிறதுன்னு கேக்கறா!"

"ரிடிகுலஸ்!"

"எனக்கென்னவோ ரொம்ப நியாயமாப் படுது சுசி. ஒரு டெஸ்பாட்ச் கிளார்க் வேலைக்கு ஆள் சேர்த்தாக்கூட உனக்கு

ஸ்டாம்ப் ஒட்டத் தெரியுமான்னு கேக்கறோம். ஒரு புருஷனை வேலைக்கு சேர்க்கறப்ப பலதையும் யோசிக்க வேணாமா?

"புருஷனை வேலைக்கு சேர்க்கறதா?"

"கல்பாவோட ஐடியாலஜிபடி புருஷன்றது ஒரு உத்தியோகம்! அவ மட்டும் அப்ளிகேஷன் அடிச்சி பத்து ரூபான்னு வித்தாலும் பலகோடி தேறும். இன்னைக்கு சிங்கிள் டீக்கு லாட்டரி அடிக்கிறவன். சேர்ந்து சியல்லோல போறவன் வரைக்கும் கனவுல கல்பாதான் வர்றதா ஸாட்டிலைட் டி.வி. பேட்டிகள்ல சொல்றான் சுசி."

"நீங்களும் வேணும்னா ஒரு அப்ளிகேஷன் போடுங்க."

"சேச்சே! உத்தியோகம் புருஷ லட்சணம்! அதை மதிக்கிறவன் நான். புருஷன்றதே உத்தியோகம்ன்றதை என்னால ஒத்துக்க முடியாது. வேணும்னா ஒத்திகைக்கு மட்டும் போய்ட்டு வரலாம்."

"உதை. படவா!" என்று அவன் காதைத் திருகினாள் சுசிலா.

* * *

# 7

அவர்கள் வரதராஜன் தங்கியிருந்த அறைக்கு வந்தபோது, அது பூட்டியிருந்தது. வரிசையாக இருந்த நான்கு அறைகளில் அடுத்த அறையில் நான்கு பேர் ரம்மி விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

சுசிலாவைப் பார்த்ததும் பாதி ஆட்டத்தில் எழுந்து, சிகரெட் அணைத்து, லுங்கியை சரி செய்து கொண்டு பொறுப்பாக பதில் சொன்னார்கள்.

"யாரு வரதராஜனா? இப்பதான் அரை மணி நேரம் முன்னாடி இந்த ரூமைக் காலி செஞ்சான்!"

"என்னது? காலி செஞ்சிட்டானா? ஏன்?"

"என்னமோ பரபரன்னு எல்லா சாமானையும் எடுத்து பெட்டில போட்டுக்கிட்டிருந்தான். என்னாப்பான்னு கேட்டேன். வேற ஏரியால ரூம் பார்த்திருக்கிறதா சொன்னான்."

“நான்தான் ஆட்டோ கூட்டிக்கிட்டு வந்தேன்” என்றான் இன்னொருவன்.

“எங்கப் போறேன்னு சொல்லலையா? புது அட்ரஸ் தரலையா?”

“ஏதோ அர்ஜெண்ட்ல இருக்கிறதா சொன்னான் சார். ஞாயித்துக் கிழமை வர்றப்ப தர்றேன்னு சொன்னான்.”

“வரதராஜனை நாங்க உடனடியாப் பார்க்கணுமே.

“உடனடியான்னா கஷ்டம். சாயங்காலம் ஆறு மணிக்குன்னா பார்க்கலாம்.”

“எங்க பார்க்கலாம்?”

“ரீட்டா நர்சிங் ஹோம்ல.”

“அங்க எதுக்கு அவன் வருனான்?”

“எதுக்கு வருவானா? அங்கதான் சார் அவன் நைட் டூட்டி வேலை பார்க்கிறான்.”

“வேலை பார்க்கறானா? என்ன வேலை?”

“ரீட்டா நர்சிங்ஹோம் உள்ளே ஒரு ட்வெண்ட்டிஃபோர் அவர்ஸ் மெடிக்கல் ஷாப் இருக்கு சார். இவன் அங்க ஈவினிங் ஆறு மணிக்குப் போய்ட்டு காலைல ஆறு மணி வரைக்கும் வேலை பார்ப்பான். பில் போடறது. ஆர்டர் போட்டு சரக்கு வாங்கறது. இந்த மாதிரி கிளார்க் வேலை. ரெண்டாயிரம் ரூபா சம்பளம்.”

“அப்போ இவன் சினிமால நடக்கலையா?”

“சினிமாலையா? வரதராஜனா? யார் சொன்னது? ராத்திரி பூரா மெடிக்கல் ஷாப்ல வேலை பார்த்துட்டு பகல் பூரா எங்களோட உக்காந்து கார்ட்ஸ் ஆடுவான் சார். அவனுக்கு கார்ட்ஸ் எப்பவும் நல்லாப் பேசும். அதில வேற முன்னூறு, இரநூறு சம்பாதிச்சிடுவான் சார்.”

“எங்க இருக்கு ரீட்டா நர்சிங்ஹோம்?”

“பெசண்ட் நகர்ல. ராஜாஜி மாளிகை இருக்கு தெரியுமா?”

“தெரியும்.”

“அதுக்குப் பக்கத்தில புதுசா கட்டினது.”

"அவன் ரூம் சாவி யார்கிட்ட ஒப்படைச்சிட்டுப் போனான்?"

"மாசா மாசம் ஓனர் தாம்பரத்திலேர்ந்து வந்து வாடகை வசூல் பண்ணிட்டுப் போவார் சார். வந்தா கொடுத்துட்டு கணக்கு பார்க்கச் சொல்லி எங்ககிட்டதான் ஒப்படைச்சுட்டுப் போனான்."

"கொஞ்சம் அந்த சாவியைத் தர்றிங்களா?"

"ஏன்?"

"அந்த ரூமைத் திறந்து பார்க்கணும்?"

"எதுக்கு?"

"ஏதாச்சும் தடயம் கிடைக்குதான்னு பார்க்கணும்."

"தடயமா?"

"ஆமாம்! வரதராஜன் ஒரு பெரிய குற்றம் செஞ்சிருக்கான்."

"குற்றமா? என்ன குற்றம் சார்?"

"விளக்கிச் சொல்ல இப்ப நேரம் இல்லை. சாவி கொடுங்க."

பரத், சுசிலா வரதராஜன் தங்கியிருந்த அறையின் சாவி வாங்கிக் கொண்டு வந்து திறந்தார்கள். குப்பெற்று வரவேற்றது சிகரெட் நெடி, ஜன்னலைத் திறந்துவிட்டு, லைட்டைப் போட்ட பிறகும்கூட அந்த அறை கொஞ்சம் இருட்டாகத்தான் இருந்தது.

கட்டப்பட்டிருந்த நைலான் கொடிக் காற்றில் வளைந்து போன அலுமினிய ஹேங்கர்கள் இரண்டு காற்றில் தொட்டுக் கொண்டு சத்தம் செய்தன.

காலி செய்தபோது புறக்கணிக்கப்பட்ட ஓரமெல்லாம் கிழிந்த பாய், ஓட்டைகள் நிறைந்த பனியன், பழைய டூத் பிரஷ், அடி கறுத்துப்போன பிளாஸ்டிக் மக் என்று தரையில் கிடந்தன.

பரத் குப்பைத் தொட்டியாக்கப்பட்டிருந்த காலி அட்டைப் பெட்டியை எடுத்துக் கவிழ்த்தான். சிகரெட் பெட்டிகள், துண்டுகள், தீக்குச்சிகள், பல்லவன் பஸ் டிக்கெட்டுகள் சிதறின. சுவரில் விட்டுச் சென்றிருந்த காலண்டரில் எப்போதோ இளமையில் கொடுத்த போஸில் ஸ்ரீதேவி.

"நீங்க சந்தேகப் பட்டது சரியாப் போச்சு. நாம் அவனைக் கூப்புட்டு கேஷுவலா விசாரித்ததில் உஷாராகி அவசர அவசரமா காலி செஞ்சிருக்கான் பாருங்க."

"எத்தனைப் பொய் பாரு! ரீட்டா நர்சிங் ஹோம்ல வேலை பார்த்திருக்கான், ஆனா இத்தனை நாளா விக்னேஷ்கிட்ட சினிமா சான்ஸ் தேடிட்டு இருக்கிறதா சொல்லிருக்கான்."

"அவன் அங்க மெடிக்கல்ஸ்ல இருக்கிறதால அந்த தையல் நரம்பு சுலபமா கிடைக்கும் பரத். இவனுக்கு ஆபரேஷன் செய்யத் தெரியுமோ, இல்லை அதுக்கு யாரையாவது சேர்த்துக்கிட்டானோ?"

"அது அப்புறம் விசாரணைல தெரிஞ்சிட்டுப் போகுது. ஆக இந்த ராஸ்கல் இதில சம்பந்தப்பட்டிருக்கிறது மட்டும் நிச்சயம்."

"இப்ப எங்க போயிருப்பான்?"

"விசாரிப்போம், வா."

அந்த அறையில் பூட்டிக் கொண்டு மறுபடி அடுத்த அறைக்கு வந்தார்கள்.

"ஆட்டோ கூட்டிட்டு வந்ததாச் சொன்னது யாரு?"

"நான் சார். என் பேரு இளங்கோ."

"தெரிஞ்ச ஆட்டோவா அது?"

"இல்லை. ரோட்ல போனதை நிறுத்தினேன்."

"வரதராஜன் ஆட்டோல ஏறினப்ப பக்கத்தில இருந்திங்களா?"

"இருந்தேன் சார்."

"மொத்தம் எத்தனை லக்கேஜ் எடுத்துட்டுப் போனான்?"

"ரெண்டு சூட்கேஸ், ஒரு அட்டைப்பெட்டி, ஒரு ஜமுக்காளத்தில சுத்தின படுக்கை, ஒரு பிளாஸ்டிக் வாளி முழுக்க ஏதேதோ சில்லறை சாமான்கள் இருந்திச்சு சார்."

"எந்த ஏரியாவுக்குப் போகணும்னுகூட ஆட்டோக்காரன் கிட்ட வரதராஜன் சொல்லலையா?"

"திருவான்மியூர்னு சொன்னான் சார்."

"வரதராஜனை உங்களுக்கு எல்லாம் எத்தனை வருஷமா பழக்கம்?"

"வருஷமா? அவன் இங்க வந்து சேர்ந்தே ஆறு மாசம்தான் சார் ஆச்சி. அதுக்கு முன்னாடி எங்க யாருக்கும் அவனைத் தெரியாது."

"ரைட்டு. வரதராஜனைத் தேடி இங்க அடிக்கடி யார் வருவா?"

"அவனைத் தேடி வர்ற ஒரே ஆளு அவன் ஃபிரெண்ட் சாமிநாதன் சார். அவன் வந்துட்டா இவன் பாதி ஆட்டத்தில எந்திரிச்சு அவனோடப் போய்டுவான்."

"யார் அது சாமிநாதன்?"

"அவன் கன்னிமாரா லைப்ரரில வேலை பார்க்கறான் சார். அதுக்கு மேல அவனைப் பத்தி எதுவும் தெரியாது."

"வரதராஜனுக்கு அடிக்கடி போன் வருமா?"

''வரும் சார். எதிர் வீட்ல கம்ப்யூட்ர் என்ஜினியர் விக்னேஷ்னு இருக்கார். அவரோட நல்ல பழக்கம் இவனுக்கு. அவங்க வீட்டு போன்ல இவனை யாராச்சும் கூப்புடுவாங்க. அவங்க அங்கேர்ந்து கைதட்டி கூப்புடுவாங்க. இவன் போய்ப் பேசிட்டு வருவான்."

"போன்ல யார் பேசுவா?"

"அது தெரியாது சார்."

"பேசிட்டு வந்ததும் போன் செஞ்சது யாருன்னு நீங்க யாரும் கேட்டதில்லையா?"

"சில தடவை கேட்டப்ப பர்சனல் மேட்டர்னு சொன்னான். அதனால அதுக்கப்புறம் கேக்கறதில்லை?"

"வரதராஜன் சிகரெட் பிடிப்பானா?"

"அவன் ஊதித் தள்ளின சிகரெட் காசை வெச்சி ஒரு பொட்டிக் கடையே ஆரம்பிக்கலாம் சார்."

"தண்ணி?"

"எப்பவாவது பீர் மட்டும் சாப்பிடுவான்."

"வேற கஞ்சா. அபின். அந்த மாதிரி பழக்கம் உண்டா?"

"எங்களுக்குத் தெரிஞ்சி அதெல்லாம் கிடையாது சார்."

"லேடீஸ் விஷயத்தில எப்படி?"

"சேச்சே! அதெல்லாம் இல்லை. உனக்கென்னப்பா உன் ஆஸ்பத்திரில நிறைய நர்சை சைட் அடிக்கலாம்னு நாங்க கிண்டல் செய்வோம். அவன் சும்மா சிரிச்சுக்குவான்."

"யாரையாச்சும் லவ் செஞ்சானா, தெரியுமா?"

"ஒரே ஒரு தடவை எல்டாம்ஸ் ரோட்ல ஒரு மாருதி எஸ்டீம் வண்டில அவனைப் பார்த்தேன். காரை ஓட்டினது ஒரு அழகான பொண்ணு. அப்புறம் விசாரிச்சா எங்க ஹாஸ்பிடல்ல வேலை பார்க்கற ஒரு லேடி டாக்டர் அவங்க, என்னை ஒரு ஆபீசுக்கு துணைக்கு கூட்டிட்டுப் போனாங்கன்னு சொன்னான்."

"அவன் சொந்த ஊர் எதுன்னு தெரியுமா?"

"வாணியம்பாடின்னு சொல்லிருக்கான். ஆனா அங்க போறதில்லைன்னும் சொல்லிருக்கான்."

"உங்களுக்குத் தெரிஞ்சி அவன் எந்த சினிமாலயும் நடிச்சதும் இல்லை. நடிக்க முயற்சி செஞ்சதும் இல்லை. அப்படித்தானே?"

"அது நிச்சயம் சார்."

"சினிமா சம்பந்தப்பட்ட ஆசாமிங்க யாரும் அவனைத் தேடி வந்து போனதே இல்லை?"

"இல்லை சார்."

பரத் மேற்கொண்டு அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அவர்களைப் பற்றி விசாரிக்க, சுசிலா குறிப்பு எழுதிக் கொண்டாள், புறப்பட்டார்கள்.

"விக்னேஷ் வீட்டுக்குப் போலாமா பரத்?"

"வேணாம், இப்ப அவனைக் குழப்ப வேணாம்."

"முருகேசனுக்கு போன் செஞ்சி எக்மோர், சென்ட்ரல்ல எல்லாம்.

"வேணாம் சுசி. அவன் திருவான்மியூருக்குத்தான் ஆட்டோல போயிருக்கான். வெளியூருக்கு ஓடிப்போற உத்தேசம் இருக்கிறதாத் தெரியலை. இன்னும் கொஞ்சம் தகவல்களோட முருகேசனைப் பார்க்கலாம். நியூட்டனைப் பார்க்கலாம். யாரை வேணும்னாலும் பார்க்கலாம். இப்ப கற்புள்ள இடத்துக்குப் போகலாம்."

"வாட்?"

"கன்னிமாரா லைப்ரரிக்கு!" என்றான் பரத், "கன்னி மாறா."

* * *

# 8

லைப்ரரியில் அறிவுப் பெருக்கம் அமைதியாக நிகழ்ந்து கொண்டிருந்தது. ரகசியமாய் புத்தகத்திற்குள் பேசிக் கொண்ட ஒரு ஜோடி படிப்பதற்காக வந்ததாகத் தெரியவில்லை. இரண்டு பேர் நிம்மதியாகக் கவிழ்ந்து உறங்கிக் கொண்டிருக்க. செருப்புச் சத்தம் கேட்காமல் நடந்து ஒரு பெண் என்சைக்ளோபீடியா எடுத்து, பேப்பர் சத்தம் கேட்காமல் புரட்டினாலும், அவள் வளையல்களின் சத்தம் இன்னொரு கோடியில் எழுதிக் கொண்டிருந்தவனை இம்சை படுத்திக் கொண்டிருந்தது.

''சுவாமிநாதன் மாடில இருப்பாருங்க'' என்றார்கள் மாடியில் கேட்க 'டீ குடிக்கப் போயிருப்பாருங்க' என்றார்கள். வற்புறுத்திக் கேட்டதும் யாரையோ விசாரித்து 'இன்னைக்கு வர்லைங்க' என்றார்கள்.

''அவர் வீட்டு விலாசம் வேணும். அர்ஜெண்ட்டா பார்க்கணுமே."

"என்ன விஷயங்க?"

"கல்யாண விஷயங்க?"

"அவருக்குத்தான் கல்யாணம் ஆயிடுச்சே?"

"அப்படியா?"

"அவர் தங்கச்சி கல்யாண விஷயமாவா?"

"அதெப்படி கரெக்ட்டா சொன்னிங்க?"

"திருவான்மியூர்ல இருக்கு வீடு. இருங்க விலாசம் எழுதித் தர்றேன்."

மாடிப்படிகள் இறங்கியபோது மேலே இரண்டு பெண்கள் ஏறி வர. வந்தவர்கள்.

"ஏண்டி இப்படி அப்பாஸ் அப்பாஸ்னு அலையறே! மீசை கூட கிடையாது அவனுக்கு."

"போடி! ஃபேஷன் தெரியாத மக்கு! யூத் இருக்குடி. ஹீ ஈஸ் ஹேண்ட்சம்யா! என்னைக் கட்டிக்கிறதா சொன்னா படிப்பை பாதில விட்டுடுவேன்ப்பா."

'அடி ஹில்சால! கட்டிக்கப் போற புருஷனுக்கு ஏண்டி இப்படி மனசில துரோகம் பண்றிங்க? கடைசில உனக்கு கிடைக்கப் போறது ஒரு அப்பாசாமியோ இல்லை அய்யா சாமியோ!'

"மக்கள் தொகைல பாதிப் பேர் மாதுரி தீட்சித்தை கனவு காண்றான். நமக்கு மட்டும் அந்த உரிமை இல்லையா? சர்தான் போடி!"

என்று பேசிக் கொண்டு கடந்து போக.

"சுசி எதிர்காலத்தில நம்ம குழந்தைங்க இன்னும் எவ்வளவு அட்வான்சா இருப்பாங்கன்னு நினைச்சா. கவலையா இருக்கு."

"கல்யாணத்துக்கே வழி இல்லை. என்ன இப்போ குழந்தையைப் பத்திப் பேச்சு?"

"குழந்தை பெத்துக்கறதுக்கு கல்யாணம் தேவை இல்லை. சுசி. கட்டில் போதும். எங்கயோ போய்க்கிட்டிருக்கோம். ஒருத்தனை பழி வாங்கணும்னு வெச்சுக்கோ, அவனை கத்தியால குத்தறது, துப்பாக்கியால சுடறது, அவன்மேல் கேஸ் போடறது, ஆள் வைச்சு உதைக்கிறது இதெல்லாம் ஓல்டு ஃபேஷன். அவனோட சந்தோஷமா சேர்ந்து புள்ளை பெத்துக்கறதுதான் புது ஃபேஷன் - அப்படின்னு ஒரு சீனியர் டைரக்டரே சொல்றார்."

"வேற கிரகம், எதிர்கால மனுஷன் இப்படியெல்லாம் சயன்ஸ் ஃபிக்ஷன்னு என்ன கற்பனை செஞ்சாலும் ஒத்துக்குவாங்க. அடுத்த நூற்றாண்டுல ஒரு பெண் இப்படி செயல்படலாம்னு அவர் கற்பனை செஞ்சா தப்பா?"

"சேச்சே. ஒத்துக்கறது ஒத்துக்காதது இல்லை என் பிரச்சனை."

"பின்னே?"

"ஒரு ஆதங்கம்தான்."

"என்ன ஆதங்கம்."

"அந்த அடுத்த நூற்றாண்டு சீக்கிரமா வந்து என்னை யாரும் அப்படி பழி வாங்க மாட்டாங்களான்னுதான் ஆதங்கம்!"

"இதுக்கு ஒரு மில்லி மீட்டருக்கு மேல சிரிக்க முடியாது" என்று கார் கதவைத் திறந்து அமர்ந்த சுசிலா, "இப்ப எங்க, திருவான்மியூரா?" என்றாள்.

"முதல்ல பெஸண்ட் நகர்."

"அங்க என்ன?"

"ரீட்டா நர்சிங் ஹோம்! அங்க என்னன்னு கேக்காதே" என்று ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

* * *

# 9

ரீட்டா நர்சிங் ஹோமில் ஃபினாயில் வாடை இல்லை. நடமாடின மனிதர்களுக்கு எல்லாம் எந்த நோயும் வெளிப்படையாகத் தெரியவில்லை. ஃபவுண்டன், பூந்தொட்டிகள், சர விளக்குகள், வாசனை, கிதார் சங்கீத வழியல், கண்ணாடிக் கதவு திறந்ததுமே நில்!, லிப்ஸ்டிக் போட்ட வரவேற்பாளினிகள். என்று விலாசம் மாறி நட்சத்திர ஹோட்டலுக்கு வந்துவிட்ட சந்தேகத்தை தோற்றுவிப்பதாக இருந்தது.

"யெஸ்" என்றவளை 'பெங்களூர் அழகிப் போட்டியில் நீங்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை?' என்ற கேள்வி கேட்கத் தோன்றியது.

"இங்கு ஒரு மெடிக்கல்ஸ்ல மிஸ்டர் வரதராஜன் வேலை பார்க்கறாரா?" என்று ஒழுங்காகத்தான் கேட்க முடிந்தது.

"ஒன் மினிட்" என்று அவள் கம்ப்யூட்டர் உதவியை நாடிய போதே, அங்கே ஏராள ஊழியர்கள், அதில் வரதராஜன் எந்த வகையிலும் பிரபலம் இல்லை என்பது புரிந்தது.

"யெஸ் சார். கே. வரதராஜன்."

"நாங்க ஃப்ரம் மூன்லைட் டிடெக்டிவ் ஏஜன்சிஸ். ஒரு கேஸ் சம்பந்தமான விசாரணை இது. அவர் இங்க எப்ப டூட்டில சேர்ந்தார்னு தெரியணும். இந்த வருஷத்தில அவர் எப்பல்லாம் லீவு போட்டார்னு தெரியணும். நீங்க விரல் வெச்சிங்கன்னா இதெல்லாம் எங்களுக்குத் தர முடியும்."

"யு மீன். மனசு வச்சிங்கன்னா?"

"நோ ஐ மீன். விரல்! விரலை கம்ப்யூட்டர் கீபோர்ட்ல வெச்சாப் போதுமே.

இன்னும் பெயர் தெரிந்து கொள்ளாத அவள் சிரித்தாள்.

"டெலிபோன் அடிக்குது பாருங்க. எடுங்க."

அவள் டெலிபோன்களைத் திரும்பிப் பார்த்து, "இல்லையே சார். எதுவும் அடிக்கலையே" என்றாள்.

"ஓ! நீங்க சிரிச்சிங்களா? அதான் எனக்கு அப்படி கேட்டுச்சி. உங்க சிரிப்பைக் கேட்டுட்டுதான் அப்படி எழுதியிருக்கணும். வைரமுத்து எப்பயாச்சும் இங்க வந்திருக்காரா?"

"நீங்க ரொம்ப குறும்பா பேசறிங்க சார்."

"தேங்க் யூ. நான் கேட்ட விபரங்கள் கொடுத்தா இன்னொரு தேங்க் யூ சொல்வேன்."

அவள் இந்த முறை ஓசை வராமல் புன்னகைத்துவிட்டு கீபோர்டில் விரல்களை ஒற்றினாள். பிரிண்டரில் இருந்த காகிதங்களைக் கிழித்தபடி, "நீங்க தேடி வந்தவர் இன்னைக்குக் கூட லீவுன்னு தகவல் சொல்லுது சார்" என்றவள்.

"தேங்க் யூ வெரி மச். மெடிக்கல் ஸ்டோர்சுக்கு எப்படிப் போகணும்?"

"பிரிஸ்கிருப்ஷனோட போகணும்!" என்றாள்.

"நம்ம வேவ்தானா நீங்க? கேக்க வேணாமேன்னு நினைச்சேன். சரி கேட்டுடறேன். என்ன பேரு? மிஸ்.

"மிஸஸ் அபர்ணா."

"ஹூ ஈஸ் தட் லக்கிமேன்?"

"பிரிட்டோ ஒரு அன்லக்கிமேன்."

"ஏன்?"

"டைவர்ஸ் ஆய்டுச்சி" என்றவள் தலையைச் சாய்த்து அவனைப் பார்த்து, "உங்க அட்ரஸ் கார்ட் ப்ளீஸ். என்றாள்.

அந்த 'ப்ளீஸ்'க்கு 'தயவுசெய்து' தாண்டி வேறு அர்த்தங்கள் தெரிய.

சுசிலா பரத்தின் கையைப் பற்றி இழுத்து, "பரத் ஃபர்ஸ்ட் ஃப்ளோர்ல இருக்காம் மெடிக்கல்ஸ் வாங்க" என்றாள்.

"கார்டு கேட்டேனே."

"கார்டுதானே? போஸ்ட் ஆபிஸ்ல கிடைக்கும். கம் பரத்!"

பரத் அவளைத் திரும்பிப் பார்த்தபடி லிஃப்ட்டுக்கு நடந்தான்.

அந்த மெடிக்கல்ஸில் பெண்கள் யாருமின்றி ஒரு தாத்தா வார் வைத்த பேண்ட் அணிந்து தொப்பி வைத்திருந்தார்.

அறிமுகத்திற்குப் பிறகு கேட்ட கேள்விகளுக்கு கிடைத்த பதில்களில் இருந்து கிடைத்த தகவல்கள் யாதெனில்.

● அங்கே அந்த ஜெர்மன் கம்பெனியின் புது நரம்பு வாங்கப் படுகிறது.

● போலீஸ் வந்து அதைப் பற்றி விசாரித்துவிட்டுப் போனது.

● எத்தனை நரம்பை ஹாஸ்பிடல் உபயோகத்திற்கு எடுத்தோம், எத்தனை நரம்பு வெளியே யாருக்கு விற்றோம் என்று சரியாகச் சொல்ல முடியாது.

● வரதராஜன் பொறுப்பில்லாதவன். திடீர் திடீரென்று லீவு போட்டு விடுவான். வந்தாலும் வேலையில் அக்கறை இல்லை. எப்போதும் ஏதோ ஒரு சிந்தனை.

● கர்ப்பத்திருட்டு நிகழ்ந்த தினத்தில் வரதராஜன் வழக்கம் போல லீவுதான்.

● அவனைத் தேடி கன்னிமாரா லைப்ரரியில் வேலை பார்க்கும் ஒரு ஆசாமி மட்டும்தான் வருவான்.

● ஆஸ்பத்திரிக்கு அவனுக்கு போன் வருவதில்லை.

● இந்த ஆஸ்பத்திரியில் குழந்தை எதுவும் திருட்டுப் போனதில்லை.

● அந்த தாத்தா தினம்அருகம்புல் சாறு அருந்துவார்.

லிஃப்ட்டில் கீழே இறங்கும் போது.

"சுசி, நீ கோவிச்சுக்கிட்டாலும் பரவால்லை. அந்த அபர்ணாகிட்ட ஒரு விஷயம் விசாரிக்க விட்டுப் போச்சு. அதை மட்டும் விசாரிச்சுடலாம்."

"என்ன, அவ எங்க தங்கியிருக்கான்னு கேக்கணுமா?"

“என்னை கேவலப்படுத்தறியே. அதில்லை. கேஸ் சம்பந்தமாதான். நீ அப்படி ரிசப்ஷன்ல உக்காந்திரு. ஒரே நிமிஷத்தில வந்துடறேன்.”

“எனக்கு ஒண்ணும் கால் வலிக்கலை. நானும் வர்றேன்” மீண்டும் ரிசப்ஷன் மீண்டும் ‘ஹாய்’

“இந்த நர்சிங் ஹோம்ல மொத்தம் எத்தனை லேடி டாக்டர்ஸ் இருக்காங்க?”

“இருபத்தி நாலு பேர்.”

“அதில யாராச்சும் மாருதி எஸ்டீம் வச்சிருக்காங்களா?”

“யா!”

“யாரு?”

“நந்தினி கிரிதர். அவங்க மட்டும்தான் மாருதி எஸ்டீம் வெச்சிருக்காங்க.”

“கிரிதர் யாரு, அப்பா பேரா, புருஷன் பேரா?”

“புருஷன் பேரு. ஏன், அவங்ககிட்டயும் போய் டெலிபோன் மாதிரி சிரிக்கிறீங்கன்னு சொல்ல நினைச்சிங்களா? துப்பாக்கி எடுத்து சுட்டுடுவாங்க. அட்மினிஸ்ரேஷன் இன்சார்ஜ் அவங்க. தொட்டில ஒரு பூ வாடியிருந்தாக்கூட ஒரு மணி நேரம் சத்தம் போடுவாங்க.”

“இப்ப அவங்க எங்க இருப்பாங்க.”

“தர்ட் ஃப்ளோர்ல, ரைட்ல திரும்பினா. என்று அவள் வழி சொல்லிக்கொண்டே பரத் நீட்டின விலாச அட்டையை சத்தமில்லாமல் இழுத்துக் கொண்டாள்.

நந்தினி கிரிதர் ஒரு கண்டிப்பான டீச்சர் மாதிரி தெரிந்தார்.

“மேடம், நீங்க கேள்விப்பட்டிருப்பீங்க. சுதாங்கற பொண்ணோட பார்க்க ஒரிஜினல் வேலை பார்க்கற வரதராஜன் சம்பந்தப் பட்டிருக்கலாம்னு நாங்க சந்தேகப்படறோம். அவனைப் பத்தி உங்க அபிப்பிராயம்?” என்றான் பரத்.

“அவன் அவ்வளவு தூரம் டேன்ஜரஸ் ஆசாமியான்னு எனக்குத் தெரியாது. ஆனா வேலை சின்சியாரிட்டி கம்மி. நிறைய திட்டு வாங்குவான்.”

"தப்பா எடுத்துக்காதீங்க. எப்பயாவது, எதுக்காகவாவது அவனை உங்க கார்ல ஏத்திக்கிட்டு எல்டாம்ஸ் ரோட்ல போயிருக்கிங்களா?"

"யெஸ். ஒரு தடவை போயிருக்கேன். அங்க ஒரு மெடிசன் ஹோல் சேல் டீலர் இருக்கார். அவர் சொன்ன டெஸ்பேட்ச் டீட்டெய்ல்ஸ் இந்தாள் கொடுத்த லிஸ்ட்ல டேலி ஆகலை. அதனாலா கையோட கூட்டிட்டுப் போய் கணக்கு சரி பார்த்தேன்."

"தேங்க் யூ. ஆஸ் எ டாக்டர், இந்த குழந்தைத் திருட்டு எதுக்காக நடந்திருக்கலாம்னு உங்களால யூகிக்க முடியுதா?"

"புரியலை சார். நோ ஐடியா. அந்த வரதராஜன் நிறைய லீவு போடறதால அவனை வேலையை விட்டு அனுப்பலாம்னு இருந்தேன். நீங்க வேற கிரிமினல் கேஸ்ல சந்தேகப்படறிங்க! நிச்சயமா வேலையை விட்டு அனுப்பிடறேன்."

"அதுக்கு அவசியம் இருக்காதுன்னு நினைக்கிறேன்."

"ஏன்?"

"அவனே இனிமே இங்க வரமாட்டான்ங்கிறது என் யூகம்" என்று எழுந்துகொண்டான் பரத்.

* * *

## 10

திருவான்மியூரில் பஸ் ஸ்டாண்ட் எதிர்புறம் மரங்கள் அடர்ந்த அந்த தனிமையான சாலையில் மெதுவாக காரை ஓட்டினாள் சுசீலா.

"நிறுத்து. இதோ இருக்கு நாற்பத்தி ரெண்டு" என்று சிகரெட்டை வெளியே சுண்டினான்.

அது எட்டு வீடுகள் கொண்ட ஃபிளாட்ஸ் ஸ்டூல் போட்டு அமர்ந்திருந்த வாட்ச்மேன் கத்தியால் நறுக்கி நார் உறித்து பனங்கிழங்கு சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

"சாமிநாதன் ஃபிளாட் எதுங்க? அதான். கன்னிமாரா லைப்ரரில வேலை பார்க்கறாரே.

"மூணாவது மாடி. ஆறாம் நம்பர் வீடு. நீங்க.

"அவங்க தங்கச்சி கல்யாண விஷயமா வந்திருக்கோம். லிஃப்ட் இருக்கா?"

"லிஃப்ட் எல்லாம் இல்லை சார்."

மாடிப்படிகளில் ஏறி ஆறாம் நம்பர் வீட்டு முன்னால் நின்றார்கள். வாசலில் ஸ்டிக்கர் கோலம் ஒட்டப்பட்டிருந்தது. கதவில் சரஸ்வதி பூஜைக்கு தெளித்த சந்தனத்தை இன்னும் துடைக்காமல் இருந்தார்கள்.

மணியடித்ததும் உள்ளே துணி சரசரத்து, வளையல்கள் சிணுங்கி, திறந்த பெண் மிடியில் இருந்தாள். கையில் டி.வி.யின் ரிமோட்.

"என்ன வேணும்?"

"நீங்க. சுவாமிநாதனோட சிஸ்டர்தானே?"

"ஆமாம்" என்றாள் கொஞ்சம் ஆர்வத்துடன்.

"சுவாமிநாதன் இல்லையா?"

"வெளில போயிருக்கார்."

"உங்க கல்யாண விஷயமா அவரைப் பார்க்க கன்னிமாரா லைப்ரரி போயிருந்தோம். இன்னைக்கு லீவுன்னாங்க. அதான் அட்ரஸ் விசாரிச்சுக்கிட்டு கார்ல பெட்ரோல் ரொப்பிக்கிட்டு இங்க வந்தோம். என்ன விஷயம்னு விபரமா வாசல்லயே நின்னு சொல்றதில எங்களுக்கு ஒண்ணும் ஆட்சேபனை இல்லை."

"ஸாரி, உள்ள வாங்க" நகர்ந்து வழிவிட்டாள். சோபாவில் கிடந்த பாதி நிலையிலிருந்து வயர்கூடை, பேப்பர் எல்லாம் ஒதுக்கி இடம் பண்ணி, டி.வி.யை அணைத்தாள். "உட்காருங்க. நீங்க எங்கேர்ந்து வர்றீங்க?"

"கன்னிமாரா லைப்ரரிலேர்ந்து.

"அதில்லை. வெளியூரான்னு கேட்டேன்."

"இல்லை. உள்ளூர்தான். உங்களைக் கட்டிக்கப் போற மாப்பிள்ளை எப்படி இருக்கணும்?"

"ஓ நீங்க கல்யாண புரோக்கரா?"

"சேச்சே! ஒரு ஆர்வத்தில கேட்டேன். அண்ணன் எங்க போயிருக்காரு?"

"எங்கன்னு சொல்லலை. அவர் ஃபிரண்டுகூட போயிருக்கார்."

"அந்த ஃபிரண்டு வரதராஜன்தானே. ரீட்டா நர்சிங் ஹோம்ல வேலை பார்க்கறவர்."

"கரெக்ட்டு. உங்களுக்கு அவரைத் தெரியுமா?"

"தெரியும். அவர் ரூமை காலி பண்ணிட்டு சாமான் எல்லாம் ஆட்டோல இங்க கொண்டாந்து இறக்கினாரா? சரியா?"

"நேர்ல பார்த்த மாதிரி சொல்றிங்களே.

"அதான் பார்க்கறேனே அந்த ரூம்ல பெட்டி, படுக்கை, வாளி!" என்று கதவு திறந்திருந்த அறைக்குள் சுட்டிக் காட்டினான்.

"அவர் தங்கியிருந்த ரூம்ல ஏதோ பிரச்சனையாம். உடனே காலி பண்ணச் சொல்லிட்டாங்களாம்."

"வரதராஜன் சொன்னாரா?"

"ஆமாம்."

சுசீலா பரத்தின் காதுக்குள், "நூத்தி ஒண்ணாவது பொய்!" என்றாள்.

"என்ன சொல்றாங்க?"

"குடிக்க தண்ணி கிடைக்குமான்னு கேக்கறாங்க. அவங்க கொஞ்சம் கூச்ச சுபாவம்."

"ஸாரி, உங்களுக்கு எதுவுமே நான் கொடுக்கலை. ஒன் மினிட் லைம்ஜூஸ் போட்டுத் தர்றேன்."

"சொல்லிக் காட்டினா உடனே சமர்த்தாப் புரிஞ்சுக்கறிங்க!"

அவள் சமையலறைக்குள் செல்ல. பரத், "சுசி, வந்ததும் நீ அவகிட்ட பேச்சுக்கொடு! நான் வரதராஜன் பெட்டிகளை கொஞ்சம் ஆராய்ச்சி செய்யணும்" என்றான்.

"எப்படி உள்ளேப் போவிங்க?"

"அரதப் பழசாதான் ஒரு ஐடியா இருக்கு. ஆனா வொர்க் அவுட் ஆகும். ஏன் சுசி, இந்த மாதிரிப் பொண்ணுங்களுக்கு மட்டும் மிடி டிரெஸ்லயும் ஒரு துப்பட்டா வைக்கணும். இல்லை?"

"ஆரம்பிச்சிட்டிங்களா?"

லைம்ஜூஸ் கொண்டு வந்து கொடுத்தாள் அவள் குடித்து விட்டு, "எக்ஸ் க்யூஸ் மீ. நீங்க பேசிட்டிருங்க. நான் டாய்லெட். என்று அந்த அறைக்குள் வந்து லேசாக கதவை மூடிவிட்டு வரதராஜனின் பொருள்களை நெருங்கினான்."

பத்து நிமிடத்தில் வெளியே வந்தான் பரத்.

''உங்க அண்ணனும், வரதராஜனும் இப்ப திரும்பி வருவாங்களாங்க கல்யாணி?"

"வருவாங்க. மத்தியானம் அவருக்கும் சேர்த்து சமைக்கச் சொல்லிட்டுப் போனார். அண்ணன். ஆனா எத்தனை மணிக்கு வர்றேன்னு சொல்லலை. பை தி பை. என் பெயர் கல்யாணி இல்லை, தீபிகா!"

"கல்யாணின்னு சொன்ன மாதிரி இருந்திச்சிங்க தீபிகா!" என்று வாட்ச்சைப் பார்த்த பரத், "மணி பனிரெண்டரை ஆகுது. மத்தியான சாப்பாட்டுக்கு எப்படியும் இன்னும் ஒரு மணி நேரத்தில வந்துடுவாங்க. நாங்க இருந்து பார்த்துட்டேப் போறோம். உங்க வீட்ல போன் இல்லை போலிருக்கே.

"இல்லைங்க. பக்கத்து வீட்ல இருக்குங்க. பண்றிங்களா?"

''வேணாங்க. அறிமுகம் இல்லாதவங்களை தொல்லை செய்யக்கூடாது. நாங்க வெளில போய் பேசிட்டு வந்துடறோம். வா சுசி."

"தப்பா எடுத்துக்காதிங்க. அண்ணனுக்கு தெரிஞ்சவங்கன்னு சொல்றிங்க. கல்யாண விஷயமா வந்திருக்கிறதாச் சொல்றிங்க. உங்களுக்கும் சமைக்கிறேன். இங்கேயே சாப்பிட்டுடறிங்களா?"

''சம்மந்தம் முடியாம கை நனைக்கக் கூடாது. சிரமப் படாதிங்க. நீங்க டி.வி. பாருங்க. மறுபடி வந்து பெல் அடிக்கிறோம். அதுக்குள்ளே முடிஞ்சா. ."

"முடிஞ்சா?"

"இல்லை, வேணாம். விடுங்க!"

"என்ன, சொல்லுங்க."

''முடிஞ்சா, உங்ககிட்ட புடவை இருந்தா புடவை மாத்திக்கங்க."

"எதுக்கு?"

"மாடர்ன் டிரெஸ்ல உங்களைப் பார்த்தாச்சு. புடவைல பார்த்தா கரெக்ட்டா ஒரு ஐடியா கிடைக்கும்."

"ஓ. மை காட்! நீங்க என்னைப் பொண்ணு பார்க்க வந்திங்களா?"

"பரவாயில்லை, இப்பவாவது புரிஞ்சுக்கிட்டிங்க, வந்துடறோம்."

சுசீலாவுடன் படிகளில் இறங்கினான் பரத்.

"ஏன் பரத் பாவம், அந்தப் பொண்ணை இப்படி அலைக்கழிக்கிறிங்க?"

"நிஜமாவே புடவைல பார்த்தாத்தான் ஒரு ஐடியா கிடைக்கும் சுசி."

"நான்சென்ஸ்! வரதராஜன் பெட்டிலேர்ந்து ஏதோ ஒரு தகவல் கிடைச்சிருக்குன்னு புரியுது. இப்ப முருகேசனுக்கு போன் செய்றதுக்காகப் போறோம்னு புரியுது. ரைட்?"

"தீபிகாவுக்கும் உனக்கும் ஆயிரம் வித்தியாசம் சுசி! எப்படி கப்புன்னு புரிஞ்சுக்கறே, பாரு! முதல் வேலை நம்ம காரை இங்க நிறுத்தக்கூடாது. சாப்பாட்டுக்காகத் திரும்பி வர்றவங்க சந்தேகப் பட்டு அப்படியேப் போய்டலாம். காரை அடுத்த தெருவுல நிறுத்திடலாம்."

காரை அடுத்த தெருவில் நிறுத்தினார்கள்.

டெலிபோன் பூத் தேடி நடந்தார்கள்!

"என்ன கிடைச்சது? அதைச் சொல்லுங்க!"

"பத்து நிமிஷத்துல டீப்பா எதையும் பார்க்க முடியலை சுசி. என்னை உறுத்தின ஒரு விஷயம் அவன் பெட்டில இருந்த ஒரு பெரிய இங்கிலீஷ் புக்தான். கன்னிமாரா லைப்ரரிலேர்ந்து எடுக்கப்பட்ட புக். வரதராஜன் அதில மெம்பர் போலருக்கு."

"என்ன புக் அது?"

"FROM PREGNANCY TO DELIVERY! தமிழ்ல சொல்லணும்னா கர்ப்பம் முதல் பிரசவம் வரை! எழுநூறு பக்கம் சுசி. எக்கச்சக்கமான கலர் படங்கள். ஒவ்வொரு மாசமும் கர்ப்பத்தில இருக்கிற குழந்தையோட நிலையை சாப்டர் சாப்டரா சொல்லியிருக்காங்க. இந்த புக் இவன்கிட்ட இருக்கிறதை வெச்சே நம்ம சந்தேகம் அதிகமாகலை?"

“நிச்சயமா! எனக்கு கிளியர்கட்டாவேத் தெரியுது. இந்த வரதராஜனும், சுவாமிநாதனும் சேர்ந்துதான் இதைப் பண்ணி யிருக்கானுங்க. காரணம்தான் என்னன்னு புரியலை.”

“லாக்கப்ல வெச்சி விசாரிச்சா சொல்றானுங்க ராஸ்கல்ஸ்!”

பரத் அந்த பப்ளிக் பூத் சென்று முருகேசனிடம் பேசினான்.

‘‘நான் சொல்ற அட்ரசுக்கு வாங்க சார் ரெண்டு கான்ஸ்டபிள்ஸோட வாங்க. ஜீப்பை அடுத்த தெருல நிறுத்திட்டு வாங்க” என்று வரதராஜனின் விலாசம் சொல்ல ஆரம்பித்தான்.

* * *

# 11

மீண்டும் சுவாமிநாதன் வீட்டிற்கு அவர்கள் வந்தபோது, தீபிகா புடவை மாற்றினதோடல்லாமல் அவசரமாக முகம் கழுவி, பவுடர் போட்டு அலங்காரமாக இருந்தாள். இப்போது கண்களை நேராக சந்திக்க கொஞ்சம் தயங்கினாள்.

“நீங்க யாருக்காக என்னைப் பார்க்க வந்திருக்கிங்கன்னு சொல்லவே இல்லையே. என்றாள் தயக்கமாக.

“மாப்பிள்ளைக்காகத்தான்.”

“அதான். மாப்பிள்ளை யாரு?”

“எனக்கு ஒண்ணுவிட்ட சித்தப்பா பையன். தம்பி முறை வேணும். ரொம்ப அடக்கமான பையன். பிராமணன்ற வார்த்தைக் கூட உச்சரிக்க மாட்டான்.”

அவள் புரியாமல் பார்த்தாள்.

“ஏன்னு கேக்காதிங்க. விட்டுடுங்க. நாங்க ரெண்டு பேர் பார்த்தாப் போதும்னுட்டான். பாடத் தெரியுமா தீபிகா?”

“பரத்! என்றாள் சுசீலா.”

“வரதராஜனும், சுவாமிநாதனும் வர்ற வரைக்கும் பொழுது போகணுமேன்னு பார்த்தேன். கர்நாடிக் பாடணும்னு அவசியம் இல்லை. ‘தொட்டபெட்டா ரோட்டுமேல முட்டை பரோட்டா!’ மாதிரி தத்துவப் பாட்டு பாடினாலும் ஓக்கே.”

"எனக்கு பாட வராது சார்."

"வராதுன்னு கஷ்டப்படுத்தாதீங்க. விட்டுடுங்க. வேற என்ன செய்யலாம்?"

"பரத்! சும்மா பேசிட்டிருந்தால் போதும்!" என்றாள் சுசீலா.

"சரி, ஏங்க தீபிகா, இந்த புதிய பொருளாதாரக் கொள்கையால நம்ம நாட்டு தனிநபர் வருமானம் உயரும்னு நினைக்கிறிங்களா?"

"எனக்கு அரசியல் தெரியாது சார்."

"இது அரசியல் இல்லைங்க, பொருளாதாரம். சரி, அரவிந்தசாமியோட அடுத்த படம் என்னங்க தீபிகா?"

"மின்சாரக் கனவுகள் சார்!"

"இப்படி சுலபமா கேக்கறதை விட்டுட்டு நான்தான் சிக்கல் பண்ணிட்டேன். ஸாரி. ராணிஜெயராஜ் சினிமால நடிப்பாங்களா, மாட்டாங்களா?"

அழைப்பு மணி ஒலித்தது. அவள் போய்த் திறந்தாள். போலீஸ்காரர்களைக் கண்டதும் மிரண்டு போனாள். முருகேசன் அவளைத் தாண்டி உள்ளே வந்தார். கான்ஸ்டபிள்களும்.

"எங்க? எங்க பரத் அவன்?"

"உக்காருங்க சார். எந்த நேரமும் அவங்க வந்துடுவாங்க."

உள்ளே வந்த தீபிகா, "என்ன பேசிக்கிறிங்க நீங்க? என்ன இதெல்லாம்?" என்றாள் கலக்கமாக.

"ஒண்ணுமில்லைங்க தீபிகா. பதறாதிங்க. ஒரு முக்கியமான விஷயமா வரதராஜனையும், உங்க அண்ணனையும் ஒரு இடத்துக்கு கூட்டிட்டுப் போக வேண்டியிருக்கு. அதுக்காகத்தான் இவங்க வந்திருக்காங்க" என்றான் பரத்.

"எங்க கூட்டிட்டுப் போகணும்?"

"லாக்கப்புக்கு!"

"மை காட்! எதுக்கு?"

"கொஞ்சம் பொறுமையா இரும்மா. அவங்க வந்துடட்டும். அப்ப புரியும்" என்றார் முருகேசன்.

சற்று நேரத்தில் மீண்டும் அழைப்பு மணி. தீபிகா எழ. அவளைக் கையமர்த்திவிட்டு, தன் ரிவால்வரை

ஹோல்ஸ்டரிலிருந்து எடுத்துக் கொண்டு கதவுக்குச் சென்று, சடாரென்று திறந்து.

உள்ளே வந்தவன் மார்பில் வைத்து. "இவன்தானே?"

பரத் அவனைத் தாண்டி எட்டிப் பார்த்து, "ஹி மஸ்ட் பி சாமிநாதன். எங்கய்யா உன் தோஸ்த் வரதராஜன்?" என்றான்.

"அண்ணா, எனக்கு எதுவும் புரியலை" என்றாள் தீபிகா.

"நான் சாமிநாதனே இல்லைன்னு சொல்ல முடியாது. கமான், சொல்லு. எங்க வரதராஜன்?" என்றான் பரத் குரலை உயர்த்தி.

"எதுக்காக அவனைத் தேடறிங்க?"

"அது அப்புறம். ரெண்டு பேருமா இங்க சாப்பிட வர்றதா சொல்லிட்டுத்தானே வெளில போனிங்க?"

"ஆமாம்,"

"எங்க அவன்?"

"வந்து. அதை எதுக்கு நான் சொல்லணும்?"

முருகேசன் அருகில் வந்தார். தன் அடையாள அட்டையை எடுத்து அவன் முகத்துக்கு முன்னால் காட்டினார்.

"படிக்கத் தெரியுமா? போலீஸ் இன்ஸ்பெக்டர் நான். கிரைம் பிரான்ஞ்! இன்னொரு தடவை இப்படி இடக்காப் பேசினா முகம் நசுங்கிடும். நான் வாடா, போடான்னு ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடி மரியாதையா சொல்லிட்டா நல்லது!"

"வந்து. நுங்கம்பாக்கத்தில யாரையோ பார்க்கணும்னு சொன்னான். இன்னொரு நாள் சாப்புட வர்றேன், தப்பா நினைச்சுக்காதேன்னு சொல்லிட்டுப் போய்ட்டான்!"

"யார் அந்த 'யாரையோ'?"

"எனக்குத் தெரியாது சார்."

"அப்படியா? நிச்சயமாத் தெரியாது?"

"தெரியாது சார்."

"சரி, எதுக்காக அவன் தங்கியிருக்கிற ரூம்லேர்ந்து சாமான்களை எல்லாம் எடுத்துட்டு வந்து இங்க வச்சான்?" என்றான் பரத்.

"அங்க ஏதோ பிராப்ளம்னு சொன்னான்."

"ஓகோ. இப்ப வெளில போய் என்ன பேசினிங்க ரெண்டு பேரும்?"

"பஸ் ஸ்டாப் வரைக்கும் போனோம். தம்மடிச்சோம். சும்மா சினிமா பத்தி பேசினோம்."

"சினிமா பத்தி பேசினிங்க. ஆனா எதுக்காக அவசரமா ரூமை காலி பண்ணிட்டு வந்தேன்னு நீங்களும் கேக்கலை. அவரும் சொல்லலையாக்கும்?" என்ற பரத் முருகேசனிடம் திரும்பி, "பொய் சொல்றான் சார் இவன்" என்றான்.

முருகேசன் விட்ட அறையில் பொறி கலங்கி தடுமாறி கீழே விழப் போனவன் சமாளித்து நின்றான்.

"சொல்டா நாயே!" அடுத்த குத்து முகத்தின் மீது விழுந்தது.

"இருங்க சார்! அவன் சொல்லிடுவான். எதுக்காகடா நீயும் வரதராஜனும் சேர்ந்து விக்னேஷ் குழந்தையை அப்படி நூதனமா திருடினிங்க?"

"அய்யோ! இது அபாண்டம்! இதுல என்னை சம்பந்த படுத்தாதீங்க!"

"அப்போ அவன் மட்டும்தான் இதை செஞ்சானா?"

"அவன் பாவம் அப்பாவி!"

"அவன் அப்பாவியா, படுபாவியான்னு நாங்க முடிவு பண்ணிக்கிறோம். இப்ப அவன் நுங்கம்பாக்கத்தில யாரைப் பார்க்கப் போயிருக்கான்னு சொல்றியா, இன்னொரு குத்து வேணுமா? தடவிப் பார்க்காதய்யா! அது ரத்தம் தான்!"

"சொல்றேன். அவன் என் ஃபிரண்டு. அவ்வளவுதான். நீங்க என்னன்னமோ சொல்றிங்க! நிஜமா என்ன சொன்னான்னு சொல்லிடறேன்."

"சொல்லு!"

"இந்தக் கர்ப்பத்திருட்டு மேட்டர்ல போலீஸ் என்னை சந்தேகத்தின் பேர்ல கைது செய்வாங்களோன்னு பயமா இருக்குன்னு சொன்னான். அதுவும் எப்போ? வீட்ல சாமான் எல்லாம் இறக்கிட்டு வா, கொஞ்சம் தனியாப் பேசணும்னு கூட்டிட்டுப் போயி சொன்னான். ஏண்டா என் வீட்டுக்கு வந்தேன்னேன். எனக்கு வேற யாரு இருக்கான்னான். நிஜமா நீ

செஞ்சியான்னேன். இல்லைன்னான். அப்புறம் ஏண்டா பயப்படறே? அப்புறம் அவசரமா ரூமைக் காலி பண்றேன்னேன்."

"அதுக்கு அவன் என்ன சொன்னான்?"

"அதுக்கு சரியா பதில் சொல்லலை. எனக்கு சட்ட ஆலோசனை சொல்ல உனக்குத் தெரிஞ்ச நம்பிக்கையான ஆளு யாராச்சும் இருந்தா சொல்லுன்னு கேட்டான். நான்தான் நுங்கம்பாக்கத்தில இருக்கிற என் ஃபிரண்டு வக்கில் திவாகர் அட்ரஸ் கொடுத்தேன். சாப்டுட்டுப் போடான்னா கேக்காம உடனே பஸ்ல புறப்பட்டுட்டான். ரொம்ப டென்ஷன்ல இருந்தான்! அவன் தப்பா எதுவும் செஞ்சிருக்க மாட்டான்றது என் நம்பிக்கை! இதுக்கு மேல எனக்கு எதுவும் தெரியாது சார். நான் இங்க கௌரவமா குடியிருந்துகிட்டு இருக்கேன். என் தங்கச்சிக்கு வேற கல்யாணமாகனும். அநாவசியமா எதிலயும் என்னை இழுத்து விட்டுடாதிங்க சார். ப்ளீஸ். கண்கள் பொங்க, கை கூப்பினான் சாமிநாதன்.

"நுங்கம்பாக்கம் திவாகர் அட்ரஸ் சொல்லு!"

சொன்னான். சுவாமிநாதனையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டார்கள். நுங்கம்பாக்கத்தில் திவாகர் கோர்ட்டுக்குப் போயிருப்பதாகச் சொல்லப்பட்டதால் பெஞ்சில் அமர்ந்து பேப்பர் புரட்டிக் கொண்டிருந்த வரதராஜன் தன் மேல் பல நிழல்கள் படிவதைப் பார்த்து நிமிர்ந்து. மிரண்டான்.

அவன் கழுத்தில் கை வைத்தார் முருகேசன்.

★

"லாக்கப்பில். ஏகப்பட்ட மரியாதைகள் வழங்கிய பின்.

வரதராஜன், "ஆமாம் சார். நான்தான் செஞ்சேன். ஒரு மெடிக்கல் காலேஜ் ஸ்டுடண்ட் என் ஃபிரண்டு. அவனுக்கு அபின் கொடுத்தா எதுவும் செய்வான். அவனை வச்சிக்கிட்டு செஞ்சேன். ஏன் செஞ்சேன்னா. அந்த சுதா கல்யாணத்துக்கு முன்னாடி என் உயிருக்குயிரான நண்பனை ஒரு ரோட்ல அவன் லவ் லெட்டர் கொடுத்ததுக்காக செருப்பால அடிச்சா. அவன் நொறுங்கிப் போய்ட்டான். காதலும் போச்சு, மானமும் போச்சுன்னு நொந்து போய் லெட்டர் எதுவும் எழுதி வைக்காம தூக்கு மாட்டி செத்துப் போய்ட்டான். அந்த சாவுக்குக் காரணம் சுதான்னு எனக்கு மட்டும்தான் தெரியும். எனக்கு சுதாவை பழி வாங்கணும்னு மனசுல வெறி ஏற்பட்டுச்சி. முதல்ல கொலை

செய்யத்தான் நினைச்சேன். ஆனா அவ வாழ்க்கை பூரா துடிக்கனும்னு நினைச்சேன். அதனாலதான் அவ குழந்தையை இந்த மாதிரி திருடணும்னு நினைச்சேன். அதுக்காக விக்னேஷ் வீட்டுக்கு எதிர்ல ரூம் எடுத்துத் தங்கினேன். அவரோட நட்பு ஏற்படுத்திக்கிட்டேன். சினிமா கம்பெனிலேர்ந்து போன் வரும்னு பொய் சொல்லி என் மெடிக்கல் காலேஜ் ஃபிரெண்டை விட்டு செட்டப்பா பேசச் சொல்லி வீட்டுக்குள்ளே சகஜமாப் போக ஆரம்பிச்சேன். சரியான சந்தர்ப்பத்துக்கு காத்துக்கிட்டிருந்தேன். டெலிவரி டயத்துக்கு முன்னாடிதான் இதைச் செய்யணும்னு நினைச்சேன். அந்த சமயம் சரியா விக்னேஷ் டில்லி போனாரு. சுசிலா துணைக்கு இருந்தாங்க. குரலை மாத்திப் பேசி அவங்களை சாமர்த்தியமா வெளியேத்திட்டு நானும் என் ஃபிரண்டும் போனோம். ஆபரேஷனுக்குத் தேவையான எல்லாத்தையும் என்னோட மெடிக்கல்சுல வேற பேஷண்ட்டுக்கு பில் போடற மாதிரி போட்டு முன் கூட்டியே எடுத்து வச்சிக்கிட்டேன். சுதா கதவைத் திறந்ததும் மயக்கப்படுத்திட்டோம். நினைச்சபடி குழந்தையை எடுத்துட்டுப் போய் கல்லு கட்டி ஊருக்கு வெளில ஒரு ஏரில தூக்கிப் போட்டுட்டேன். என்னோட மெடிக்கல்சுக்கு போலீஸ் வந்து விசாரிச்சது. பரத் சுசிலா அவங்க ஆபிசுக்கு கூப்பிட்டு சாமர்த்தியமா விசாரிச்சாங்க. இதிலேர்ந்து என்னை சந்தேகப்பட ஆரம்பிச்சிட்டாங்கன்னு புரிஞ்சது அதனாலதான் அவசரமா ரூமைக் காலி செஞ்சேன். முன் ஜாமின் வாங்க முடியுமான்னு விசாரிக்கத்தான் சுவாமிநான் உதவி தேவைப் பட்டது. வேற எந்த வகைலயும் அவன் இதுல சம்பந்தப்படலை."

என்ற ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தால்.

இந்தக் கதை இந்த இடத்தில் முற்றும் போட்டு விடலாம்.

ஆனால்.

"சத்தியமா சொல்றேன். நான் இதைச் செய்யலை" என்று அத்தனை அடி, உதை வாங்கிய பிறகும் அழிச்சாட்டியமாகச் சொல்கிறானே இந்த வரதராஜன்.

எனில். உண்மை வேறு போலிருக்கிறது!

ஆகவே.

**இந்தக் கதை மீண்டும் தொடரும்.**

# முத்தம், நிழல் முத்தம்

## 1

**லா**க்கப் அறையின் பூட்டு திறக்கப்படும் ஓசை கேட்டு கண்மூடி சுவரில் சாய்ந்து அமர்ந்திருந்த வரதராஜன் ஒரு சிலிர்ப்புடன் நிமிர்ந்து பார்த்தான்.

இன்ஸ்பெக்டர் முருகேசன் உள்ளே வந்தார்.

இன்ஸ்பெக்டரோடு உள்ளே வந்த கான்ஸ்டபிள், "எந்திரிச்சி நில்லுடா நாயே! அய்யா வந்திருக்காரு. என்னடா லுக் விடறே?" என்று லத்தியை ஓங்கினான்.

"பொன்னுசாமி, நீ வெளில இரு."

கான்ஸ்டபிள் ஜென்ம எதிரியைப் பார்ப்பதுபோல வரதராஜனை முறைத்துவிட்டு வெளியேறினான்.

சிரமப்பட்டு எழுந்து நின்ற வரதராஜனின் உடல் லேசாக நடுங்கியது. தன் கட்டுப்பாட்டை மீறி வீங்கின உதடுகளிலிருந்து வழிந்த எச்சிலை சட்டையை உயர்த்தி ஒற்றிக் கொண்டான்.

"என்ன வரதராஜன், வலிக்குதா?" என்றார் முருகேசன்.

பதில் சொல்லாமல் பார்த்தான்.

"எதுக்கு இத்தனை அவஸ்தை? நான்தான் கிளிப்பிள்ளைக்கு சொல்ற மாதிரி தெளிவாச் சொன்னேனே தம்பி. ஒத்துக்கிட்டா தண்டனை குறையும். அதை ஏன் நீ யோசிக்க மாட்டேங்கறே?"

"நான் இதைச் செய்யலைங்க சார், நம்புங்க."

"நம்புற மாதிரி சொன்னா கட்டாயம் நம்புவோம். நீ இந்த ஒரு வரியைத் தவிர வேற எதுவும் பேச மாட்டேங்கறியே கண்ணா."

தன் ஸ்டிக்கால் அவன் தாடையைத் தொட்டு நிமிர்த்தினார். "என்னை நேராப் பாரு! என் கண்ணைப் பார்த்து சொல்லு, நீ எதுவுமே செய்யலை?"

கலங்கின கண்களுடன் பார்த்தான்.

"என் நேரம் சரியில்லை சார்."

"வெளிப்படையாப் பேசுவோமா? ஒரு நிரபராதியை குற்றவாளியாக்கி கேசை முடிக்கணும்னு எனக்கு ஆசை இல்லை. அது தர்மமும் இல்லை. நீ மனசு விட்டுப் பேசினாத்தான் என்னால உனக்கு உதவ முடியுமான்னு யோசிப்பேன்."

"என்னைக் காப்பாத்துங்க சார். எப்படியோ இந்தச் சிக்கல்ல நான் மாட்டிக்கிட்டேன் சார்."

"ரைட்டு. சுதாவை மயக்கப்படுத்தி அவங்களுக்கு அதிரடி ஆபரேஷன் நடத்தி கர்ப்பப் பையிலேர்ந்து குழந்தையைத் திருடின சதி வேலையை நீ செய்யலைன்னு தீர்மானமா வெச்சுக்கலாமா?"

"அதுதான் சார் உண்மை!"

"எது?"

"இதில எனக்கு சம்பந்தம் இல்லையங்கறது."

"சரி. எதுக்காக அவசர அவசரமா உன் ரூமைக் காலி செஞ்சி பொருளை எல்லாம் உன் ஃபிரண்டு வீட்ல கொண்டு போய் வெச்சே? எதுக்காக வக்கீல் ஆபீசுக்கு ஆலோசனைக்காகப் போனே?"

"அந்த சதில பயன்படுத்தப்பட்ட தையல் நரம்பு சம்பந்தமா நான் வேலை பார்க்கற நர்சிங்ஹோமுக்கு ஒரு சப்-இன்ஸ்பெக்டர் வந்து விசாரிச்சார் சர்."

"அதனால என்ன? நீதான் இதில சம்பந்தப் படலையே. உனக்கென்ன வந்திச்சி?"

"பரத் அவரோட ஆபீசுக்கு விக்னேஷ் சார் மூலமா என்னை வரவழைச்சு சாதாரணமா விசாரிக்கிற மாதிரி என்னைப் பத்தி தோண்டித் தோண்டி விசாரிச்சாங்க சார். அவங்க என்னை இதில சந்தேகப்படறாங்கன்னு தோணிச்சு சார்."

"லட்சம் பேர் உன்னை சந்தேகப் படட்டுமே. நீ தப்பு செஞ்சிருந்தாத்தானே உனக்கு பயம் வரணும்? எதுக்கு தலைமறைவாகப் பார்த்தே?"

“ஒரு முட்டாள்தனமான பயம்தான் சார் காரணம். நான் சொன்ன சில பொய்கள் என்னை ரொம்ப பயப்பட வெச்சிடுச்சி.”

“என்ன பொய் சொன்னே நீ?”

“நான் சினிமால சின்னச் சின்ன வேஷங்கள்ல நடிச்சிட்டிருக்கிறவன்னு பரத் விசாரிச்சப்ப சொன்னேன். சம்பவம் நடந்த அன்னைக்கு ஹைதராபாத்ல ஒரு கோர்ட் சீன்ல நடிச்சதா அழகா கற்பனை செஞ்சி பொய் சொன்னேன்.”

“ஏன் அப்படி சொன்னே?.”

“பக்கத்தில விக்னேஷ் சார் இருந்தார். அதனால அப்படிச் சொன்னேன்.”

“அவர் இருந்தா என்ன?”

“அவர்கிட்ட ஆறு மாசமாவே நான் சினிமாக்காரன்னு அப்பப்ப பொருத்தமா பொய் சொல்லிக்கிட்டிருந்தேன். அதனால அதேப் பொய்யைத் தொடர்றதுக்காக மேல மேல பொய் சொல்ல வேண்டியதாப் போச்சு. நான் சொன்னதெல்லாம் பொய்னு பரத் ரொம்ப சுலபமா கண்டுபிடிச்சிடுவார்னு எனக்குத் தெரியும். அதனால என்மேல சந்தேகம் திரும்பும்னு நினைச்சு அவசரமா ரூமைக் காலி செஞ்சேன்.”

“ரைட்டு. விக்னேஷ்கிட்ட ஆறு மாசமா நீ ஒரு சினிமாக் காரன்னு பொய்யா நாடகமாட வேண்டிய அவசியம் என்ன?”

“உண்மையைச் சொன்னா நீங்க நம்பணும் சார்.”

“சொல்லு, பார்க்கலாம்.”

“என் ரூமுக்கு நேர் எதிர்ல அவரோட வீடு சார். எனக்கு அவரோட போனை உபயோகிக்கணும். எனக்கு ஒரு பி.பி. போன் நம்பர் தேவைப்பட்டுச்சி. அதுக்காக அவரோட நட்பு ஏற்படுத்திக்க விரும்பினேன். ‘டெஸ்ட்டர்’ இருக்குமான்னு கேட்டு நானாப் போய் அறிமுகப் படுத்திக்கிட்டேன். அப்போ ஒரு பத்திரிகைல அவர் கட்டுரைப் படிச்சிட்டு இருந்தார்.”

“என்ன கட்டுரை?”

“சினிமால ஏதாவது ஒரு துறைல முன்னுக்கு வரணுங்கற வெறில ஊரைவிட்டு வந்து ஒருவேளை சாப்பாட்டுக்கு வழி இல்லாம கஷ்டப்படற கோடம்பாக்க இளைஞர்கள் பத்தின கட்டுரை சார் அது. .”

"சரி.

"அதைப் படிச்சிட்டு இருந்த அவர் அந்த இளைஞர்கள் மேல் ஒரு அனுதாபத்தோட தன் கருத்தைச் சொன்னார். 'நீங்க என்ன பண்ணிட்டு இருக்கீங்க?'ன்னு என்னை அவர் கேட்டப்ப, 'நர்சிங்ஹோம்ல வேலை பார்க்கறேன்'னு உண்மை சொல்றதை விட, வாய்ப்புக்கு ஏங்கிட்டு இருக்கிற அந்த கோடம்பாக்க இளைஞர் கூட்டத்தில நானும் ஒருத்தன்னு பொய் சொன்னா, அவருக்கு என்மேல ஒரு இரக்கமும், அன்பும் ஏற்படும்னு சைகலாஜிக்கலா யோசிச்சு 'பெரிய நடிகனாகத் துடிக்கிற ஒருத்தன்'னு முதல் பொய்யைச் சொன்னேன் சார்."

"அப்புறம்?"

"நான் நினைச்ச மாதிரியே என் மேல கரிசனத்தோட அவர் பழக ஆரம்பிச்சார். அப்பப்ப அட்வைஸ் சொன்னார். ஆறுதல் சொன்னார். அவர் மனைவிக்கும் அறிமுகப் படுத்தினார். அவங்க ரெண்டு பேருமே எங்கிட்ட ரொம்ப அன்பு காட்டினாங்க. நான் எதிர்பார்த்தபடியே தன் டெலிபோன் நம்பரை நான் முக்கியமானவங்களுக்குக் கொடுக்க அனுமதியும் கொடுத்தார். இவ்வளவு நல்ல மனுஷங்களைப் போய் ஏமாத்தறமேன்னு என் மனசுல குற்ற உணர்ச்சி இருந்தாலும், முதன் முதல்ல சொல்லித் தொலைச்சுட்ட பொய்யை மெய்ன்டெய்ன் பண்றதுக்காக சினிமால முயற்சி பண்றவன் மாதிரியே அப்பப்ப நாடகமாடிட்டு இருந்தேன். போன் சௌகரியத்துக்காக நான் சொன்ன அந்த பொய் என்னை அடுக்கடுக்காக பொய் சொல்ல வச்சிடுச்சி. இவ்வளவு பெரிய பழில என்னைக் கெண்டு வந்து நிறுத்திடுச்சி. சத்தியமா இதுதான் சார் உண்மை. நம்புங்க சார்."

முருகேசன் சற்று நேரம் சிந்தனை வயப்பட்டு லாக்கப்பிற்குள் மெதுவாக உலாத்தினார். நடுநடுவே அவனைப் பார்த்துக் கொண்டார். ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டார். அவனருகில் வந்தார்.

"வாணியம்பாடில உன் அக்கா இருக்கிறதா நீ சொன்னதும், அக்கா குடும்பத்தோட தகராறு ஆகி அஞ்சி வருஷமா பேச்சு வார்த்தை இல்லைன்னு நீ சொன்னதும்கூடப் பொய்யா?"

"அய்யோ! அதெல்லாம் உண்மை சார். அட்ரஸ் தர்றேன் சார். நீங்க தாராளமா விசாரிச்சுக்கலாம். என் நிஜமான உத்தியோகத்தை மறைச்சேன். சினிமால துக்கடா நடிகன்னு சொன்னேன். இது ரெண்டும்தான் நான் செஞ்ச தப்பு."

''உன்னோட சூட்கேஸ்ல 'கர்ப்பம் முதல் பிரசவம் வரை. .'ன்னு புத்தகம் எடுக்கப் பட்டிருக்கே. . அது பத்தி என்ன சொல்றே?''

"சுதா சிஸ்டர் வீட்ல தனியா இருக்கிறவங்க சார். அவங்க வீட்ல பெரியவங்க யாரும் இல்லை. 'ஒரு கர்ப்பஸ்திரி எப்படியெல்லாம் இருக்கணும்னு தெரியலை, பல விஷயங்கள் டாக்டரைக் கேக்க தயக்கமா இருக்கு'ன்னு அவங்க என்கிட்ட சொன்னாங்க. லைப்ரரில நான் சுவாமிநாதன்கிட்ட பேசிட்டிருந்தப்போ இந்தப் புத்தகம் என் கண்ல பட்டது. அதனால அதை எடுத்துட்டு வந்து படிச்சேன். அதிலேர்ந்து சில உபயோகமான தகவல்கள் அவங்களுக்குச் சொன்னேன் சார்."

"எல்லாத்துக்கும் பொருத்தமா பதில் சொல்றே. ஒண்ணு. நீ சொல்றதெல்லாம் உண்மையா இருக்கணும். இல்லை, நீ அதிபுத்திசாலியா இருக்கணும்."

"நான் பெரிய புத்திசாலி எல்லாம் கிடையாது சார். நான் சொன்னதெல்லாம்தான் உண்மை."

"உன்மேல இரக்கம் ஏற்பட்டு நட்பு வளரணுங்கறதுக்காக மனவியல்ரீதியா உடனே யோசிச்சு உன் உத்தியோகத்தையே மாத்தி விக்னேஷ்கிட்ட பொய் சொல்லிருக்கிறே, இது அதி புத்திசாலித்தனமில்லையா?"

"அந்த சமயத்தில எனக்குள்ள ஏதோ சைத்தான்தான் சார் வேலை செஞ்சிருக்கணும். நான் நர்சிங்ஹோம்ல வேலை பார்க்கிறவன்னு உண்மையை சொல்லியிருந்தாலும், அவர் என்னோட நட்போடத்தான் பழகியிருப்பாரு. முதல்ல அப்படிச் சொல்லிட்டு அப்புறம் 'நான் பொய் சொல்லிட்டேன்'னு ஒத்துக்கிட்டா என்னை கேவலமா நினைச்சிடுவாருன்னு பயந்து நாடகத்தைத் தொடர்ந்துட்டேன்."

''ரைட்டு. உங்களுக்குத்தான் நர்சிங்ஹோம்ல போன் இருக்கே. அப்புறம் எதுக்கு இப்படி ஒரு போன் சௌகரியம்?''

''நர்சிங்ஹோம்ல போர்டு வழியாதான் கனெக்ஷன் கொடுப்பாங்க. பிரைவசி இருக்காது சார். மெடிக்கல் ஸ்டோர்ஸ்ல மேனேஜர் இருப்பாரு. சுதந்திரமா பேச முடியாது சார்."

"யார்கிட்டேர்ந்து உங்களுக்கு விக்னேஷ் வீட்டுக்கு போன் வரும்?"

"அது. அது. என் காதலிகிட்டேர்ந்து சார். ஒரு புரொடக்ஷன் கம்பெனிலேர்ந்து பேசற மாதிரி சொல்லச்

சொல்லிருந்தேன். அதே மாதிரி குரலை மாத்தி ஒவ்வொரு தடவையும் வேற வேற புரொடக்ஷன் கம்பெனி பேரைச் சொல்லி என்னைக் கூப்புடுவா. சுதாவோ, விக்னேஷ் சாரோ என்னைக் கூப்புட்டு விடுவாங்க. நானும் போய் ஏதோ சினிமா கம்பெனி ஆளுகிட்டே பேசற மாதிரி கொஞ்ச நேரம் பாவ்லா செஞ்சிட்டு அப்புறம் தனிஞ்ச குரல்ல எங்க மேட்டர் பேசிப்பேன்."

"சம்பவம் நடந்த அன்னைக்கு நீ நர்சிங்ஹோமுக்கு லீவு போட்டிருக்கே. எங்கே இருந்தே அன்னைக்கு? என்ன செஞ்சே?"

"நானும், அவளும் பெங்களூர் போயிருந்தோம் சார்."

"எதுல போனிங்க?"

"அவளோட கார்ல."

"டிரைவர் உண்டா?"

"இல்லை. நானும், அவளும் மாறி மாறி ஓட்டினோம் சார்."

"எங்கே தங்கினிங்க?"

"பெங்களூர்ல ஒரு ஹோட்டல்ல."

"பின்னே பிளாட்ஃபாரத்திலயா தங்குவிங்க? எந்த ஹோட்டல்? அட்ரஸ் சொல்லு!"

"அட்ரஸ் சொல்றது வேஸ்ட் சார்."

"ஏன்?"

"நாங்க வேற பேர்ல ரூம் எடுத்திருந்தோம்."

"ஸோ. பெங்களூர்ல நீ இருந்ததை உன்னால ஆதாரப் பூர்வமா நிரூபிக்க முடியாது. இல்லை?"

"ஆமாம் சார். நிரூபிக்க முடியாது."

"யார் அந்தக் காதலி?"

"தயவுசெஞ்சி அதைக் கேக்காதிங்க சார்."

"ஏன்?"

"ரொம்ப பர்சனல் சார் இது."

"எதுவா இருந்தாலும் இப்ப சொல்லித்தான் ஆகணும் வரதராஜன். அந்தப் பொண்ணு வந்து அன்னைக்கு நாங்க ரெண்டு பேரும்தான் கார்ல போனோம், ஒண்ணா இருந்தோம்னு சாட்சி

சொன்னா உனக்கு அது வலுவான அலிபி! அது புரியலையா உனக்கு?"

"புரியுது சார். ஆனா அவளை நான் காட்டிக் கொடுக்க முடியாத நிலைமை சார். அவளால வந்து எனக்காக சாட்சி சொல்லவும் முடியாது சார்."

"ஏன்?"

"சார்! இது ரொம்ப அந்தரங்கமான விஷயம் சார்."

"பரவால்லை, சொல்லு! இல்லைன்னா நான் எப்படி உன்னை நம்புறது?"

"அவ ரொம்ப பெரிய இடம் சார். ஒரு பெரிய இன்டஸ்ட்ரியலிஸ்ட்டோட மனைவி. எங்க நர்சிங்க ஹோமுக்கு ஒரு பேஷண்ட்டைப் பார்க்க அவ வந்தப்போ எனக்கு அறிமுகம். அப்புறம் எங்களுக்குள்ளே விபரீதமா ஒரு உறவு ஏற்பட்டுப் போச்சு. கொச்சையா சொல்லணும்னா எங்களுக்குள்ளே இருந்தது காதல் இல்லை, கள்ளத் தொடர்பு! அவ புருஷன் ஊர்ல இல்லாத சமயங்களில எனக்கு போன் செய்வா. வெளி இடங்கள்ல மீட் பண்ணுவோம். சினிமா, ஹோட்டல்னு போவோம். 'இது வெறும் உடம்பு சுகத்துக்கான பழக்கம், அதைத் தாண்டி எப்பவும் நீ எந்த உரிமையும் கொண்டாடக் கூடாது'ன்னு நிபந்தனை போட்டுத்தான் என்கூட பழகினா. அவ பண்ணும் ஆடம்பர செலவுகளுக்காகவும், அவளோட கவர்ச்சிக்காகவும் நான் கிறங்கிப் போய் இந்த சபலத் தொடர்புல விழுந்து தொலைச்சுட்டேன். இதை எப்படி சார் நான் நிரூபிக்க முடியும்? அவ பேரையும், விலாசத்தையும் நான் சொல்லத் தயார். ஆனா நீங்க போய் விசாரிச்சா அப்படி யாரையும் தெரியவே தெரியாதுன்னு சாதிப்பா, உங்க மேல மான நஷ்ட ஈடு வழக்குகூடப் போடுவா, ரொம்ப விவகாரமானவ சார்!"

வரதராஜன் சொன்ன கடைசித் தகவல் முருகேசனுக்கு அதிர்ச்சியாகவே இருந்தது.

"வரதராஜன், நீ சொல்ற இத்தனையும் இந்த காக்கிச் சட்டை இல்லாம நாம் நம்பத் தயாரா இருக்கேன். இன்ஸ்பெக்டர் முருகேசனை நீ நம்ப வைக்கணும்னா நீ ஆதாரப் பூர்வமாத்தான் பேசியாகணும்."

"நான் சொன்ன அசிங்கமான விவகாரத்தை எப்படி சார் ஆதாரப் பூர்வமா நிரூபிக்க முடியும்?"

"உன்னைக் கைது செய்தாச்சு வரதராஜன். கோர்ட்ல ஆஜர்படுத்தி ரிமாண்ட்ல வைக்கப் போறோம், கேஸ் ஃபைல் பண்ணப் போறோம். சிச்சுவேஷனல் எவிடென்ஸ் உனக்கெதிரா ஏராளமா இருக்கு. உன்னோட சந்தேகத்துக்குரிய நடவடிக்கை களை எங்க தரப்புல ஆதாரப் பூர்வமா, சாட்சி பூர்வமா கோர்ட்ல வைக்க முடியும். நீ எத்தனை மறுத்தாலும் உனக்கு தண்டனை வாங்கிக் கொடுக்க நீ செஞ்சிருக்கிற குளறுபடிகள் போதும். உன்னை நீ பாதுகாத்துக்கப் போறதில்லையா? நல்லா யோசி, எல்லா உண்மைகளையும் சொல்லியாச்சா. இன்னும் ஏதாச்சும் இதுல மிச்சம் மீதி இருக்கான்னு யோசி!"

"எல்லாம் சொல்லிட்டேன் சார். எதையும் மறைக்கலை."

"அதை சட்டம் ஒத்துக்கணுமே தம்பி!"

"நீங்க கோவிச்சுக்கலைன்னா ஒண்ணு கேக்கறேன்."

"கேளு, எனக்கு இப்ப உன்னைப் பார்த்தா கோபம் வரலை பரிதாபம்தான் வருது."

"முட்டாள்தனமா முதல் பொய் சொல்லிட்டு, அடுக்கடுக்கா பொய்கள் சொன்னது என் தப்பு. நான் சம்பந்தமே இல்லாம மாட்டிக்குவேனோங்கற அறியாமை பயத்தில ரூமைக் காலி செஞ்சது தப்பு. சம்பவம் நடந்தப்ப நான் எங்கே இருந்தேன், என்ன செஞ்சிட்டிருந்தேன்னு நிரூபிக்க முடியாத நிலைமையில இருக்கிறது என் தப்பில்லை, விதி! அந்தப் பொண்ணோட ரகசிய தொடர்பு வெச்சிருக்கிறது நியாயமோ, தர்மமோ. என் அந்தரங்க உரிமை! இதனால எல்லாம் காரணமே இல்லாம கர்ப்பப் பைலேர்ந்து ஒரு குழந்தையைத் திருடினது நான்னு நேரடியா எப்படி சார் நீங்க குற்றம் சுமத்தலாம்? ஒரு நோக்கம் வேணாமா சார்? அப்படி நான் திருடினதா சந்தேகப்படற ஒரு பிஞ்சுக் குழந்தையை நீங்க கோர்ட்ல ஆஜர்படுத்த வேணாமா சார்?"

"ரொம்ப புத்திசாலித்தனமா பேசிட்டதா நினைப்பா உனக்கு? நீயா உண்மையை ஒத்துக்கறியான்னு பார்ப்போம். இல்லாத பட்சத்தில நோக்கம் கற்பிக்கிறது பெரிய விஷயமா? உன்னோட கள்ளக் காதலிக்கு புத்தம் புதுசா ஒரு குழந்தை வேணும். உன்கிட்ட ஏற்பாடு செய்யச் சொன்னா, நீ சுதாவைக் குறி வெச்சே. இந்த சதித்திட்டத்தை மனசுல வெச்சிக்கிட்டுதான் விக்னேஷோட நட்பை ஏற்படுத்திக்கிட்டே. உன்னோட உருப்படாத அரைகுறை டாக்டர் ஒருத்தனைக் கைக்குள்ளேப் போட்டுக்கிட்டே. சுதாவை மயக்கப்படுத்தி ரெண்டு பேருமா

அவசர ஆபரேஷன் செஞ்சு குழந்தையை எடுத்துக்கிட்டுப் போய்ட்டீங்க. அதுக்குப் பயன்படுத்தின உபகரணங்கள் எல்லாம் நீ வேலை பார்க்கற ஆஸ்பத்திரிலேர்ந்து எடுத்துட்டு வந்துட்டே, வேலை முடிஞ்சதும் மறுபடி கொண்டு போய் வெச்சிட்டே. குழந்தையை உன் கள்ளக்காதலிகிட்ட ஒப்படைக்கலாம்னு நினைச்சப்போ, எதிர்பாராத விதமா அது செத்துப்போச்சு. செத்துப்போன குழந்தையை கடல்ல வீசிட்டே. அரைகுறையான ஒரு குழந்தை உடம்பு பொறுக்கி எடுக்கறது பெரிய விஷயமில்லை. வேற குற்றம் செஞ்சி செமத்தியா மாட்டிக்கிட்டு இருக்கிற ஒருத்தனை உனக்கு உதவின டாக்டரா ஆஜர் படுத்தறதும் பெரிய விஷயம் இல்லை அதாவது நிஜமான நிஜத்தை உன் வாய்லேர்ந்து வரவழைக்க முடியாத பட்சத்திலதான் இப்படி எல்லாம் இறங்கறதா உத்தேசம்!"

அதிர்ச்சியுடன் அவரைப் பார்த்தான் வரதராஜன்.

"இப்படியெல்லாம்கூட போலீஸ் பொய் சொல்லுமா?"

"கவலைப்படாதே, அதுக்கெல்லாம் அவசியப்படாது. உன்கிட்டேர்ந்து உண்மையை வரவழைக்கிற முயற்சில இப்படி சமாதானமாப் போறது முதல் படிதான். இன்னும் நிறைய வித்தை இருக்கு."

முருகேசன் லாக்கப் அறையைவிட்டு வேகமாக வெளியேறினார்.

* * *

## 2

**'REAL ESTATES'** என்று வசனம் எழுதின சிகப்பு பனியனுடன் சுசிலா ஃபைல் கேபினெட்டில் ஒவ்வொரு ஃபைலாக எதையோத் தேடிக் கொண்டிருக்க. பரத் உள்ளே வந்து தனது தொப்பியைக் கழற்றி மேஜையில் போட்டான்.

அதில். 'BORN WITH SILVER SPOON' என்று இருந்தது.

"என்ன பார்க்கறே சுசி?"

"நாலு வருஷம் முன்னாடி ஒரு கேஸ்ல நாம இறங்கினோம். பெங்களூர்ல ஒரு கிறுக்குப் பிடிச்ச டாக்டர் தன்னோட

காதலியோட இதயத்தைக் கண்ணால பார்க்கணும்னு அவளை மயக்கப்படுத்தி ஓபன் ஹார்ட் சர்ஜரி பண்ணி, அந்த அரைகுறை ஆபரேஷன்ல அவ செத்துப் போயி.

"ஞாபகமிருக்கு. அந்தப் பொண்ணோட அண்ணன்தான் நம்மகிட்ட வந்தது. தங்கையைக் காணோம்னு முதல்ல போலீஸ்ல புகார் கொடுத்து அவங்களால கண்டுபிடிக்க முடியாம, அப்புறம் நம்மகிட்ட வந்தான். ஒரு மிஸ்ஸிங் கேஸ்ல ஆரம்பிச்சு, மர்டர்னு கண்டுபிடிச்சி, அதுக்கு அந்த சைகோ டாக்டர்தான் காரணம்னு கண்டுபிடிச்சோம். அதுக்கு என்ன?"

"அந்தக் கேஸ்ல என்ன தீர்ப்பாச்சுன்னு நினைவிருக்கா?"

"டாக்டரோட டிஃபன்ஸ் தரப்புல ரொம்ப பிரமாதமா வாதம் செஞ்சாங்க. அந்தாளு மனநிலை தவறினவன்னு நீட்டா எஸ்டாபிளிஷ் செஞ்சாங்க, மனநல வைத்தியம் கொடுக்கச் சொல்லிருந்தார் நீதிபதி. ஏன்இப்ப அதைக் கேக்கறே?"

"அந்த சைகோ டாக்டர் பெங்களூர்லேர்ந்து மெட்ராஸ் வந்திருக்கலாமா? ஏதோ ஒரு நோக்கத்தில கர்ப்பப்பைலேர்ந்து குழந்தையை ஃப்ரெஷ்ஷா எடுத்துப் பார்க்கணும்னு பைத்தியக் காரத்தனமா இறங்கியிருக்கலாமா?"

"நல்ல யூகம்தான். வரதராஜன் குற்றத்தை ஒப்புத்துக்காத நிலமையில இப்படிப் புதுப்புது கோணங்கள்ல இறங்கிதான் ஆக வேண்டியிருக்கு."

"என்னதான் சொல்றானாம் அவன்?"

"அந்தக் கள்ளக் காதல் கதையைத்தான் மறுபடி மறுபடி சொல்றானாம். அந்த அடுத்தவன் பொண்டாட்டி இவனோட அப்பப்ப அப்பாயிண்ட்மெண்ட் ஃபிக்ஸ் பண்ணிக்கிறதுக்காக இவனுக்கு ஒரு காண்டாக்ட் போன் தேவைப்பட்டுது. அந்த வசதிக்காக விக்னேஷ்கிட்ட பழக்கப்படுத்திக்கிட்டு ஒரு இரக்கம் ஏற்படறதுக்காக சினிமால பெரிய லெவலுக்கு வர விரும்பற துக்கடா நடிகன்னு ரீல் விட்டதாச் சொல்றானாம்."

"அவன் சொல்றதை எல்லாம் முருகேசன் நம்பறாரா?"

"குழம்பிப் போய்ட்டாராம். நம்பற மாதிரி சொல்றான். ஆனா அவன் சொல்ற எதையும் அவனால நிரூபிக்க முடியாது. சம்பவம் நடந்த அன்னைக்கு அவளோட கார்ல பெங்களூர் போய் ஹோட்டல்ல தங்கியிருந்தேன்னு சொல்றானாம். ஆனா

வேற பேர்ல ரூம் எடுத்திருந்தோம்னு சொல்றப்ப ஆதாரம் இல்லாமல் போயிடுது."

"அவன் சூட்கேஸ்ல அவனை ஆதாரப்பூர்வமா சம்பந்தப் படுத்தற மாதிரி ஏதாவது.

"நத்திங். முருகேசன் சொல்ற மாதிரி இந்த வரதராஜன் சொல்ற எல்லாமே உண்மையா இருக்கலாம். இல்லைன்னா அப்படி நம்ப வைக்கிற அளவுக்கு ரொம்ப சாமத்தியமா பொய் சொல்ற அதிபுத்திசாலியா இருக்கலாம்."

"அவன் சொன்னதெல்லாம் உண்மையான்னு உறுதிப் படுத்திக்கவே முடியாதா?"

"ரெண்டு விஷயங்களை முருகேசன் உறுதிப்படுத்திக் கிட்டிருக்கார்."

"எதை?"

"வரதராஜன் முதன்முதலா விக்னேஷை சந்திச்சு டெஸ்டர் இருக்கான்னு கேட்டு அறிமுகப் படுத்திக்கிட்டப்போ, விக்னேஷ் சினிமால முன்னேறத் துடிக்கிற இளைஞர்கள் பத்தி ஒரு கட்டுரை படிச்சிட்டிருந்ததா சொல்லிருக்கான். அது உண்மையான்னு விக்னேஷைக் கேட்டப்ப, அவன் ஆமாம்னு ஒத்துக்கிட் டிருக்கான்."

"அப்புறம்?"

"கன்னிமாரா லைப்ரரில அவன் 'கர்ப்பத்திலிருந்து பிரசவம் வரை'ன்னு ஒரு புத்தகம் எடுத்துப் படிச்சது, சுதாவுக்கு அதிலேர்ந்து சில உபயோகமான குறிப்புகள் சொல்றதுக்காகன்னு சொல்லிருக்கான். அந்த மாதிரி ஏதாவது குறிப்பு சொல்லிருக் கானான்னு சுதாகிட்ட கேட்டப்ப அவளும் ஆமாம்னு ஒத்துக்கிட்டிருக்கா."

"வெரிகுட்.

"என்ன வெரிகுட், இந்த இரண்டையும் வெச்சி அவனை சந்தேகத்திலேர்ந்து விலக்கிட முடியுமா? தனக்கொரு கள்ளக் காதலி உண்டுன்னு சொன்ன அந்த மேட்டரை எப்படியாவது உறுதி செஞ்சுக்கணும்னு நினைக்கிறார் முருகேசன்."

"ஏன், அது முடியாதா?"

''அந்தப் பொண்ணு யாருன்னு தகவல் சொல்ல மாட்டேன்னு அடம் பிடிக்கிறானாம்.''

"எதனால?"

"அவ ஒரு பெரிய தொழிலதிபரோட பொண்டாட்டியாம்."

"அதனால என்ன?"

"அவளுக்கும், இவனுக்கும் ரகசியத் தொடர்பு இருக்கறதுக்கு எந்த ஆதாரமும் கிடையாதாம். அவளைப் போய் விசாரிச்சா ஒத்துக்க மாட்டாளாம்."

''அது அப்புறம், பிரச்சனைன்னு வந்தப்புறம் இவன் எல்லாத்தையும் சொல்லித்தானே ஆகணும்?"

"இந்த இடத்திலதான் அவனை முருகேசன் ஸ்ட்ராங்கா சந்தேகப்படறார், எனக்கும் இவளுக்கும் தொடர்புன்னு சொல்றதால என்ன ஆய்டும். அந்தப் பொண்ணுகிட்ட போலீஸ் நேரா போய் 'ஏம்மா உனக்கும், வரதராஜனுக்கும் கள்ளத் தொடர்பு உண்டா'ன்னு நேரா கேட்டுட முடியுமா? வேற ஏதாவது ஒரு வகையில அந்தத் தகவலை உறுதி செஞ்சுக்கிட்டா இவனை சந்தேகத்திலேர்ந்து விலக்கிட்டு வேற கோணத்தில இறங்கிடலாம்னு பார்க்கறார் முருகேசன். இவன் ஒத்துழைக்க மாட்டேங்கறான்."

''அவன் ஒத்துழைக்கலைன்னா என்ன பரத், நாம் முருகேசனுக்கு ஒத்துழைப்பு தரலாமே.

"என்ன சொல்றே?"

"தன் கள்ளக்காதலி பத்தி வரதராஜன் சொன்ன தகவல்களை வெச்சிக்கிட்டு அது யாருன்னு கண்டுபிடிச்சி, வேற ஏதாவது ஒரு வகையில வரதராஜன் சொன்னது உண்மையான்னு தெரிஞ்சுக்கலாமே. ."

"அவளைப் பத்தி எதுவும் விபரமா சொல்லலையே சுசி அவன்."

"ஏன் சொல்லலை? நான் சொல்ற தகவல்களை எல்லாம் வரிசையா எழுதுங்க."

''சொல்லு'' என்றான் பேனா பேப்பர் எடுத்துக் கொண்டு.

“ஒண்ணு, அவள் தொழில் அதிபரோட மனைவி.”

“ரைட்டு.”

“ரெண்டு அவளுக்கு தனியா கார் உண்டு.”

“சரி.”

“அவளுக்கு டிரைவிங் தெரியும்.”

“அப்புறம்?”

“அவளோட சந்திப்பு பத்தி சொன்னப்ப அவ இவன் வேலை பார்க்கற நர்சிங் ஹோமுக்கு யாரையோப் பார்க்க வந்தப்போ அறிமுகமானதா சொல்லிருக்கான் இல்லையா?”

“ஆமாம்.”

“அதை வெச்சு அந்த ஆஸ்பத்திரில கொஞ்சம் விசாரிக்கலாம்.”

“என்னன்னு விசாரிப்பே சுசி?”

“அவன் வேலை பார்த்த மெடிக்கல் ஸ்டோர்சுல ஒரு தாத்தா இவனைப் பத்தி பொறுப்பே இல்லாதவன், அது இதுன்னு திட்டினாரே, அவர்கிட்ட இன்னும் டீட்டெய்லா விசாரிக்கலாமே. .”

“நல்ல ஐடியா சுசி, நீ தாத்தாவை விசாரி. நான் அதே மாதிரி பேத்தியை விசாரிக்கிறேன்.”

“பேத்தியா?”

“ரிசப்ஷன்ல தாத்தாவோட பேத்தி வயசுல ஒரு அபர்ணா அன்னைக்குப் பூத்த ரோஜா மாதிரி சிரிச்ச முகமா இல்லை, அவளையும் கேக்கலாம்னு சொன்னேன்.”

“அசடு வழியாம விசாரிக்கிறதா இருந்தா சரி.”

“அசடா? நானா? நெவர்! புறப்படலாமா? அதுசரி, எஸ்டேட்ல என்ன பயிர் செஞ்சிருக்கே. ஆப்பிளும், செர்ரியுமா?” என்றான்.

“வாட் டு யூ மீன்?” என்றாள் புரியாமல்.

பரத் அவள் பனியன் வாசகத்தைச் சுட்டிக் காட்டியபடி தன் தொப்பியை எடுத்து அணிந்து கொண்டான்.

“எந்த ஜென்மத்திலயும் உருப்படற மாதிரி உத்தேசமே இல்லையா? பெரிய டாட்டா, பிர்லா குடும்பம்னு நினைப்பா உங்களுக்கு? அதென்ன பார்ன் வித் சில்வர் ஸ்பூன்?”

“நோ செகண்ட் பீளிங் அட் ஆல்! வா” என்றான் பரத்.

* * *

# 3

ரீட்டா நர்சிங் ஹோமில் ஃபினாயில் வாடை இல்லை. நடமாடின மனிதர்களுக்கு எல்லாம் எந்த நோயும் வெளிப்படையாகத் தெரியவில்லை. ஃபவுண்டன், பூந்தொட்டிகள், சர விளக்குகள், வாசனை, சிதார் சங்கீத வழியல், கண்ணாடிக் கதவு திறந்ததுமே ஜில்! லிப்ஸ்டிக் போட்ட வரவேற்பாளினிகள். என்று விலாசம் மாறி நட்சத்திர ஹோட்டலுக்கு வந்துவிட்ட சந்தேகத்தைத் தோற்றுவிப்பதாக இருந்தது. (என்ன, எங்கேயோ படித்த மாதிரி இருக்கிறதா? சென்ற பாகத்தில்தான் படித்தீர்கள், அதே நர்சிங் ஹோம் என்பதால் அதே வர்ணனை!)

பரத், சுசிலா உள்ளே வந்தார்கள்.

"சுசி, நீ போய் தாத்தாகிட்ட விசாரி. நான் இங்க விசாரிக்கிறேன்."

"ஏன், நான் இங்க விசாரிக்கிறேன். நீங்க தாத்தாகிட்ட விசாரிக்கலாமே. ."

"ஆப்போசிட் செக்ஸ் சைகாலஜி உனக்குப் புரியலையே, மனசு திறந்து பேசறதுக்கு அதான் சௌகரியம். தாத்தா அன்னைக்கே நான் கேட்ட கேள்விக்கெல்லாம் உன் முகத்தைப் பார்த்துதான் பதில் சொன்னாரு."

"ஆனா அந்த அபர்ணாகிட்ட அன்னைக்கு நீங்க முகத்தைப் பார்த்து கேள்வி கேக்கலை பரத்."

"உண்மைதான். அவ முகத்தில இருந்த பிரகாசத்தில் நான் மனசு தடுமாறிடக் கூடாதுன்னுதான் தலையைத் தொங்க போட்டுகிட்டுப் பேசினேன். சீக்கிரம் போம்மா. அதோ லிஃப்ட் கீழே வருது பாரு."

பரத் சுசிலாவை லிஃப்டில் மேலே அனுப்பிவிட்டு அதன் பிறகு வரவேற்புப் பகுதிக்கு வந்தான்.

அபர்ணா கம்ப்யூட்டர் மானிடரில் விழி பதித்து, கீ போர்டில் விரல் பதித்துக் கொண்டிருந்தாள்.

"ஹலோ. வ்!" என்றான் ராகமாக.

நிமிர்ந்தாள். "ஹய்!. யூ!" என்றாள் உற்சாகமாக, அவனைத் தாண்டி கண்களால் தேடினாள்.

“யாரைத் தேடறிங்க?”

“உங்க மனைவி.”

“அதெப்படி கல்யாணமாகாம மனைவி வருவா.”

“அன்னைக்கு வந்தது.

“என் ஏஜன்சில் வேலை பார்க்கற பொண்ணு, சக தோழின்னு வேணும்னா வெச்சிக்கலாம்.”

“வெச்சிக்கிறதுன்னா.

“மண்டை காயுதுங்க, இப்ப நான் பேச வந்திருக்கிறது. உங்கக்கிட்டதான் அபர்ணா. நேரம் இருக்கா? ஜஸ்ட் அஞ்சி நிமிஷம்.”

“அஞ்சி நிமிஷம் போதுமா?” என்று புன்னகைத்தாள்.

“பேசறதுக்கு அஞ்சு நிமிஷம் போதும்.”

“ஏன், நான் ஆறாவது நிமிஷம் போறடிச்சுடுவேனா?”

“இல்லைங்க அபர்ணா ஆறாவது நிமிஷம் சுசிலா வந்துடுவா. மேல மெடிக்கல் ஸ்டோர்சுக்கு மருந்து ஒண்ணு வாங்கப் போயிருக்கா.”

“அவங்க வந்தா என்ன? சக தோழிதானே?”

“கொஞ்சம் பொஸசிவ் தோழி! நம்ம தோழர் நமக்கு மட்டும்தான் தோழரா இருக்கணும்னு நினைக்கிற டைப்.”

“ஓகே. சொல்லுங்க. என்ன பேசணும்?”

“உங்க ஆஸ்பத்திரிக்குப் பக்கத்தில ஒரு ஐஸ்க்ரீம் பார்லர் பார்த்தேன் அபர்ணா.”

“போலாம்” என்று எழுந்து கொண்டாள்.

கவுன்ட்டரை விட்டு வெளியே வந்தபோதுதான் அவளின் ஸ்கர்ட் முழங்கால் வரை மட்டுமே என்பது தெரிந்தது.

“பிரிட்டோவுக்கு பைத்தியமா?”

“ஏன்?”

“உங்களை டைவர்ஸ் பண்றவன் பைத்தியக்காரனாத்தான் இருக்கணும்.”

“அவன் என்னை டைவர்ஸ் செஞ்சான்னு நான் எப்ப சொன்னேன்? நான்தான் அவனை டைவர்ஸ் செஞ்சேன்.”

"ஓ!"

"என்ன காரணம்னு கேக்க மாட்டிங்களா?"

"அது அநாகரிகம்."

"சொல்லலைன்னா உங்க மனசில என்னை ஒரு கிராதகியா நினைப்பீங்களே.

"நானா கேக்கறதுதான் அநாகரிகம். சொன்னா கேட்டுக்கறதுதான் நாகரிகம். சொல்லுங்க, காதை மூடிக்க மாட்டேன்."

ஐஸ்க்ரீம் பார்லர் வந்து, அமர்ந்து, "எனக்கு ஸ்ட்ராபெர்ரி" என்றாள். "எனக்கு வெனிலா" என்றான் பரத்.

"பரத், கல்யாணம் பண்ணிக்கிறது எதுக்காக?"

"பொம்பளைக்கு அதிலதான் ஜென்மம் சாபல்யமடையுது. ஆம்பளைக்கு வீட்டோட நம்பிக்கையான ஒரு வேலைக்காரியும், சுகம் கொடுக்கற மெஷினும் டூ இன் ஒன்னா கிடைக்குது. அதுக்காகத்தான் கல்யாணம் அப்படீங்கறது பல ஆண்களோட ஆதிக்க ரீதியான கருத்து."

"உங்க கருத்து என்ன?"

"வாழறதுக்கு; வம்சம் பெருகறதுக்கு; மனைவிங்கறவ எனக்கே எனக்குன்னு ஒரு இனிய தோழியா இருக்கணும், அதே மாதிரி புருஷனும் ஒரு இனிய தோழனா இருக்கணும்.

"வெய்ட். வம்ச விருத்தின்னு ஒரு வார்த்தை சொன்னிங்களே.

"ஆமாம்."

"அந்தாளோட எத்தனை ஜென்மம் வாழ்ந்தாலும் அதுக்கு வாய்ப்பே இல்லைங்க. டாக்டர் மாத்ருபூதத்தை பார்க்க வேண்டிய ஆசாமி. ஒரு குழந்தையைக் கூப்புட்டு ஏ, பி, சி, டி சொல்லுமான்னு கேட்டா, அது கடகடன்னு 'இஜட்' வரைக்கும் சொன்னாத்தானே அதைப் பாராட்ட முடியும். வேகமா ஆரம்பிச்சி ஜி, ஹெச் வரைக்கும் வந்து பிரேக் போட்டு மிச்சம் மறந்து போச்சுன்னு சொன்னா எப்படிப் பாராட்டறது? அதாவது.

"போதுங்க, இந்த உதாரணம் சொல்லாமலேயே உங்க நிலமையை என்னால புரிஞ்சுக்க முடிதுங்க அபர்ணா."

"பரத், நீங்க ஒரு நாள் என் ஃபிளாட்டுக்கு வரணும். உங்க கிட்ட மனம் திறந்து நிறைய நான் பேசணும். எப்ப வர்றிங்க?"

"வர்றேன். என்னைக்காச்சும் திடீர்னு பந்த் நடக்கறப்போ வர்றேன். இப்ப எனக்கு நீங்க ஒரு உதவி செய்யணும் அபர்ணா."

"என்ன செய்யணும்?"

"உங்க ஹாஸ்பிடல்ல வேலை பார்த்தானே வரதராஜன் அவனைப் பத்தி எனக்கு அதிகப்படியான தகவல்கள் வேணும்."

"அதான் அவனை அரெஸ்ட் பண்ணிட்டதா பேப்பர்ல படிச்சனே. கர்ப்பப் பைல வழக்கமா எல்லாரும் குழந்தை கொடுப்பாங்க. இவன் அங்கேர்ந்து குழந்தை எடுத்திருக்கான். இவன் எங்க ஹாஸ்பிடல்லதான் வேலை பார்த்தான்னு பேரோட எழுதித் தொலைச்சுட்டதால எங்க நர்சிங் ஹோமுக்கே ஒரு கெட்ட பேரு. பேப்பர்ல நியூஸ் பார்த்ததுமே நிர்வாகத்தில முடிவு செஞ்சி அவனை வேலையை விட்டுத் தூக்கிட்டாங்க."

"உங்களுக்கு அந்த வரதராஜனோட அறிமுகம் இல்லையா?"

"பேப்பர்ல போட்டோவும் போட்ருந்தாங்க. அதைப் பார்த்ததும்தான் இவனான்னு ஆச்சரியமா இருந்திச்சு. கொஞ்சம் பழக்கம் உண்டு அவனோட."

"கொஞ்சம்னா? உங்க ஃபிளாட்டுக்கு வரச்சொல்லி மனம் திறந்து பேசியிருக்கிங்களா?"

"யூ. நாட்டி! எல்லாருக்கும் அழைப்பு விடறதுக்கு நான் என்ன கட்சியா நடத்தறேன்? ஆனா அவன் ஒரு பக்கா சபலிஸ்ட், இதே மாதிரி ஐஸ்க்ரீம் பார்லர்ல உக்காந்து சில தடவை பேசி யிருக்கோம் பரத்."

பரத் பொய்யாக எழுந்து கொள்ள முயன்றான்.

"இல்லைங்க, நான் வர்றேன். இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. வணக்கம்."

"என்னாச்சு?"

"இப்ப நானும் உங்களைக் கூப்புட்டு இங்க உக்காந்து பேசிட்டு இருக்கோம். உங்க கண்களையும், ஐஸ்க்ரீம் கப்பையும், மெனு கார்டையும் தவிர வேற எதையாவது பார்க்கறேனா? அப்ப நானும் வரதராஜன் மாதிரி ஒரு சபலிஸ்ட்டா? இன்சல்ட்டுங்க இது, இன்டைரக்ட் இன்சல்ட்!"

"என்ன சார் வம்பா இருக்கு. உங்களைச் சொல்வேனா? நீங்க ஒரு நைஸ் ஜென்டில்மேன் சார் எவ்வளோ பேரோட எவ்வளவோ பிரச்சனைகளுக்கு நீங்க யதார்த்தமா தீர்வு சொல்றவர் சார், அதனாலதான் என் பிரச்சனைக்கு ஆலோசனை கேக்கறதுக்காக உங்க அட்ரஸ் கேட்டேன். என் வீட்டுக்கும் கூப்புடறேன்."

"அப்படியா?" என்றான் சற்றே ஏமாற்றமாக.

"ஆமாம் சார். நீங்க எங்க, அந்த கழிசடை வரதராஜன் எங்க. யு ஆர் எ பர்ஃபெக்ட் ஜென்டில்மேன் சார். உங்களை நம்பி ஒரு ராத்திரி முழுக்க முந்தா நாள் வயசுக்கு வந்த பொண்ணை தங்க வைக்கலாம் சார்."

"சிலிர்க்குதுங்க. ஒரு யோகி ரேஞ்சுக்கு என்னை உயரத்தில தூக்கி வெச்சிட்டிங்க. அவ்வளவு உயரத்தில வைக்காதிங்க, விழுந்துடுவேன். இப்ப எனக்குத் தேவை அந்த வரதராஜன் பத்தி உங்க கருத்து."

"அதான் சொன்னனே சபலிஸ்ட், கழிசடைன்னு! இன்னும் என்ன சொல்லணும்?"

"விபரமா வேணும். அப்படி ஒரு கருத்துக்கு நீங்க வந்ததுக்கு என்ன காரணம்?"

"இங்க வேலை பார்க்கற நர்சு, லேடி ஸ்டாஃப் யாரா இருந்தாலும் நீங்க போட்டிருக்கிற டாலர் நல்லாருக்கேன்னுதான் ஆரம்பிப்பான்."

"அதனால என்ன?"

"டாலரை கைல எடுத்துப் பார்த்து இதைச் சொல்லுவான். அதனால அவனை தூரத்தில பார்த்தாலே எல்லாரும் செயின் டாலரை உள்ளேப் போட்டுக்குவாங்க."

"சில பேர் உள்ளேப் போட்டுக்கிற செயினை வெளில எடுத்தும் போட்டுக்குவாங்க இல்லையா? பெண் சபலிஸ்ட்டும் நாட்ல உண்டே, ஏம் ஐ ரைட்?"

"எங்கிட்ட இதே விளையாட்டை ஆரம்பிச்சான்."

"செருப்பு பிஞ்சிடும் ராஸ்கல்னு சொன்னிங்களா?"

"அங்கதான் அபர்ணா தனிச்சு நிக்கிறா, உன்கூட பேசணும்னு அவனை இதே ஐஸ்க்ரீம் பார்லருக்கு கூட்டிட்டு வந்தேன். நாகரிகமா நடந்துக்கன்னு அரை மணி நேரத்துக்கு

ஒரு லெக்சர் கொடுத்தேன். அப்படியே பொலபொலன்னு அழுதுட்டான். அதிலேர்ந்து எனக்கு மட்டும் 'குட்மார்னிங் சிஸ்டர்' சொல்லுவான்."

"ஒரு ஐஸ்க்ரீம்லயே ஒரு ஜொள்ளுப் பார்ட்டியைத் திருத்தி யிருக்கிங்களே, பெரிய விஷயம்தான்."

"எங்கிட்ட மட்டும்தான் அந்த மரியாதை. மத்தபடி அவன் மாறவே இல்லைங்க. இப்ப நான் சொல்லப் போறது அவனோட ரொம்ப அந்தரங்கமான விஷயம். அதனால சொல்லலாமா, வேணாமான்னு யோசிக்கிறேன்."

"உங்களோட அந்தரங்கமான விஷயத்தையே எங்கிட்ட சொல்லத் தயாரா இருக்கிங்க. அவனைப் பத்தி தெரிஞ்சதை சொல்றதுக்கென்ன? இப்ப போலீஸ் பிடில இருக்கிற அவனை ஏதாச்சும் ஒரு வழில காப்பாத்த முடியுமாங்கிறதுதான் என் நோக்கம்."

"அப்ப சொல்றேன். ஒரு நாள்.

''ஒரு பெரிய ஃபிளாஷ் பேக்குக்குப் போய்ட்டு வர்றதுக்கு அவகாசம் இல்லை. உங்க வார்த்தைகள்லேயே சொல்லிடுங்களேன்.

"எங்க நர்சிங் ஹோம்ல ஒரு தொழிலதிபர் அட்மிட் ஆனார் சார் அவரை கவனிச்சுக்கறதுக்காக அவர் வைஃபும் கூட இருந்தாங்க. டாக்டர்ஸ் எழுதித் தர்ற மருந்தை வாங்கறதுக்கு அவங்க மெடிக்கல் ஸ்டோர்சுக்கு பல தடவை போனப்போ இவன் இதே டாலர் விளையாட்டுல ஆரம்பிச்சி மேத்தமேட்டிக்ஸ் பண்ணிட்டான்."

"ஒரு ஹாஸ்பிடல்ல பினாயில் வாடைக்கு நடுவுல வேலை பார்க்கறது ஒரு அவஸ்தையான விஷயம்னுதான் இத்தனை நாளும் நினைச்சிட்டு இருந்தேன். உங்க நர்ஸிங் ஹோம்ல எனக்கு ஏதாச்சும் வேலை கிடைக்குமாங்க?"

''உங்களைப் போய் ஜென்டில்மேன்னு சொன்னேன் பாருங்க."

"நானா சொல்லச் சொன்னேன்? ரைட்டு, இந்த மேட்டர் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"கண்ணால பார்த்த ஒரு நர்சு எங்கிட்ட சொன்னா."

"ஆஸ்பத்திரிலயேவா? சரி. நீங்க உங்க தம்பியைக் கூப்பிட்டுக் கண்டிச்சிங்களா?"

"தம்பியா?"

"அவன் உங்களை சிஸ்டர்னு கூப்புட்டா, அவன் உங்களுக்கு பிரதர்தானே? நீங்க அப்படி நினைக்கலையா?"

"அந்த உரிமைலதான் அவனைத் தனியாகக் கூப்புட்டுப் பேசினேன்."

"ஒரு மணி நேரத்துக்கு அட்வைஸ் மழை."

"ஆமாம்."

"நனைஞ்சதுக்கப்பும் என்ன சொன்னான்?"

"ஏதோ அமர காதல் மாதிரி பினாத்தினான். மறக்க முடியலையாம். ஆஸ்பத்திரியை விட்டு டிஸ்சார்ஜ் ஆனப்புறம் பழக்கம் தொடருதாம். 'தப்புப்பா, வில்லங்கமாய்டும்'னு சொன்னேன். 'அவளை நிறுத்த சொல்லு, நான் நிறுத்தறேன்'னு ஆவேசமா பேசினான், 'சரி, எப்படியோ ஒழிஞ்சு போ'ன்னு விட்டுட்டேன். உருப்படாதவங்களை திருத்தறதுதான் எனக்கு வேலையா?"

"அதானே? புதுசா சில உருப்படாதவங்களை உருவாக்கறது தான் நம்ம வேலை."

"வாட் டு யு மீன்?"

"உங்க அழகு மனசளவுலயாவது பல பேரை டாலர் விளையாட்டுல ஆரம்பிச்சு மேத்தமேட்டிக்ஸ் பண்ணத் தூண்டும்னு சொன்னேன்."

தண்ணீர் கிளாசில் இரண்டு விரல்களை நனைத்தெடுத்து பரத் மேல் விளையாட்டாக சிதறடித்து, "பொல்லாத ஆளு நீங்க" என்றாள் கண்களை அவசரமாகச் சிமிட்டியபடி.

"இது இன்னும் தூண்டும்."

"உங்களைத் தூண்டுதா?" என்றாள் கூந்தலை ஒரு பக்கமாக ஒதுக்கி, தலையை சாய்த்துப் பார்த்து.

"சேச்சே. என்கிட்டதான் ரெண்டு கவசம் இருக்குதே."

"என்ன?"

"ஒண்ணு கந்த சஷ்டி கவசம், ரெண்டு சுசிலாவோட காதல் கவசம்."

"கந்த சஷ்டி கவசமா? நான் பாடறேன் சரியான்னு பாருங்க" 'பதினெட்டு வயது, இளமொட்டு மனது, ஏங்குது பாய் போட.

"அய்யோ! அது அநியாயத்துக்கு திருத்தி எழுதப்பட்ட தேவா கவசங்க, நான் சொன்னது ஒரிஜனல்! காக்க, காக்க! கனகவேல் காக்க!"

"என்ன காக்கணும்?"

"உங்ககிட்டேர்ந்து எங்க கற்பைத்தான்."

அவள் சிரித்ததில் அடுத்த மேஜையில் பேச்சு தடைப்பட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

"சுசிலாவை சும்மாத் தோழின்னு பொய்தானே சொன்னிங்க? இப்ப நீங்களே காதல்னு ஒத்துக்கிட்டிங்க, பார்த்திங்களா?"

"சில சமயம் தெரியாத்தனமா உண்மை வந்து விழுந்துடுது."

"ஆமாம், சுசிலாவுக்கு உங்கமேல் கொஞ்சம் நம்பிக்கை குறைச்சலா?"

"சில சமயம் உங்களை மாதிரி பிரைட்டா சந்திக்கிறப்ப எனக்கே என் மேல் நம்பிக்கை குறைச்சல்."

"வரட்டும். சொல்றேன்."

"என்ன?"

"ஐஸ்க்ரீம் பார்லர்ல பரத் என்னைக் கட்டிப் பிடிச்சி முத்தம் கொடுத்தார்னு சொல்றேன்."

"இது குறும்பா இல்லை மறைமுக கோரிக்கையா?"

"குறும்பா இருந்தா?"

"ஒரு வாரத்துக்கு சுசிலா என்னோட மட்டும் மௌன விரதம் இருப்பா. நான் அந்தமான்ல பச்சை குத்தறவ கதை ஒண்ணு சொல்லி சமாதாப்படுத்த வேண்டியிருக்கும்."

"கோரிக்கையா இருந்தா?"

"நான் ஆட்டத்திலேர்ந்து அம்பேல்!"

"ஏன்?"

"எப்பவுமே இந்த அடிமனசு ஆசைக்கும், மேல் மனசு பண்பாடுக்கும் ஒரு வர்க்கப் போராட்டம் நடக்கும். அவற்றை, அடி மனசு என்னதான் கைல கத்தியை வெச்சிக்கிட்டு 'ஆ', 'ஊ'ன்னு ஆர்பாட்டம் செஞ்சாலும், மேல் மனசுதாங்க ஜெயிச்சுத் தொலையுது. வெல், இப்ப எனக்கு வேண்டியது அடுத்த தகவல்."

"என் அட்ரஸா?"

"அது அப்புறம். வரதராஜன் மேத்தமேட்டிக்ஸ் செஞ்ச அந்த தொழிலதிபரோட மனைவி யாரு?"

"அது எதுக்கு உங்களுக்கு?"

"இந்தக் கர்ப்பத்திருட்டு விவகாரத்தில வரதராஜன் ஈடுபடலைன்னு சர்வ நிச்சயமா கிளியர் பண்ணிக்கிறதுக்காக."

"அவளைப் போய் விசாரிக்கப் போறீங்களா?"

"நேரடியாப் போறதா இல்லை."

"பின்னே?"

"அவளுக்கும் வரதராஜனுக்கும் ஒரு ரகசியத் தொடர்பு இருந்தது உண்மைதானான்னு மறைமுகமா அவகிட்ட ஊர்ஜிதம் செய்துக்கணும்."

"அவ பேரு லினோலியா! அந்த தொழிலதிபர் பேரு பூபேஷ் குப்தா."

"அந்த பூபேஷ்குப்தா என்ன பண்றாரு?"

"சும்மா ஹாங்காங், லாஸ் ஏஞ்சல்ஸ்னு பறந்துகிட்டே இருக்காரு. ஏகப்பட்ட பிசினெஸ். போட் கிளப் ரோட்ல வீடு, அட்ரஸ் தரட்டுமா?"

"நிச்சயமா."

"என் அட்ரசும் தரட்டுமா?"

"நிச்சயமா" என்றான் பரத்.

* * *

## 4

படுக்கையில் ஆங்கிலப் பத்திரிகைகள் சிதறியிருந்தன. கூந்தல் பரவி படுத்திருந்தாள் லினோலியா, கார்ட்லெஸ் டெலிபோனைப் பிடித்திருந்தாள். பஞ்சுக் குவியலாய் இருந்த நாய்க்குட்டியைத் தடவியபடி பேசிக் கொண்டிருந்தாள்.

"நீங்க வர்றதுக்கு இன்னும் நாலு நாளாகுமா? நோ பூபேஷ்! ஐ மிஸ் யு ஸோ மச்!"

"டோக்யோ ப்ரோக்ராம் திடீர்னு வந்து விழுந்திடுச்சி டார்லிங். ஜஸ்ட் ஃபோர் டேஸ்!"

"வாங்க, ஒரு செயின் வாங்கி வைக்கிறேன்."

"எதுக்கு?"

"உங்களை கட்டிலோட கட்டிப் போடறதுக்கு!"

"கட்டிப் போட்டுட்டா அசௌகரியமா இருக்குமே லினோ! என்ன பண்ணிட்டிருக்கே!"

"கில்லிங் தி டைம்! உலகமே போர் அடிக்குதுப்பா."

"வெளில எங்கயாவது போக வேண்டியதுதானே? கிளப் ஆக்டிவிடீஸ். சுவ்விம்மிங். ஸ்டீம்பாத். ஷாப்பிங்!"

"புதுசா வாங்கறதுக்கு ஒண்ணுமே இல்லை."

"நெக்ஸ்ட் மன்த் உன்னை சிங்கப்பூர் கூட்டிட்டுப் போறேன்."

"அங்கேயும் என்னை ஹோட்டல்ல விட்டுட்டு நீங்க பிசினெஸ் கான்ஃபெரன்ஸ் போய்டுவீங்க. நான் உக்காந்து டி.வி. பார்த்துக்கிட்டிருக்கணும். இதே போர் வேற நாட்ல! வாட் எல்ஸ்?"

"நோ, நோ! அந்த ட்ரிப்ல நான் பிசினெஸ் கமிட்மெண்ட் எதுவுமே வெச்சிக்கலை. உன்னை மேயறதுதான் ஒரே பிசினஸ், ஓகே?"

"மேயறதா? வெரி பேட் வொகபிலரி பூபேஷ்!"

"ஃபிளைட்டுக்கு டைமாச்சுன்னு வாட்சைக் காட்றான் தயா. வெச்சிடட்டுமா?"

"பை!"

டெலிபோனை வைத்தாள் வினோலியா. அறைக் கதவைத் தட்டிவிட்டு உள்ளே வந்த பணிப்பெண், "மேடம், உங்களைப் பார்க்கறதுக்கு ஒரு பொண்ணு வந்திருக்கு."

"யாரு?"

"உங்களுக்கு அந்தப் பொண்ணைத் தெரியாதாம். ஆனா முக்கியமா அவசரமா ஏதோப் பேசணுமாம். ரிசப்ஷன்ல உக்கார வெச்சிருக்கேன்."

"வர்றேன், போ."

வினோலியா கண்ணாடி முன் சில நிமிடங்களை செலவழித்து தனது ஒப்பனையை செப்பனிட்டுக் கொண்டு கீழே வந்தாள்.

ரிசப்ஷனில் கண்கள் கலங்கி, கர்சீப்பில் மூக்கைத் தடவியபடி உட்கார்ந்திருந்த அபர்ணா எழுந்து கொண்டு, "வணக்கங்க" என்றாள்.

எதிரில் அமர்ந்த விநாடியில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு, "யெஸ், என்ன வேணும்? யாரு நீ?" என்றாள் வினோலியா.

"என் பேரு அபர்ணா. நான் ரீட்டா நர்சிங் ஹோம்ல ரிசப்ஸனிஸ்ட்டா இருக்கேன்."

நர்சிங்க ஹோமின் பெயரைச் சொன்னதும் அவள் முகத்தில் மெல்லிய மாறுதல் ஏற்பட்டது.

"ஓகே. என்ன விஷயம் சொல்லு?"

"நீங்க என்னை மறந்துட்டிங்க. ஆனா எனக்கு உங்களை நல்லா ஞாபகம் இருக்கு. உங்க கணவர் பூபேஷ்குப்தா எங்க நர்சிங் ஹோம்ல ட்ரீட்மெண்ட் எடுத்துக்கிட்டப்போ நீங்களும் பக்கத்தில இருந்து கவனிச்சிக்கிட்டிங்க. கிரெடிட் கார்டு கொடுத்து பில் செட்டில் செஞ்சிங்க."

"யெஸ். உன்னை அங்க பார்த்த ஞாபகம் இல்லை. சரி, அதுக்கென்ன?"

"உங்ககிட்ட தனியா பேசணும், ரொம்ப முக்கியமான விஷயம். இதுல மூணு உயிர்கள் சம்பந்தப்பட்டிருக்கு."

"தனியாத்தான் இருக்கோம். சொல்லு."

"நான் தற்கொலை செஞ்சுக்காம இருக்கணும்னா நீங்கதான் மனசு வைக்கணும் மேடம்."

"வாட் நான்சென்ஸ்?"

"வரதராஜனை நான் உயிருக்குயிரா காதலிக்கிறேன். என்னை அவர் கல்யாணம் செய்துக்கறேன்னு சொன்னதால என்னையேக் கொடுத்துட்டேன். இப்போ நான் கர்ப்பமா இருக்கேன். இந்த நிலைமையில போலீஸ் அவர்மேல அநியாயமா ஒரு பொய் கேஸ் போடப் பேறாங்க, கேசை நிரூபிச்சிட்டாங்கன்னா அவருக்கு மரண தண்டனைக்கூட கிடைக்கிறதுக்கு வாய்ப்பு இருக்கு. அப்படி ஏதாச்சும் தீர்ப்பாயிட்டா நான் தற்கொலை செஞ்சுக்கறதைத் தவிர வேற வழியே இல்லை. அது என் வயத்தில வளர்ற குழந்தையும் சேர்த்துக் கொல்றதா ஆயிடும். அதனாலதான் எங்க மூணு உயிரையும் நீங்க காப்பாத்தணும், ப்ளீஸ் மேடம்.

"எனக்கு எதுவுமே புரியலை. யார் அந்த வரதராஜன்? இந்தச் சிக்கல்ல நான் எதுக்காக தலையிடணும்?"

"உங்க நிலமையில யார் இருந்தாலும் தெரியவே தெரியாதுன்னுதான் சொல்லுவாங்க, இது உங்க மானப் பிரச்சனை ஆனா எங்களுக்கு உயிர்ப் பிரச்சனை, வெளிப்படையாப் பேசுவமா?"

"என்ன சொல்லு" சற்றே நெளிந்தாள் லினோலியா.

"லாக்கப்ல இருக்கிற என் வரதராஜனை சந்திச்சுப் பேசிட்டுதான் வர்றேன். 'என்னை மன்னிச்சிடு அபர்ணா'ன்னு கதறி அழறார் அவர். பூரா உண்மைகளையும் அவர் என்கிட்ட சொல்லிட்டார்."

"என்ன உண்மை?"

“எங்க நர்சிங் ஹோம்ல அவருக்கும் உங்களுக்கும் ஏற்பட்ட அறிமுகமும், பழக்கமும் அதுக்கப்புறமும் தொடர்ந்ததைப் பத்தி விபரமா சொல்லிட்டார்.”

‘‘திஸ் ஈஸ் தி லிமிட்! என்ன நீ என்னென்னவோ கச்சடாவாப் பேசறே? யாரோ வரதராஜன்றே! எனக்குப் பழக்கம்னு சொல்றே! வெளில போ! கூர்க்காவைக் கூப்பிட்டு கழுத்தைப் பிடிச்சி வெளில தள்ளச் சொல்லட்டுமா?”

‘‘நீங்க இப்படியெல்லாம் ஆத்திரப் படுவிங்கன்னு எதிர்பார்த்துதான் நான் வந்தேன். நான் சொல்ல நினைக்கிற தெல்லாம் சொல்லிடறேன். அப்புறம் நீங்க கூர்க்காவை கூப்புட்டாலும் சரி. நான் போலீசைக் கூப்பிட்டாலும் சரி.”

“போலீசா? என்ன. .? எதுக்கு?” அவளை பதட்டம் தொற்றிக் கொண்டது.

“பதறாதீங்க லினோலியா. உங்களோட சக்களத்தி சண்டை போட நான் வரலை. நீங்க செஞ்சது நியாயமா, தர்மமான்னு நீதி புகட்ட நான் வரலை. எல்லார்கிட்டயும் வக்கிரம் இருக்கு ஆனா எல்லாருக்கும் சந்தர்ப்பம் அமையிறதில்லை. உங்க ரெண்டு பேருக்கும் அது அமைஞ்சது. வக்கிரத்துக்கு அடிமையாயிட்டிங்க. வரதராஜன் மேல எனக்கு ஆத்திரம் வந்தாலும், அவரை மன்னிக்க நான் தயாரா இருக்கேன். எனக்கு வேற வழியும் இல்லை. எனக்கு துரோகம் செஞ்சதுக்காக அவர் இப்ப வருத்தப் படறார். இந்த போலீஸ் பிரச்சனைலேர்ந்து வெளில வந்ததும் எனக்கு கண்டிப்பா தாலி கட்டறதா சொல்லிருக்கார். அந்த நம்பிக்கைல அவரைக் காப்பாத்தற முயற்சில நான் இறங்கியிருக்கேன். அது என் கடமை, என்கிட்ட சொன்ன அத்தனை உண்மைகளையும் அவர் இந்தக் கேசை விசாரிக்கிற இன்ஸ்பெக்டர் முருகேசன் கிட்டயும் சொல்லிட்டார். விக்னேஷ் வீட்டு போன் நம்பரை உங்களுக்குக் கொடுக்கறதுக்காக அவர்கிட்ட பொய்யான உத்தியோகம் சொல்லி குளறுபடி பண்ணிட்டார். போலீஸ் தன்னை சந்தேகப்படுமோங்கிற பயத்தில ரூமை அவசரமா காலி செஞ்சது இன்னொரு பெரிய குளறுபடி, இதை எல்லாம் வெச்சி சுதாவோட கர்பத்திலேர்ந்து குழந்தையைத் திருடினது வரதராஜனாத்தான் இருக்கணும்னு சந்தேகத்தின் அடிப்படையில தான் அவரைக் கைது செஞ்சி விசாரிச்சிட்டிருக்காரு அந்த அதிகாரி, சம்பவம் நடந்த அன்னைக்கு நீங்களும், அவரும் கார்ல பெங்களூர் போயி வேற பேர்ல ஹோட்டல்ல ரூம் புக் பண்ணி தங்கியிருந்ததை ஆதாரப்பூர்வமா நிரூபிக்க முடியாது.

அன்னைக்கு வரதராஜன் என்னோடதான் இருந்தாருன்னு நீங்க சொல்லிவிட்டால் போதும். கோர்ட்டுக்கு வர வேணாம். போலீஸ் ஸ்டேஷனுக்கு வர வேண்டாம். ஒரு பொது இடத்தில் அந்த ஒரே ஒரு அதிகாரிகிட்ட மட்டும் சொல்லுங்க. அவரையும் யூனிஃபார்ம் இல்லாம வரச் சொல்றேன். எதுவும் டேப் செய்ய மாட்டாங்க, நீங்க எதிலயும் கையெழுத்துப் போட வேணாம். போலீஸ் வரதராஜன் மேல வெச்சிருக்கிற சந்தேகத்தை விலக்க இது ஒண்ணுதான் வழி. எங்க மூணு உயிரையும் காப்பத்தறதுக்கு இது ஒண்ணுதான் வழி. மாட்டேன்னு தயவு செஞ்சி சொல்லிடாதிங்க.

குரலடைக்க கெஞ்சலாக சொல்லிக் கொண்டிருந்த அபர்ணா. சட்டென்று எழுந்து லினோலியாவின் கால்களில் விழுந்து கண்ணீருடன் "எங்களைக் காப்பாத்துங்க. ப்ளீஸ்" என்று கதறத் துவங்கினாள்.

"ஏய். என்ன இது. எந்திரி! அட. எந்திரி, சொல்றேன்!"

அபர்ணாவின் தோள்களைப் பற்றி எழுப்பினாள். தன் நெற்றியைப் பிடித்துக் கொண்டாள்.

"ஏய், லுக்! அத்தனையும் தெரிஞ்சுக்கிட்டுப் பேசறே! அழிச்சாட்டியமா மறுக்க விரும்பலை. யெஸ்! இட் ஹேப்பண்ட்! நீயே சொன்ன மாதிரி இது வக்கிரத்தோட விளையாட்டுதான். இப்படி விபரீதமாகும்னு நான் நினைக்கலை. வரதராஜனுக்காக நான் இரக்கப் படறேன். ஆனா உதவ முடியாது. யு வாண்ட் மணி? எத்தனை லட்சம் வேணும்? தர்றேன். யார்கிட்யும் வந்து பகிரங்கமா ஒத்துக்க முடியாது. ஐ வில் பி ட்ரேப்ட், பூபேஷ்கிட்ட லைசென்ஸ்ட் பிஸ்டல் இருக்கு, எடுத்து சுட்டுடுவாரு. எனக்கும் இது உயிர் பிரச்சனைதான். நீ அழுததில் நான் உளறிக் கொட்டிட்டேன். கோ அவுட்! மறுபடி வராதே! அடம் பிடிச்சேன்னா நான் வேற ரூட்ல இறங்கிடுவேன். எனக்கு அண்டர்கிரவுண்ட்ல சில பேரைத் தெரியும். கரன்சி பொறுக்கிட்டு எதுவும் செய்வாங்க. புரியுதா? போய் உன் வரதராஜன்கிட்ட சொல்லு, என்னைப் பத்தி மறுபடி போலீஸ்லயோ, கோர்ட்லயோ சொன்னா, கோர்ட் தீர்ப்புக்கு முன்னாடி அதே மரண தண்டனையை பிரைவேட்டா ஏற்பாடு செஞ்சிடுவேன். கெட் அவுட் ஆஃப் மை சைட்!"

உச்சக் குரலில் கத்திவிட்டு எழுந்து உள்ளேப் போனாள் லினோலியா.

★

அந்த வீட்டுக்கு வெளியே சற்றுத் தள்ளி நிறுத்தியிருந்த தன் காரில் உரையாடல்கள் அனைத்தையும் கேட்டபடி, பதிவும் செய்து கொண்டிருந்த பரத் டேப்ரெக்கார்டரை நிறுத்தினான்.

“இது போதும்னு நினைக்கிறேன். இல்லை பரத்?” என்றாள் சுசிலா.

“போதும், வெளில எங்கயும் வந்து சொல்ல மாட்டேன், ஆனா நீ சொன்னதெல்லாம் உண்மைன்னு அப்பட்டமா ஒத்துக்கிட்டாளே. அபர்ணா நாம சொல்லிக் கொடுத்ததை விடவும் ரொம்ப பிரமாதமா ஆக்ட் பண்ணினா இல்லை?”

“கதை, வசனம் உங்களோடதாச்சே. என்றபடி காரின் பின் கதவைத் திறந்து உள்ளே அமர்ந்து கொண்ட அபர்ணா, “இந்தாங்க” என்று கார்ட்லெஸ் மைக்கை சுசிலாவிடம் ஒப்படைத்தாள்.

காரை ஸ்டார்ட் செய்து நகர்த்தின பரத், “ஏங்க அபர்ணா, லினோலியாவுக்கு நெளிநெளியா கூந்தலா?” என்றான்.

“ஆமாம்.”

“சுசி, இப்பதான் என் மனசில இருந்த வேற ஒரு கலக்கம் தீர்ந்துச்சு.”

“என்ன கலக்கம்?”

“வரதராஜனை கைது செய்றதுக்கு முன்னாடி அவனோட ஃபிரண்டு சுவாமிநாதன் வீட்ல அவசர அவசரமா அவனோட பொருள்களை நான் சோதனை போட்டேன் தெரியுமா?”

“ஆமாம், அப்பதான் அந்த பிரசவம் பத்தின புத்தகம் பார்த்திங்க.”

“அதைத் தவிர இன்னொரு தடயமும் கிடைச்சது. சுசி, அதை இன்னைக்கு வரைக்கும் உன்கிட்டயும் மறைச்சுட்டேன். முருகேசன் கிட்டயும் ஒப்படைக்கலை.”

“என்ன அது?”

“ஒரு மணிபர்ஸ் சுசி. அதில போட்டோ செருகற இடத்தில ஒரு சின்ன பாலிதீன் பை வெச்சிருந்தான். அந்தப் பைக்குள்ளே ஒரே ஒரு நீளமான தலைமுடி! நெளிநெளியான தலைமுடி! இப்படி ஒத்தைத் தலைமுடியை பத்திரப்படுத்தி வெச்சிருந்தா என்ன அர்த்தம்?”

"காதல் பைத்தியம்னு அர்த்தம்."

"யார் அந்த காதலின்னு அவனே போலீஸ்ல சொல்லட்டும்னு தான் நான் காத்திருந்தேன். உலகத்திலே தன் கள்ளக் காதலியோட தலைமுடியை பத்திரப்படுத்தி வைக்கிற அதி தீவிர பைத்தியம் இவனாத்தான் இருப்பான்."

"இதை ஏன் பரத் போலீஸ்ல ஒப்படைக்கலை? நீங்க மறைச்சதுக்கு காரணம் புரியலையே. ."

"அந்த ஒத்தை முடியைப் பார்த்தாலே, அந்த முடிக்கு சொந்தக்காரி நெளிநெளியா கூந்தல் உள்ளவன்னு சுலபமா சொல்லிவிட முடியும் சுசி. விக்னேஷ் மனைவி சுதாவுக்கும் நெளிநெளியான கூந்தல்தான். ஞாபகம் இருக்கா?"

"ஆமாம்."

"போலீஸ் குறுக்குத்தனமா யோசிச்சி சுதாவை தர்ம சங்கடமான கேள்விகள் கேட்டுடக் கூடாதேன்னுதான் நான் தயங்கினேன். அபர்ணா, நீங்க செஞ்ச உதவிக்கு ரொம்ப நன்றி."

"அவ ஆனாலும் ரொம்ப அழுத்தம். அலட்சியமாவே பேசிட்டு இருந்தா. நான் காலைப் பிடிச்சிக்கிட்டு அழுததும் பதறிப்போய் ஒத்துக்கிட்டா. இன்னொரு தடவை வேற ஏதாச்சும் காரணத்தோட அவ வீட்டுக்குப் போனாலும். என்னை சுட்டுடுவான்னு நினைக்கிறேன். அப்புறங்க சுசிலா, காலைல ஐஸ்க்ரீம் பார்லர்ல உங்க பரத் திடீர்னு என்னைக் கட்டிப் பிடிச்சி முத்தம் கொடுத்துட்டார்."

"தெரியும். அவர் சொல்லிட்டார்" என்றாள் சுசிலா.

"மை காட்! உங்களுக்கு கோபம் வரல்லையா?"

"இந்த மாதிரி நீங்க பொய் சொல்லப் போறிங்கன்னு முன்கூட்டி சொல்லிட்டார். ரெண்டாவது எனக்கு பரத் பத்தி தெரியும்."

"அவ்வளவு நம்பிக்கை?"

"ம்கூம், அவ்வளவு கோழை! நம்ம ஊர் அரசியல்வாதி மாதிரி எல்லாம் வாய்ச்சவடால்தான். செயல்ல இறங்க மாட்டாரு."

"இது பாராட்டா, இல்லை ஏக்கமா?" என்றாள் அபர்ணா.

"சுசி, கூடிய சீக்கிரம் செயல்வீரன்னு உன்கிட்ட பேர் எடுக்கறேன் பாரு" என்ற பரத் ரீட்டா நர்சிங் ஹோம் வாசலில் காரை நிறுத்த அபர்ணா இறங்கிக் கொண்டாள்.

"மறுபடியும் தேங்ஸ்" என்றான் பரத்.

"நன்றியைக்கூட செயல்ல சொல்ல முடியுமான்னு பாருங்க பரத். வர்றேன்" என்று நடந்தாள் அபர்ணா.

"என்ன சுசி இதுக்கு அர்த்தம்? அவ உன்கிட்ட பொய்யா சொன்ன புகாரை நிஜமாக்கணும்னு அர்த்தமா?"

"பரத், அவ உதவி தேவைப் பட்டுச்சி, பயன்படுத்தினோம். இத்தோட அவளை மறந்துடணும், கொஞ்சம் டேன்ஜரஸ் கர்ள்!"

"அதனால என்ன? அவ எவ்வளவு டேன்ஜரஸா இருந்தாலும் நான்தான் கோழையாச்சே சுசி."

"ரோஷம் வந்துடுச்சாக்கும். இப்ப முருகேசனைப் பார்க்கணும், அதை மறந்துட வேணாம்"

காரை இடதுபக்கம் திருப்பினான் பரத்.

* * *

## 5

லினோலியாவும், அபர்ணாவும் நடத்திய உரையாடல்கள் முழுவதையும் பொறுமையாகக் கேட்டு முடித்த முருகேசன் நிமிர்ந்து அவர்களைப் பார்த்து, "ஸோ?" என்றார்.

"வரதராஜன் அப்பிராணி" என்றான் பரத்.

"அவனை ஆழமா சந்தேகப்பட்டதே நீங்கதான் பரத்."

"உண்மை. பொய்யிலயே தோரணம் கட்டினதால அவனை சந்தேகப்பட்டேன். குற்றத்தை ஒப்புக்க மறுத்து அவன் அடம் பிடிச்சதால அநாவசியமா சந்தேகப் பட்டுட்டேனோன்னு குற்ற உணர்ச்சி ஏற்பட்டுடிச்சி. அதனாலதான் அபர்ணாவை செட்டப் செஞ்சு லினோலியா வாயிலேர்ந்து உண்மையை வரவழைச்சேன்."

"பாவம் பரத், கொஞ்சம் அடிபட்டான் அவன்."

"அவனோட ரகசிய தொடர்புக்கான தண்டனை சார் அது" என்றாள் சுசிலா.

"சார், எனக்கு அவன்கிட்ட ஒரே ஒரு கேள்வி கேக்கணும்."

"இதே ஆபீஸ்ல உள்ள லாக்கப்லதான் வெச்சிருக்கோம். போய்ப் பேசிட்டு வாங்க. என்ன கேக்கப் போறிங்க."

"வந்து சொல்றேன். அவனை ரிலீஸ் பண்ணிடப் போறிங்கதானே?"

"ரெண்டு நாள் கழிச்சுதான்."

"அதென்ன கணக்கு?"

"இந்தக் கேஸ்ல சந்தேகத்தின் பேர்ல இவன் ஒருத்தனை தான் அரெஸ்ட் செஞ்சிருக்கோம். பிடிபட்ட வரதராஜனை போலீஸ் தீவிரமா விசாரித்து வருகிறதுன்னு பத்திரிகைகள்ல எழுதிட்டாங்க. இவன் கிடையாதுன்னு இப்பவே ரிலீஸ் பண்ணிட்டா நிஜமான குற்றவாளியை பிடிக்கிறதா உத்தேசம் இல்லையான்னு மேலிடமும் கேக்கும், பத்திரிகையும் கேக்கும். வேற கோணம் எதிலயாவது இறங்கியாகணும்."

"சுசிலா ஒரு கோணம் சொல்றா!"

"என்ன?"

"பெங்களூர்ல ஒரு மெண்டல் டாக்டர் கேஸ் நாங்க டீல் செஞ்சோம். அதைப் பத்தி சொல்லு சுசி. பாவம், பொழுது போகாம உக்காந்திருக்கார். பெங்களூர் வரைக்கும் போய்ட்டு வரட்டுமே. நான் வரதராஜனைப் பார்த்துட்டு வர்றேன்" பரத் எழுந்து கொண்டான்.

"இந்தக் கிண்டல்தானே வேணாம்கறது. ஏதாச்சும் ஒரு கேஸ்ல ஒரு தடவையாவது இழுத்து விட்டு வேடிக்கை பார்க்கறேன்."

"மீனுக்கே நீச்சலா?"

"நைந்து போய் இருந்த வரதராஜனைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. தடுமாறி எழுந்து கொண்டான் அவன்."

அவன் தோளில் கை வைத்தான் பரத்.

"புத்திசாலித்தனமா நடந்துக்கறதா நினைச்சி நீ சொன்ன பொய்கள் உன்னை கம்பிக்குப் பின்னால கொண்டு வந்து நிறுத்திருச்சி பாரு."

“உண்மைதான் சார். இன்ஸ்பெக்டர் நான் சொல்ற எதையும் நம்ப மாட்டேங்கறார் சார். நீங்களாவது நம்புங்க.”

“நம்புறேன் வரதராஜன் லினோலியாவுக்கும் உனக்கும் உள்ள தொடர்பை வேற விதமா நான் உறுதி செஞ்சி இன்ஸ்பெக்டர் கிட்டயும் சொல்லிட்டேன். அவரும் நம்புவார். தைரியமா இரு.”

‘‘அவ ஒத்துக்கிட்டாளா சார்? கோர்ட்ல சாட்சி சொல்றேன்னு செர்ல்லிட்டாளா சார்?”

“அநேகமா நீயே கோர்ட்டுக்குப் போகமாட்டே. கவலைப் படாதே.”

“அப்படியா சார்? நான் குற்றவாளி இல்லைன்னு புரிஞ்சுக் கிட்டிங்களா சார்? என்னை விட்டுடுவாங்களா சார்?”

“அப்படித்தான் நினைக்கிறேன்.”

‘‘அப்படின்னா நிஜமான குற்றவாளியைக் கண்டு பிடிச்சிட்டாங்களா?”

“இன்னும் இல்லை.”

“அதான பார்த்தேன்.”

“அதில உனக்கென்ன ஏமாற்றம்? நிஜமான குற்றவாளியைக் கண்டுபிடிச்சாதானே உனக்கு நல்லது.”

“என்னை எவ்வளவுதான் மிரட்டினாலும் நான் இந்தக் குற்றத்தை செய்யாததால எனக்கு உள்ளுக்குள்ளே ஒரு தைரியமும், நம்பிக்கையும் இருக்கு சார். வெறும் சூழ்நிலையை வெச்சிக்கிட்டு என்னை இந்தக் குற்றத்தில ஸ்ட்ராங்கா சம்பந்தப்படுத்த முடியாது சார். என் மேல ஜோடிக்கிற கேஸ் கோர்ட்ல நிக்காதுன்னு எனக்கு நல்லாத் தெரியும் சார். ஆனா என்னைக் காட்டுத்தனமா அடிச்சதுக்கும், உதைச்சதுக்கும் அந்த இன்ஸ்பெக்டர் அவமானப் படணும். நிஜ குற்றவாளியை கண்டு பிடிக்க முடியாம திணறணும், பெரிய ஆபிசர்ஸ்கிட்ட திட்டு வாங்கணும்.”

“ரொம்ப வித்தியாசமான ஆசை உனக்கு.”

“பட்டுக்கிட்டிருக்கிற வலி எனக்குத்தான் சார் தெரியும்.”

“ஓகே. ஒண்ணு மட்டும் சொல்லு, லினோலியாவோட தலை முடியைத்தானே பாலிதின் கவர்ல பத்திரப்படுத்தி உன் மணிபர்ஸ்ல நீ வெச்சிருந்தே?”

"அது. அது. தலை குனிந்தான், "ஆமாம் சார்."

"இனிமே இந்த கிறுக்குத்தனம் எல்லாம் விட்டுடு."

"லினோலியாவை நீங்க நேர்ல பார்த்திங்களா?"

"இல்லை."

"பார்த்துட்டு அப்புறம் சொல்லுங்க, என்மேல் கண்டிப்பா பொறாமைப் படுவிங்க. இந்தப் பிரச்சனைக்கப்புறம் அவளை மறுபடி சந்திக்க சாத்தியம் இல்லைன்னு நினைக்கிறப்ப தாங்க முடியலை சார்."

"அபர்ணா சொன்னது சரிதான்."

"என்ன சொன்னா அவ?"

''உருப்படாத கழிசடைன்னு!'' என்று விட்டு வெளியேறினான் பரத்.

* * *

# 6

முருகேசனின் அலுவலகத்திலிருந்து காரில் திரும்பிக் கொண்டிருந்தபோது பரத்திற்கு பேஜரில் செய்தி கொடுத்திருந்தாள் மாதவி.

'CONTACT OUR OFFICE - IMPORTANT'

சுசிலா தன் கைப்பையின் சைடில் செருகி வைத்திருந்த செல்லுலார் போனை எடுத்தாள்.

"இரு சுசி. இப்ப ஆபீசுக்குத்தானே போய்கிட்டிருக்கோம், போனா தெரிஞ்சிட்டுப் போகுது. செல்ஃபோன் பில்லு கண்ணாபின்னான்னு எகிறிக்கிட்டு இருக்கு."

"ஒரு ஐடியா சொல்லட்டுமா?"

"என்ன?"

"யாராச்சும் ஒரு ஜுவல்லரிக்காரங்களை நம்ம ஆபீஸ் செலவுகளை ஸ்பான்சர் செய்யச் சொல்லிட்டு, அவங்க விளம்பரத்தை நம்ம கார் பின்னாடி எழுதி வெச்சிடுவோம்."

*"யாரு பாக்கி இருக்கா? எல்லாரும்தான் தங்கம், வைரம்னு கொடுத்துக்கிட்டு இருக்காங்களே. ."*

*"இன்னைக்கு ஒரு வீட்டுக்கு தேவை தங்கம், வைரத்தைவிட முக்கியமா வேலைக்காரிங்க. வீட்டு வேலைக்கு ஆள் கிடைக்காம பல பேர் கஷ்டப்படறாங்க, கூப்பனை நிரப்பி அனுப்பினா குலுக்கல் முறையில் தேர்வு செஞ்சி பவ்யமான வேலைக்காரி அனுப்பி வைப்போம்னு யாராச்சும் ஸ்கீம் அறிவிச்சா பரவால்லை."*

*"நல்ல ஐடியா, பாட்டி இல்லாத வீட்டுக்கு பாட்டி, தாத்தா இல்லாத வீட்டுக்கு தாத்தா, குழந்தை இல்லாத வீட்டுக்கு குழந்தை. இப்படி அந்த ஸ்கீமை விஸ்தரிக்கலாம்."*

*மூன்லைட் டிடெக்டிவ் ஏஜன்சிக்கு அவர்கள் வந்ததும், கூரியரில் வந்ததாக அந்தக் கவரைக் கொடுத்தாள் மாதவி.*

*"கவர்மேல் மிகமிக அவசரம்னு எழுதியிருந்ததால நான் பிரிச்சிட்டேன் சார்."*

*அந்த நீளக் கவருக்குள்ளிருந்து கடிதத்தை எடுத்தான் பரத்.*

'பரத். சுசிலாவுக்கு எழுதிக் கொண்டது.

வணக்கம்.

விக்னேஷ் சுதா தம்பதியின் குழந்தை வினோதமான முறையில் கர்ப்பப் பையிலிருந்து ஆபரேஷன் மூலம் களவாடப்பட்ட வரதராஜன் என்கிற இளைஞர் கைது செய்யப்பட்டிருப்பதை செய்தித்தாள் மூலம் அறிந்தேன். அவரைக் கைது செய்ய நீங்கள் உதவி செய்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்கள்.

நீங்களும், போலீசும் தப்பு செய்து விட்டீர்கள். வரதராஜன் குற்றவாளி இல்லை. அவன் யாரோ. பாவம், அப்பாவி! சம்பந்தமே இல்லாத ஒருவனை இதில் எப்படி சந்தேகப்பட்டீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. ஒரு நிரபராதி இளைஞன் அநியாயமாக தண்டிக்கப்பட்டு அவன் எதிர்காலம் வீணாகிவிடக் கூடாதென்கிற அக்கறையில்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். குற்றம் நிகழ்ந்த வீட்டிற்கு எதிர் வீட்டில் அவன் குடியிருந்தான் என்பதாலேயே அவன் குற்றவாளியாகி விடுவானா?

அந்த குழந்தைத் திருட்டைச் செய்தது நான்தான். அதைக் குற்றம் என்று நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். என் மனதிற்கு அந்த செயல் நியாயம்தான். ஒரு குற்றவாளிக்கு நான் கொடுத்த வினோதமான தண்டனை அது. என்னைத் தேடும் போலீசிடம் நான் சரணடைவதாக இல்லை.

முடிந்தால் என்னைக் கண்டுபிடித்து கைது செய்யுங்கள் என்று சவால் விடுவதற்காக இதை எழுதவில்லை. ஒரு அப்பாவியை பலிகடாவாக்கி வழக்கை முடித்து விட்டதாக மார்தட்டி மெடல் குத்திக்கொள்ள விரும்பும் போலீசின் செயலுக்கு நீங்களும் உடந்தையாகிவிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளவே எழுதினேன். அந்த அப்பாவியை விடுதலை செய்ய ஆவன செய்யுங்கள். இந்தக் கடிதத்தின் நகல் ஒன்றை போலீசுக்கும் அனுப்ப நினைத்தேன். பிறகு, நீங்கள் மனசாட்சியோடு நடந்து கொள்வீர்கள் என்கிற நம்பிக்கையில் அந்த எண்ணத்தை மாற்றி கொண்டேன்.

முடிப்பதற்கு முன் ஒரு தகவல்; அந்த அழகான ஆண் குழந்தை உயிரோடு, பத்திரமாக இருக்கிறது.

இப்படிக்கு,

பெயர் வேண்டாமே.'

*மீண்டும் ஒரு தடவை நிதானமாகப் படித்துப் பார்த்த பரத், "இந்தக் கையெழுத்துப் பார்த்ததுமே உனக்கு என்ன தோணுது சுசி?" என்றான்.*

*"இது ஒரு பொண்ணோட கையெழுத்து!" என்றாள் சுசிலா.*

*"கரெக்ட். இந்த மனிதாபிமானம், ஒரு நிரபராதி தண்டிக்கப் பட்டுடக் கூடாதுங்கற ஆதங்கம் ஆண் குற்றவாளிக்கு வர்றது அபூர்வம்."*

*"முதல்ல சுதாவுக்கு போன் செய்றேன்."*

*"செஞ்சி?"*

*"அவ குழந்தை உயிரோட இருக்கற தகவலை சொல்லலாம். ரொம்ப சந்தோஷப்படுவா."*

*"சொல்லு. விபரம் சொல்லாதே. பத்து நிமிஷத்தில நேர்ல வர்றதா சொல்லு. விக்னேஷையும் வீட்ல இருக்கச் சொல்லு."*

*"முருகேசனுக்கும் போன் செஞ்சிடலாமா?"*

*"வேணாம்" என்றான்.*

*சுசிலா அவனை ஆச்சரியமாகப் பார்க்க.*

*"காரணமாத்தான் சொல்றேன் சுசி. இப்ப வேணாம்."*

*சுசிலா போன் செய்யத் துவங்க, பரத், அந்தக் கவர் 'புல்லட் கூரியர்ஸ்' நிறுவனத்தின் கே.கே. நகர் கிளையிலிருந்து*

அனுப்பப்பட்டுள்ளதை ரசீது நகலில் கவனித்தான். அதில் அனுப்புகிறவர் விலாசப் பகுதியில் 'Nil' என்று எழுதப்பட்டிருந்தது.

பரத் மற்றொரு போனில் தொடர்பு கொண்டு.

"புல்லட் கூரியர் சர்வீஸ்."

"மூன்லைட் டிடெக்டிவ் ஏஜென்சீஸ்லேர்ந்து பேசறேன்."

"சொல்லுங்க சார்."

"எங்களுக்கு உங்க பிரான்ச்லேர்ந்து இன்னைக்கு ஒரு கவர் டெலிவரி ஆகியிருக்கு மேடம். அதில அனுப்பினவர் விலாசத்தில் 'Nil'ன்னு குறிப்பிட்டிருக்கீங்க."

"ஆமாம் சார். எங்க ஆபீஸ் லெட்டர்பாக்ஸ்ல அந்தக் கவரும், அதை அனுப்பறதுக்கான பத்து ரூபா நோட்டு ஒண்ணும் இணைச்சிப் பின் செய்யப்பட்டு போடப்பட்டிருந்திச்சி சார். போய்ச் சேரவேண்டிய விலாசத்தில டிடெக்டிவ் ஏஜென்சின்னு போட்டுருந்ததால, தன்னை அடையாளப் படுத்திக்க விரும்பாத யாரோ ஏதோ ஒரு பிரச்சனை பத்தி உங்களுக்குத் தெரியப்படுத்த நினைக்கிறாங்கன்னு யூகிச்சோம். பணமும் இணைக்கப் பட்டிருந்ததால் ரசீது போட்டு டெலிவரி செஞ்சிட்டோம். ஏதாச்சும் பிரச்சனையா சார்?"

"நத்திங். ஒரு வேளை அனுப்பிச்ச நபர் நேர்ல வந்து உங்ககிட்ட ஒப்படைச்சிருந்தா அது யாருன்னு தெரிஞ்சுக்க லாமேன்னுதான் கேட்டோம். தேங்க் யூ வெரிமச் மேடம். பை தி பை, கண்ணாடி வளையல் யூஸ் பண்றிங்களே, உங்க ஆபீஸ்ல மத்தவங்க கவனத்தை சிதறடிக்காதா? வெச்சிடறேன்" என்று வைத்தான்.

* * *

## 7

அந்தக் கடிதத்தைப் படித்துவிட்டு விக்னேஷும், சுதாவும் அதிர்ந்து போனார்கள்.

"குழந்தை உயிரோட பத்திரமா இருக்குங்கறது இதுல ஒரு சந்தோஷமான செய்தி. ஆனா அந்தப் பொண்ணு

எழுதியிருக்கிற சில வரிகள் ரொம்ப குழப்பமா இருக்கு விக்னேஷ்" என்றான் பரத்.

"இதை எழுதினது ஒரு பொண்ணுதான்னு எப்படிச் சொல்றே?"

"கையெழுத்துப் பார்த்தாலே பளிச்சுன்னு தெரியுதே. நான் செஞ்சது நியாயம்தான்னு எழுதியிருக்கா. ஒரு குற்றவாளிக்கு நான் கொடுத்த வினோதமான தண்டனைன்னு எழுதியிருக்கா. ஸோ, நிச்சயம் உங்க ரெண்டு பேர்ல யாரோ ஒருத்தர் வாழ்க்கைல சம்பந்தப்பட்ட, நல்லா அறிமுகம் உள்ள ஒரு பொண்ணு ஒரு பழி வாங்கிற நடவடிக்கையா இப்படி செஞ்சிருக்கான்னு கிளியராத் தெரியுது. பழிவாங்கப் படற அளவுக்கு என்ன நடந்திச்சின்னு நீங்கதான் யோசிச்சு சொல்லணும் இப்போ."

"நாங்க யாருக்கும் எந்த பாவமும் நினைச்சதுகூட இல்லையே சார்" என்றாள் சுதா, "எங்களால முடிஞ்ச அளவுக்கு எவ்வளவோ தான, தர்மம்தான் செஞ்சிட்டு இருக்கோம்."

"ஆமாம் பரத். எங்களை பகையாளியா நினைக்கிற அளவுக்கு நாங்க என்ன செஞ்சிட்டோம்?" என்றாள் விக்னேஷ்.

"உங்க ரெண்டு பேரையும் பழிவாங்கற நடவடிக்கை இல்லை இது. ஒரு குற்றவாளின்னுதான் இதில குறிப்பிட்டிருக்கா உன்னையோ இல்லை உன் மனைவியையோ குற்றவாளின்னு சொல்றா, ஏன்?"

"புரியலையே."

"சில சமயம் நமக்குத் தெரியாமயே யதார்த்தமா நாம செய்யற ஒரு காரியத்தால ஒரு பகையை தேடிக்கற வாய்ப்பு இருக்கு."

"என்ன சொல்றீங்க?"

"எங்க துப்பறியும் வழக்கு அனுபவத்திலேர்ந்து ரெண்டு உண்மைச் சம்பவங்களை உதாரணமா சொல்றேன். ஒரு காட்டுப் பகுதி கிராமத்தில ஒரு பையன் ஆசையா புறா வளர்த்தான், ஒரு காட்டிலாகா அதிகாரி வேட்டைக்கு வந்தார். வானத்தில் பறந்த ஒரு புறாவை அவர் சுட்டார். அவர் நண்பர்கள் கை தட்டினாங்க. அவர் போய்ட்டார். சுடப்பட்டது அந்தப் பையன் ஆசையா வளர்த்த புறா. அதிகாரி சுட்டதையும் அவன் தூரத்திலேர்ந்து அவன் கண்ணால பார்த்து விட்டான். அவனால அப்ப எதுவும்

செய்ய முடியலை. ஆனா மனசில ஒரு வன்மம் விழுந்துடுச்சி. அதிகாரியைப் பொறுத்த வரைக்கும் புறாவை சுட்டது ஒரு சாதாரண சம்பவம். ஒரு பகையாளியை அது உருவாக்கிடுச்சின்னு அவருக்கே தெரியாது. அவரோட ஆபீஸிலயே எடுபிடி வேலைக்கு சேர்ந்த அந்தப் பையன் ஒரு ராத்திரி அவர் தனியா தூங்கிட்டு இருந்தப்ப ஒரு பெரிய பாறாங்கல்லை அவர் தலைல போட்டு கொலை செஞ்சிட்டான். அந்த வழக்குல யார் யாரையோ சந்தேகப்பட்டோம். கடைசிலதான் அவனைப் பிடிச்சோம். அதே மாதிரி இன்னொரு கேஸ்ல ரெண்டு நண்பர்கள். ரெண்டு பேரும் ஒரு பிரைவேட் காலேஜ்ல என்ஜினியரிங் சீட்டுக்கு முயற்சி செஞ்சாங்க. ஒருத்தன் அரசியல் சிபாரிசுல சேர்ந்துட்டான். இன்னொருத்தனால சேர முடியலை. மனசுக்குள்ள வளர்ந்த பொறாமையே அவனை கொலைகாரனா மாத்திடுச்சி. இந்த மாதிரி நீங்க ரெண்டு பேரும் தனித்தனியா அமைதியா உக்காந்து யோசிங்க, உங்களுக்கேத் தெரியாம எங்கயாவது, எப்பயாவது பகையை உருவாக்கியிருக்கிங்களா? இந்தக் கேஸ்ல இனி நீங்க சொல்ற யூகம் அடிப்படையிலதான் இந்தக் குற்றவாளியை நெருங்கி குழந்தையை மீட்கணும்."

"ரொம்ப பயமுறுத்தறிங்க நீங்க" என்றாள் சுதா.

"பயப்பட எதுவும் இல்லை. குழந்தைக்கு எந்த ஆபத்துமில்லைன்னு நினைச்சு தைரியமா இருங்க. இப்ப ஒரு திசை கிடைச்சிடுச்சே. காலைல பார்க்கலாம். வர்றேன் விக்னேஷ்" எழுந்து கொண்டான் பரத்.

"ஒரேக் குழப்பமா இருக்குப்பா" என்று பெருமூச்சு விட்டான் விக்னேஷ்.

* * *

# 8

இரவு உறக்கம் வராமல் பரத் படுக்கையில் புரண்டான். மனசு ஒரு தடவை அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தான்.

சாதாரணமாக எங்கும் கிடைக்கிற வெள்ளைக் காகிதம். நீல நிற பால் பாய்ண்ட் பேனாவால் எழுதப்பட்ட மெலிதான எழுத்துக்கள்.

நிச்சயம் பெண்தான். குற்றம் இவள் தொழில் இல்லை. தொழில்முறை குற்றவாளியிடம் இத்தனை மனிதாபிமானம் இருக்காது. யாரோ ஒருவன் மாட்டிக் கொண்டு எப்படியோ வழக்கு முடிந்து போலீசின் கவனம் தன் பக்கம் இல்லாமல் இருந்தால் சரி என்றுதான் நினைப்பாள் தவிர இப்படி வளவளவென்று நீளமான கடிதம் எழுதமாட்டாள்.

அவள் கே.கே. நகர் பகுதியில் வசிப்பவளாக இருக்கலாம்.

ஒரு குற்றவாளிக்கான வினோத தண்டனை என்றால். யார் குற்றவாளி? சுதாவா? விக்னேஷா? என்ன செய்தார்கள்? நேரடியாக அவளைப் பாதித்தார்களா, இல்லை மறைமுகமாகவா?

வீட்டின் அழைப்பு மணி ஒலித்தபோது, பரத் எழுந்து அறையின் பெரிய விளக்கைப் போட்டு நேரம் பார்த்தான். 12.35.

எழுந்து வெளியே வந்தான். ஹாலின் ஓரத்தில் நாராயணன் லேசாக வாய் பிளந்து, குறட்டைவிட்டு உறங்கிக் கொண்டிருந்தான்.

வாசலுக்கு வந்த பீப்ஹோல் வழியாகப் பார்த்து ஆச்சரியப் பட்டான் பரத். வெளியே சிகரெட் பிடித்தபடி நின்று கொண்டிருந்தான் விக்னேஷ்.

கதவைத் திறந்து, “வா விக்னேஷ்” என்றான்.

“ஸாரி, உன்னை தூக்கத்தில் தொந்தரவு பண்ணிட்டேன். சட்டையைப் போட்டுக்கிட்டு வர்றியா? ஒரு மணி நேரம் வெளில போய்ட்டு வரலாம். உன்கிட்ட ஒரு விஷயம் பேசணும்.”

பரத்திற்கு ஏதோ புரிந்தது.

சற்று நேரத்தில் விக்னேஷ் தன் காரை சிகரெட் புகைத்த படி செலுத்த, அருகில் பரத் அவனே துவங்கட்டும் என்று காத்திருந்தான்.

கடற்கரைக்கு வந்து காரை நிறுத்தி, இறங்கி காரில் சாய்ந்தபடி நின்று கொஞ்ச நேரம் குளிரடிக்கும் காற்றில் நின்றுவிட்டு, “பரத், நீ காமிச்ச லெட்டரை எழுதியிருக்கிறது யாருன்னு எனக்குத் தெரியும். அந்தக் கையெழுத்து எனக்கு ரொம்ப பழக்கமான கையெழுத்து” என்றான்.

“யாரு?”

"வளர்மதி! அவ லெட்டர்ல குறிப்பிட்டிருக்கிற குற்றவாளி நான்தான் பரத். நான் செஞ்ச தப்புக்கு அஞ்சி வருஷம் கழிச்சி இப்படி வினோதமான முறையில அவ தண்டனை கொடுப்பான்னு நான் எதிர்பார்க்கவே இல்லை."

"யார் அந்த வளர்மதி? என்ன நடந்திச்சி?"

"எனக்கு கல்யாணமான புதுசு. அப்போ ஆறு மாச டிரையினிங் ஒண்ணுக்காக நான் டெல்லி போயிருந்தேன். சுதா அன்பான, அழகான மனைவி. ஆனா எதிர்பார்த்த ரசனை ஒற்றுமைகள் அவகிட்ட இல்லை. லவ் பண்ணித்தான் கல்யாணம் செய்துக்கணும்னு நான் ஒரு ஐடியாவில இருந்தேன். அப்படி எதுவும் என் வாழ்க்கைல நடக்காம, அரேன்ஜ்ட் மேரேஜா அமைஞ்சிப் போனதில எனக்கு ஒரு ஏமாற்றம் இருந்திச்சு. அந்த சூழ்நிலைல டெல்லில நான் தங்கியிருந்த வாடகை வீட்டுக்குப் பக்கத்தில ஒரு லேடீஸ் ஹாஸ்டல். அதில வளர்மதி இருந்தா. டிகிரி படிச்சிருந்த அவளுக்கு ஒரு ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்ல பில் போடற வேலை. ஒரு கம்பெனி வேலைக்கு முயற்சி பண்ணிட்டிருந்தா. எங்களுக்குள்ளே ஒரு சின்ன தகராறில அறிமுகம் ஆகி, அப்புறம் நெருக்கமா நட்பு உருவாச்சு. நான் கல்யாணமானவன்றதை மறந்துட்டு, அது தப்புன்னு தெரிஞ்சும் அவளை நான் நேசிக்க ஆரம்பிச்சேன். அவளோட குறும்பும், புத்திசாலித்தனமும், அழகும், மென்மையும், ரசனையும், ஈடுபாடான அன்பும் என்னை பைத்தியமாக்கிடுச்சி. நான் ஏற்கனவே கல்யாணமானவன்னு தெரிஞ்சா அவ என்னை வெறுத்துடுவா, விலகிடுவான்னு அதை மறைச்சிட்டேன். ஒரு எச்சரிக்கை உணர்வோட நான் வேலை செய்ற இடத்தையும், மெட்ராஸ்ல என் அட்ரஸையும் மாத்தி சொல்லிட்டேன்."

"அப்புறம்?"

"அவதான் முதல்ல தன் காதலை சொன்னா. அப்பக்கூட நான் உண்மையை சொல்லாம நானும் அவளை காதலிக்கிறதா சொல்லிட்டேன். சேர்ந்து சினிமா, ஹோட்டல்னு சுத்தினோம்."

"ஒரு பலவீனமான சமயத்தில எல்லை மீறினிங்க. அவ உண்டாயிட்டா. கரெக்டா?"

"ஆமாம். சத்தியமா சொல்றேன் பரத். அவளை ஏமாத்தி கைகழுவறது என் நோக்கமில்லை. கொஞ்சம் கொஞ்சமா எடுத்துச் சொல்லி சுதாவோட சம்மதம் வாங்கி அவளை

ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிறது என் நோக்கம். சுதாவை கன்வின்ஸ் செய்ய நாளாகுமே. அதனால நான் வளர்மதிகிட்ட "எனக்கு ஒரு தங்கச்சி இருக்கா, அவளுக்கு கல்யாணம் பண்ணாம நான் பண்ணிக்கிறது சரியில்லை. அவளுக்கு வீட்ல இப்பதான் வரன் பார்த்துகிட்டு இருக்காங்க. அந்த கல்யாணம் முடிஞ்சதும் நம்ம கல்யாணம் பத்திப் பேசறேன். அது வரைக்கும் நீ பொறுமையா இருக்கத் தயாரா இருந்தாலும், உன் வயத்தில வளர்ற குழந்தை காட்சிக் கொடுத்திடும். அதனால கலைச்சிடலாம்'னு சொன்னேன். அதுக்கு அவ சம்மதிக்கலை. 'கல்யாணமோ, கல்யாணமில்லயோ அது நம்ம குழந்தை. நான் கலைச்சிக்க மாட்டேன். நீங்க இப்பவே விவரம் சொல்லி பர்மிஷன் வாங்கிடுங்க. ஒரே மேடையில அண்ணனுக்கும், தங்கச்சிக்கும் கல்யாணம் நடக்கிறதில்லையா, அப்படி பண்ணிக்கலாம்'னு வற்புறுத்த ஆரம்பிச்சிட்டா."

"அப்புறம்?"

"நான் எவ்வளவு சமாதானப் படுத்தியும் எடுபடலை. ஹிஸ்டீரிக்கலா கத்தறது, என் சட்டையைப் பிடிச்சி உலுக்கறது, கைல கிடைச்சதை கீழேப் போட்டு உடைக்கிறதுன்னு ரொம்ப எமோஷனலா ஆய்ட்டா, இந்த சூழ்நிலைல போயா என் பொண்டாட்டி எனக்கெழுதின ஒரு லெட்டர் அவ கைக்குக் கிடைக்கணும்?"

"மை காட்! அவ அம்மா, அப்பாவையும் சண்டைக்கு கூட்டிகிட்டு வந்துட்டாளா?"

"அப்படி யாரும் இல்லததால தான் ஹாஸ்டல்ல தங்கியிருந்தா. போராடறதுக்கு அவ ஒருத்தி போதும் பரத். நான் அவளை ஏமாத்திட்டேன்னு கத்தி தீர்த்துட்டா, நான் அவமேல வெச்சிருக்கிற காதலை எடுத்துச் சொன்னேன். போலீசுக்குப் போவேன்னா. சமீபத்து விஞ்ஞானம் மூலமா தன் வயத்தில வளர்றது என் குழந்தைதான்னு சட்டப்பூர்வமா நிரூபிச்சி தண்டனை வாங்கிக் கொடுப்பேன்னா. நான் ரொம்ப டென்ஷனாயிட்டேன். இவ்வளவு எமோஷனலான பொண்ணோட வாழ்க்கை பூரா குடித்தனம் பண்றது நரகம்னு புரிஞ்சுக்கிட்டேன். என் சுதாவை கன்வின்ஸ் பண்ணி அவளை ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிற ஐடியாவை மறந்துட்டேன். இப்ப இவக்கிட்டேர்ந்து, இந்தப் பிரச்சனையிலேர்ந்து மீள்றது எப்படி யோசிச்சேன். பல தடவை மன்னிப்பு கேட்டு, கெஞ்சலா பேசி,

'சுதாகிட்ட சம்மதம் வாங்கி ஒரே மாசத்தில கல்யாணம் பண்ணிக்கிறேன், நீ கலைச்சுக்க வேணாம்'னு சமாதானப் படுத்தினேன். அவ என்மேல அந்த நம்பிக்கையோட இருந்தப்ப அவளுக்கு ஜூஸ் கலந்து கொடுத்த நான் அவளுக்குத் தெரியாம கர்ப்பம் கலைக்கிற ஸ்ட்ராங்கான மருந்தை கலந்து கொடுத்துட்டேன். அடுத்த ரெண்டாவது நாள் அவ கர்ப்பம் கலைஞ்சி போச்சு. அதுக்கப்புறம் ஒரு மாசம் முன்னாடியே டிரையினிங்கை முடிச்சிக்கிட்டு அவளுக்கு எந்த தகவலும் சொல்லாம வீட்டை ராத்திரியோட ராத்திரியா காலி செஞ்சிட்டு மெட்ராஸ் வந்துட்டேன். அவளும் நானும் பழகினதுக்கு எந்த ஆதாரமும் இல்லை. நான் லெட்டர் எதுவும் எழுதினதில்லை. சேர்ந்து போட்டோ எடுத்துக்கிட்டதில்லை. நான் வேலை பார்க்கிறதா அவளுக்குக் கொடுத்தது வேற அட்ரஸ், மெட்ராஸ்ல தன் வீட்டு அட்ரஸ் பொய்யான அட்ரஸ், வயத்தில வளர்ந்த குழந்தையையும் கலைச்சிட்டேன். இனிமே எந்த விவகாரமும் அவ மூலமா வர்றதுக்கு வாய்ப்பில்லைன்னு மெட்ராஸ் வந்து நான் என் சகஜ வாழ்க்கைக்குத் திரும்பிட்டேன். அவளைப்பத்தின நினைவுகளும், அவளுக்கு நான் செஞ்ச துரோகமும் அப்பப்ப என்னைக் குத்தும், குதறும், உள்ளுக்குள்ளேயே அழுதுக்குவேன். நடுவுல ஒரு தடவை டெல்லி போனப்ப வேற ஒருத்தர் மூலமா அவ அந்த ஹாஸ்டல்லதான் இருக்காளா, அந்த ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்லதான் வேலை பார்க்கிறாளான்னு தெரிஞ்சுக்கப் பார்த்தேன். அவ அந்த வேலைல இல்லை. அந்த ஹாஸ்டலை விட்டும் போய்ட்டா. அந்த வளர்மதிதான் பரத் இப்போ என்னை இப்படி பழி வாங்கியிருக்கா" என்றான் விக்னேஷ் கண்கலங்க.

"இப்ப எல்லாமே தெளிவாய்டுச்சி விக்னேஷ். இந்தக் குழந்தைத் திருட்டை செஞ்சது யாருன்னு தெரியும். எதுக்காகண்ணும் தெரியும். தன் குழந்தையை சாமர்த்தியமா அழிச்ச உன் குழந்தையைத் திருடி உன்னைத் தவிக்க வைக்க நினைச்சிருக்கா வளர்மதி. இப்ப அந்த வளர்மதி எங்க இருக்கா? எப்படி இதை செஞ்சா? இதுதான் தெரியணும். ஆனாலும் நீ செஞ்சது. "

"மிகப் பெரிய தப்புதான் பரத். அவமேல அப்படி கிறங்கிப் போயிருந்தேன். விளைவுகளை யோசிக்காம பழகிட்டேன். விளைவுகளை யோசிச்சப்ப பகீர்னு ஆய்டுச்சி. என் இமேஜ் போய்டும். சுதா நொந்து போய்டுவா. தற்கொலைகூட செய்துக்கலாம். அவ்வளவு சென்சிடிக் அவ. சொந்தக்காரங்க

எல்லாம் காறித் துப்புவாங்க. என்னை தற்காத்துக்கிரத்துக்காக வளர்மதியை பலிகடாவாக்கிட்டேன். அந்த வளர்மதி மேல இப்பகூட எனக்கு கோபம் இல்லை பரத். உள்ளுக்குள்ளே இன்னும் அந்த காதல் இருக்கு. அவளை கண்டுபிடி. குழந்தையை மீட்டுக்கொடு, சுதாகிட்ட நீயே பக்குவமாப் பேசி சம்மதம் வாங்கிக் கொடு அவ கால்ல விழுந்து மன்னிப்பு கேட்டுட்டு கல்யாணம் பண்ணிக்கிட்டு குடித்தனம் நடத்தறேன்."

"இன்னைக்கு அவ மனநிலை நீ கொடுக்கற வாழ்க்கையை ஏத்துக்கற நிலையில இல்லை விக்னேஷ். அன்னைக்குத்தான் நீ அவளோட காதலன். இன்னைக்கு எதிரி. உன்னைப் பழி வாங்கற வெறிலதான் இருக்கா. ஓக்கே. வளர்மதியோட போட்டோ இருக்கா உன்கிட்ட?"

"இல்லை பரத்."

"டெல்லில நீ இருந்தப்ப அவளைப் பத்தி உனக்கு என்ன எல்லாம் தகவல் தெரியும்? அந்த ஹாஸ்டல் அட்ரஸ் கொடு. வேலை பார்த்த இடத்தோட அட்ரஸ் கொடு."

விக்னேஷ் பாக்கெட்டிலிருந்து காகிதம் எடுத்து காரின் மீது வைத்து எழுதிக் கொடுத்தான்.

"நானும் சுசிலாவும் நாளைக்கே டெல்லி புறப்படறோம். அங்கேர்ந்து ஆரம்பிச்சு விசாரிச்சு மெட்ராஸ்ல அவ அட்ரசைப் பிடிக்கலாம்."

"பரத், நீ வீட்ல வந்து விசாரிச்சப்போ பக்கத்தில சுதா இருந்ததால இதெல்லாம் சொல்லலை. கிளப்புக்கு போறேன்னு சொல்லிட்டு உன்னைத் தேடி வந்திருக்கேன். தயவுசெஞ்சி நீ.

"இதையெல்லாம் உன் மனைவிகிட்ட சொல்றதுக்கு நான் என்ன விபரம் புரியாதவனா? வளர்மதியைத் தேடிக் கண்டுபிடிக்கிற வரைக்கும் இந்த லெட்டர் வந்ததைப் பத்திக்கூட போலீஸ்ல நான் சொல்லப் போறதில்லை. தைரியமா இரு. கண்டுபிடிச்சிடலாம்" என்ற பரத் அவன் உதட்டில் வைத்த சிகரெட்டிற்கு நெருப்பு பிடித்தான்.

* * *

# 9

விமானம் சாய்வுக் கோணத்திலிருந்து நிமிர்ந்ததும், பரத்தன் பெல்ட்டை தளர்த்திக் கொண்டான். முன் இருக்கை முதுகில் செருகியிருந்த அந்தப் பத்திரிகையை எடுத்துப் புரட்டிக் கொண்டான்.

சுசிலா வட்டக் கண்ணாடி வழியாக மேகங்களை ரசித்தாள்.

"சுசி, ஒரு கற்பனை."

"என்ன?"

"திடீர்னு இந்தப் பிளேனைக் கடத்திட்டுப் போறாங்க. அந்த தீவிரவாதிங்க சுசிலா ஒரு காபரே டான்ஸ் ஆடினா பிளேனை விட்டுடறேன்னு சொல்றாங்க. என்ன செய்வே?"

"காபரேதானே? ஆடிட்டாப் போச்சு. ஆனா பதிலுக்கு நான் ஒரு நிபந்தனை வைப்பேன்."

"என்ன?"

"பரத்னு ஒரு ஆசாமியை நடுவானத்திலிருந்து வெளில தள்ளி விடணும்னு!"

"நான் என்ன பாவம் செஞ்சேன்?"

"இப்படி கேவலமா ஒரு கற்பனை செஞ்சதுக்காக."

"விக்னேஷை விடவா கேவலமா நான் நடந்துக்கிட்டேன்?"

"பாவம் இல்ல அந்த வளர்மதி? அவ மனசுல காதலை வளர்த்து. ."

"அப்புறம் அவ வயத்தில குழந்தையை வளர்த்து.

"அப்புறம் அவளுக்கேத் தெரியாம கலைச்சிட்டு.

"சத்தமில்லாம தலைமறைவானா, யாருக்குதான் கோபம் வராது?"

"இதென்ன பின்பாட்டா? வளர்மதிக்கு விக்னேஷ் துரோகம் செஞ்சது அஞ்சி வருஷத்துக்கு முன்னாடி, இந்த அஞ்சி வருஷமா அவ என்ன செஞ்சிட்டிருந்திருக்கணும்?"

"இவனைத் தேடிக்கிட்டிருந்திருக்கணும், இவனைக் கண்டுபிடிச்ச சமயத்தில சுதா கர்ப்பமா இருக்கிறது தெரிய வந்திருக்கணும். உடனே நூதனமா பழி வாங்க திட்டம் போட்டிருக்கணும்."

"தனியாவே செய்திருப்பான்னு நினைக்கிறீங்களா?"

"நிச்சயம் யாரோ உதவி பண்ணிருக்காங்க சுசி. அந்த வளர்மதிக்கு நம்மைப் பத்தி முழு விபரமும் தெரிஞ்சிருக்கு. நம்ம ஆபீஸ் அட்ரஸ் தெரிஞ்சிருக்கு. எங்கயோ தலைமறைவா இருந்துகிட்டு எல்லாத்தையும் கண்காணிச்சிருக்கணும் அவ!"

"சுதா செக்கப்புக்குப் போய்ட்டு இருந்த வேதவல்லியோட ஹாஸ்பிடல்ல மறுபடி விசாரிச்சப்போ இதோ அந்த வளர்மதியை பிடிச்சிடப் போறோம்னு ரொம்ப நம்பிக்கையா இருந்தேன் பரத். ஆனா அப்படி ஒரு ஸ்டாஃபும் இல்லைன்னு அவங்க சொன்னப்ப எனக்கு ஏமாத்தமாதான் இருந்தது."

"அதே ஹாஸ்பிடல்லயே வளர்மதி வேற ஒரு பேர்ல வேலை பார்த்துக்கிட்டிருந்தாலும் நமக்குத் தெரியாதே. அதனாலதான் தினமும் காலைல, சாயங்காலம் அந்த ஹாஸ்பிடலுக்கு எதிர்ல மறைவா நின்னுக்கிட்டு அங்கே வர்றவங்களை, போறவங்களை பார்க்கச் சொல்லி விக்னேஷ்கிட்ட சொன்னேன். வளர்மதியை இப்போதைக்கு அவன் ஒருத்தன் மட்டும்தான் அடையாளம் காட்ட முடியும்."

"ஆனா இந்த அஞ்சி வருஷத்தில அவ முகமே மாறிப் போயிருக்கலாம். இல்லைன்னா தன்னை விக்னேஷ் பார்த்துடக் கூடாதுன்னு அவ மாறுவேடத்தில கூட நடமாடலாம்."

"அவ்வளவு தூரம் திட்டமிடற பொண்ணாத் தெரியலை சுசி."

"ஆனா தான் இதில மாட்டிக்கக் கூடாதுன்னு தீர்மானமா இருக்கா. கூரியர் சர்வீஸ் ஆபீஸ்ல தபால் பெட்டில எவ்வளவு முன்னெச்சரிக்கையா நமக்கான கவரையும், பணத்தையும் போட்டிருப்பா."

"கரெக்ட்தான். டெல்லில நம் விசாரனைல மெட்ராஸ்ல வளர்மதி இப்ப எங்கே இருக்கான்னு சரியான தகவல் கிடைக்கு மான்னு தெரியலை. ஆனா எனக்கு அவ போட்டோ மட்டுமாவது கிடைச்சாப் போதும். இந்த விக்னேஷைப் பாரு, நியாயமா அவன் பொண்டாட்டி கிட்டேர்ந்து கிடைக்கிற முத்தம் பத்தாதுன்னு டெல்லில நிழலா வளர்மதியோட முத்தத்துக்கு அலைஞ்சிருக்கான்."

"சகிக்கலை பரத்."

"அவன் செஞ்சதுதானே?"

"இல்லை. எப்படியாச்சும் தலைப்புக்கு சம்பந்தப் படுத்தணும்னு நீங்க மெனக்கெடறது!"

“ரொம்ப வாறிட்ட, ஃபிளைட் டெல்லில இறங்கற வரைக்கும் 'WHICH ONE IS XEROX COPY?'ன்னு பனியன்ல எழுதின பொண்ணுங்ககிட்ட நான் பேசப் போறதில்லைப்பா” என்று சரிந்து சாய்ந்து கொண்ட பரத் தன் தொப்பி கண்களை மறைக்கும்படி இழுத்து விட்டுக் கொண்டான். தொப்பியில் 'BALL IS ON YOUR COURT' என்று எழுதியிருந்தது.

டெல்லி விமான நிலையத்தில் பனிப்புகை அங்குலத்திற்கு அங்குலம் பரவியிருந்தது. அரை மணி நேரம் விரயமாக வட்டமடித்து விட்டுப் பிறகுதான். லேண்டிங் செய்ய முடிந்தது.

பரத் சுசிலா டாக்ஸி பிடித்துக் கொண்டார்கள். சூர்ய விஹார் சர்க்கிளில் ஹோட்டல் சவர்லியில் பதிவு செய்திருந்த அறைக்கு வந்து சுடு தண்ணீரில் குளித்து, சுடச்சுட காபி பருகி, ஒரு சிகரெட் பற்ற வைத்த பிறகுதான் கொஞ்சம் வெடவெடப்பு அடங்கியது.

கன்னாட் பிளேசில் பகத்சிங் சாலையில் சிவாஜி ஸ்டேடியத்திற்குப் பக்கத்தில் இருந்தது அந்த பெண்கள் விடுதி.

இவர்கள் போனபோது எல்லோரும் சீவி முடிச்சி சிங்காரிச்சி செவத்த நெத்தில பொட்டும் வெச்சி வேலைக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சுரிதார், சுரிதார், சுரிதார்.

அலுவலகத்தில் பேப்பர் படித்துக் கொண்டிருந்த வார்டனுக்கு முன் தலை நரைத்திருந்தது. ஹிந்தி மட்டுமே தெரிந்திருந்தது. அறிமுகம் செய்து கொண்டார்கள்.

“நீங்கள் எத்தனை வருடமாக இங்கு பொறுப்பில் இருக்கிறீர்கள்?”

“மூன்று வருடங்களாக.”

“ஐந்து வருடங்களுக்கும் முன்பு இங்கே தங்கியிருந்த வளர்மதி என்கிற பெண்ணைப் பற்றிய தகவல் வேண்டும்.”

“என்ன தகவல் வேண்டும்.”

“அந்தப் பெண்ணை நாங்கள் மிக முக்கியமாக சந்திக்க வேண்டும். இப்போது அவள் சென்னையில் இருக்கிறாள் என்பது தெரியும். சென்னையில் அவள் விலாசம் வேண்டும்.”

“இங்கே தங்கி வெளியேறியவர்களில் சிலர் அவ்வப்போது கடிதம் எழுதுவார்கள். நீங்கள் குறிப்பிடும் வளர்மதி அப்படி எதுவும் எழுதியதாக நினைவில்லை.”

“வளர்மதி இங்கிருந்து எப்போது வெளியேறினாள் என்பதை நாங்கள் தெரிந்து கொள்ள முடியுமா?”

''அந்தத் தகவல் லெட்டரில் இருக்கும். பார்த்துச் சொல்கிறேன்."

பார்த்து அவள் சொன்ன தேதி நாலரை வருடங்களுக்கு முந்தியதாக இருந்தது.

"இங்கே தங்க விரும்பும் பெண்களிடம் விண்ணப்பப் படிவம் நிரப்பி வாங்குவீர்கள் அல்லவா?"

"நிச்சயமாக."

"அதில் அவர்களின் புகைப்படமும் இருக்குமா?"

"புகைப்படம் நாங்கள் கேட்பதில்லை."

"சரி, வளர்மதியின் விண்ணப்ப படிவத்தை நாங்கள் பார்க்க வேண்டுமே.

பழைய ஃபைல்களைப் புரட்டி எடுத்துக் கொடுத்தாள்.

"சுசி, பாரு! அதேக் கையெழுத்து! மேடம். இதை நாங்கள் ஜெராக்ஸ் செய்து கொண்டு திருப்பித் தருகிறோம். அப்புறம். வளர்மதி இங்கே இருந்த சமயத்தில் இருந்து இன்னமும் இங்கே தொடர்ந்து தங்கி வரும் பெண்கள் யாராவது இருக்க வேண்டுமே. "

"இங்கே அதிக காலம் யாரும் தங்குவதில்லை சார். வேலை மாற்றல் என்று போய் விடுவார்கள். அல்லது கல்யாணம் செய்து கொண்டு கிளம்பி விடுவார்கள். அதிகபட்சம் மூன்று வருடங்கள் தான் இங்கே தங்குகிறார்கள். ஆனால் நீங்கள் குறிப்பிடுவது போல பல வருடமாக இங்கே தங்கியிருக்கும் ஒரே பெண் சூர்யமாலா."

"அந்தப் பெண்ணை நாங்கள் சந்திக்க வேண்டுமே."

''அவள் அலுவலகத்திற்குப் புறப்பட்டுப் போய் விட்டாளே.

"எந்த அலுவலகத்தில் வேலை செய்கிறாள் அவள்?"

"ஜனக்புராவில் லஜ்பத் நகர் ரயில்வே ஸ்டேஷன் அருகில் நைனிடால் டிராவல்ஸ் என்று இருக்கிறது. அங்கே.

ஒரு மணி நேரத்தில் அங்கே இருந்தார்கள்.

சூரியமாலா அலுவலக விஷயமாக வங்கிக்குச் சென்றிருப்ப தாகச் சொல்லப்பட, அழகான ரிசப்ஷனில் வசதியான ஸோபாக்களில் உட்கார்ந்து காத்திருந்தார்கள்.

ஒரு மணி நேரம் கழித்து ரொம்ப சுமாரான அந்தப் பெண் வந்து "நீங்களா என்னைத் தேடி வந்தது?" என்றாள்.

"ஆமாம். உட்காருங்கள், ஐந்து வருடங்கள் முன்னால் நீங்கள் தங்கியிருக்கும் அதே ஹாஸ்டலில் தங்கியிருந்த வளர்மதியை நினைவு இருக்கிறதா? ஒரு ஷாப்பிங் செண்டரில் பில் போடும் வேலை பார்த்து வந்தாள்."

"நன்றாக நினைவிருக்கிறது. என்ன விஷயம்? எனக்கு அடுத்த அறையில்தான் தங்கியிருந்தாள்."

"அவளை நாங்கள் முக்கியமாகப் பார்க்க வேண்டும். அவள் இப்போது எங்கே இருக்கிறாள் என்று தெரியுமா?"

"தெரியாது சார். தொடர்பே இல்லை. ஆனால் அவள் உயிர் வாழ்வதற்கு நான்தான் காரணம்."

"உங்கள் பெயர் ஆக்ஸிஜனா என்ன?"

அவள் அந்த ஜோக்கை ரசிக்காமல், "தற்கொலை செய்து கொள்ள இருந்தவளுக்கு நான்தான் வண்டி வண்டியாக ஆறுதல் சொன்னேன். முடிவை மாற்றினேன்."

"ஏன் தற்கொலை செய்து கொள்ள நினைத்தாள்?"

"ஒரு கல்யாணமான ஆசாமி அதை மறைத்து இவளை காதலிப்பதாக நடித்து ஏமாற்றி விட்டான். இவள் கர்ப்பமாகி விட்டாள். அவனே சாமத்தியமாகப் பேசி ஜூஸில் மருந்து கலந்து கொடுத்து கருவைக் கலைத்து விட்டான். மாத்திரை அட்டையை கண்டுபிடித்து அதைத் தெரிந்து கொண்ட அவள் ஆவேசமாக அவனைத் தேடிப் போனாள். ஆனால் அவன் தங்கியிருந்த வீட்டை அவசர அவசரமாகக் காலி செய்து விட்டான். அவன் வேலை பார்ப்பதாக கொடுத்த டெல்லி விலாசம் போலி! அவனைத் தேடி சென்னை சென்று அங்கே அவன் கொடுத்த வீட்டு விலாசமும் போலி என்பதை அறிந்து நொந்து போய் திரும்பி வந்தாள்."

"அப்புறம்?"

"தான் அநியாயமாக ஏமாற்றப் பட்டதில் அதிகமான தன்னிரக்கம் ஏற்பட்டு புடவையை சுறுக்குக் கயிராக அமைத்து கழுத்தில் மாட்டிக் கொள்ளச் சென்றாள். நான் பார்த்து விட்டேன். தடுத்து விட்டேன், தற்கொலை முட்டாள்தனம் என்று போதித்தேன். ஒரு உயிர் எத்தனையோ உயிர்களுக்கு சேவை செய்யலாம் என்று எடுத்துச் சொன்னேன்."

"பிறகு?"

"நீ ஏன் நர்ஸ் டிரெயினிங் காலேஜில் சேர்ந்து ஒரு நர்சாகக் கூடாது? அந்தத் தொழிலில் எத்தனை சேவை இருக்கிறது தெரியுமா என்றேன். மற்றவர்களுக்கு உதவும் போது உன் மனதிற்கு ஆறுதலாக இருக்கும் என்றேன். கொஞ்ச நாட்களில் அவள்

டெல்லியை விட்டு புறப்பட்டு விட்டாள். தன்னை ஏமாற்றியவன் எப்படியும் சென்னையில்தான் இருப்பான் என்றும், எப்போது அவனை கண்டுபிடித்தாலும் ஏதாவது ஒரு வழியில் பழி வாங்குவேன் என்றும் சொன்னாள். நான் சொன்ன யோசனை அவளுக்குப் பிடித்திருந்ததால் சென்னையில் நர்ஸ் டிரெய்னிங் காலேஜில் சேரப் போவதாகச் சொன்னாள். ஆனால் அவள் சேர்ந்தாளா இல்லையாவென்று எனக்குத் தெரியாது சார். அதன் பிறகு அவளிடம் இருந்து ஒரு கடிதம்கூட இல்லை."

"சேர்ந்திருக்க வேண்டும், நர்ஸ் ஆகியிருக்க வேண்டும்" என்றான் பரத்.

"எப்படிச் சொல்கிறீர்கள்?"

"சென்னையில் வளர்மதியை ஏமாற்றிய அந்த ஆசாமியின் மனைவியின் கர்ப்பப் பையிலிருந்து அதிரடியாக ஆபரேஷன் நிகழ்த்தப்பட்டு ஒரு ஆண் குழந்தை திருடப் பட்டிருக்கிறது. அதைச் செய்த நபருக்கு மருத்துவ அறிவு கண்டிப்பாக தேவை. காரணமும் தேவை. இரண்டும் வளர்மதிக்கு மிகவும் பொருந்துகிறது. ரொம்ப நன்றி. இனி எங்களுக்கு வேலை சென்னையில்தான் தகவல்களுக்கு நன்றி சூர்யமாலா."

"வளர்மதியைப் பார்த்தால் நான் மிகவும் விசாரித்ததாகச் சொல்லுங்கள்."

"கண்டிப்பாக" என்றான் பரத். எழுந்து கொண்டான்.

* * *

## 10

"**வா**ங்க பரத். உங்க ஆபீசுக்கு போன் செஞ்சேன் டெல்லிக்குப் போயிருக்கிறதா சொன்னாங்க. என்ன டெல்லில?" என்று வரவேற்றார் முருகேசன், "சுதாவோட குழந்தை டெல்லிக்குப் போயிடுச்சா என்ன?"

"வேற ஒரு கேஸ் சார். இந்தக் கேஸ்ல நாங்க முழுக்க முழுக்க முருகேசனைத்தான் நம்பிக்கிட்டிருக்கோம். ஏதாச்சும் முன்னேற்றம் உண்டா? வரதராஜன் மறுபடி ட்விஸ்ட் அடிச்சானா?" என்றான் பரத்.

"அவனை வெளில விட்டுட்டேன் பரத். அவன் இல்லைன்னு சர்வ நிச்சயமா தெருஞ்சி போச்சி, சுசிலா சொன்ன அந்த பெங்களூர் சைகோ டாக்டரைப் பத்தி விசாரிச்சோம். அவன் இன்னும் பெங்களூர்ல மெண்டல் ஹாஸ்பிடல்ல ட்ரீட்மெண்ட்

எடுத்துக்கிட்டுதான் இருக்கானாம். அதனால அந்தக் கோணமும் அவுட்."

"அப்புறம் என்னதான் செஞ்சிருக்கிங்க கூடிய சீக்கிரம் கண்டுபிடிச்சிருவோம்னு அறிக்கை விடறதைத் தவிர?"

''சில்ட்ரன்ஸ் ஹாஸ்பிடல்ல எல்லாம் மஃப்டில ஆட்களை நிறுத்தி வெச்சிருக்கேன். சந்தேகப் படும்படியா ஆண்குழந்தையை யாராச்சும் தூக்கிட்டு வந்தா தரோவா விசாரிக்கச் சொல்லிருக்கேன்."

"வெல், எனக்கு வேற ஒரு கேசில உங்க உதவி வேணுமே."

"என்ன, சொல்லுங்க."

''நாலரை வருஷம் முன்னாடி மெட்ராஸ்ல நர்ஸ் டிரெய்னிங் காலேஜ்ல வளர்மதின்னு ஒரு பொண்ணு அட்மிஷன் ஆகி டிரெயினிங் முடிச்சு வெளில போயாச்சு. காலேஜ் நிர்வாகத்துக்கிட்ட நீங்க மூவ் பண்ணி வளர்மதின்ற பேர்ல அங்க டிரைனிங் எடுத்துக்கிட்ட பொண்ணுங்களோட அப்ளிகேஷன் ஃபாரம், அவங்க போட்டோ முடிஞ்சா இப்ப அவுங்க எங்க இருக்காக்கன்ற தகவல் இதெல்லாம் சேகரிச்சு கொடுக்கணும் நாங்களே போறதைவிட உங்க மூலமாப் போனா நல்லா ஒத்துழைப்பு கொடுப்பாங்களேன்னுதான்.

"ஆல்ரைட், என்ன பேர் சொன்னிங்க? வளர்மதியா" என்று ஒரு காகிதத்தில் எழுதிக் கொண்டார் முருகேசன்.

"வேற என்ன சார் விசேஷம்?"

"இன்னைக்கு பேப்பர் நியூஸ் பார்த்திங்களா?"

"என்ன மேட்டர் சார்?"

''கள்ளத்தனமா பெத்துக்கிட்ட குழந்தையை குப்பைத் தொட்டில போட்டுக்கிட்டு இருந்தாங்க. அரசுத் தொட்டில்ல போட்டுக்கிட்டு இருந்தாங்க. ஒருத்தி தன் பெண் குழந்தையை திருப்பதி கோயில் உண்டியல்லயேப் போட்டுட்டுப் போய்ட்டா பரத். சாமி கொடுத்ததுதானேன்னு சாமிக்கே போட்டுட்டாப் போலிருக்கு" என்று சிரித்தார் முருகேசன்.

முருகேசன் அலுவலகத்திலிருந்து திரும்பும்போது சிந்தனை வயப்பட்டிருந்த பரத் தோளைத் தட்டி, "பார்த்து ஓட்டுங்க பரத், என்ன யோசனை?" என்றாள் சுசிலா.

"வளர்மதி பத்தி முருகேசன் விசாரிச்சு சொல்றவரைக்கும் சும்மா இல்லாம இன்னொரு ரூட்ல ஒரு முயற்சி செய்லாமான்னு தோணுது சுசி!"

"என்ன?"

"உண்டியல்ல குழந்தையைப் போட்ட செய்தியைப் பத்தி முருகேசன் சொன்னதும் எனக்கு ஒரு யோசனை. வளர்மதி நமக்கு எழுதியிருக்கிற லெட்டர்ல குழந்தை உயிருடன் பத்திரமா இருக்கிறதுன்னு குறிப்பிட்டு எழுதியிருந்தா இல்லை?"

"ஆமாம்."

"அவ ஏன் அந்தக் குழந்தையை அரசுத் தொட்டில்லயோ இல்லை ஏதாச்சும் அனாதை விடுதியில் உள்ள தொட்டில்லயோ போட்டிருக்கக் கூடாது? சென்னையில அனாதை ஆசிரமங்கள் பத்துக்குள்ளேதான் இருக்கும் குழந்தைத் திருட்டு சம்பவம் நடந்த தேதிக்கு அப்புறம் அவங்க இல்லத்தில் யாராச்சும் ஆண் குழந்தையை தொட்டில்ல போட்டாங்களான்னு நாமே பர்சனலா போய் விசாரிச்சா என்ன?"

"ரொம்ப நல்ல ஐடியா பரத்" என்றாள் சுசிலா.

"முதல்ல கே.கே. நகர் போலாம். அந்த லெட்டர் கே.கே. நகர் கூரியர் ஆபீஸ்ல சேர்க்கப்பட்டதால அந்த ஏரியால இருக்கிற அனாதை ஆசிரமங்களுக்கு முதல்ல போலாம்" என்றான் பரத்.

**கே.**கே. நகர். அன்னை மேரி இல்லம். குழந்தைகள் பகுதி.

புடவை கட்டியிருந்த வளர்மதி ஒரு குழந்தைக்கு இன்ஜெக்ஷன் போட்டு விட்டு தேய்த்து விட்டாள். நகர்ந்தவள் தொட்டிலில் சிணுங்கிய அந்த ஆண் குழந்தையைப் பார்த்தாள். புன்னகைத்துக் கொண்டாள் மெதுவாக தொட்டிலை ஆட்டிவிட்டு நகர.

"வளர்மதி, உன்னை மதர் கூப்புடறாங்க."

வளர்மதி அன்னை மேரி இல்லத்தின் அலுவலகப் பகுதிக்கு வந்தாள்.

"யெஸ் மதர்.

"பங்ஷன் ஏற்பாடுகள் சம்பந்தமா நான் கொஞ்சம் வெளில போக வேண்டியிருக்கு. நீ கொஞ்சம் பார்த்துக்கமா. இந்தா டிராயர் சாவி."

சாவிக் கொத்தை ஒப்படைத்துவிட்டு மதர் வெளியேக் காத்திருந்த ஜீப்பில் ஏறிச் சென்றதும், வளர்மதி நாற்காலியில் அமர்ந்து இல்லத்தின் நேற்றைய செலவுக் கணக்கை ரசீதுகள் பார்த்து நோட்டுபுக்கில் எழுதத் துவங்கினாள்.

சற்று நேரத்தில் வாசலில் வந்து நின்ற காரைப் பார்த்தாள்.

அதிலிருந்து பரத், சுசிலா இறங்குவதைப் பார்த்தாள். திக்கென்றது. இத்தனை சீக்கிரம் என்னைக் கண்டுபிடித்து விட்டார்களா என்ன? நான் கடிதம் எழுதிப் போட்டது தப்போ? அதனால்தான் மாட்டிக் கொண்டேனா?

வளர்மதி சிந்தித்துக் கொண்டிருக்கும்போது அவர்கள் உள்ளே வந்தார்கள்.

“எக்ஸ்க்யூஸ் மி மேடம். நாங்க பிரைவேட் டிடெக்டிவ்ஸ். ஒரு கேஸ் சம்பந்தமா ஒரு சின்ன விசாரணை” என்றான் பரத், “உக்காரலாமா?”

“உக்காருங்க” என்றாள் நடுக்கத்தை மறைத்துக் கெண்டு.

“உங்க அனாதை இல்லத்தில் வளர்மதின்னு யாராச்சும் வேலை பார்க்கறாங்களா? அவங்க ஒரு நர்ஸா இருக்கலாம்.”

“இல்லையே, அப்படி யாரும் இங்க இல்லை.”

“கர்ப்பப் பைலேர்ந்து ஒரு குழந்தை திருடப்பட்டதைப் பத்தி நீங்க பேப்பர்ல படிச்சிங்களா மேடம்?”

“ஆமாம், படிச்சேன்.”

“உங்க இல்லத்தில் அந்த சம்பவம் நடந்த இந்த மாசம் பனிரெண்டாம் தேதிக்கு அப்புறம் ஏதாச்சும் ஆண் குழந்தை உங்க தொட்டில்ல போடப் பட்டிருக்கா? சொல்ல முடியுமா?”

“வந்து. எங்க இல்லத்துக்கு புதுசா எந்தக் குழந்தையும் வரல்லையே. கடைசியா, ஒரு குழந்தை வந்து ஆறு மாசம் ஆச்சு. அதுவும் பெண் குழந்தைதான்.”

பரத், சுசிலா ஏமாற்றத்துடன் எழுந்து கொண்டார்கள்.

“ஓகே. தேங்ஸ் மேடம்” என்று அவர்கள் சென்று காரில் ஏறிப் புறப்படும் வரை வளர்மதிக்கு நம்பிக்கையே இல்லை.

நல்லவேளை. அவர்களுக்கு என் முகம் தெரிந்திருக்கவில்லை பெருமூச்சு விட்டாள் வளர்மதி.

* * *

## 11

ஒலித்த போனை எடுத்தான் பரத், “ஹலோ, பரத்!”

“நான் முருகேசன் பேசறேன் பரத்.”

“சொல்லுங்க சார்.”

"கடந்த நாலரை வருஷத்தில் மொத்தம் அஞ்சி வளர்மதிங்க நர்ஸ் டிரைனிங் முடிச்சி வெளில போயிருக்காங்க. அந்த அஞ்சி பேரோட போட்டோவும், அப்ளிகேஷன் பார்ம்சும் பிரதி எடுத்து இப்ப என்கிட்ட இருக்கு. வர்றிங்களா, உங்க ஆபீசுக்கு அனுப்பி வைக்கட்டுமா?

"உங்களுக்கு சிரமம் இல்லைன்னா அனுப்பி வைங்க சார். இல்லைன்னா நான் ஆள் அனுப்பி கலெக்ட் பண்ணிக்கட்டுமா?"

"வேணாம். நான் அனுப்பி வைக்கிறேன்."

"ரொம்ப தேங்ஸ் சார் அப்புறம். உண்டியல்ல குழந்தையைப் போட்ட செய்தி சொன்னிங்க இல்ல, அந்த இன்ஸ்பிரேஷன்ல நேத்து சிடில உள்ள அத்தனை அனாதை இல்லங்களுக்கும் விசிட் அடிச்சோம் சார். ஒரே ஒரு கேள்விதான், 'சம்பவம் நடந்த பனிரெண்டாம் தேதிக்கப்புறம் ஏதாச்சும் ஆண் குழந்தை உங்க இல்லத்தில சேர்க்கப் பட்டிருக்கா?' அப்படின்னு கேட்டோம்."

"வெரிகுட் எனி பாசிடிவ் ரிசல்ட்?"

"குழந்தை கிடைச்சிருந்தாதான் உடனே உங்களுக்கு தகவல் கொடுத்திருப்பேனே. பார்க்கலாம்" என்று போனை வைத்த பரத், "சுசி, உடனே விக்னேஷுக்குப் போன் போடு, அவனை அர்ஜெண்ட்டா புறப்பட்டு இங்க நம்ம ஆபீசுக்கு வரச் சொல்லு" என்றான்.

அரை மணி நேரத்திற்குப் பிறகு முருகேசன் அனுப்பிய நபர் வந்து கவர் கொடுத்துச் சென்றான். அடுத்த நிமிடத்திலேயே விக்னேஷ் உள்ளே வந்தான்.

"வா விக்னேஷ். உன்கிட்ட அஞ்சி போட்டோ காமிக்கிறேன். இதில உன் வளர்மதி இருக்காளான்னு பாரு" என்று கவரைப் பிரித்து உள்ளிருந்த விண்ணப்பங்களையும், புகைப்படங்களையும் எடுத்தான். புகைப் படங்களை வரிசையாக அவன் பக்கம் வைத்தான்.

"இதோ. இவதான் பரத்" என்று பதட்டமாக விக்னேஷ் எடுத்துக் கொடுத்த புகைப்படத்தை வாங்கிப் பார்த்த பரத் சற்றே யோசனையில் ஆழ்ந்தான்.

"சுசி, இந்த வளர்மதியைப் பாரு, சமீபத்தில எங்கயோ சந்திச்ச மாதிரி இல்லை?" என்றான்.

"ஆமாம், பார்த்த மூஞ்சி மாதிரி தெரியுது. எங்க பார்த்தோம்னு சட்டுன்னு நினைவுக்கு வரல்லையே. "

தன் நெற்றியைத் தட்டிக் கொண்டு யோசித்த பரத், “மை குட்னெஸ்! நேத்து கே.கே. நகர்ல முதன் முதலா அன்னை மேரி இல்லம்னு ஒரு அனாதை இல்லத்துக்குப் போனமே, அங்க கண்ணாடி போட்டுக்கிட்டிருந்த ஒரு பொண்ணு அங்கே ஆறு மாசம் முன்னாடி ஒரு பெண் குழந்தைதான் சேர்ந்ததுன்னு தகவல் சொன்னாளே. அவதான் வளர்மதி! இந்த போட்டோ பழைய போட்டோ சுசி, இதுக்கு கண்ணாடி போட்டு இமேஜின் பண்ணிப்பாரு. எனக்கு சந்தேகமே இல்லை. அவதான் வளர்மதி. நம்மை தப்பான தகவல் கொடுத்து ஏமாத்திட்டா. கமான், விக்னேஷ், நீயும் எங்களோட வா” என்று எழுந்தான்.

காரில் கே.கே. நகர் அன்னை மேரி இல்லத்திற்கு அவர்கள் விரைந்து வந்து சேர்ந்தபோது, அங்கே ஒரே பரபரப்பாக இருந்தது. மதர் கவலையுடன் பேசினார்.

“இன்னைக்குக் காலைலேர்ந்து இங்க வேலை பார்த்த வளர்மதிங்கற ஒரு நர்சைக் காணோம். எங்க தொட்டில்ல சமீபத்தில போடப்பட்டிருந்த ஒரு ஆண் குழந்தையையும் காணோம். அந்தக் குழந்தையோட அவளை ஏதோ ஒரு ஆட்டோல பார்த்ததா வாட்ச்மேன் சொல்றான். அவ தங்கியிருந்த ரூம்ல அவ சம்பந்தப்பட்ட எந்தப் பொருளும் இல்லை. தான் போலீசுக்கு தகவல் தரலாமான்னு யோசனை பண்ணிக்கிட்டிருக்கோம்.”

“ச்சே!” என்றான் வெளியில் வந்து, “ஜஸ்ட் மிஸ் பண்ணிட்டமே, நேத்து விசாரிச்சப்ப அவ கொஞ்சம் தயங்கித் தயங்கி பேசினப்ப லேசா ஒரு சந்தேகம் வந்தது எனக்கு, அலட்சியப் படுத்திட்டேன்” என்றான் பரத்.

“எனக்கு சந்தேகப்படத் தோணலை பரத். நான் அவளோட அழகான நெளிநெளியான கூந்தலையேப் பார்த்துக்கிட்டிருந்தேன். அவ தடுமாறி போனதை கவனிக்கவே இல்லை” என்றாள் சுசிலா.

அவள் சொன்னதில் பரத்திற்கு ஏதோ பொறி தட்டினது போலிருந்தது.

“வாங்க, வேற ஒரு ரூட்ல பார்ப்போம்.”

காருக்கு வந்து செல்லுலார் போன் எடுத்து முருகேசனைத் தொடர்பு கொண்டான் பரத்.

“நான்தான் பரத். நீங்க அனுப்பிச்ச போட்டோஸ் உபயோகமா இருந்திச்சி, அப்புறம் சார், அந்த வரதராஜனை

வெளில விட்டுட்டதா சொன்னிங்களே, இப்ப அவன் எங்கே தங்கியிருக்கான்னு தெரியுமா?”

“கொஞ்ச நாளைக்கு அவன் ஃபிரண்டு சுவாமிநாதன் வீட்லதான் தங்கப் போறதா சொன்னான். ஏன்?”

“சும்மாதான் கேட்டேன்.”

“என்கிட்ட என்னமோ மறைக்கிற மாதிரித் தெரியுதே.”

“இல்லை சார். அப்படி எதுவும் இல்லை. அப்புறம் பேசலாம்.”

திருவான்மியூரில் சுவாமிநாதனின் வீட்டிற்கு வந்தபோது, அவன் தங்கை மட்டும்தான் இருந்தாள்.

“மறுபடி வந்துட்டிங்களா? இந்த தடவையும் என் கல்யாண விஷயமா வந்திருக்கிறதா டூப் விட முடியாது.”

“அதுக்காக வரலை. வரதராஜனைப் பார்க்கணும். எங்க?”

“யாரோ ஒரு பொண்ணு கைக்குழந்தையோட வந்தாங்க. அவங்களை பாம்பேக்கு ரயிலேத்தி விடணும்னு சொல்லி அழைச்சுக்கிட்டுப் போனார் சார்.”

“உங்களுக்கு நிதானமா இன்னொரு நாள் தேங்ஸ் சொல்றேன்.”

கார் சென்ட்ரல் ரயில் நிலையத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்தது.

“பரத், எனக்கு எதுவும் புரியலை. வளர்மதிக்கும் வரதராஜனுக்கும் என்ன சம்பந்தம்? அவ ஏன் இவனைத் தேடி வரணும்?”

“என் என் யூகம் சரியா இருந்தா வரதராஜன் வளர்மதியை காதலிச்ச ஒருத்தன். வரதராஜன் கொஞ்ச நாள் டெல்லில இருந்திருக்கணும். இப்ப இந்த குழந்தை திருட்டு மேட்டர்ல வளர்மதிக்கு பல உதவிகள் இவன்தான் செய்திருக்கணும், நீ காவலுக்கு இருக்கிறதையும், நம்ம அலுவலகம் பத்தியும் அவன்தான் விவரமா சொல்லியிருக்கணும்.”

“எப்படி இதெல்லாம் யூகம் செய்றிங்க?”

“ஒரு குருட்டு யூகம்தான். வரதராஜன் ஒரு ஒற்றைப் முடியை பத்திரப்படுத்தி வைச்சிருந்தான் இல்லையா? அது அவனோட கள்ளக் காதலி லினோலியாவோடதுன்னு நானாதான்

நினைச்சேன். ஏன்னா அவளுக்கும் நெளி நெளியான கூந்தல்னு அபர்ணா சொன்னதால. நான் வரதராஜனை விசாரிச்சப்ப அது வினோலியாவோட தலைமுடிதானேன்னு கேட்டப்ப அவன் ஆமாம்னு சொல்லிட்டான். ஆனா வளர்மதிக்கும் நெளி நெளியான கூந்தல்னு நீ சொன்னதும், ஒருவேளை அவன் பத்திரப் படுத்தினது இவ கூந்தல்தானோன்னு யோசிச்சேன். எப்படியும் வளர்மதிக்கு யாரோ ஒருத்தர் உதவி செய்திருக்கணும்னு நினைச்சேன். அது இவனா இருப்பான்னு நினைச்சி வந்து பார்த்தா, சரியா இருக்குது. இப்ப வளர்மதியையும், குழநதையையும் பிடிக்கிறதுதான் முக்கியம்" என்றான் பரத்.

சென்ட்ரல் ஸ்டேஷனில் புறப்பட இருந்த பம்பாய் செல்லும் ரயிலில் வளர்மதியைக் கண்டுபிடிப்பதில் எந்த சிரமமும் ஏற்படவில்லை.

ஆனால் அவள் மட்டும்தான் அமர்ந்திருந்தாள். குழந்தை இல்லை. வரதராஜன் இல்லை. விக்னேஷை வெறுப்பாகப் பார்த்தாள். ஓய்வு அறைக்கு அழைத்துச் சென்று அமர வைத்துக் கேட்டதும், எல்லாம் ஒப்புக் கொண்டாள்.

"சென்னையில நர்ஸ் டிரைய்னிங் முடிச்சதும் அந்த அனாதை இல்லத்தில் வேலைக்குச் சேர்ந்தேன். டெல்லில என்னை ஒரு தலையா காதலிச்சது வரதராஜன். ஆனா நான் விக்னேஷால களங்கப்பட்டதால வரதராஜனோட காதலை ஏத்துக்க மறுத்துட்டேன். வரதராஜன்கிட்ட சொல்லிக்காம சென்னை வந்து நர்ஸ் காலேஜ்ல சேர்ந்ததேன். சமீபத்தில ஒரு நாள் எங்க மதர் வெளியூர் போனாங்க. அவங்களை அனுப்பி வைக்க ஏர்போர்ட் போயிருந்தேன். அப்ப விக்னேஷ்கிட்ட ஸ்வெட்டர் ஒண்ணு கொடுத்து வரதராஜன் பேசி வழியனுப்பி வெச்சதை தூரத்திலேர்ந்து பார்த்தேன். அப்புறம் வரதராஜன் திரும்பினப்போ நானே போய் சந்திச்சேன். நான் சென்னைலதான் இருக்கிறேன்னு தெரிஞ்சி சந்தோஷப்பட்டான். அவன் வாழ்க்கை இலக்கில்லாம, முறை இல்லாம போய்ட்டதாகவும், இன்னும் என் நினைப்போட இருக்கிறதாகவும் சொன்னான். அவன் வழியனுப்பிச்ச விக்னேஷ்தான் என்னை ஏமாத்தினவன்னும், அவனைத்தான் இத்தனை நாளா தேடினேன்னும் பழி வெறியோட அவன்கிட்ட பேசினேன். என்னை சமாதானப் படுத்தப் பார்த்தான். அவன் விக்னேஷ் வீட்டுக்கு எதிர்ல

இருக்கிறதாவும், சுதா கர்ப்பமாகி பத்து பதினைஞ்சு நாள்ல டெலிவரி ஆகிற சூழ்நிலைல இருக்கிறதையும், துணைக்கு பரத் - சுசிலா இருக்கிறதையும் அவன் மூலமா தெரிஞ்சுக்கிட்டேன். ஒரு ஆபரேஷனுக்கு உண்டான தையல் நரம்பு, மருந்துகள் எல்லாம் அவனை ஏற்பாடு செஞ்சித் தர சொன்னேன். அரை மனசோட செஞ்சான். என் மேல இருந்த பிரியத்தால ஒத்துழைச்சான். உன் மேல சந்தேகம் வரக்கூடாது. சம்பவம் நடக்கிற அன்னைக்கு நீ எங்கயாவது வெளியூர் போயிடுன்னு சொன்னேன். அதை அவன் பார்த்துக்கறதா சொன்னான். குரலை மாத்தி ஆம்பளைக் குரல்ல பேசி பொய் தகவல் கொடுத்து சுசிலாவை அந்த வீட்டை விட்டு வெளியேத்திட்டு நான் காலிங்பெல் அடிச்சேன். கதவைத் திறந்த சுதாவை மயக்கப்படுத்தினேன். தனி ஒருத்தியா நானே அவளை படுக்கைக்கு எடுத்துட்டுப் போய் ஆபரேஷன் நடத்தினேன். அவ உயிருக்கு சேதம் இல்லாம குழந்தையை மட்டும் திருடினேன். அதே குழந்தையை நான் வேலை பார்க்கிற இல்லத்திலேயே யாரோ தொட்டில்ல போட்டுட்டு போய்ட்ட மாதிரி நானே போட்டுட்டு, அப்புறம் நானே பராமரிச்சேன். என் வயத்தில வளர்ந்த கருவை அநியாயமா கலைச்ச விக்னேஷுக்கு புத்திர சோகம்னா என்னன்னு புரிய வைக்கத்தான் இப்படி செஞ்சேன். நான் மாட்டிக்குவேன்னு புரிஞ்சு போனதால அவசரமா புறப்பட்டுட்டேன். வரதராஜன்கிட்ட சொல்லிட்டு பாம்பே போக வந்தேன். அங்க ஒரு ஃபிரண்டு டாக்டரா இருக்கா. அவ கிளினிக்ல வேலை பார்த்து காலத்தை ஓட்டிடலாம்னு நினைச்சேன்.

"எல்லாம் சரி. இப்ப குழந்தை எங்க?"

"விக்னேஷை தவிக்க வைக்கிறது நியாயம், ஆனா அவன் மனைவி சுதா என்ன தப்பு செஞ்சான்னு யோசிச்சேன். தாய்மை உணர்வு எப்படி தாக்கும்னு எனக்குத்தான் தெரியும். அதனால குழந்தையை விக்னேஷ் வீட்டு வாசல்ல யாருக்கும் தெரியாம கிடத்திட்டுப் போய்டுன்னு சொன்னேன்."

அப்போது விக்னேஷின் பாக்கெட்டில் இருந்த செல்லுலார் போன் ஒலித்து, அவன் எடுத்துப் பேசினான்?

"யாரு?"

"நான்தாங்க சுதா பேசறேன். நம்ம வீட்டு வாசல்ல யாரோ நம்ம குழந்தையைப் போட்டுட்டுப் போயிருக்காங்க. நம்ம

குழந்தை கிடைச்சிடுச்சிங்க. அச்சா உங்க சாயல்! ரொம்ப அழகா இருக்குங்க குழந்தை. உடனே வாங்க!"

"வர்றேன்" என்று தொடர்பை நிறுத்திவிட்டு விபரம் சொன்ன விக்னேஷ் வளர்மதியின் முகத்தைப் பார்க்கத் துணியாமல் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு, "என்னை மன்னிச்சுடு வளர்மதி. நான் இப்ப என்ன சமாதானம் சொன்னாலும் அது நியாயமா இருக்காது" என்றான்.

"இப்ப என்னங்க செய்யலாம்?" என்றாள் சுசிலா.

"சுதாவைப் பொறுத்த வரைக்கும் விக்னேஷோட இன்னொரு நிழல் முகம் தெரியாது. வளர்மதின்னு ஒருத்தி தன் கணவனால வஞ்சிக்கப்பட்டது எதுவும் தெரியாது. இப்ப வளர்மதியை போலீஸ்ல ஒப்படைச்சா எல்லாம் தெரிஞ்சி போய்டும். விக்னேஷோட குடும்ப வாழ்க்கைல நிம்மதி போய்டும். போலீசைப் பொறுத்தவரைக்கும் இந்தக் கேஸ்ல இந்தக் கோணத்தில் கவனம் திரும்பலை. அதனால. என்றான் பரத்.

புறப்பட்ட ரயிலில் வளர்மதி பயணம் செய்ய.

பரத் சுசிலா கையசைத்தார்கள்.

விக்னேஷ் கண்ணீருடன் ரொம்ப நேரம் கையசைத்துக் கொண்டு நின்றான்.

- முற்றும் -